# கம்பன் கவித் திரட்டு



கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம்,

யுத்த காண்டம்

# கம்பன் கவித் திரட்டு

(நான்காம் பாகம்)

## கிட்கிந்தா காண்டம்

தொகுப்பாசிரியர்கள் :

அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன்

திருமதி ஜலஜா சக்திதாசன்



நித்தியானந்த ஜோதி நிலையம்

த. பெ. 2184

D3, 43 V.K. சாலை, சென்னை - 28,

முதற் பதிப்பு : 1991

உரிமை : ஆசிரியருக்கே

விலை ரூ. 45-00
[தபால் செலவு தனி]

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

# பால காண்டம்

தசரதனின் மகன் இராமன் பிறப்பு, மற்றும் அவன் உடன் பிறப்புகளான லட்சுமணன், பரதன், சத்துருக்கனன் பற்றியும், கூறுகிறது.

சித்த வனத்தில் விசுவாமித்திரன் செய்த யாகத்தைக் காத்த இராமனையும், அரக்கி தாடகையையும் சுபாகுவையும் வதைத்த ஜெயராமனையும் காண்கிறோம்.

மிதிலையில் சிவதனுசை முறித்து, கல்யாண ராமனாகக் காட்சித்தரும் இரகுவீரனைக் கண்டு ஆனந்திக்கிறோம்.

பரசுராமனின் ஆணவத்தை அடக்கிய கோசலராமனை போற்றுகிறோம்.

இராமனின் முடிசூட்டு விழாவுக்கு ஆவலோடு காத்திருக்கிறோம்.

# அயோத்தியா காண்டம்

முடிசூட்டு விழாவை எதிர்பார்த்த மக்களுக்கு பேரிடியாக வருகிறது, கைகேயியின் ஆணை.

அரசைத் துறந்து மரவுரி அணிந்து பிராட்டி உடனும் இளவலுடனும் வனம் செல்ல தூண்டி விட்ட மந்தரையை வெறுக்கிறோம்

இராமனுக்காக எதையும் செய்யத் தயாராக உள்ள குகனின் அன்பின் ஆழத்தைக் கண்டு வியக்கிறோம்.

அண்ணலின் பாதுகைகளைத் தலைமேல் சுமந்து செல்லும் பரதனைப் போன்ற கொள்கை வீரனைக் காணவும் கூடுமோ? வெறிச்சோடிய அயோத்தியைக்கண்டு மனம் புழுங்காமல் இருக்க முடியுமா?

# ஆரண்ய காண்டம்

இங்கே - தண்டகாரணியத்திலே அன்னைக்கு அணிகலன்கள் கொடுக்கும் அனசூயையும், அன்னைக்குத் தொல்லை தரும் விராதனையும் காண்கிறோம். சூர்ப்பணகை, கரன், மாரீசன் ஆகிய அரக்கர் முடிவை பார்க்கிறோம். சீதாபிராட்டியைத் தூக்கிச் சென்ற இராவணனுடன் வீரமாக பொருது உயிர் நீத்த கழுகரசன் சடாயுவை மறக்கமுடியுமா?

இராகவனும் இளவலும் அன்னையைத் தேடிச் செல்கையில் நிகழ்ந்தவைகளுக்கு சிகரம் என அமைகிறது சபரியின் பிறப்பு நீங்கு படலம்.

# கிட்கிந்தா காண்டம்

## நூன்முகம்

கிட்கிந்தா காண்டம் ஆரணிய காண்டத்தைத் தொடர்ந்துவரும் ஓர் காண்டம். ஆரணிய காண்டத்தின் இறுதியில் கவந்தனும் சபரியும் கூறியபடி இராம இலக்குவன் பம்பை நதியை அடைந்து ருசிய சிருங்க மலைச் சாரலை அடைகின்றனர். இவ்விருவரையும் அநுமன் வந்து காண்கிறான். சுக்கிரீவன் இராமபிரானுக்கு சீதையை தேட உதவுவதாக வாக்களிக்கிறான். வானரர் பிராட்டியை தேடி அலைகின்றனர். இந்நிகழ்ச்சிகளைக் கூறுவதே இக் காண்டம்.

இது கம்பராமாயணத்தின் நான்காவது பெரும்பகுதி யாக அமைந்துள்ளது. இக் காண்டம் 1004 செய்யுட்கள் கொண்டது. எனினும் கதைக் கோர்வைக்காக 50 செய்யுட்களே தேர்ந்தெடுத்து இருக்கிறோம்.

இக்காண்டத்தின் நிகழ்ச்சிகள் யாவும் தண்டகாரணியம் அதனை அடுத்த தென்னிந்திய பகுதிகளிலும் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

இராமாயணத்தில் சீதாபிராட்டியுடன் இல்லாத இராமபிரானை இக் காண்டத்தில் மட்டுமே காண்கிறோம்,

மேலே படிப்போமா?

தொகுப்பாசிரியர்

# கிட்கிந்தா காண்டம்

## படலங்கள்

1. பம்பை வாவிப் படலம்
2. அநுமப் படலம்
3. நட்புக் கோட் படலம்
4. மராமரப் படலம்
5. துந்துபிப் படலம்
6. கலன் காண் படலம்
7. வாலி வதைப் படலம்
8. அரசியற் படலம்
9. கார்காலப் படலம்
10. கிட்கிந்தைப் படலம்
11. தானை காண் படலம்
12. நாட விட்ட படலம்
13. பிலம் புக்கு நீங்கு படலம்
14. ஆறு செல் படலம்
15. சம்பாதி படலம்
16. மகேந்திர படலம்

# கிட்கிந்தா காண்டம்

## கடவுள் வாழ்த்து

மூன்று உரு எனக் குணம்
　　மும்மை ஆம் முதல்,
தோன்று உரு எவையும், அம்
　　முதலை சொல்லுதற்கு
ஏன்று உரு அமைந்தவும்,
　　இடையில் நின்றவும்,
சான்று உரு உணர்வினுக்கு
　　உணர்வும் ஆயினான்

# கிட்கிந்தா காண்டம்

இராமன் லட்சுமணன் ஆகிய இருவரும் பம்பைக் கரை அடைந்தனர். இராமபிரான் பம்பையில் நீராடினான். அருகிலிருந்த பூஞ்சோலையில் அமர்ந்தான். மாலைக் கடன் முடித்தான். கதிரவனும் மறைந்தான். இரவும் வந்தது. இராமர் லட்சுமணர் ஆகிய இருவரும் இரவுப் பொழுதை அந்த இடத்திலேயே போக்கினர்; நீள் இரவு சென்றது. பொழுது புலர்ந்தது. கதிரவனும வந்தான். ராமர் லட்சுமணர் ஆகிய இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்; சபரி சொன்ன வழியே சென்றனர்; ருசியமுக பர்வதத்தின் மீது ஏறினர்.

வில்லேந்திய வீரராய் இவ்விருவரும் வருதல் கண்டான் சுக்ரீவன்; மாற்றார் யாரோ வருகின்றார் என்று அஞ்சினான்; அவ்விருவரும் யார் என்று அறிந்து வருமாறு மாருதியை ஏவினான்; அருகிலிருந்த குகை ஒன்றன் உள்ளே சென்று ஒளிந்து கொண்டான்.

அஞ்சனையின் மகனாகிய அநுமன் ஒரு பிரம்மசாரி உருவம் தாங்கி இராமர் லட்சுமணர் வரும் வழியில் மறைவான ஓரிடத்திலே நின்று கொண்டிருந்தான்.

"இவர்களோ தவ வேடம் கொண்டுள்ளனர். கையில் உள்ள வில்லோ அந்த வேடத்துக்கு ஏற்ப இல்லை. மாறு பாடாக உள்ளது. இவர் யார்? சிவனோ? திருமாலோ? பிரமனோ?

சிவன், திருமால், பிரமன் என்றால் மூவராக அன்றோ வருவர்! இவர் இருவரே வருகின்றனர். ஆதலின் இவர்

சிவன், திருமால், பிரமன் ஆகிய மும்மூர்த்தியரும் அல்லர்; மானிடரும் அல்லர். வானுலகில் வாழும் தேவரே மானிட வடிவில் வந்துள்ளனர். அரியதொரு பொருளை இழந்து அதைத் தேடுவார் போல் காட்சியளிக்கின்றனர்!''

* * *

என்பன பலவும் எண்ணி
இருவரை எய்த நோக்கி
அன்பினோடு உருகு கின்ற
உள்ளத்தின் ஆர்வத்தோரை
முன்பிரிந்து அனையர் தம்மை
முன்னினான் என்ன நின்றான்
தன் பெரும் குணத்தால் தன்னைத்
தான் அலது ஒப்பிலாதான்.

இவ்விதம் பலவாறு எண்ணிக்கொண்டு அவ்விருவரையும் எதிர்பார்த்து நின்றான் அநுமன். தனது அன்புக்குரிய ஒருவரை நீண்ட நாள் முன் பிரிந்து, பின் தற்செயலாக அவரைக் கண்டவன் போல நின்றான். உருகும் உள்ளத்தனாகி நின்றான். பெருமை மிகு குணத்திலே தனக்கு ஒப்பார் இல்லாத குணக்குன்றாகிய அநுமன் நின்றான்.

* * *

தன் பெரும் குணத்தால் - தன்னுடைய பெருமை மிகு குணத்தினால்; தன்னை தான் அலது ஒப்பு இலாதான் - தனக்குத் தானே ஒப்புமையன்றி வேறு ஒப்புமை எதுவும் கடனுதற்கு இயலாத அந்த அநுமன்; என்பன பலவும் எண்ணி - மேற்கூறியபடி பலவாறாக எண்ணிக் கொண்டு; இருவரை எய்த நோக்கி - இராம லட்சுமணர் ஆகிய அந்த இருவரையும் அடையக் கருதி; அன்பினோடு உருகுகின்ற - அன்பினால் உருகுகின்ற; உள்ளத்தன் - மனமுடையவனாகி; ஆர்வத்தோரை - அன்பு கொண்ட

ஒருவரை; முன் பிரிந்து - முன்பு ஒரு சமயம் விட்டுப் பிரிந்து; அனையர் தம்மை - அவ்வன்பரை; முன்னினான் என நின்றான் - மீண்டும் எதிரிலே கண்டவன் போல் மகிழ்ந்து நின்றான்.

* * *

மஞ்சு எனத் திரண்ட கோல
மேனிய! மகளிர்க்கு எல்லாம்
நஞ்சு எனத் தகைய ஆகி
நளிர் இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண
யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில்வந்தேன்;
நாமமும் அநுமன் என்பேன்.

இராமர் லட்சுமணர் ஆகிய இருவரும் அருகில் வந்தனர். அவ்விருவர் முன் சென்று நின்றான் அநுமன். தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான்.

அஞ்சனையின் புதல்வன் சொல்கிறான். யாரைப் பார்த்து? இராமனைப் பார்த்து; என்ன சொல்கிறான்?

"நீலமேக மேனியனே! சிவந்த தாமரை போன்ற அழகிய கண்களை உடையவனே! காற்றின் வேந்தனாகிய வாயுதேவனுக்கு அஞ்சனை வயிற்றிலே பிறந்தவன் நான். அநுமன் என்பது என் பெயர்!

கேசரி என்னும் குரங்கரசனின் மனைவி அஞ்சனை. அவளுக்குக் காற்று தேவன் திரு அருளாலே பிறந்தவன் ஆஞ்சநேயன். இவன் பிறந்த உடனே தனக்குப் பசி என்று தன் தாயிடம் கூறினான். "பழங்களைப் புசி" என்று அவள் கூறினாள்.

"பழம் எப்படியிருக்கும்?" என்று கேட்டான் ஆஞ்சநேயன்.

"செக்கச் செவேல் என்று இருக்கும்" என்று கூறினாள் தாய்.

அப்போது சூரியன் தகதகவென்று சிவந்த மேனியனாய் புறப்பட்டு வந்து கொண்டிருந்தான்.

"பழம் இது!" என்று கருதிப் பாய்ந்தான் குழந்தை யாகிய ஆஞ்சநேயன்.

கண்டான் இந்திரன்: கொண்டான் கோபம். தனது வச்சிராயுதத்தால் குழந்தையைத் தாக்கினான். குழந்தை யின் கன்னம் சிதைந்தது. அந்தக் குழந்தைக்கு அநுமன் என்று பெயரிட்டான் இந்திரன். அனு என்றால் கன்னம் என்று பொருள். கன்னத்திலே சிறப்புடையவன் அநுமன்.

* * *

மஞ்சு எனத் திரண்ட கோல மேனிய - மேகம் போல நீல நிறங்கொண்டு அமைந்த அழகிய திருமேனி உடைய வனே! மகளிர்க்கு எல்லாம் - உன்னைக் காணும் பெண் களுக்கு எல்லாம்; நஞ்சு என - விஷம் என்று சொல்லும்படி; தகைய ஆகி - தன்மை உடையவனாகி; நளிர் இரும் பனிக்கு- குளிர்ச்சி பொருந்திய பெரும் பனிக்கு; தேம்பா - வாடாத; கஞ்சம் ஒத்து - தாமரை மலர் போன்று; அலர்ந்த-மலர்ந்த; செய்ய கண்ண - சிவந்த கண்களை உடையவனே; யான் - நான்; காற்றின் வேந்தற்கு - காற்றரசன் வாயுதேவனுக்கு; அஞ்சனை வயிற்றில் வந்தேன் - அஞ்சனை வயிற்றில் பிறந்தேன்; நாமமும் அநுமன் என்பேன் பெயரும் அநுமன் என்பேன்.

* * *

"இம் மலை இருந்து வாழும்
எரி கதிர் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன்
தேவ! நும் வரவு நோக்கி

விம்மலுற்று அனையன் ஏவ
வினவிய வந்தேன்'' என்றான்,
எம் மலைக் குலமும் தாழ
இசை சுமந்து எழுந்த தோளான்.

''இம் மலையிலே இருந்து வரும் சூரியன் மகனாகிய சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன் நான். உங்களது வருகை கண்டு அவன் பயந்துவிட்டான். நீவிர் யார் என்று அறிந்து வருமாறு என்னை ஏவினான்; வந்தேன்'' என்றான். யார்? எம்மலைச் சிகரமும் தாழ்ந்து விடும்படி புகழ் தாங்கி எழுந்த தோளினனாகிய அநுமன்.

* * *

[ருக்ஷரஜஸ் எனும் குரங்கரசன் பெண் வடிவங் கொண்டான். சூரியன் அருளாலே ஒரு குழந்தையைப் பெற்றான். அவனே சுக்கிரீவன்.]

இம்மலை இருந்து வாழும் - இந்த மலையிலே இருந்து வாழ்கின்ற; எரி கதிர் பரிதி - வெம்மையாகிய கிரணங்கள் பரப்பும்; சூரியனின் செல்வன் - மகனாகிய சுக்ரீவனுக்கு ஏவல் செய்வேன்-பணி செய்பவன் நான்; தேவ! நும் வரவு நோக்கி - தேவ! நீவிர்வருதல் கண்டு; விம்மலுற்று - நடுங்கி; அனையன் ஏவ - அவன் ஏவ; வினவிய வந்தேன் - தங்களிடம் கேட்டு அறியவந்தேன். என்றான. எம்மலைக் குலமும் தாழ-எந்த மலைக் கூட்டமும் தாழ்வுறும்படி; இசை சுமந்து - புகழ் பெற்று; எழுந்த தோளான் - வளர்ந்து எழுந்த தோள்கள் உடைய அநுமன்.

* * *

இவ்வாறு அநுமன் சொன்ன உடனே, ''இவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். அந்தக் கல்வி கேள்விக்கு ஏற்ப அடக்கமுடையவன்; அறிவுடையவன்'' என்று உய்த்துணர்ந்த இராமன் இளைய பெருமாளிடம் சொல்கிறான்: 'தம்பீ! லட்சுமணா! இவன் கலைவல்லான்! வேதம்

வல்லான்; எல்லாக் கலைகளையும் அறிந்தவன் இவன்; வேதங்கள் எல்லாவற்றையும் ஓதி உணர்ந்தவன். இது இவனுடைய சொற்களினாலே தெரிகிறது. இந்தச் சொல்லின் செல்வன் யாராயிருக்கலாம்? இவன் பிரம தேவனோ? சிவபெருமானோ? இவன் நமக்களிக்கின்ற இந்தப் பிரம்மசாரி உருவம் நிச்சயமாக இவனுடைய சுய உருவம் அன்று. இவன் உலகின் அச்சாணி போன்றவன். போகப் போகத் தெரியும்.'' என்று சொல்கிறான். இவ்விதம் சொல்லிய பின் அநுமனை நோக்கி வினவுகிறான்.

* * *

எவ்வழி இருந்தான் சொன்ன
கவிக் குலத்து அரசன்? யாங்கள்
அவ் வழி அவனைக் காணும்
அருத்தியின் அணுக வந்தேம்
இவ்வழி நின்னையுற்ற
எமக்கு நின் இன் சொல் அன்ன
செவ்வழி உள்ளத் தானைக்
காட்டுதி தெரிய என்றான்.

''நீ சொன்ன கவிக்குலத்து அரசன் எங்கே இருக்கிறான்? நாங்கள் அவனைப் பார்க்க விரும்புகிறோம். அவனை நீ எங்களுக்குக் காட்டுவாயாக'' என்று கூறினான் இராமன்.

* * *

நீ சொன்ன - நீ கூறிய; கவிக்குலத்து அரசன் - குரங்குகளின் அரசன்; எவ்வழி இருந்தான் - எந்த இடத்திலே இருக்கிறான்? யாங்கள் - நாங்கள்; அ வழி அவனைக் காணும் - அவ்விடம் சென்று அவனைப் பார்க்கின்ற; அருத்தியின் - ஆசையோடு; அணுக வந்தேம் - நெருங்கி வந்திருக்கிறோம்; இ வழி - இந்த இடத்திலே; நின்னை

உற்ற எமக்கு - உன்னை எதிர்ப்பட்ட எங்களுக்கு; நின் சொல் அன்ன - உனது இனிய மொழியே போன்ற; செம் வழி உள்ளத்தானை - நேர் வழி செல்லும் உளமுடைய அந்த சுக்கிரீவனை; தெரிய - நாங்கள் தெரிந்து கொள்ளுமாறு; காட்டுதி என்றான் - எங்களுக்குக் காட்டுவாயாக என்று சொன்னான்.

* * *

இரவி தன் புதல்வன் தன்னை
இந்திரன் புதல்வன் என்னும்
பரிவு இலன் சீறப் போந்து
பருவரற்கு ஒருவன் ஆகி
அருவி அம் குன்றில் எம்மோடு
இருந்தனன்; அவன் பால் செல்வம்
வருவது ஓர் அமைவின் வந்தீர்
வரையினும் வளர்ந்த தோளீர்.

"குன்றினும் மேலாக வளர்ந்த தோள்களை உடையவரே! சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவனை இந்திரன் புதல்வனாகிய வாலி சீறினான்; பகைத்தான்; அவனால் துன்புற்ற சுக்கிரீவன் இம் மலைக்கு ஓடி வந்தான்; எங்களோடு வாழ்ந்து வருகிறான். அவனுக்குச் செல்வம் வருவது போல நீவிர் வந்துள்ளீர்."

[ருக்ஷரஜஸ் எனும் பெண் குரங்குக்கு இந்திரன் அருளாலே பிறந்தவன் வாலி. வாலில் தோன்றியவன் வாலி.]

* * *

வரையினும் - மலைகளைவிட; வளர்ந்த - வளர்ந்து விளங்கும்; தோளீர் - தோள் உடையோரே! இரவி தன் புதல்வன் தன்னை - சூரியனின் மகனாகிய சுக்கிரீவனை; இந்திரன் புதல்வன் - இந்திரன் மகனாகிய வாலி; என்னும் பரிவு இலன் - எனும் பெயர் கொண்ட அன்பிலான்; சீற -

பகைத்துக் கோபிக்க; பருவரற்கு ஒருவன் ஆகி - துன்பத் திற்கு ஆளாகி; அருவி அம் குன்றில் - அருவிகள் நிறைந்த இந்த அழகிய குன்றில்; எம்மோடு - எங்களோடு; இருந்தனன் - இருந்து வருகிறான்; வருவது ஓர் அமைவின் - அவன் பால் செல்வம் வருவது போல் வந்தீர்.

* * *

'யார் என விளம்புகேன் நான்
எம் குலத் தலைவற்கு உம்மை?
வீரர் நீர் பணித்திர்' என்றான்
மெய்ம்மையின் வேலி போல்வான்
வார் கழல் இளைய வீரன்
மரபுளி வாய்மை யாதும்
சோர்வு இலன் நிலைமை எல்லாம்
தெரிவுறச் சொல்லல் உற்றான்.

"எங்கள் குலத் தலைவனாகிய சுக்கிரீவனிடம் சென்று என்ன சொல்வேன்? உங்களை யார் என்று சொல்வேன்? வீரர்களே உத்தரவு தாருங்கள்" என்றான். யார்? சத்தியத் தின் வேலி போன்றவனாகிய அநுமன்.

மதிப்புக்குரியவர்களிடத்திலே எவ்வளவு விநயமாகப் பேசுகிறான் அநுமன்! "நீங்கள் யார்? பதில் சொல்லுங்கள். எங்கள் தலைவன் கேட்கிறான்!" என்று கூறவில்லை அநுமன். ஆனால் அவனது கேள்வியிலே அப் பொருள் தொனிக்கிறது.

"உங்களை யாரென்று சொல்வேன்? உத்தரவு தாருங் கள்" என்று கேட்கிறான்.

அந்தக் கேள்வியிலேதான் எத்தகைய மரியாதை! உயர் பண்பு!

சீரிய பண்புடைய ஒருவனாக அநுமனைச் சித்தரித்துக் காட்டுகிறான் கம்பன்.

அநுமன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறான் இளையவன். அதாவது அயோத்தியில் என்ன நடந்தது என்பதையும் வனம் புகுந்த பின் என்ன நடந்தது என்பதையும் ஒளியாது சொல்கிறான்.

*  *  *

எம் குலத் தலைவற்கு - எங்கள் குலத் தலைவனாகிய சுக்கிரீவனுக்கு; உம்மை - உங்களை; யார் என - யார் என்று; விளம்புகேன் நான் - சொல்வேன் நான்; வீரர் நீர் பணித்திர் - வீரர்களே நீங்கள் சொல்லுங்கள்; என்றான் - என்று கேட்டான். மெய்ம்மையின் வேலிபோல் வான் - சத்தியத்திற்கு வேலிபோன்ற அநுமன். வார் கழல் - வீரக் கழல் அணிந்த; இளைய வீரன் - இளைய பெருமாள்; வாய்மை யாவும் - உண்மையாக நடந்த யாவும்; சோர் விலன் - சற்றும் சோர்விலாதவனாய்; மரபுளி - முறைப்படி; தெரிவுற - விளக்கமாக; சொல்லலுற்றான்.

*  *  *

கேட்டான் அநுமன்; இராமனை வணங்கினான்; வணங்கிய அநுமனைத் தடுத்தான் இராமன்.

"கேள்வி நூல் மறை வல்லோய்! நீ செய்யத் தகாத செயல் இது? உனது பிரம்மசரிய ஆசிரமத்துக்கு ஏற்ற செயல் அன்று" என்றான்.

அது கேட்ட அநுமன், "அடியேனும் குரங்கினத்தவனே" என்று மறுமொழி கூறினான். விசுவரூபம் எடுத்து நின்றான். பேருருவுடன் விளங்கிய அநுமனைக் கண்டு வியந்தான் இராமன்.

"நமது துன்பம் நீங்கியது; இன்பம் வந்துவிட்டது. அதற்கு அறிகுறியாக இந்த நம்பியைக் கண்டோம்" என்று இளையவனிடம் கூறினான்.

சுக்கிரீவனை அழைத்து வருவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றான் அநுமன். சென்றவனும் சுக்கிரீவனை அடைந்தான். இராம லட்சுமணர் யார் என்பதைக் கூறினான். அவர்கள் பால் சுக்கிரீவனை அழைத்துச் சென்றான்.

அநுமனுடன் சென்றான் சுக்கிரீவன். இராமன் லட்சுமணர் ஆகியவர் இருவரையும் நோக்கினான்.

* * *

நோக்கினான்; நெடிது நின்றான்;
'நொடிவு அருங் கமலத்து அண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம்
அன்று தொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம்
குவிந்து இரு படிவமாகி
மேக்கு உயர் தடந்தோள் பெற்று
வீரராய் விளைந்த' என்பான்.

நோக்கினான். யார்? சுக்கிரீவன். யாரை? இராமன், இளையவன் ஆகிய இருவரையும் நோக்கினான்; நோக்கிய படியே நின்றான்; நீண்ட நேரம் நின்றான்; மெய்ம் மறந்தான்; வியந்தான்; வியப்பினில் மூழ்கினான்.

படைத்தல் கடவுளாகிய பிரமதேவன், உலகு தொடங்கிய நாள் முதல் அன்று வரை படைத்த எல்லா உயிர்களும் செய்த புண்ணியம் யாவும் திரண்டு மனித உருக் கொண்டு, இராமன் என்றும் லட்சுமணன் என்றும் பெயர் பூண்டு வந்ததோ என்று வியந்தான்.

* * *

நோக்கினான் - பார்த்தான்; நெடிது நின்றான் - நீண்ட நேரம் வியப்புற்று நின்றான்; நொடிவு அருங் கமலத்து அண்ணல் - சொல்லற்கு அரிய தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவன்; ஆக்கிய உலகம் எல்லாம் - படைத்த உலகங்களில் உள்ள உயிர்கள் எல்லாம்; அன்று தொட்டு இன்று காறும் - அன்று முதல் இன்று வரை; புரிந்த பாக்கியம் எல்லாம் - செய்த புண்ணியம் யாவும்; குவிந்து - திரண்டு; இரு படிவமாகி - இரண்டு உருப்பெற்று; மேக்கு உயர் தடந்தோள் பெற்று - மிக்குயர்ந்த தோள் பெற்று; வீரராய் விளைந்த என்பான் - வீரராக உரு எடுத்தனரோ!

இவ்வாறு வியந்து நின்ற சுக்கிரீவனை அழைத்து அருகில் அமருமாறு பணித்தான் இராமன். சுக்கிரீவனும் அமர்ந்தான்.

"மதங்கரி ஆசிரமத்திலே இருந்த சபரி எனும் வேடுவத் தவசி உன்னைப் பற்றிக் கூறினாள். உன்னால் எனக்கு ஆக வேண்டிய காரியம் ஒன்று உளது. அதன் பொருட்டு உன்னைத் தேடி வந்தேன்" என்றான் இராமன்.

அதே சமயத்தில் சுக்கிரீவனும் வாலியினால் தனக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறுகிறான்.

* * *

"முரண் உடைத் தடக்கை ஓச்சி
முன்னவன் பின் வந்தேனை
இருள் நிலைப் புறத்தின் காறும்
உலகு எங்கும் தொடர இக்குன்று
அரண் உடைத்தாக உய்ந்தேன்
ஆர் உயிர் துறக்கலாற்றேன்
சரண் உனைப் புகுந்தேன்; என்னைத்
தாங்குதல் தருமம்" என்றான்.

பேசத் தொடங்கினான் :

"எனது முன்னவனாகிய வாலி தனது வலிய கைகளை ஓங்கிக்கொண்டு என்னைத் துரத்தினான்; பின்னவனாகிய என்னைக் கொல்வான் வேண்டி விரட்டினான். இவ்வுலகு முழுவதும் துரத்தித் துரத்தி விரட்டினான். உயிருக்கு அஞ்சினேன்; ஓடினேன்; எங்கும் ஓடினேன். இந்த மலை ஒன்றே பாதுகாப்பான இடம் என்று கண்டேன்; ஓடி வந்தேன்; அவன் விரட்டுதல் விட்டான். உயிர்பிழைத்தேன்; சரணம் நீயே. எனைக் காத்தல் நின் தருமம்!" என்றான்.

* * *

துந்துபி என்றவனுடன் போரி செய்தான் வாலி. அவனைக் கொன்றான். அவனது உடலைத் தூக்கி எறிந்தான் மதங்கமுனிவர் தவம்செய்து கொண்டிருந்த மலையில் வந்து விழுந்தது அந்த உடல். அவர் இருந்த இடத்தை அசுத்தம் செய்தது. முனிவர் சீறினார்.

"இதைச் செய்தவன் இம் மலைக்கு வந்தால் அவன் தலை வெடித்துச் சாவான்" என்று சபித்தார்.

பயந்தான் வாலி. மதங்கர் மலைக்கு வருவது ஒழிந்தான். அதுவே சுக்கிரீவனுக்கு அரண் ஆயிற்று.

* * *

முன்னவன் - எனது மூத்தோனாகிய வாலி; பின் வந்தேனை - இளையவனாகிய என்னை; முரண் உடை - வலிமை பொருந்திய; தடம் கை - பெரும் கைகளை; ஓச்சி - ஓங்கி; இருள் நிலை - நிலையாக இருள் தங்கியுள்ள: புறத்தின் காணும் - இவ் அண்டத்தின் அப்பால்வரை; உலகு எங்கும் - இவ்வுலகு எங்கும்; தொடர - துரத்த; இக் குன்று - இந்த மலையானது; அரண் உடைத்தாக - பாதுகாப்பாக இருந்ததால்; உய்ந்தேன் - உயிர் பிழைத்தேன். எனவே உனைச் சரண்புகுந்தேன், எனைத் தாங்குதல் உன் தருமம் என்றான்.

* * *

என்ற அக்குரங்கு வேந்தை
இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக்குரிய இன்ப
துன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக மேல் வந்து
உறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கும் நிற்கும்
நேர் என மொழியு நேரா.

என்று சுக்கிரீவன் சொன்ன உடனே அந்தக் குரங்கு அரசனைப் பார்த்து இரங்கி இராமன் சொல்கிறான்; "உனக்கும் எனக்கும் நேர்ந்த துன்பங்கள் போனவை போகட்டும். இனி வரும் துன்பங்களை அவை நேராமல் உன்னை நான் பாதுகாப்பேன். அத் துன்பங்கள் உனக்கும் எனக்கும் சமம்."

*　　　*　　　*

என்ற - என்று சொன்ன; அக்குரங்கு வேந்தை - அந்தக் குரங்கரசனாகிய சுக்கிரீவனை; இரங்கி நோக்கி - கருணையோடு பார்த்து; உன் தனக்கு உரிய - உனக்கு உரிய; இன்ப துன்பங்கள் உள்ள - இன்ப துன்பங்களாய் உள்ளவற்றில்; முன் நாள் சென்றன போக - கடந்த காலத்தில் நிகழ்ந்தவை போக; மேல் வந்து உறுவன - இனிமேல் வரும் துன்பங்களை; தீர்ப்பல் - வராமல் தீர்ப்பேன்; அன்ன நின்றன - அவை; எனக்கும் உனக்கும் நேர் - எனக்கும் உனக்கும் சமம்; என - என்று; மொழியும் நேரா - உறுதி மொழி கூறி.

*　　　*　　　*

"மற்று இனி உரைப்பது என்னே?
வானிடை மண்ணில் உன்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்
தீயரே எனினும் உன்னோடு

உற்றவர் எனக்கும் உற்றார்
உன் கிளை எனது; என் காதல்
சுற்றம் உன் சுற்றம்; நீ என்
இன் உயிர்த் துணைவன்'' என்றான்.

இராமன் கூறினான். யாரைப் பார்த்து? சுக்கிரீவனைப் பார்த்து. என்ன கூறினான்?

''இனிப் பல படப் பேசுவதில் பயன் என்ன இருக்கிறது? பற்பல வார்த்தைகள். கூறுவது எதற்கு? விண்ணிலும் சரி; மண்ணிலும் சரி. உனது பகைவர் எனது பகைவரே. தீயரே ஆயினும் உனது நண்பர் எனது நண்பரே. உனது உறவினர் எனது உறவினர். என் பால் அன்பு கொண்ட சுற்றம் உன் பால் அன்பு கொண்ட சுற்றமே. நீ என் இன்னுயிர்த் துணைவன்.'' என்றான்.

* * *

இனி - இன்னும்; மற்று உரைப்பது - பல பல சொல்வது, என்னே - எதற்கு? வானிடை - விண்ணிலும்; மண்ணில் - மண்ணிலும்; உன்னைச் செற்றவர் - உன்னைப் பகைத்தவர்; என்னைச் செற்றார் - என்னைப் பகைத்தவர் ஆவார்; உன்னோடு உற்றவர் - உன்னோடு தோழமையுற்றவர்; தீயரே ஆயினும் - தீய குணத்தினர் ஆனாலும்; எனக்கும் உற்றார் - எனக்கும் வேண்டியவரே. உன் கிளை - உனது உறவினர்; எனது - எனது கிளை; என் காதல் சுற்றம் - எனது அன்புக்குரிய சுற்றத்தார்; உனது அன்புக்குரிய சுற்றத்தினர் ஆவர். நீ என் உயிர்த்துணைவன் என்றான்.

* * *

இவ்வாறு பேசி இருவரும் நட்புக் கொண்ட உடனே இராமனை வணங்கினான். அஞ்சனை சிங்கம். ''உங்கள் இருக்கைக்கு எழுந்தருள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

இராமனும் சுக்கிரீவனும் நண்பர் ஆகி விட்டபடியால் இனி சுக்கிரீவன் இருக்கையும் இராமபிரானின் இருக்கையும் ஒன்றேயாதலால் அவ்வாறு கூறினான் அநுமன்.

சுக்கிரீவனது இருக்கையை "உங்களது இருக்கை" என்று இராமபிரானைப் பார்த்துக் கூறினான்.

"அப்படியே ஆகட்டும்" என்று இராமன் கூற, எல்லாரும் புறப்பட்டனர். சுக்கிரீவனது இருப்பிடம் சேர்ந்தனர். வானரங்கள் ஏராளமான பழங்களைக்கொண்டு வந்தன. இராமன் நீராடி விட்டு அந்தப் பழங்களை உண்டான். பசி யாறினான்.

பிறகு அநுமன் வாலியைப் பற்றி இராமனிடம் கூறினான். சுக்கிரீவன் பால் வாலி சினங்கொண்ட காரணத்தை விளக்கினான். சுக்கிரீவனுடைய மனைவியாகிய உருமையை வாலி கவர்ந்து கொண்டதையும் கூறினான்.

கேட்டான் இராமன், "அந்த வாலியைக் கொல்வேன். அவன் இருக்குமிடத்தைக் காட்டுக" என்றான்.

"அப்போது இராமபிரானின் வலிமையை அரிய விரும்பி னான் சுக்ரீவன். அவனுடைய வேண்டுகோளை ஏற்று ஒரே அம்பினால் மராமரங்கள் ஏழினையும் துளைத்தான்.

*    *    *

நீடு நாகம் ஊடு மேகம் ஒட
    நீரும் ஒட நேர்
ஆடும் நாகம் ஒட மானயானை ஒட
    ஆளி போம்
மாடு நாகம் நீடு சாரல்
    வாளை ஒடும் வாவி யூடு
ஒடு நாகம் ஒட வேங்கை ஒடும்
    யூகம் ஒடுமே.

வாலி இராக்குமிடத்தைக் காட்டுமாறு கேட்டான் இராமன். உடனே வானரங்கள் சூழப் புறப்பட்டான் சுக்ரீவன். எல்லாரும் கிட்கிந்தை நோக்கி நடந்தனர்.

அவர்கள் சென்ற மதங்க மலைச் சாரலை வர்ணிக்கிறார் கவி. அம்மலைச் சாரல் வழியே அருவிகள் பாயும்; பாம்புகள் படம் எடுத்து ஆடும்; அஞ்சி ஓடும்; பெரிய யானைகள் ஓடும்; யாளிகள் ஓடும்; குளங்களிலே மீன்களுடன் தண்ணீர்ப் பாம்புகள் ஓடும்; வேங்கையோடு கருங்குரங்கு ஓடும்; மலைச் சிகரங்களிலே மேகம் ஓடும்.

* * *

நீடு நாகம் ஊடு - நீண்ட மலைகளின் வழியாக; மேகம் ஓட - மேகங்கள் ஓட; நீரும் ஓட - நீரும் பெருகிப் பாய; ஆடும் நாகம் ஓட - படமெடுத்து ஆடும் பாம்புகள் அஞ்சி ஓட; மானம் யானை ஓட - பெரிய யானைகள் ஓட! ஆளி போம் - யாளிகள் சஞ்சரிக்கும்; மாடு நாக நீடு நீரல் - சுவர்க்கத்தை மறைக்கும் நீண்ட மலைச் சாரலில்; வாளை ஓடும்வாவியூடு - (உள்ள) குளங்களிலே; வாளை மீன்களுடன்; நாகம் ஓட - பாம்புகள் ஓட; வேங்கையோடும் - புலிகளோடும் யூகம் ஓடுமே - கருங்குரங்கு ஓடுமே.

* * *

மருவி ஆடும் வாவி தோறும்
வானயாறு பாயும், வந்து
இருவி ஆர் தடங்கள்மீனின்
ஏறு பாயும்; ஆறுபோல்
அருவி பாயும் ஒன்றில் ஒன்றில்
யானை·பாயும்; ஏனலில்
குருவி பாயும்; ஓடி மந்தி
கோடு பாயும், மாடெலாம்.

நீராடும் சுனைகளிலே வான் ஆறு வந்து பாயும். கதிர் அறுக்கப்பட்ட தினைப் புலங்களிலே ஆண் மீன்கள் துள்ளிப் பாயும். அருவிகள் ஆறு போல் பாயும். அவை ஒன்றில் ஒன்றில் யானைகள் வந்து பாய்ந்து விளையாடும். தினைப் புலங்களில் குருவி பாயும். மரக்கொம்புகளிலே மந்தி தாவும்

* * *

மாடெலாம் - அம்மலைப் பக்கங்களில் எல்லாம்; மருவி ஆடும் வாவி தோறும் - நீராடும் சுனைகளாகிய தடாகங்கள் தோறும்; வான ஆறு வந்து பாயும் - வான் முட்டும் மலைச் சிகரங்களினின்று ஓடி வரும் ஆறு பாயும்; இருவி ஆர் தடங்கள் தோறும் - கதிர் அறுக்கப்பட்ட தாள்களோடு விளங்கும் தினைப் புலங்களில்; ஏறு பாயும் - ஆண் மீன்கள் துள்ளிப் பாயும்; அருவி - அருவிகள் ஆறு போல் பாயும்; ஒன்றில் ஒன்றில் - அவை ஒவ்வொன்றிலும்; யானை பாயும் - யானைகள் பாய்ந்து விளையாடும்; ஏனலில் - தினைப்புலங் களில்; குருவி பாயும் - குருவிகள் விளையாடும்; மந்தி - ஆண் குரங்குகள்; ஓடி - ஓடிச் சென்று; கோடு பாயும் - கொம்பு களில் தாவும்.

* * *

தேன் இழுக்கு சாரல் வாரி செல்ல
மீது செல்லும் நாள்
மீன் இழுக்கும்; அன்றி வானவில்
இழுக்கும்; வெண்மதிக்
கூன் இழுக்கும்; மற்று உலாவு
கோள் இழுக்கும் என்பவால்
வான் இழுக்கும் ஏல வாச
மன்றல் நாறு குன்றமே

அக் குன்றிலே ஏலக்காய் மணம் கமழும். அந்த நறுமணம் வானில் வாழ்தேவர்களையும் தன் பால் இழுக்கும். தேன் அருவி சாரல் வழி ஓடும். வான வீதியிலே ஓடும்

விண்மீன் கூட்டங்களை அத்தேன் அருவி இழுக்கும்; வானவில்லை இழுக்கும்; பிறைச் சந்திரனை இழுக்கும்; கிரகங்களை இழுக்கும்.

*     *     *

வான் இழுக்கும் - வானில் உள்ள தேவர்களையும் தன் நறுமணத்தால் இழுக்கும்; ஏல வாச நாறு குன்றமே - ஏலக்காய் மணம் கமழப் பெற்ற அக் குன்றிலே; தேன் இழுக்கு சாரல் வாரிச் செல்ல - தேன் அருவி சாரல் வழி பாய; மீது செல்லும் - ஆகாயத்திலே செல்கின்ற; நாள் மீன் இழுக்கும் - நட்சத்திரங்களை இழுக்கும்; அன்றி - அஃதல்லாமல்; வானவில் இழுக்கும் - வான வில்லை இழுக்கும்; வெண்மதிக்கூன் இழுக்கும் - பிறைச் சந்திரனை இழுக்கும்; கோள் இழுக்கும் - கிரகங்களை இழுக்கும்; என்பவால் - என்று சொல்வார்கள்.

*     *     *

இத்தகைய மலைச்சாரல் வழியே இராமன் லட்சுமணர், சுக்கிரீவன், அநுமன் முதலாயினோர் நடந்து வந்தனர். கிட்கிந்தையை அடைந்தனர். அப்போது இராமன் சுக்கிரீவனை நோக்கி, "வாலியை சண்டைக்கு அழை நீயும் வாலியும் சண்டை செய்கிறபோது நான் தனியே ஒரு புறம் ஒதுங்கி நின்று வாலி மீது அம்பு எய்து கொல்வேன்" என்று கூறினான்.

சுக்கிரீவனும் சம்மதித்தான். உரத்த குரல் எழுப்பினான். வாலியை அழைத்தான். பூமி அதிர நடந்தான். தனது வலிய தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தான்.

சூரிய குமாரனாகிய சுக்கிரீவனின் முழக்கம் என் செய்தது? உறங்கிக் கொண்டிருந்த வாலியை எழுப்பியது. பாற்கடல் போல் பள்ளிக் கொண்டிருந்த வாலி விழித்தான். பெரியதொரு மதயானையின் பிளிறல் கேட்ட சிங்கம் போல் எழுந்தான்.

தம்பியாகிய சுக்கிரீவன் தன்னுடன் போரி செய்ய வந்திருப்பது அறிந்தான்; சிரித்தான். அந்தச் சிரிப்பு எல்லாத்திக்குகளிலும் எதிரொலி செய்தது. சுக்கிரீவன்மீது சினம் கொண்ட வாலி தன் படுக்கைவிட்டு எழுந்தான். வேகமாக எழுந்தான். அந்த வேகத்தினாலே கிட்கிந்தை பூமியிலே அழுந்தியது. அவனது கண்கள் தீப்பொறி கக்கின. வாலி தன் கைகள் இரண்டையும் ஒன்றுடன் மற்றொன்று தட்டினான்.

* * *

வந்தனென் வந்தனென்
என்ற வாசகம்
இந்திரி முதல் திசை
எட்டும் கேட்டன
சந்திரன் முதலிய
தாரகைக் குழாம்
சிந்தின மணிமுடிச்
சிகரம் தீண்டவே.

"இதோ வந்தேன்; இதோ வந்தேன்" என்று எதிர் முழக்கம் கொடுத்தான் வாலி.

அப்படி அவன் முழங்கியது இந்திரனுக்குரிய கிழக்குத் திசை முதலாகிய எட்டுத் திக்கும் கேட்டது.

சந்திரனை முதலாகக்கொண்ட நட்சத்திரக் கூட்டங்கள் சிதறின. எதனால்? வாலியின் மணிமுடிச் சிகரம் தீண்டியதால்.

* * *

வந்தனென் வந்தனென் என்ற வாசகம் - இதோ வந்து விட்டேன்; இதோ வந்துவிட்டேன் என்று வாலி கூறிய வீரச் சொற்கள்.

இந்திரி முதல் - கிழக்கு முதலாகிய; திசை எட்டும் - எட்டுத் திசைகளிலும்; கேட்டன - கேட்டன;

மணிமுடிச் சிகரம் தீண்ட - அவன் ஆர்ப்பரித்து எழுந்த போது இரத்தின கிரீடம் அணிந்த சிரசாகிய மலைச் சிகரம் பட்டதால்; சந்திரன் முதலிய தாரகைக் குழாம் - சந்திரனை முதலாக உடைய நட்சத்திரக் கூட்டங்கள்; சிந்தின - கீழே உதிர்ந்தன.

* * *

கடித்த வாய் எயிறு உகு
 கனல்கள் கார் விசும்பு
இடித்தலால் உகும் உரும்
 இனத்தில் சிந்தின;
தடித்து வீழ்ந்தன எனத்
 தகர்ந்து சிந்தின
வடித்த தோள் வலயத்தின்
 வயங்கு காசு அரோ.

கோபத்தினாலே பற்களை நறநற என்று கடித்தான் வாலி. அப்போது பற்களினின்றும் சிந்திய தீப்பொறிகள் எப்படியிருந்தன? வானத்திலே இடிஇடிக்கும்போது சிதறி ஓடும் சிறு மேகக் கூட்டங்கள்போல் இருந்தன. அவன் தோள் தட்டி முழங்கியபோது அவனுடைய தோள் வளைகளிலிருந்து சிந்திய ரத்தினங்கள் மின்னல் சிதறுவனபோல் விளங்கின.

* * *

கடித்த வாய் எயிறு உகு - (கோபத்தினாலே வாலி) கடித்த வாயில் உள்ள பற்களினின்றும் சிந்திய; கனல்கள் - தீப்பொறிகள்; கார் விசும்பு இடித்தலால் - வானத்திலே மேகங்கள் இடிமுழக்கம் செய்வதால்; உகும் - சிதறும்; உரும் இனத்தில் சிந்தின - மேகக் கூட்டங்கள்போல் சிதறி விழுந்தன. (அவன் தோள் தட்டி முழங்கியபோது) வடித்த -

சிறந்த; தோள் வலயத்தின் வயங்கு காசு - தோள் வளையல் களில் விளங்கிய ரத்தினங்கள்; தடித்து வீழ்ந்தன என - மின்னல்கள் சிதறி வீழ்ந்தன என்று சொல்லும்படியாக; தகர்ந்து சிந்தின - சிதறி விழுந்தன.

* * *

ஞாலமும் நாற்றிசைப்
புனலும் நாகரும்
மூலமும் முற்றிட
முடிவில் தீக்கும் அக்
காலமும் ஒத்தனன்
கடலில் தான் கடை
ஆலமும் ஒத்தனன்
எவரும் அஞ்சவே

வாலி எப்படி இருந்தான்? பூமியும், கடலும், தேவரும், மூல தத்துவப் பொருள்களும் அழிந்துபோக, யுக முடிவில் எரிக்கும் அந்தக் காலாக்கினிபோல் இருந்தான். பாற்கடலில் தோன்றிய ஆல கால விடம்போல் இருந்தான்.

* * *

ஞாலமும் - பூமியும்; நாற்றிசையும் - நான்கு திக்கு களிலும் உள்ள; புனலும் - கடலும்; நாகரும் - தேவரும்; மூலமும் - மூல தத்துவப் பொருள்களும்; முற்றிட - அழிந்து போக; முடிவில் - யுக முடிவில்; தீக்கும் - எரிக்கும்; அக் காலமும் ஒத்தனன் - அந்தக் காலாக்கினி போலானான்; கடலில் - பாற்கடலில்; தான் கடை ஆலமும் ஒத்தனன் - அவன் கடைந்தபோது எழுந்த ஆல கால விடமும் போன்றான்.

* * *

அவ்வாறு சினந்து எழுந்த வாலியைத் தடுக்கிறாள் அவனது மனைவி தாரை. வாலியின் கண்களினின்று

வெளிவந்த தீயும், வாயினின்று வெளிவந்த புகையும் அவளது கூந்தலைத் தீய்க்கின்றன; கூந்தல் கருகி, நாற்றம் வீசுகிறது. அப்பொழுது வாலி சொல்கிறான்: "மலையில் வாழும் மயில் போன்றவளே! தடை செய்யாதே! விலக்காதே! விடு! விடு! முன்பு நான் கடல் கடைந்ததுபோல அச் சுக்கிரீவனின் உடல் குடைந்து உயிர் குடித்து விரைவில் மீள்வேன்."

தாரை சொல்கிறாள்:

"அரசே! முன்னை நான் நின் புயவலியை எதிர்த்து நிற்க இயலாது ஓடி ஒளிந்த அந்த சுக்கிரீவன் இப்பொழுது அதிக வலிமை பெற்றான் அல்லன். மீண்டும் உன்னோடு போர் செய்ய வந்திருப்பது எதைக் குறிக்கிறது? பெருந்துணை பெற்றிருப்பதையே குறிக்கிறது."

தாரை மேலும் சொல்கிறாள்:

"இராமனுடைய நட்பைப் பெற்றுவிட்டான் சுக்கிரீவன். அந்த இராமன் உன் உயிரைப் போக்க முன் வந்துள்ளான் என்று அறிகிறேன்."

வாலி பதில் சொல்கிறான்:

"அடி பாவி! பெரும் தவறு செய்துவிட்டாய்! உலக மக்களுக்கு அறவழி காட்டும் அண்ணல் இராமனுக்கு அபசாரம் செய்துவிட்டாய்!"

* * *

இருமையும் நோக்குறும்
இயல்பினாற்கு இது
பெருமையோ? இங்கு இதில்
பெறுவது என் கொலோ?
அருமையின் நின்று உயிர்
அளிக்கும் ஆறு உடைத்
தருமமே தவிர்க்குமோ
தன்னைத் தான் அரோ

எந்தக் கட்சியிலும் சாராது சம நோக்குடன் சீர்தூக்கிப் பாரிப்பவருக்கு இது பெருமை தரும் ஒன்றோ? இதிலே அவர் அடையும் நன்மை யாதோ? தருமம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளுமோ?

*　　　*　　　*

இருமையும் - இருவர் பக்கமும்; நோக்குறும் - ஆராய்ந்து பார்க்கும்; இயல்பினாற்கு-குணமுடைய அந்த இராமனுக்கு; இது பெருமையோ - நீ கூறிய செயல் பெருமை தரும் ஒன்றோ? இங்கு இதில் பெறுவது - இங்கு வந்து சிநேகம் செய்வதில் அவன் பெறும் நன்மை; என் கொலோ - என்ன? அருமையின் நின்று - அரிய பொருளாக நின்று; உயிர் அளிக்கும் - உயிர்களைக் காக்கும்; ஆறுடை - கொள்கை யுடைய; தருமமே - தருமம் தானே; தன்னைத்தான் தவிர்க்குமோ? - தன்னையே அழித்துக் கொள்ளுமோ? என்றான் வாலி தாரையிடம்.

*　　　*　　　*

ஏற்ற பேர் உலகெலாம்
　　எய்தி ஈன்றவன்
மாற்றவள் ஏவ மற்று
　　அவள் தன் மைந்தனுக்கு
ஆற்று அரும் உவகையால்
　　அளித்த ஐயனைப்
போற்றலை இன்னை
　　புகலல் பாலையோ?

உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட தசரத சக்கரவர்த்தி அந்த அரசினைத் தனக்கு கொடுக்க, தான் பெற்ற அவ்வரசினைத் தன் மாற்றாந் தாயாகிய கைகேயி தன் கட்டளைப்படி அவளது மகன் பரதனுக்கு மகிழ்ந்து கொடுத்த இராமனைப் பாராட்டினாயல்லை. இத்தகைய பழிச் சொற்கள் கூறலாமோ?

*　　　*　　　*

ஏற்ற - தன் தந்தையினுடைய; பேரி உலகெலாம் - பெரிய உலக அரசு அனைத்தையும்; எய்தி - அவன் அளிக்க தான் பெற்ற (பின்); ஈன்றவள் - தன்னைப் பெற்ற தாயாகிய கோசலைக்கு; மாற்றவள் - மாற்றாளாகிய கைகேயி; ஏவ - கட்டளையிட; மற்று - மற்றும்; அவள் தன் மைந்தனுக்கு - அவளது மகனாகிய பரதனுக்கு; ஆற்று அரும் உவகையால் - செயற்கரிய மன மகிழ்வோடு; அளித்த ஐயனை - கொடுத்த புண்ணியனை; போற்றலை - நீ பாராட்டினாய் அல்லை; இன்னை - இத்தகைய பழிச் சொற்கள்; புகலல் பாலையோ - கூறலாமோ?

* * *

நின்ற பேர் உலகெலாம்
நெருங்கி நேரினும்
வென்றி வெம் சிலை அலால்
பிறிதும் வேண்டுமோ?
தன் துணை ஒருவரும்
தன்னில் வேறிலான்
புன் தொழில் குரங்கொடு
புணரு நட்பெனோ?

இந்த உலகமே ஒன்று கூடி எதிர்த்தாலும் வேறு துணை ஏதும் வேண்டுவதில்லை. அவன் கையில் உள்ள விஜய கோதண்டம் ஒன்றே போதும். அத்தகைய தன்னேரி இல்லாதவன் இராமன் சமான ரஹிதன். கேவலம் ஒரு குரங்கோடு நட்புக் கொள்வதால் அவன் பெறும் நன்மை என்ன?

* * *

நின்ற - நீண்ட காலமாக நிலை பெற்ற; பேர் உலகு எலாம் - பெரிய உலகங்கள் யாவும்; நெருங்கி - ஒன்றாகி; நேரினும் - எதிர்த்தாலும்; வென்றி வெம்சிலை அலால் -

வெற்றி தரக் கூடிய அவனது வில் அல்லாது; பிறிதும் வேண்டுமோ - வேறு ஒரு துணை அவனுக்கு வேண்டுமோ? தன் துணை தன்னில் வேறு ஒருவரும் இலான் - தனக்குத் துணை தானே அல்லாது வேறு எவரும் இல்லாதவனாகிய இராமன்; புன் தொழில் - அற்பமான செயல் கொண்ட- குரங்கொடு - ஒரு குரங்கினோடு; புணரும் நட்பு ஏனோ - கொள்ளும் நட்பு எதற்கு?

* * *

தம்பியர் அல்லது
　　தனக்கு வேறுயிர்
இம்பரின் இல் என
　　எண்ணி ஏய்ந்தவன்
எம்பியும் யானும்
　　எதிர்த்த போரினில்
அம்பிடை தொடுக்குமோ?
　　அருளின் ஆதியான்

இந்த உலகத்திலே தனது தம்பிகளைத் தவிர வேறு உயிர் தனக்கு இல்லை என்று எண்ணி அதற்கு ஏற்ப வாழ்பவன் இராமன். அப்படிப்பட்ட ஒருவன் நானும் என் தம்பியும் சண்டையிடுகிற போது நடுவிலே புகுந்து பாணம் விடுவானோ?

* * *

தம்பியர் அல்லது - தன் தம்பிகளே அன்றி; வேறு உயிர் - மற்றோர் உயிர்; இம்பரில் - இந்த உலகில்; தனக்கு இல் என - தனக்கு இல்லை என்று கருதி; ஏய்ந்தவன் - ஒன்றி வாழும் இயல்பு கொண்ட; அருளின் ஆழியான் - கருணைக் கடலான இராமன்; எம்பியும் யானும் - எனது தம்பி சுக்கிரீவனும் நானும்; எதிர்த்த போரில் - எதிர்த்து

நடத்தும் சண்டையில்; இடை - நடுவே; அம்பு தொடுக்குமோ - அம்பு தொடுப்பானோ? (மாட்டான்)

* * *

"சிறிதும் கலங்காதே! இங்கேயே இரு. கண் இமைப் பொழுதிலே அந்த சுக்கிரீவனுடைய உயிர் குடித்து. அவனுக்குத் துணை நிற்பவரையும் அழித்து இங்கு நான் திரும்பி வருவேன்" என்று தாரைக்கு ஆறுதல் மொழி பலவும் கூறிப் போருக்குப் புறப்பட்டான் வாலி.

போர் முழக்கம் செய்த பின்னோனாகிய சுக்கிரீவனை நோக்கித் தானும் எதிர் முழக்கம் செய்தான்.

அப்போது இராமபிரான் தனது இளவலாகிய லட்சுமணனை நோக்கிக் கூறுகிறான் : "அப்பனே! நன்றாக ஊன்றி நோக்குவாயாக. தேவர்களாயினும் சரி; அசுரர்களாயினும் சரி; கடல், காற்று, மேகம் ஆகிய எவையாயினும் சரி. இந்த வாலி சுக்கிரீவர்களுக்கு ஒப்பாகுமோ!"

இளவலும் இயம்பலுற்றான்: "ஐயா! இந்த சுக்கிரீவன் தன் முன்னவனாகிய வாலியைக் கொல்லும் யமனை இங்கே அழைத்து வந்துளான். குரங்குகளின் நிந்தனைக்கு ஆளாகி இப்போரில் ஈடுபட்டோமே என்று என் மனம் குழம்பியுள்ளது. எதையும் சிந்திக்கும் திறன் இல்லாதவனாக இருக்கிறேன். தன் முன்னவனையே கொல்ல முற்பட்டுள்ள இந்தச் சுக்கிரீவன் நம் பால் நேர்மையாக நடந்து கொள்வான் என்பது என்ன உறுதி?"

"தம்பி! எந்தத் தாய் வயிற்றில் பிறந்தவரும் பரதனைப் போல் ஆவாரோ! ஆதலின் குரங்குகள் பால் அத்தகைய நல் ஒழுக்கம் காணலாமோ?" என்று கூறி லட்சுமணனின் குழப் நிலையை நீக்கினான் இராமன்.

வாலியும் சுக்கிரீவனும் குன்றொடு குன்று மோதுவது போலவும், வெற்றியும், வலிமையும் வாய்ந்த ஆண்

சிங்கங்கள் ஒன்றை மற்றொன்று தாக்குவன போலவும் இடது சாரி வலது சாரியாகத் திரிந்து போர் செய்தனர். குயவன் கையால் சுற்றி விடப்பட்ட சக்கரம் எப்படிச் சுற்றுமோ அப்படி இவ்வுலகில் உள்ள பொருள்கள் யாவும் சுழன்றன. அவ்விருவரும் தோளொடு தோள் தேய்த்தனர்; தாளொடு தாள் தேய்த்தனர். அக்காட்சி எப்படி இருந்தது? சுந்தோப சுந்தர்கள் திலோத்தமையின் பொருட்டுப் போரிட்டது போலிருந்தது.

சுந்தன், உபசுந்தன் என இருவர்; அசுரர் இரண்யகசிபு வழி வந்தவர். நிசும்பன் என்ற அசுரனின் புதல்வர். பிரம தேவனைக் குறித்து அருந்தவம் செய்தனர்; அரிய வரங்கள் பல பெற்றனர். அவ்வலிமையால் தேவர்களை வருத்தினர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பிரமதேவன் ஓர் அழகிய பெண்ணைப் படைத்தான்; அவளுக்குத் திலோத் தமை என்று பெயரிட்டான். உயர்ந்த அழகிய பொருள் ஒவ்வொன்றிலும் ஒரு எள் அளவு எடுத்து ஒன்று சேர்த்துப் படைத்ததால் அவள் திலோத்தமை எனும் பெயர் பெற்றாள்.

சுந்தன், உபசுந்தன் ஆகிய இருவரும் அவளை விரும்பினர்.

“உங்கள், இருவரில் எவன் பலசாலியோ அவனையே நான் மணப்பேன்” என்றாள் திலோத்தமை. தங்கள் பலத்தை நிரூபிக்கும் பொருட்டு இருவரும் போரிட்டனர். மடிந்தனர். இது புராண வரலாறு.

இந்த சுந்தோப சுந்தர் போல வாலியும் சுக்கிரீவனும் போரிட்டனர்.

* * *

நேமி தான் கொலோ? நீலகண்டன்
நெடும் சூலம்
ஆம் இது ஆம் கொலோ? அன்று எனின்
குன்று உருவு அயிலும்

நாம இந்திரன் வச்சிரப்
படையும் என் நடுவண்
போம் எனும் துணை போதுமோ?
யாது? எனப் புழுங்கும்.

வாலியும் சுக்கிரீவனும் ஒருவரை மற்றொருவர் தாக்கிப் போர் செய்தனர். மலையும் மலையும் மோதியது போல அவ்விருவரும் போர் செய்த காலை மறைந்திருந்த இராமன் வாலி மீது கணை ஒன்று ஏவினான். அந்த அம்பானது வாலியின் மார்பிலே பாய்ந்து துளைத்தது. அவ்விதம் அம்பு துளைக்கவே "இது எவருடைய கணையோ? திருமாலின் சக்கராயுதமோ? நீலகண்டன் விடுத்த சூலமோ? இந்திரன் வச்சிராயுதமோ? அவற்றிற்கெல்லாம் என் மார்பு துளைக்கும் வலிமை இல்லையே! இது யாதோ தெரியவில்லையே!" என்று தவித்தான் வாலி.

* 3 *

நேமி தான் கொலோ - இப்போது என் மீது பாய்ந்துள்ள இந்தக் கணையானது திருமாலின் சக்கராயுதமோ? நீலகண்டன் - நீலகண்டனாகிய சிவபெருமானின்; நெடும் - நீண்ட; சூலம் ஆம் இது ஆம் கொலோ - சூலாயுதம் இதுவோ? அன்று எனின் - இல்லையேல்; குன்று உருவு அயிலும் - மலையின் உருப்பிளந்த; நாம இந்திரன் வச்சிரப் படையும் - பிரசித்தி பெற்ற இந்திரனுடைய வச்சிரா யுதமும்; என் நடுவண் - என் மார்பிலே; ஊடுருவிச் செல்லும் துணை போதுமோ - வலியுடையதோ? யாது என? யாதோ தெரியவில்லையே என்று; புழுங்கும் - தவிப்பான்.

* * *

வெள்கிடும்; மகுடம் சாய்க்கும்
வெடிபடச் சிரிக்கும்; மீட்டும்
உள்கிடும், "இதுவும் தான் ஓர்
ஓங்கு அறமோ?" என்று உன்னும்
முள்கிடும்; குழியில் புக்க
மூரி வெம் களி நல் யானை
தொள் கொடும் கிடந்தது என்னத்
துயர் உழந்து அழிந்து சோர்வான்

யானைப் பிடிப்பவர்கள் பெரிய படுகுழி வெட்டி அதைப் பசிய இலைகளாலும், கரும்புக் கழிகளாலும் மூடி மறைத்து வைப்பார்கள். பாவம்! ஒன்றுமறியாத யானை அதில் வீழ்ந்து விடும். அவ்வாறு வீழ்ந்த யானை சீறும்; துதிக்கையால் சாடும்; பெருமூச்சு விடும்.

அவ்வாறே துடித்தான் வாலி; வெட்கம் கொள்வான்; தலையிலே அணிந்த கிரீடத்தைச் சாய்ப்பான்; பெருமுழக்கத்துடன் சிரிப்பான்; மீளவும் யோசிப்பான்; இவ்வாறு கணை ஏவுதலும் சிறந்த தருமமோ என்று எண்ணுவான்.

* * *

முள்கிடும் குழியில் புக்க - முழுகி அழுந்தத்தக்க பெருங் குழியிலே விழுந்து; மூரி வெம் களி நல் யானை - வலிமை மிக்க வெவ்விய மதங்கொண்ட சிறந்த ஆண் யானையானது; தோள் கொடும் கிடந்தது என்ன - வருந்திக் கிடந்தது போல; துயர் உழந்து - துன்பம் அனுபவித்துக் கொண்டு; அழிந்து - நிலை அழிந்து; சோர்வான் - தளர்வுறும் வாலி; வெள்கிடும் - வெட்கம் கொள்வான்; மகுடம் சாய்க்கும் - கிரீடம் அணிந்த தலையைச் சாய்ப்பான்; வெடிபடச் சிரிக்கும் - பெரு முழக்கத்துடன் சிரிப்பான்; மீட்டும் உளகிடும் - மீளவும் யோசிப்பான்; இதுவும் தான் ஓங்கு அறமோ என்று உன்னும் - இவ்விதம்

அம்பு எய்தலும் சிறந்தோர் அறமோ? என்று எண்ணு வான்.

* * *

"வில்லினால் துரப்ப அரிது, இவ்
வெஞ்சரம்" என வியக்கும்
"சொல்லினால் நெடு முனிவரோ
துண்டினார்" என்னும்
பல்லினால் கடிப் புறும் பல
காலும் தன் உரத்தைக்
கல்லி ஆர்ப் பொடும் பறிக்கும் அப்
பகழியைக் கண்டான்.

"இந்தக் கணை சாதாரணமானது அன்று. வில்லினின்று பாய்ந்த வெஞ்சரம் அன்று இது? முனிவர் எவரோ மந்திரம் சொல்லி விடுத்த கணையேயாகும்" என்று முடிவு செய்தான் வாலி. வாலி தாங்க முடியாமல் பற்களை "நறநற" என்று கடித்தான்.

* * *

ஆர்ப்பொடும் - ஆரவாரத்துடனே; தன் உரத்தைக் கல்லி - தன் மார்பைத் துளைத்து; பறிக்கும் - பெயர்த்துச் சென்ற; அப்பகழியைக் கண்டான் - அந்த அம்பைக் கண்ட வாலி; இவ்வெம் சரம் - இக் கொடிய அம்பு; வில்லினால் துரப்பு அரிது - ஒரு வில்லினால் செலுத்தற்கு அரியது! என வியக்கும் - என்று ஆச்சரியம் கொள்வான்; நெடு முனிவர் - நீண்ட தவம் புரிந்த பெரிய முனிவர்; சொல்லினால்- மந்திரம் ஜெபித்து; தூண்டினார் - ஏவினார்; என்னும் - என்று எண்ணுவான்; பலகாலும் பல்லினால் கடிப்புறும் - பல முறை தன் பற்களை "நற நற" என்று கடிப்பான்.

* * *

மும்மை சால் உலகுக்கு எல்லாம்
மூல மந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை, இராம என்னும்
செம்மை சேர் நாமம் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்.

* * *

மூன்று உலகங்களுக்கும் மூல மந்திரமாக உள்ளதும்; தன்னை ஜபிக்கின்ற அடியார்க்குத் தம்மையே முற்று அளிக்கின்றதும், ஒப்பற்ற சிறந்த சொல்லாக உள்ளதும் இப் பிறப்பிலேயே எழுமையும் ஒழிக்க வல்லதும்; ஆன 'ராம' என்ற சிறந்த திருநாமம் அந்த அம்பிலே விளங்கக் கண்டான் வாலி.

* * *

மும்மை சால் - மேல் உலகம்; பூ உலகம்; பாதாள உலகம் என்று சொல்லப்பட்ட மூன்று வகையான; உலகுக்கு எல்லாம் - உலகங்களுக்கு எல்லாம்; மூல மந்திரத்தை - முக்கிய மந்திரமாக உள்ளதும்; தமர்க்கு - தன்னை ஜபிக்கின்ற அடியார்க்கு; தம்மையே முற்றும் நல்கும் - தம்மையே முற்றும் கொடுக்கின்ற; தனிப்பெரும் பதத்தை - ஒப்பற்ற சிறந்த சொல்லாக உள்ளதும்; தானே - தனியாகவே; இம்மையே - இப் பிறப்பிலேயே; எழுமை நோய்க்கும் - எழு வகைப் பிறப்புகளாகிய நோய்களை; மருந்தினை - ஒழிக்க வல்ல மருந்தாக உள்ளதும் ஆன; இராம என்னும் செம்மை சேர் நாமம் தன்னை - ராம என்கிற சிறந்த திருநாமத்தை; கண்களில் தெரியக் கண்டான் - தனது கண்களினால் (அந்த அம்பிலே) விளங்கப் பார்த்தான்.

* * *

கண்ணுற்றான் வாலி, நீலக்
 கார்முகில் கமலம் பூத்து
மண் உற்று வரிவில் ஏந்தி
 வருவதே போலும் மாலை
புண் உற்றது அனைய சோரி
 பொறியோடும் பொடிப்ப நோக்கி
''எண்ணுற்றாய்? என் செய்தாய்'' என்று
 ஏசுவான் இயம்பலுற்றான்.

அப்போது இராமன் அவன் எதிரே வந்தான். கார் மேகமானது தாமரை மலரப் பெற்று வானத்தினின்றும் மண் மேல் வந்து வில் ஏந்தி வருவதே போல வந்தான்.

"என்ன நினைத்தாய்? என்ன செய்தாய்?'' என்று சீறினான் வாலி, கண்களில் ரத்தம் தெறிக்க, தீப்பொறி பறக்க மேலும் இராமனை ஏசுகிறான் வாலி.

* * *

நீலம் - நீல நிறம் கொண்ட; கார்முகில் - கார் காலத்து மேகம்; கமலம் பூத்து - தாமரை மலரப் பெற்று; வரிவில் ஏந்தி - கட்டமைந்த வில்லினை ஏந்தி; மண் உற்று - பூமியில் இறங்கி; வருவதே போலும் - நடந்து வருவது போல; கண்ணுற்றான் - (வருகின்ற) இராமனைக் கண்ட; வாலி - வாலியானவன்; புண் உற்றது அனைய - புண்ணிலிருந்து வெளிப்படுவது போல; சோரி - இரத்தம்; பொறியொடும் - பொடிப்ப - தீப்பொறியோடு; வெளிப்பட நோக்கி - இராமனைப் பார்த்து; எண்ணுற்றாய் - என்ன நினைத்தாய்? என் செய்தாய்? - என்ன செய்தாய்? என்று - என்று வினவி; ஏசுவான் - பழிப்பவனாய்; இயம்பலுற்றான் - சொல்லத் தொடங்கினான்.

* * *

வாய்மையும் மரபும் காத்து
  மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே! நீ
  பரதன் முன் தோன்றினாயே!
தீமை தான் பிறரைக் காத்துத்
  தான் செய்தால் தீங்கு அன்றாமோ?
தாய்மையும் அன்றி நட்பும்
  தருமமும் தழுவி நின்றாய்.

"வாய்மையும், மரபும் காத்து வான் புக்க தசரதன் மைந்தனே! நீ பரதன் முன் தோன்றினாயே! மற்றவருக்கு ஏற்படும் தீமையினின்று அவரைப் பாதுகாப்பதற்காக நீ தீமை செய்தால் அது நன்மை ஆகுமா?"

* * *

வாய்மையும் - சத்தியமும்; மரபும் - பிறந்த குலப் பெருமையும்; காத்து - பாதுகாத்து; மன் உயிர் துறந்த - (அதன் பொருட்டு) தனது உயிர் நீத்த; வள்ளல் - வள்ளலும்; தூயவன் - தூய்மையானவனும் ஆகிய தசரத சக்கரவர்த்தியின்; மைந்தனே - பிள்ளாய்; நீ பரதன் முன் தோன்றினாயே - நீ பரதனுக்கு முன் பிறந்தாயே; பிறரை தீமை காத்து - மற்றவருக்கு ஏற்படும் தீமையினின்றும் அவரைப் பாதுகாத்து; தான் செய்தால் - தானே அத் தீமை செய்தால்; தீங்கு அன்று ஆமோ - அது நல்லது ஆகுமோ? தாய்மையும் - தாய்மைக் குணமும்; அன்றி - அல்லாமல்; தருமமும் - அறமும்; நட்பும் - சிநேகமும்; தழுவி நின்றாய் - சார்ந்து நிற்பவனே.

* * *

இல்லறம் துறந்த நம்பி
எம் மனோர்க்கு ஆகத் தங்கள்
வில் அறம் துறந்த வீரன்
தோன்றலால், வேத நூலில்
சொல் அறம் துறந்திலாத
சூரியன் மரபும், தொல்லை
நல்லறம் துறந்தது என்னா
நகை வர நாண் உட்கொண்டான்.

அரச வாழ்வும், அரண்மனை வாழ்வும் துறந்து, காடு வந்த இராமன், சகோதரர் சண்டையில் தலையிட்டு வில் அறம் துறந்தான். அதனால் வேத விதி வழுவாத சூரிய குல அரசர் மரபும் பழைமையான நல்லறம் துறந்தது என்று எண்ணினான் வாலி; நாணம் மேலிட்டது. மெல்ல நகைத்தான்.

* * *

இல்லறம் துறந்த நம்பி - இல்லறம் துறந்து, தவ வேடம் தாங்கிக் காடு வந்த புருஷோத்தமன்; எம்மனோர்க்காக - எம்மைப் போன்றவர்களுக்காக; தங்கள் வில் அறம் துறந்த வீரன் - தங்கள் பரம்பரைக்குரிய வில் போர் முறையைக் கைவிட்ட வீரனாகிய இராமன்; தோன்றலால் - பிறந்ததால்; வேத நூலில் சொல் - வேத நூற்களிலே சொல்லப்பட்ட; அறம் துறந்திலாத - அறநெறி வழுவாத; சூரியன் மரபும் - சூரிய குலமும்; தொல்லை நல் அறம் துறந்தது என்ன - தொன்று தொட்டு வருகின்ற நல்ல அறத்தை நழுவவிட்டது என்று; நகை வர-வெளியே சிரிப்பும்; உள் நாணும் - உள்ளே நாணமும்; கொண்டான் - கொண்டான்.

* * *

குலம் இது; கல்வி ஈது;
கொற்றம் ஈது; உற்று நின்ற
நலம் இது; புவனம் மூன்றும்
நாயகம் உன்னது அன்றோ?
வலம் இது; இவ்வுலகம் தாங்கும்
வண்மை ஈது என்றால் திண்மை
அலமரச் செய்யலாமோ அறிந்திருந்து
அயர்ந்துளார்போல்

சிறந்த குலத்தில் பிறந்தாய்! உயர் கல்வியுடையாய்! வெற்றியுடையாய்! நற்குண நற்செயல் யாவும் உடையாய்! மூவுலகிற்கும் தலைமை தாங்குவாய்! வலிமை உனது! பாதுகாக்கும மேன்மை உனது. எல்லாம் அறிந்தும் அறியாதார் போல் இதனைச் செய்யலாமோ!

* * *

குலம் இது - உன்னுடைய குலம் சிறந்தது; கல்வி ஈது - சிறந்த கல்வி உன்னுடையது; கொற்றம் ஈது - வெற்றி உன்னுடையது; உற்று நின்ற நலம் இது- பொருந்திய நற்குண நற்செயல்கள் எல்லாம் உன்னுடையன; புவனம் மூன்றும் - மூன்று உலகங்களுக்கும்; நாயகம் - தலைமை; உன்னது அன்றோ - உன்னுடையது அன்றோ? வலம் இது - சிறந்த வலிமை உன்னுடையது; இ உலகம் தாங்கும் - இந்த உலகத்தைப் பாதுகாக்கும்; வன்மை ஈது - மேன்மை உன்னுடையது; என்றால் - என்றால்; அறிந்து இருந்தும் - எல்லாம் அறிந்து இருந்தும்; அயர்ந்துளார் போல் - அனைத்தும் மறந்தவர் போல; திண்மை அலமர - அந்த உறுதிகள் எல்லாம் நிலை குலையும்படி; செய்யலாமோ? -நீ இப்படிச் செய்யலாமோ?

* * *

கோ இயல் தருமம் உங்கள்
குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்
ஓவியத்து எழுத ஒண்ணா
உருவத்தாய்; உடைமை அன்றோ?
ஆவியை, சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை
திகைத்தனை போலும் செய்கை.

சித்திரத்தில் எழுத முடியாத வடிவழகுடையவனே! உங்கள் குலத்தில் பிறந்தவர்களுக்கு எல்லாம் அரசு நீதி வழுவாதிருத்தல் உடைமையன்றோ? அங்ஙனமிருக்க நீ அந்த நீதி வழுவியது எவ்வாறு? உனது உயிருக்கு உயிரான தேவியை, சனகன் பெற்ற அன்னத்தைப் பிரிந்ததால் செய்யும் செயல் இதுவென்று அறியாது தடுமாறினாய் போலும்.

* * *

ஓவியத்து - சித்திரத்தில்; எழுத - எழுதுவதற்கு; ஒண்ணா - இயலாத; உருவத்தாய் - வடிவழகு உடையவனே; கோ இயல் தருமம் - அரச நீதி; உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம் - உங்கள் குலத்தில் பிறந்தவர்களுக்கு எல்லாம்; உடைமை அன்றோ - உரிய ஒன்று அல்லவோ? (அங்ஙனம் இருக்க நீ அரசு நீதி தவறியது எதனால்?) ஆவியை - உனது உயிருக்கு உயிரான; சனகன் பெற்ற அன்னத்தை - சனக மகாராசன் பெற்ற அன்னம் போன்றவளும்; அமிழ்தின் வந்த - அமுதம்போல் அருமையாகக கிடைத்தவளும் (ஆகிய); தேவியை - உனது மனைவியை; பிரிந்த பின்னை - பிரிந்த பிறகு; செய்கை திகைத்தனை போலும் - செய்யும் செயல் ஈதென்று அறியாது தடுமாறினாய் போலும்.

* * *

அரக்கர் ஓர் அழிவு செய்து
கழிவரேல் அதற்கு வேறு ஓர்
குரக்கு இனத்து அரசைக் கொல்ல
மனு நீதி கூறிற்று உண்டோ
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்
எப்பிழை கண்டாய்? அப்பா
பரக்கழி இது நீ பூண்டால்
புகழை யார் பறிக்கற் பாலார்

அரக்கர் உனக்கு ஒரு தீங்கு செய்து சென்றால். அதற்காக மற்றொரு குரங்கினத்தின் அரசைக் கொல்லுமாறு மனு நீதி கூறிற்றா? இரக்கம் எங்கு போக்கினாய்? என்பால் என்ன குற்றம் கண்டாய்? அப்பா! இப்பெரும் பழியை நீ ஏற்றுக்கொண்டால் புகழை ஏற்பவர் எவர்?

* * *

அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல் - அரக்கர் உனக்கு ஒரு தீங்கு செய்து சென்றால்; அதற்கு - அதற்காக; வேறு ஒரு - வேறாகிய ஒரு; குரக்கு இனத்து அரசை - குரங்கு இனத்தின் அரசனை; கொல்ல - கொல்லுமாறு; மனுநீதி - மனு தர்மசாத்திரம்; கூறிற்று உண்டோ - கூறியது உண்டா? இரக்கம் எங்கு உகுத்தாய் - உனக்குரிய கருணையை எங்கே போக்கிவிட்டாய்? என்பால் - என்னிடம்; எப்பிழை கண்டாய் - என்ன குற்றம் கண்டாய்? அப்பா - நீ; பரக்கழி இது பூண்டால் - இந்தப் பெரும்பழியை ஏற்றுக் கொண்டால்; புகழைப் பறிக்கார் பாலர் யார்?- புகழை ஏற்பவர் எவர்? (எவருமிலர் என்றபடி.)

* * *

வீரம் அன்று; விதி அன்று
மெய்ம்மையின்
வாரம் அன்று; நின் மண்ணினுக்கு
என் உடல்
பாரம் அன்று; பகை அன்று;
பண்பு ஒழிந்து
ஈரம் அன்று இது
என் செய்தவாறு நீ?

வீரம் அன்று; அறநூல் விதியும் அன்று; மெய்யின் பாற்பட்டதும் அன்று; உனக்கே உரிய மண் உலகிற்கு என் ஒருவனது உடல் ஒரு பெரும் சுமையன்று; நான் உன் பகையும் அன்று இரக்கமின்றி என்ன செய்தாய்?

* * *

(நீ செய்த இச் செயல்) வீரம் அன்று-வீரன் செயற்குரிய செயல் அன்று; விதி அன்று-தரும சாத்திர விதி அன்று; மெய்ம்மையின் வாரம் அன்று - உண்மையின்பால் பட்டதும் அன்று; நின் மண்ணினுக்கு - உனக்கு உரியதான இந்த நில உலகுக்கு; என் உடல் - என் ஒருவனது உடல்; பாரம் அன்று - பொறுக்க முடியாத சுமை அன்று; பகை அன்று - உனக்கு நான் பகைவனும் அல்லன்; (இங்ஙனமிருக்க) பண்பு ஒழிந்து - நீ உன் பெருங்குணத்தைவிட்டு; ஈரம் அன்று - இரக்கம் இல்லாத; இது செய்த ஆறு - இச் செயல் செய்தது; என் - எக் காரணம் பற்றி?

* * *

நூல் இயற்கையும் நும்
குலத்து உந்தையர்
போல் இயற்கையும்
சீலமும் போற்றலை

வாலியைப் படுத்தாய் அலை
மன் அற
வேலியைப் படுத்தாய்
விறல் வீரனே.

வலிமை மிக்க வீரனே! தரும சாந்திரங்களிலே கூறப் பட்டுள்ள முறையையும், உங்கள் குலத்திலே தோன்றிய தாதை மூதாதை போன்றாரின் இயல்பையும், நல் ஒழுக்கத் தையும், நீ பாதுகாக்கவில்லை; வாலியாகிய என்னை நீ கொன்றாய் அல்லை; அரச நீதி எனும் வேலியையே அழித்தாய்.

*　　*　　*

விறல் வீரனே - வலிமை மிக்க வீர; நூல் இயற்கையும் - தரும சாஸ்திரங்களிலே கூறப்பட்டுள்ள முறையையும்; நும் குலத்து - உங்கள் குலத்திலே தோன்றிய; உந்தையர் போல் இயற்கையும் - தாதை மூதாதை போன்றோரின் இயல்பை யும்; சீலமும் - நல் ஒழுக்கத்தையும்; போற்றலை - நீ பாதுகாத்தாய் இல்லை. வாலியைப்படுத்தாய் அல்லை - வாலியாகிய என்னை நீ அழித்தாய் இல்லை; மன் அற வேலியை படுத்தாய் - அரச நீதி எனும் வேலியையே அழித்துவிட்டாய்.

*　　*　　*

இவ்வாறு இராமனை ஏசினான் வாலி. இராமன் கோபங்கொள்ளவில்லை. மிக்க அமைதியாக தான் வாலியை 'கொன்றது சரியே' என்று நிரூபித்துக் காட்டினான். அதை வாலியும் ஏற்றுக்கொண்டான்.

இராமன் கூறிய காரணங்கள் யாவை? வாலி இந்திரனின் அம்சம். தேவருள் இந்திரன் தாமச குணம் நிறைந்தவன். தன் ஆணவத்தால் பலமுறை தன் பதவியை இழந்திருந்தான். ஆனாலும் இறுதியில் கடவுள் அவனைக் காப்பாற்றினார். ஏன்? தன் இரக்க குணம் காரணமாக,

வாலியிடமும் இந்திரனின் தாமச குணம் நிரம்ப படிந் திருந்தன. இல்லாவிட்டால் எத்தனையோ வீராதி வீரர்கள் இருக்க, கொடியவனான இராவணனை உயிர்த் தோழனாக ஏற்றுக் கொள்வானா?

உண்மையில் நல்லவர்க்கே நண்பனாயிருந்தால், இராவணனின் படை வீரர்களான கரதூஷணாதிகளை தன் நாட்டின் அருகில் இருக்க இடந்தருவானோ?

இராவணன் சீதா பிராட்டியை அபகரித்துச் சென்ற விவரமும் அவன் அறிவான். அது அடாத செயல் என்பதும் உணர்வான். இராவணனுக்குப் புத்தி கூறினானா? இல்லை கண்டித்தானா? இல்லையே! இது குற்றமாகாதோ?

தசரதனை அவன் (வாலி) நன்கு அறிவான். சூரிய குலப் பெருமையும் அவன் அறிந்ததே. இராமபிரானின் தியாக உள்ளமும் அவனுக்குத் தெரிந்தது தான். இருந்தும் கடமையைச் செய்ய தவறியது குற்றமல்லவா?

அது மட்டுமா? தம்பியை (சுக்ரீவனை) கொல்ல முயன்றான்.

தம்பியின் மனைவியை அபகரித்தான்.

இவை இரண்டும் கொடிய பாவங்கள். இந்த இரண்டிற்கும் நூல்கள் விதித்த தண்டனை யாது? கொலைத் தண்டனை.

எனவே வாலியை இராமன் கொன்றது நியாயமானது தானே.

வாலி மீண்டும் ஓர் சந்தேகம் கேட்டான். ''தன்னை இராமன் ஏன் மறைந்திருந்து அடிக்கவேண்டும்'' என்று. இதற்கு லட்சுமணன் விளக்கங்கூறி தெளிவுபடுத்தினான். வாலியைச் சூழ்ந்த மாயை அகன்றது. அவன் இராமனிடம் சரணடைந்து வரங்கள் சில கேட்டு பெற்றான்.

* * *

"தாய் என உயிர்க்கு நல்கி
தருமமும் தகவும் சால்பும்
நீ என நின்ற நம்பி
நெறியினின் நோக்கும் நேர்மை
நாய் என நின்ற எம் பால்
நவை அற உணரலாமோ
தீயன பொறுத்தி" என்றான்
சிறியன சிந்தியாதான்.

தாய் போல உயிர்களுக்கு நலம் செய்து, தருமமும், நடுநிலையும், நற்குண நிறைவும் நீயே என்று சொல்லும்படி அவ்வழி நின்று காட்டும் புருஷோத்தமனே! அறநெறி நோக்கில் காணும் தன்மையை "நாய் போன்ற எம்மிடம் குற்றம் காணலாமோ? தீய செயல்களைப் பொறுத்தருள்வாய்" என்றான் சிறிய எண்ணம் இல்லாத வாலி.

* * *

தாய் என - தாய் போல; உயிர்க்கு - உயிர்களுக்கு; நல்கி - நலம் செய்து; தருமமும், தகவும், சால்பும் - தருமமும் நடுநிலையும் நற்குண நிறைவும்; நீ என - நீயே என்று சொல்லும்படி; நிறை நம்பி - அவ்வழி நின்று காட்டும் புருஷோத்தமனே; நெறியனின் நோக்கும் நேர்மை - அறநெறி நோக்கில் காணும் தன்மையை; நாய் என நின்ற - நாய் போலிருக்கும்; எம் பால் - எங்கள் பால்; நவை அற உணரலாமோ - குற்றம் காணல் இயலுமோ; தீயன பொறுத்தி - தீய செயல்களைப் பொறுத்தருள்வாய்; என்றான் - என்றான்; சிறியன சிந்தியாதான் - சிறிய எண்ணங் கொள்ளாத வாலி.

• • •

"ஓவிய உருவ! நாயேன்
உளது ஒன்று பெறுவது உன்பால்
பூ இயல் நறவம் மாந்தி
புந்தி வேறு உற்ற போழ்தில்
தீவினை இயற்று மேனும்
எம்பிமேல் சீறி, என் மேல்
ஏவிய பகழி என்னும்
கூற்றினை ஏவல்" என்றான்.

சித்திரம் போலும் வடிவழகு கொண்டவனே! நான் உன் பால் வேண்டும் வரம் ஒன்றுளது. மலரிலேயுள்ள மதுவை அருந்தி மதிமயக்குற்றுத் தவறு இழைத்தாலும் சீறி என்மேல் ஏவிய கணை எனும் கூற்றினை என் தம்பிமேல் ஏவாது பொறுத்திடுவாய்.

* * *

ஓவிய உருவ - சித்திரம் போலும் வடிவழகு கொண்டவனே; நாயேன் உன் பால் பெறுவது - எளியேன் உன்னிடம் வேண்டிப் பெறுவது; ஒன்று உளது - ஒன்று உண்டு; பூ இயல் - மலர்களில் உண்டான; நறவம் - மதுவை; மாந்தி - அருந்தி; புந்தி - அறிவு; வேறு உற்ற போழ்தில் - மயங்கியபோது; தீவினை இயற்ற மேனும் - கெடுதல் செய்தாலும்; சீறி - சினங்கொண்டு; என்மேல் ஏவிய - என்மீது விடுத்த; பகழி எனும் கூற்றினை - அம்பு என்கிற இயமனை; எம்பி மேல் - என் தம்பியாகிய சுக்ரீவன் மீது; ஏவல் - ஏவாதிருப்பாயாக; என்றான் - என்று வேண்டினான்.

* * *

நெய்யடை நெடுவேற்றானை
நீனிற நிருத ரென்னும்
துய்யடைக் கனலியன்ன
தோளினன் தொழிலுந் தூயன்

பொய்யுடை யுள்ளத்தார்க்குப்
புலப்படா புனித மற்றுன்
கையடை யரகு மென்று அவ்
இராமற்கு காட்டுங்காலை

குற்றமிலா மனமுடைய தூய இராமனே! தீய அரக்கர்களுடைய பெருஞ்சேனை என் மகன் அங்கதனின் நெருப்புப் போன்ற தோள்கட்கு முன்னே பஞ்சு பொதியாகும். விரைவில் எரிந்து சாம்பலாகும். அந்த அரக்கர்களை அழிக்க அவன் பெரிதும் உதவுவான். எனவே நீ அவனை (அங்கதனை) அடைக்கலமாக ஏற்பாயாக என்றான் வாலி.

*　　　*　　　*

பொய் உடை உள்ளத்தார்க்கு - குற்றம் பொருந்திய மனமுடையாரிக்கு; புலப்படா புனித - தோன்றாத தூயனே; நெய் அடை நெடு வேல் - நெய் பூசப்பெற்ற நீண்ட வேல்களையேந்திய; தானை - சேனைகளையுடைய.; நீல் நிற நிருதர் என்னும் துய் அடைக்கு - நீல நிறமுடைய அரக்கர்களெனப்படும் பஞ்சு மூட்டைக்கு; கனலி அன்ன தோளினன் - நெருப்பினையொத்த தோள்களையுடையவனும்; தொழிலும் தூயன் - உள்ளத்திலும் செயலிலும் தூய்மையானவனுமாகிய இவனை (அங்கதனை); உன் கையடையாகும் - உனக்கு அடைக்கலமாகத் தந்தேன்; என்று அ இராமற்கு காட்டுங்காலை - என்று கூறி இராமனுக்கு அங்கதனை காட்டியபோது.

*　　　*　　　*

இராமனின் தாள்களை அங்கதன் வணங்கினான். இராமன் தனது அழகிய உடைவாளை அங்கதனுக்கு நீட்டினான். இதை பெற்றுகொள்வாயாக என்று இராமன் கூறினான். அங்கதனும் அதனை பெற்றது எப்படியிருந்தது? இராமன் அங்கதனை அடைக்கலமாக ஏற்றதை ஏழு உலகமும் துதித்து பாராட்டியது போலிருந்தது. ஏன்?

சீக்கிரத்தில் அரக்கர் தொல்லை நீங்கும் என்ற பெருமிதத்தால்.

அதே சமயம் வாலியும் முத்தியடைந்தான்.

பொன் மா மௌலி புனைந்து
பொய் இலான்
தன் மானக் கழல்
தாழும் வேளையில்
நன் மார்பில் தழுவுற்று
நாயகன்
சொன்னான்; முற்றிய சொல்லின்
எல்லையான்.

இவ்வாறு வேண்டிய பின் வாலி உயிர் துறந்தான். வாலியின் ஈமக் கடன்கள் முடிந்த பின் லட்சுமணனை அழைத்து சுக்கிரீவனுக்கு முடி சூட்டுமாறு கட்டளையிட்டான் இராமன்.

சுக்கிரீவன் முடி சூடு விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முடி சூடிக்கொண்ட சுக்கிரீவன் இராமன் அடி வணங்கினான். அப்போது இராமன் அரச நீதிகள் சிலவற்றை சுக்கிரீவனுக்கு அறிவுறுத்தினான்.

* * *

(சுக்கிரீவன்) பொன் மா மௌலி புனைந்து - பொன் மயமான சிறந்த கிரீடம் அணிந்து; பொய் இலான் தன் - பொய் புகலாத இராமனுடைய; மானக் கழல் - பெருமை பொருந்திய திருவடிகளில் வணங்கியபோது; நாயகன் - தலைவனும்; முற்றிய சொல்லின் - வேத வேதாந்தங்களின்; எல்லையான் - முடிவானவனும் ஆகிய இராமன்; நன் மார்பில் - தன் அழகிய மார்பில்; தழுவுற்று - அணைத்து; சொன்னான் - அரசு முறைகள் சிலவற்றைக் கூறினான்.

* * *

வாய்மை சால் அறிவின்
வாய்த்த மந்திர மாந்தரோடும்
தீமை தீர் ஒழுக்கின் வந்த
திறத்தொழில் மறவரோடும்
தூய்மை சால் புணர்ச்சி பேணித்,
துகள் அறு தொழிலை ஆகிச்
சேய்மையோடு அணிமை இன்றித்
தேவரின் தெரிய நெற்றி

மந்திரிகள் எப்படி இருக்கவேண்டும்; வாய்மையுடைய வராயிருத்தல் வேண்டும். அது மட்டும் போதுமா? போதாது. நல்ல அறிவில் முதிர்ந்தவர்களாயிருக்க வேண்டும்.

போர்த் தொழில் வல்லவரும் எவர்க்கும் தீமை செய்யாத நல் ஒழுக்கம் உடையவருமான படைத்தலைவர்களுடனும் கூடி, மந்திரி, சேனாதிபதி ஆகிய இரு சிறகுகளுடனும் நல்லுறவு கொண்டு, காட்சிக்கு எளியனாய் நெருங்குதற்கு அரியனாய், நற்செயல் புரிவாய்.

* * *

வாய்மை சால் - சத்தியத்தோடு கூடிய; அறிவின் - அறிவினால்; வாய்த்த - சிறப்பு அமைந்த; மந்திர மாந்த ரோடும் - மந்திரிகளுடனும்; தீமை தீர் ஒழுக்கின் வந்த - குற்றமற்ற நல் ஒழுக்கத்தோடு கூடிய; தொழில் திற மறவரோடும் - போர்த்தொழில் வல்லவரான சேனைத் தலைவரோடும்; தூய்மை சால் புணர்ச்சி பேணி - நல் உறவு கொண்டு; துகள் அறு தொழிலை ஆகி - குற்றமற்ற செயல் புரிவானாகி; சேய்மையோடு அணிமை இன்றி - காட்சிக்கு எளியனாய் நெருங்குதற்கு அரியனாய்; தேவரின் தெரிய நிற்றி - தேவர்கள் போல் கருதி உன்னை வணங்கும்படி நிற்பாயாக.

* * *

புகை உடைத்து என்னின், உண்டு
பொங்கு அனல் அங்கு என்று உன்னும்
மிகை உடைத்து உலகம்; நூலோர்
வினையமும் வேண்டற்பாற்றே
பகையுடைச் சிந்தையார்க்குப்
பயன் உறு பண்பின் தீரா
நகையுடை முகத்தையாகி
இன் உரை நல்கு, நாவால்

மக்கள் மிகவும் நுண் அறிவு படைத்தவர்கள். புகை கண்டவிடத்தில் தீ உண்டு என்று ஊகித்து அறியும் இயல் புடையவர்கள். ஆகவே அத்தகைய ஐயப்பாடுகளுக்கு இடம் கொடாதே. வினயமாயிரு. உன் மீது பகை கொண்டு அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உன்னிடம் வந்து பழகுவர் சிலர். அவரை நீ இன்னாரென்று அறிந்துகொள். ஆனால் பகை பாராட்டாதே. அவரவர் பண்புக்கு ஏற்ப நடந்து கொள். எவரிடமும் 'சிடு சிடு' என்று சீறி விழாதே. எப்பொழுதும் சிரித்த முகத்தோடு இரு. இனிய சொல் வழங்கு.

*     *     *

உலகம் - உலகத்து மக்கள்; புகை உடைத்து எனின் - எங்கே புகை உளதோ; அங்கு பொங்கு அனல் உண்டு - அங்கே தீ உளது; என்று உன்னும் - என்று கூர்ந்து கவனிக்கும்; மிகை உடைத்து - மிகுந்த அறிவுடையவர்கள்; நூலோர் - அரசியல் நூல் வல்லார் கூறுகிற; வினையமும் வேண்டற் பாற்றே - வினயமும் வேண்டாற் பாலதே; பகை உடை சிந்தையார்க்கும் - சிந்தையிலே பகை வைதது உன்னிடம் பழகுவோரிடமும்; பயன் உறு பணபில் - அவரவர் தகுதிக் கேற்ற பண்புடன்; தீரா - தொடர்ந்து நடத்தலுடன்; நகை உடை முகத்தையாகி - சிரித்த முகத்துடன்; நாவால் இன் உரை வழங்கு - நாவினால் இனிய மொழிகளே கூறுவாயாக.

செய்வன செய்தல்; யாண்டும்
　　தீயன சிந்தியாமல்
வைவன வந்தபோதும்
　　வசை இல இனிய கூறல்
மெய் சொலல்; வழங்கல் யாவும்
　　மேவின வெஃகல் இன்மை
உய்வன ஆக்கித் தம்மோடு
　　உயர்வன உவந்து செய்வாய்.

எவர்க்கும் தீங்கு செய்யாதே. அதே சமயத்தில் செய்ய வேண்டுவனவற்றைச் செய்தல் தவறாதே. உன்னைப் பற்றிப் பிறர் கூறும் வசை மொழிகளை எவர் வந்து கூறிய போதிலும் பதில் வசை கூறாதே. வசை இல்லாத இனிய சொற்களே கூறுவாய். உண்மையே பேசு. வழங்குதற்குரிய பொருள்களை வழங்கு. பிறர் பொருள் கவர நினையாதே. இந்தப் பண்புகள் உன்னை உயர்த்தும். எனவே இவை செய்வாய்.

* * *

யாண்டும் - எவர் மாட்டும்; தீயன சிந்தியாமல் - தீங்கு செய்ய நினையாமல்; செய்வன செய்தல் - செய்ய வேண்டியவற்றைச் செய்தலும்; வைவன வந்த போதும் - பிறர் கூறும் வசை மொழிகளை எவர் வந்து கூறிய போதிலும்; வசை இல - வசை இல்லாத; இனிய கூறல் - இனிய சொற்களே கூறுதலும்; மெய் சொலல் - மெய்யே பேசுதலும்; யாவும் வழங்கல் - வழங்குதற்குரிய பொருள்களை எல்லாம் வழங்குதலும்; மேவின வெஃகல் இன்மை - பிறர் பால் பொருந்திய பொருள்களைப் பறிக்க நினையாமையும்; (ஆகிய இச் செயல்கள்) உய்வன ஆக்கி - உயிர்கள் நல்நிலை பெறச் செய்து; தம்மோடு உயர்வன - அவ்வுயிர்களோடு தாமும் உயர்வன ஆகும்; உவந்து செய்வாய் - ஆகவே இவற்றை நீ விரும்பிச் செய்வாயாக.

நாயகன் அல்லன்; நம்மை
நனி பயந்து எடுத்து நல்கும்
தாய் என இனிது பேணத்
தாங்குதி தாங்குவாரை
ஆயது தன்மையேனும்
அறவரம்பு இகவா வண்ணம்
தீயன வந்தபோது
சுடுதியால் தீமையோரை

இவன் நமது அரசன் அல்லன். நம்மைப் பெற்று எடுத்து அன்பு பாராட்டி வளர்க்கும் தாய் என்று உனது குடிமக்கள் உன்னை ஆதரிக்க வேண்டும். அந்த வகையில் அவர்களை நீ பாதுகாப்பாய். அவ்விதம் இருப்பினும் நாட்டிற்கும் மக்களுக்கும் தீமை செய்தோரை தண்டிக்கத் தயங்காதே. அறத்தின் வழிநின்று தண்டிப்பாய்.

* * *

நாயகன் அல்லன் - இவன் நமது அரசன் அல்லன்; நம்மைப் பயந்து - நம்மைப் பெற்று; எடுத்து நனி நல்கும் - எடுத்து வளர்த்து நன்றாகப் பாதுகாக்கும்; தாய் என - தாய் என்று; இனிது பேண - மக்கள் இனிமையாக உன்னை விரும்பும் வண்ணம்; தாங்குவாரைத் தாங்குதி - பாதுகாக்கத் தக்கவரைப் பாதுகாப்பாயாக; ஆயது தன்மையேனும் - அவ்வாறு செய்வதை உனது கொள்கையாகக் கொண்ட போதிலும்; தீயன வந்தபோது - அவர்களில் எவரேனும் நாட்டிலே தீங்கு செய்தால்; தீமையோரை - அத் தீங்கு செய்வோரை; அறம் வரம்பு இகவா வண்ணம் - அறத்தின் எல்லை கடவாதபடி; சுடுதி - தண்டிப்பாயாக!

* * *

மா இயல் வடதிசை
நின்று மானவன்
ஓவியமே என ஒளிக்
கவின் குலாம்
தேவியை நாடிய முந்தித்
தென்திசைக்கு
ஏவிய தூது என
இரவி ஏகினான்.

சித்திரம்போல ஒளிகொண்ட ஞாயிறு, சீதை தேவியை தேட அநுமன் முதலியோர் தென்திசை செல்லும் முன்பே, தான் செல்வதுபோல், தெற்கே கார்காலத்தில் ஏகினான்.

* * *

ஓவியமே என - சித்திரத்தில் எழுதிய பிரதிமையே போல; ஒளிகவின் குலாம் - ஒளியோடுகூடிய அழகு விளங்கப் பெற்ற; தேவியை - தன் மனைவியான சீதையை; நாடிய - தேடும் பொருட்டு; முந்தி - (அநுமன் முதலிய வானரர்களை அனுப்புதற்கு) முன்னமே; வானவன் - தேவாதி தேவனான இராமன்; தென்திசைக்கு ஏவிய - தெற்கு திக்கிற்கு அனுப்பிய; தூது என - தூதன் போல; இரவி - சூரியன்; மா இயல் வட திசை நின்று - மங்கல திசையாகிய வடக்கில் இருந்து; ஏகினான் - (தெற்கு திசைக்கு) செல்லலானான்.

கார்காலம் வந்தது. இராமன் விரக தாபத்தால் வாடினான். இயற்கைக் காட்சிகள் அவனை வாட்டின. லட்சுமணன் அவனைத் தேற்றினான்.

மழைக்காலம் கழிந்தும் சுக்கிரீவன் தன் சேனைகளோடு வாக்களித்தபடி வராதது கண்டு, கோபங்கொண்டு லட்சுமணனை கிட்கிந்தைக்கு அனுப்பினான்.

அங்கதனுக்கு லட்சுமணன் வருகையை வானரங்கள் தெரிவித்தன. சிற்றின்பத்தில் மூழ்கியிருந்தான் சுக்ரீவன். அங்கதன் அவனுக்கு எவ்வளவோ சொல்லியும் பயனில்லை.

குரங்குகள் லட்சுமணனை முன்னேறாமல் தடை செய்தன. கோபாவேசமாக குரங்குகளை சிதறியடித்தான் லட்சுமணன். அவன் கோபத்தை அடக்க ஒரு யோசனை கூறுகிறான் அநுமன். அதன்படி தாரை பெண்கள் சூழ வருகிறாள்.

* * *

வில்லும் வாளு மணி
தொறு மின்னிட
மெல் அரி குரல் மேகலை
ஆர்த்து எழ
பல்வகைப் புருவக்கொடு
பம்பி
வல்லி ஆயம் வலத்தினின்
வந்ததே.

மகளிர் சூழாம் சூழவந்து லட்சுமணனை வழி மறித்தாள் தாரை, அணிகலன்களால் அலங்கரித்துக்கொண்டு. சிலம்புகள் பறைபோல ஒலித்தன. அணிகலன்களின் ஒளி 'பளபள' என வேல், வாள்போல மின்ன, இளைய பெருமாளை தடுத்தாளாம் தாரை.

* * *

வல்லி ஆயம் - (தாரை சூழ வந்த) மகளிர் கூட்டமாகிய சேனை; அணிதொறும் - அணிந்துள்ள ஆபரணங்கள் தோறும்; வில்லும் வாளும் மின்னிட விளங்கவும்; மெல் அரி குரல் - மெல்லிய சிறிய பருக்கைக் கற்களையுடைய காற்சிலம்புகளின் ஒலியும்; மேகலை - மேகலை என்னும் இடையணி ஒலியும்; ஆர்த்து எழ - பறையொலியாக எழ; பல்வகை புருவம் கொடி - பல வகையான புருவங்களாகிய

கொடிகள்;பம்பி - நிறைந்திருக்கவும்; (இளைய பெருமாளை) வலத்தினில் வந்தது - வலிமையோடு வளைத்துக் கொண்டது.

* * *

லட்சுமணன் தாரையைப் பார்த்தான். அவளை அவன் தன் தாயாகிய சுமித்திரையாக கண்டான். தாரையின் ரூபத்தில் தன் தாயையே கண்டான் அவள் பேச்சு அவன் கோபத்தைச் சிறிது தணித்தது.

அநுமன் வந்தான். "நீ உள்ளே வந்து நீங்கள் அளித்த செல்வத்தினால் சிறப்பு பெற்ற சுக்ரீவனை கண்டு சீற்றம் தணிவாயாக!" என்று அநுமன் வேண்டினான். லட்சுமணனும் சென்றான்.

தான் மதி மயங்கியிருந்ததற்கு வருந்தினான் சுக்கிரீவன். பெருஞ்சேனையை கொண்டு வருமாறு அநுமனுக்குக் கட்டளையிட்டுச் சுக்கிரீவன் இராமனிடம் சென்றான்.

* * •

போயின தூதரிற் புகுதும்
சேனையை
நீ உடன் கொணருதி
நெறிவலோய் என
ஏயினன் அனுமனை யிருத்தி
ஈண்டு என
நாயகன் இருந்து உழிக் கடிது
நண்ணுவான்

"நீதியில் வல்லோனான அநுமனே! நாலாபக்கமும் உள்ள சேனைகள் திரண்டு இங்கு வரும்வரை நீ இங்கேயே இரு" என்று சுக்கிரீவன் அநுமனுக்குக் கட்டளையிட்டான். 'நான் இராமபிரான் இருப்பிடம் உடன் செல்கிறேன்'

என்றான். "சேனைகள் வந்ததும் உடன் திரட்டிக் கொண்டு வா" என்று ஏகினான்.

* * *

(சுக்கிரீவன்) நெறிவலோய் - நீதியில் வல்லவனே; போயின தூதரின் புகுதும் சேனையை - (நம்மிடத்தினின்று) போயிருக்கிற தூதர்களாய் இனிவரும் வானர சேனையை; நீ உடன் கொணருதி - நீ உன்னுடன் அழைத்துவா; என - எனவும்; ஈண்டு இருத்தி - (அதுவரையில் நீ) இங்கேயே இருப்பாய்; என - எனவும்; அநுமனை ஏயினன் - அநும னுக்குக் கட்டளையிட்டவனாய்; நாயகன் இருந்த வுழி கடிது நண்ணுவான் - (யாவருக்கும் தலைவனாகிய) இராம பிரான் இருந்த இடத்திற்கு விரைந்து செல்பவன் ஆனான்.

* * *

வானர சேனைகள் திரண்டு வந்தன. அவைகளைக் கண்டு இராம லட்சுமணர் வியப்படைந்தனர்.

இனி மேற்கொண்டு செய்ய வேண்டியவற்றைப் பற்றிக் கவனிக்கலாயினர்.

சேனைகளை திரட்டிவந்தவர்களில் முக்கியமானவர்கள் அநுமனும் சாம்பவனும்.

* * *

ஆயிரத்து அறு நூறு கோடியிற்
கடையமைந்த
பாயிரப் பெரும்படை கொண்டு
பரவையின் திரையில்
தாய் உருத்து உடனே வரத்
தடநெடு வரையை
ஏய் உருப் புயம் சாம்பன்
என்பவனும் வந்திறுத்தான்.

பெரிய நீண்ட தோளுடைய சாம்பவன் சேனையை வர்ணிக்கிறார் கம்பர். சாம்பவன்* கரடிகளுக்கு அரசன். அவன் திரட்டி வந்த படை ஆயிரத்து அறுநூறு கோடிக்கு எட்டியது. அவை சென்ற இடமெல்லாம் அப்படியே நிறைத்துக் கொண்டனவாம்.

* * *

தட நெடு வரையை ஏய் உரு புயம் சாம்பன் என்பவனும் - பெரிய நீண்ட மலையை ஒத்த உருவத்தோடு கூடிய தோள்களையுடைய சாம்பவனும்; பரவையின் திரையில் தாம் உருத்து உடனே வர - சமுத்திரத்தின் அலைகளைப் போல தாவி குதித்து தன்னுடனே தொடர்ந்து வர; ஆயிரத்து அறுநூறு என்னுங் கோடியின் - ஆயிரத்து அறுநூறு என்னும் கோடி கணக்கையுடைய; கடை அமைந்த பாயிரப் பெரும்படை - (சென்ற) இடங்களில் நிரம்பிய சிறப்பையுடைய பெரிய சேனையை; கொண்டு - உடன் கொண்டு; வந்து இறுத்தான் - வந்து தங்கினான்.

* * *

அவனும் அண்ணல் அனுமனை,
ஐய நீ
புவன மூன்று நின்
தாதையிற் புக்குழல்
தவ வேகத்தை ஓர் கிலை
தாழ்த்தனை
கவன மாக்குரங்கில் செயல்
காண்டியோ

---

* பிரம்மன் முன்னொரு காலத்தில் கொட்டாவி விட்ட போது அவர் வாயினின்று கரடியாக தோன்றியவன், சாம்பவன் என்பது வரலாறு.

சீதையைத் தேடுவது எப்படி என்று ஆலோசனை நடக்கிறது. அப்போது சுக்கிரீவன் அநுமனைப் பார்த்தான். "மூவுலகும் திரியவல்ல பேர் ஆற்றல் படைத்தவன் நீ! அப்படி இருந்தும் சீதாபிராட்டியை தேடுவதில் உனக்குத் தயக்கமேன்? உன் தந்தையோ வாயு பகவான். வேகமாக எங்கும் புகும் வல்லமையுடையவன். அவர் மகனான நீ எவ்வகையில் குறைந்தவன்? நீ உன் சக்தியை உணர்ந்தாய் இல்லை.* உடனே வேலையைகவனி!" என்றான் சுக்கிரீவன்.

*            *            *

அவனும் - அச் சுக்கிரீவனும்; அண்ணல் அநுமனை - பெருமையிற் சிறந்த அநுமனை (நோக்கி); ஐய - நீ; புவனம் மூன்று - மூன்று உலகத்திலும்; நின் தாதை - உனது தந்தையாகிய வாயுவைப் போல; புக்குழல் - புகுந்து திரிகின்ற; தவன வேகத்தை - (உனது) மிக்க வேகத்தை; ஓர்கிலை - உணராதவனாய்; தாழ்த்தனை - வீணாக தாமதித்து இருக்கிறாய்; கவனம் மாதுரங்கில் செயல் காண்டியோ- (நீ இவ்வாறு தாமதித்து) மற்றவர்கள் வேக மாகச் செல்லட்டுமென நினைக்கிறாயோ?

*            *            *

அநுமன் புறப்படுகிறான். அதற்கு முன் இராமபிரான் சீதா தேவியின் அங்க அடையாளங்களை விவரித்துக் கூறுகிறார். முக்கியமாக அந்தரங்கமான நிகழ்ச்சியைக் கூறுகிறார். காட்டிற்கு நான் தனியாகச் செல்கிறேன் என்றார் இராமன். பிராட்டி அதை எவ்வாறு மறுத்தார்

---

* அநுமன் அதிக வரங்கள் பெற்றிருந்தான். முன்பு ஆசிரமங்களில் புகுந்து யாக பாத்திரங்களை நாசம் செய்தான். முனிவர்கள் "இவனுக்குத் தன் பலம் தனக்குத் தெரியாமற் போகக் கடவது' என்று சபித்ததால் அநுமனுக்கு யாரேனும் ஊக்கம் கொடுத்தால்தான் தானியங்குவான்.

என்பதை விளக்கமாக கூறினார். தன் அடையாளமாக கணையாழியும் கொடுத்து அனுப்புகிறார் இராமன் அநுமனிடம்.

* * *

சுக்கிரீவனது கட்டளைப்படி தென் திசை நோக்கிச் சென்ற அங்கதன் முதலிய வீரர்கள் பலவிடங்களிலுஞ் சீதையைத் தேடிக்கொண்டு சென்றனர். வழியிலேயே ஒரு மிகப் பெரிய பாலைவனம்; அதைக் கடக்கும்போது அவர்கள் வெப்பம் தாங்காது தவித்தனர்; சோர்வுற்றனர். அங்கேயிருந்த ஒரு பெரும் பள்ளத்தில் இறங்கினர். இருள் கவிந்தது. இது இராவணன் மந்திர சக்தியால் படைக்கப்பட்டது. வானரர் முயற்சியைத் தடுக்கும் நோக்கத்துடனே இராவணனால் ஏற்படுத்தப்பட்டது.

வெளியே வர இயலாது தவித்தனர் வானரர். சுயம்பிரபை என்றொரு தவப்பெண். அவள் வானரரை மீட்கும் வழியை அநுமனிடம் சொன்னாள். அதன்படி வானரர் அநுமனின் வாலைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து தப்பினர்.

ஒரு மாத காலம் ஓடிவிட்டது. அநுமன் ஆகியோர் எடுத்த பணியை செய்தே முடிப்பதென்று உறுதி பூண்டு செயல்படுகின்றனர்.

* * *

முறையுடை எம்பியார் முடிந்த
வாவெனாப்
பறையிடு நெஞ்சினன் பதைக்கு
மேனியன்

இறையுடைக் குலிச வேலெறிதலால்
முனுஞ்
சிறை அறுமலையெனச் செல்லுஞ்
செய்கையான்.

அப்போது சம்பாதி வருகிறான். சம்பாதி சடாயுவின் அண்ணன்; கழகு அரசன். அவனை வர்ணிக்கிறார் கம்ப நாடார் முன்னாளில் மலைகள் சிறகு கொண்டிருந்தவனாம். மக்களை அவை பெரிதும் துன்புறுத்தியதால் அவைகளின் இறக்கைகளை அரிந்தானாம் இந்திரன். அந்த சிறகு தீயப் பெற்றமலை போல் வேகமாகச் செல்லக்கூடியவனாம் சம்பாதி.

தன் தம்பி இறந்ததைக் கேட்டான். ஆறா துயருற்றான். துயரம் தங்காது அவன் நெஞ்சு பறை போல படபடத்தது. உடம்பு துடித்தது; புலம்பினான்; பதறினான்; அழுதான்; அரற்றினான்.

* * *

முறை உடை எம்பியார் முடிந்த - ஆ நீதி நெறியுடைய எனது தம்பி இறந்தது எப்படி? எனா - என்று; பறையிடு நெஞ்சினன் - பறையடிப்பது போல படபடக்கின்ற நெஞ்சை உடையவனும்; இறை உடை குலிசம் வேல் எறிதலால் முனம் சிறை அறும்மலை என செல்லும் செய்கையான் - தேவேந்திரன் தான் கொண்டுள்ள வச்சிராயுதத்தை வீசி எறிந்ததால் முற்காலத்தில் சிறகுகள் அறுபட்டு போன மலை போல செல்லுந் தொழிலுடையவன்.

* * *

பாகொன்று குதலையாளைப் பாதக
அரக்கன் பற்றிப்
போகின்ற பொழுது கண்டேன் புக்கன்
இலங்கை புக்கு

வேகின்ற உள்ளத்தாளை வெஞ்சிறை
அகத்து வைத்தான்
ஏகு மின் காண்டிர் ஆங்கே இருந்தனள்
இறைவி இன்னும்

சம்பாதியைத் தேற்றினான் அநுமன். பின்னர் சம்பாதி "சர்க்கரை பாகு போன்ற இனிய சொற்களையுடைய சீதையை, மகா பாதகனான அரக்கன் இராவணன் இலங்கைக்கு எடுத்துச் சென்று சிறை வைத்துள்ளான்" என்றான்.

* * *

"சீதை, வேதனையால் வேகும் உள்ளத்தை உடையாள். பிராட்டியை நீங்கள் இப்போதே சென்று காணுங்கள்" என்றான்.

பாகு ஒன்று குதலையாளை - இனிய பாகு போன்ற (மிக இனிய) மழலை சொற்களை உடையவளாகிய சீதை; பாதகன் அரக்கன் பற்றிப் போகின்றபொழுது - பெரும் பாவியான இராவணன் கவர்ந்து சென்றபோது; கண்டேன்- பார்த்தேன்; இலங்கை புக்கனன் - (அந்த இராவணன்) இலங்கையிற் சேர்ந்தான்; புக்கு - அவ்வாறு சேர்ந்து; வேகின்ற உள்ளத்தாளை வெம்சிறை அகத்து வைத்தான் தவிக்கின்ற மனமுடையவளாகிய அந்தச் சீதையை கொடிய சிறைக்காவலில் வைத்திட்டான்; இறைவி இன்னும் ஆங்கே இருந்தனள் - சீதா பிராட்டி இப்போதும் அங்கேயே இருக்கிறாள். ஏகுமின் காண்டிர் - (நீங்கள்) அங்குச் சென்று காணுங்கள் என்றான் சம்பாதி.

* * *

சம்பாதி இலங்காபுரிக்குச் செல்லும்போது உள்ள சங்கடங்களை விரிவாகக் கூறுகிறான். வழியிலே பெரிய கடலுண்டு. கடல் நூறு யோசனை உள்ளதாம். இராவணனோ மிகக் கொடியவன் அவனுடைய கொடுமை, இலங்கையை இன்னும் அணுக முடியாதபடி செய்கிறது.

இவ்வளவு சங்கடங்களை கடந்து இலங்கைக்குச் செல்லக் கூடியவர் யார்? மகேந்திர மலையில் வானரர்கள் யோசிக்கின்றனர். எதைப் பற்றி? யாரை இலங்கைக்கு அனுப்புவது என்று சாம்பவன் வானரர்களுடன் சேர்ந்து ஆலோசனை செய்கிறான்.

* * *

ஏகுமின் ஏகி எம் உயிர் நல்கி
இசை கொள்ளீர்
ஓகை கொணர்ந்து உம் அன்னையும்
இன்னல் குறையில்லாச்
சாகர முற்றுந் தாவிடு
நீரிக் கடரவும்
வேகம் அமைந்தீர் என்று
விரிஞ்சன் மகன் விட்டான்.

சாம்பவான் அநுமனை நோக்கிச் சொன்னான். "இப் பெரிய பணியைச் செய்யக்கூடியவன் நீ ஒருவன்தான். உன்னால்தான் இப் பெரும் கடலை ஒரே நொடியில் கடக்க இயலும். எனவே தயங்காதே. விரைந்து சென்று உன் தாய் போன்ற சீதையைக் கண்டு வா. அவருக்கு ஆறுதல் கூறு. அவர் துன்பக் கடலைத் தாண்டி கரையேறச் செய். அத்துடனன்றி எங்களுக்கும் உயிர் பிச்சைக் கொடு!" என்று வேண்டினான்.

* * *

நீர் - நீர்தான்; இ கடல் தாவும் வேகம் அமைத்தீர் - இந்த கடலை கடந்து சென்று (செய்தி தெரிந்து) மீளுதற்கு உரிய வலிமை பொருந்தியுள்ளீர்; (ஆதலால்) ஏகு மின்- இங்கிருந்து விரைந்து செல்லுக; ஏகி - அவ்வாறு சென்று; எம் உயிர் நல்கி இசை கொள்ளீர் - எங்களுக்கெல்லாம் உயிரைக் கொடுத்து பெரும் புகழைப் பெறுக; (நீர் இவ்வாறு

செய்தால்) உம் அன்னையும்-உமது தாயாகிய சீதாபிராட்டியும்; ஓகை கொணர்ந்து - மிக்க உவகைக்கொண்டு; இன்னல் குறை இல்லா சாகரம் முற்றும்; தாவிடும் - துன்பமாகிற குறைதலில்லாத (மிகப் பெரிய) கடல் முழுவதையும் கடந்து கரையேறுவாள்; என்று - என; விரிஞ்சன் மகன் - பிரம்மாவின் மகனான சாம்பவான்; விட்டான் - கூறி முடித்தான்.

* * *

சாம்பவன் கூறியதைக் கேட்டான் அநுமன். உற்சாகங் கொண்டான். சீதா பிராட்டியை தேடுவதற்கு இலங்கைச் செல்ல புறப்பட்டான். விறு விறு வென மகேந்திர மலையை ஏறினான்.

* * *

மின்னெடுங் கொண்டல் றாளின்
வீக்கிய கழலின் ஆர்ப்ப
தன் நெடுந் தோற்றம் வானோர்
கட் புலத்து எல்லை தாவ
வல் நெடுஞ் சிகர கோடி மகேந்திர
மண்டந் தாங்கும்
பொன் நெடுந் தூணின் பாத சிலையெனப்
பொலிந்து நின்றான்.

மகேந்திர மலை மீது ஏறினான் அநுமன். வானின்று மண் வரை நீண்ட நெடிய விச்வரூபம் எடுத்தான். அப் பெரும் வடிவின் முன், மிகப் பெரிய சிகரங்ளைக் கொண்டிருந்தாலும், மகேந்திர மலை மிகச் சிறியதாக தோன்றியதாம். தூணின் கீழ் வைக்கும் கல் எவ்வளவு சிறிதாகத் தோன்றுமோ அவ்வளவு சிறியதாக தோற்றம் அளித்ததாம், மகேந்திர மலை.

* * *

மின் நெடுங் கொண்டல் - மின்னலையுடைய பெரிய மேகங்கள்; தாளின் வீக்கிய கழலின் ஆர்ப்ப - (தனது காலிற் கட்டப்பட்ட) வீரக்கழல் போல ஒலி செய்யவும், தன் நெடுந் தோற்றம் வானோர் கட் புலத்து எல்லை தாவ - தனது பெருவடிவானது தேவர்களின் கண்களாகிய இந்திரியங்களின் இடத்தில் புலப்படவும்; வல் நெடுஞ்சிகரம் கோடி மகேந்திரம் - வலிய பெரிய சிகரங்களின் தொகுதி உடைய மகேந்திர மலையானது; அண்டம் தாங்கும் பொன் நெடுந் தூணின் பாதம் சிலை என - உலக உருண்டையைத் தாங்குகின்ற; பொன் மயமாகிய நீண்ட கம்பத்தின் அடியில் இட்ட கல்லைப் போல (சிறிதாக) விளங்கவும்; பொலிந்து நின்றான் - நிமிர்ந்து நின்றான். (அநுமன் விச்வரூபத்தின் முன் மலை மிக மிக சிறுத்தது. வீரமே உருக்கொண்டாற் போல நின்றான் அநுமன்.)

ஏகினான் இலங்கை நோக்கி.

கிட்கிந்தா காண்டம் முற்றிற்று.

# கிட்கிந்தா காண்டம்

## படலங்கள் சுருக்கம்

### 1. பம்பை வாவிப் படலம்

கம்பன் இப் படலத்தில் பம்பைப் பொய்கையின் தோற்றம்; அதில் நிகழும் செயல்கள் ஆகியவற்றை முதலில் கூறிவிட்டு சீதையின் நினைவால் இராமன் புலம்புவதையும்; சீதையைத் தேடி மேலும் செல்லுதல் பற்றியும் சித்தரிக்கிறார்.

### 2. அநுமன் படலம்

இவ்வாறு சீதையைத் தேடிச் செல்லும் இராம லட்சுமணனைக் கண்டு சுக்ரீவன் ஓடி ஒளிகிறான். அநுமன் தசரதனின் மக்களைப் பார்க்கிறான். இவர்களை அணுகி வரவேற்கிறான். தன்னைப் பற்றியும் கூறுகிறான் அநுமன். மறையவனாக வந்த அநுமன் இராமனின் திருவடிகளை வணங்குகிறான். இராமன் 'அது முறையோ?' எனக் கேட்க, அநுமன் விடை பகர்ந்து பெரிய வானர உருக்கொண்டு நிற்பதைக் கண்டு இருவரும் வியக்கின்றனர். இராமன், சுக்கிரீவனை அழைத்து வரும்படி கூறுகிறான்.

### 3. நட்புக்கோட் படலம்

அநுமன் சுக்ரீவனிடம் இராமனின் சிறப்புக்களை கூறி, அவனை இராகவனிடம் அழைத்து வருகிறான். இராமனும் அவனுடன் உரையாடுகிறான்; இருவரும் விருந்துண்கின்றனர். அப்போது இராமன், 'நீயும் உன் மனைவியைப் பிரிந்துள்ளாயோ?' என அவனை வினவுகிறான், அநுமன் மூலம் சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் பகை ஏற்பட்டக் காரணத்தையும் அறிகிறான் இரகு வீரன். இராமன் கோபமுற்று வாலியைக் கொல்வதாகச் சூளுரைக்கிறான். சுக்கிரீவன் இராமனின் ஆற்றலை அறிய ஆவல்கொள்கிறான்.

### 4. மராமரப் படலம்

சுக்கிரீவன், இராமனை மராமரங்களுள் ஒன்றை அம்பினால் எய்யவேண்டுகிறான். இராமனும் அவ்வாறே செய்யவும், சுக்கிரீவனும் வானர வீரர்களும் மகிழ்கின்றனர்.

## 5. துந்துபிப் படலம்

துந்துபியின் உடலைக் காண்கிறான் இராமன். அதன் வரலாற்றை அறிகிறான். லட்சுமணன் துந்துபியின் உடலை உந்தி தள்ளுகிறான்.

## 6. கலன்காண் படலம்

இராமனிடம் சில செய்திகளைத் தெரிவிக்கிறான் சுக்கிரீவன். சீதையின் அணிகலன்களைக் கண்ட இராமன் மிகவும் வருந்துகிறான்.

''நின் குறை முடித்தன்றி வேறு யாதும் செய்கிலேன்'' எனக் சுக்கிரீவனிடம் கூறிய இராமனிடம் பேசுகிறான் அனுமன். பின் அனைவரும் வாலியிருக்குமிடத்திற்குச் செல்கின்றனர்.

## 7. வாலி வதைப் படலம்

வாலியிருந்த மலையருகே சென்ற இராமனும் மற்றவரும் இனி செய்ய வேண்டியதாகக் குறித்து ஆலோசிக்கின்றனர். இராமனின் சொல்படி சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைக்கிறான். தாரை வாலியைத் தடுக்கிறாள். எனினும் போரை விரும்பி வாலி குன்று புறத்தே வருகிறான் வாலி சுக்ரீவனிடையே இருந்த உருவ ஒற்றுமை இராகவனை வியப்படையச் செய்கிறது. சுக்ரீவனை இராமன் கொடிப்பூ மாலை அணிந்து போர் செய்யும்படி கூறுகிறான். சுக்ரீவனை மேலே தூக்கி எறிய வாலி முற்படும்போது இராமனின் அம்பு அவனைத் தாக்கித் துரத்துகிறது. வாலியின் மார்பில் பாய்ந்து, அம்பு அவனை வீழ்த்தியது. அம்பைப் பறித்த வாலி, அது இராமனுடையதென்று அறிகிறான். இராமனை மறைந்து அம்பு எய்தது வீரனுக்கு அழகோ என்று இகழ்கிறான் வாலி. இராமன் தன் செய்கை சரியே என்று வாதாடினாலும் வாலி ஒப்புக்கொள்ளவில்லை. லட்சுமணன் தன் அண்ணன் அம்பு எய்தது சரியே என்று ஆதாரத்துடன் விளக்க, வாலி மனம் மாறி சுக்ரீவனையும் தன் மகன் அங்கதனையும் இராமனிடம் ஒப்படைக்கிறான்.

## 8. அரசியற் படலம்

சுக்ரீவனுக்கு முடிசூட்டுகிறான் இராமன். அவன் எவ்வாறு நல் அரசு செலுத்த வேண்டுமென்பதையும் இராமன் எடுத்துரைக்கிறான். நான்கு திங்களுக்குப் பின் கிட்கிந்தையிலிருந்து படையுடன் வருமாறு பணிக்கிறான் இராமன். இராமனின் வற்புறுத்தலுக்கிணங்கி அநுமன் கிட்கிந்தை செல்கிறான். இராமனும் இளையவனும் வேறோர் மலையை அடைகின்றனர்.

## 9. கார்காலப் படலம்

கார் காலம் வருகிறது. இயற்கை எழில் பொங்குகிறது இராமனின் விரகதாபத்தைப் பட்டம் பிடித்துக் காட்டுகிறார் கம்பநாடன். அண்ணனை தேற்றுகிறான் தம்பி.

## 10. கிட்கிந்தைப் படலம்

சொல்லியபடி சுக்ரீவன் படையுடன் வரவில்லை. கோபத்துடன் செல்கிறான் லட்சுமணன் கிட்கிந்தைக்கு. லட்சுமணனின் சீற்றத்தைத் தணிக்கிறாள் தாரை. மாருதியும் அங்கதனும் சுக்ரீவனிடம் லட்சுமணனின் வருகையைத் தெரிவித்து சுக்ரீவனின் தவற்றை உணரச் செய்கின்றனர். சுக்ரீவன் இராமனிடம் செல்கிறான். மன்னிப்பு கோருகிறான்.

## 11. தானை காண் படலம்

வானரப் படைகளைப் பற்றியும், தானைத் தலைவர்கள் பற்றியும் கூறும் படலம் இது.

## 12. நாட விட்ட படலம்

இனி நடக்க வேண்டுவனப் பற்றிச் சிந்தித்து முடிவு எடுக்கும் இராமனைப் பற்றி கூறுகிறது இப்படலம். சுக்ரீவன் அநுமன் அங்கதன் ஆகியோர் தென்திசை போகின்றனர் ஒரு மாத காலத்திற்குள் தேடித் திரும்புக என காலவரையறுக்கிறான் சுக்ரீவன். இராமன் அநுமனுக்குச் சீதையின் அங்க அடையாளங்களைக் கூறி, சில அந்தரங்க செய்திகளை

யும் சொல்கிறான். தன் மோதிரத்தையும் அநுமனிடம் கொடுத்தனுப்புகிறான்.

## 13. பிலம் புக்கு நீங்கு படலம்

வானரர் நான்கு திசையிலும் சீதையைத் தேடி செல்கின்றனர். வழியிலே அனுமன் முதலானோர் ஒரு வெம்மை மிக்க பாலையை அடைகின்றனர். வெம்மைத் தாங்காத வானரர் ஒரு இருண்ட பள்ளத்தில் புகுந்து விடுகின்றனர். அநுமன் அவர்களைத் தன் வாலைப் பற்றி, அங்கிருந்து நீங்கி வரச் செய்கின்றான். சுயம்பிரபை தன் வரலாற்றை அவர்களுக்குக் கூறுகிறாள். சுயம்பிரபை பொன்னுலகம் எய்துகிறாள்.

## 14. ஆறு செல் படலம்

செல்லும் வழியில் அவர்கள் கடக்கும் பற்பல காடுகள், நாடுகள், வனங்கள், மலைகள், ஆறுகள் பற்றியும் கூறும் இப் படலத்தில் அங்கதனுக்கும் துமிரன் என்ற அரக்கனுக்கும் நடந்த போர் பற்றியும் கூறுகிறார் கம்பர். இப் படலத்திலேயே சாம்பவான் துமிரனின் கதையைக் கூறுகிறான்.

## 15. சம்பாதிப் படலம்

தென்கடலை அடைகின்றனர் வானரர். சம்பாதியை அங்குச் சந்திக்கின்றனர். தன் தம்பி சடாயு இறந்ததை அறிந்த சம்பாதி வருந்தி புலம்புகிறான். சீதையின் இருப்பிடத்தைச் சம்பாதி தெரிவிக்கிறான். இராவணனின் மாயங்கள் பற்றியும் விவரிக்கிறான்.

## 16. மகேந்திரப் படலம்

அடுத்து உருவெடுக்கிறது மிகப் பெரிய பிரச்னை. "கடலைக் கடப்போர் யார்?" என்பதே அது. சாம்பவான் அநுமனைப் பார்த்து 'அவனே அதைச் செய்ய முடியும்!' என்று புகழ்ந்துப் பாராட்ட, அநுமன் இலங்கைச் செல்ல உடன்பட்டு கடல் தாவ பெருவடிவு கொள்கிறான்.



# கம்பன் கவித் திரட்டு

(ஐந்தாம் பாகம்)

## சுந்தர காண்டம்


தொகுப்பாசிரியர்கள் :

அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன்

ஜலஜா சக்திதாசன்


கி.—5

முதற்பதிப்பு: 1990

உரிமம் ஆசிரியருக்கே

வெளியீட்டோர் :

நித்தியானந்த ஜோதி நிலையம்
த. பெ. 1284
3D 43 V. K. சாலை சென்னை-28.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-14

## கடவுள் வாழ்த்து

உரைக்க வல்லேன் அல்லேன்
    உன் உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்
கரைக் கண் என்று செல்வன் நான்
    காதல் மையல் ஏறினேன்
புரைப்பிலாத பெரும்பரனே!
    பொய்யிலாத பரஞ்சுடரே!
இரைந்து நல்ல மேன்மக்கள்
    ஏத்த, யானும் ஏத்தினேன்.

—திருவாய்மொழி

## சுந்தரகாண்டப் படலங்கள்

1. கடறாவுப் படலம்
2. ஊர் தேடு படலம்
3. காட்சிப் படலம்
4. நிந்தனைப் படலம்
5. உருக்காட்டுப் படலம்
6. சூளாமணிப் படலம்
7. பொழிலிறுத்தப் படலம்
8. கிங்கரர் வதைப் படலம்
9. சம்புமாலி வதைப் படலம்
10. பஞ்ச சேனாதிபதிகள் வதைப்படலம்
11. அக்க குமாரன் வதைப் படலம்
12. பாசப் படலம்
13. பிணி வீட்டுப் படலம்
14. இலங்கை எரியூட்டு படலம்
15. திருவடி தொழுத படலம்

# சுந்தர காண்டம்

கம்பராமாயணம் ஆறு காண்டங்கள் கொண்ட காவியம். இந்த ஆறு காண்டங்களும் முறையே பால காண்டம் அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன ஆகும். இந்த ஆறு காண்டங்களில் ஐந்தாவதாகத் திகழ்வது சுந்தர காண்டம்.

சீதா தேவியைத் தேடிக்கொண்டு, தென்திசை நோக்கிச் சென்ற வானர வீரர்களுள் ஒருவன் அநுமன். அவன் மகேந்திரமலையின் மீது ஏறி நின்று இலங்கையைக் காண்கின்றான். தோள்கொட்டி ஆரவாரம் செய்கிறான். கடலைத் தாவுகிறான். இலங்கை சேருகிறான்.

இலங்கை என்பது தென் கடலிடையே திரிகூட மலையின் மீது அமைக்கப்பட்டிருந்த நகரம். இராவணன் என்னும் அரக்கர் வேந்தின் அரசிருக்கை. இந்த நகரம் குபேரனுடையது தெய்வ தச்சனாகிய விசுவகருமனால் கட்டப்பட்டது. பின்னே இராவணனால் கைக் கொள்ளப் பட்டது. இதை ஒரு பெரும் போக பூமியாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர்.

மாலைக் காலம் முதல் நள்ளிரவு வரையில் அந்த இலங்கை மாநகரிலே சீதா பிராட்டியைத் தேடி அலைகிறான் அநுமன்.

பன்னிரண்டு யோசனை விஸ்தீரணமும் மும்மை நூறாயிரம் தெருக்களும் கொண்ட அந்நகரின் ஒவ்வொரு பகுதியையும் காண்கிறான் அநுமன்,

இராவணனைக் காண்கிறான்; மண்டோதரியைக் காண்கிறான்; இந்திரஜித்தனைக் காண்கிறான்; கும்ப கருணனைக் காண்கிறான்; விபீஷணனைக் காண்கிறான். எங்கும் சீதாபிராட்டியைக் காணாமல் ஏங்கினான்; மனம் சோர்வடைகிறான். அந்நிலையில் அசோக வனத்துள் நுழைகிறான்; சீதையைக் காண்கிறான்; மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறான்.

காமன் தன் கணைகளுக்கு இலக்கான இராவணன் சீதை இருந்த அசோக வனத்துக்கு வருகிறான். அவனுடைய வருகையைக் கம்பர் மிக அழகாக வர்ணிக்கிறார். பிராட்டி தன் மீது இரங்க வேண்டும் என்று வேண்டுகிறான் இராவணன். அப்பொழுது பிராட்டி அவனுக்கு அறவுரை கூறுகிறாள்; இராமனின் ஆற்றலை எடுத்துரைக்கிறாள். சீதையின் அறவுரை கேட்டுச் சினம் கொள்கிறான் இராவணன். பிராட்டியைப் பலவாறு அச்சுறுத்துகிறான். பிராட்டியின் மனத்தை மாற்றுமாறு அரக்கியர்க்கு ஆணையிட்டுச் செல்கிறான். இவ்வளவையும் ஒருபால் ஒதுங்கி இருந்து காண்கிறான் அநுமன்.

சீதா பிராட்டி ஏங்கி மனமுடைந்து உயிர்விட முயலும் தருவாயில் அவள்முன் தோன்றுகிறான் அநுமன்.

இராமன் கொடுத்த கணையாழியை அளிக்கிறான். ஆறுதல் மொழிகள் பல கூறுகிறான். பின்னே தான் சீதையைக் கண்டதற்கு அடையாளமாக அப்பிராட்டி அளித்த சூடாமணியைப் பெறுகிறான்.

அசோக வனத்தை அழித்து இலங்கையை எரியூட்டி மீண்டும் கடலைக் கடந்து வானர சேனைகளுடன் வந்து இராமனை வணங்குகிறான். சீதா தேவியைக் கண்ட செய்தி கூறுகிறான். அடையாளமாகத் தேவி கொடுத்த சூடாமணியை இராமனிடம் அளிக்கிறான் அநுமன்.

இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் சுமார் 1350 பாடல்களால் விவரிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இப் பாடல்களைப் படிக்கும்போது நாம் என்ன காண்கிறோம்? நிகழ்ச்சிகள் கண் எதிரே நடப்பனபோல் காண்கிறோம். நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர்.

இவற்றிலிருந்து சில பாடல்களைத் திரட்டி இச்சிறு புத்தகத்தில் அளித்திருக்கிறோம்.

கம்பனின் கவியிலே இன்பம் காண விரும்புவார்க்கு இஃது ஓரளவு துணை புரியும் என நினைக்கிறோம்.


இன்றைய வாழ்க்கை, வேகம் நிரம்பிய ஒன்று. வேகம்! வேகம்! எங்கும் வேகம்! எதிலும் வேகம்! வேகம் நிறைந்த வாழ்விலே ஒய்வு ஏது? ஓய்வு கிடைப்பது அருமை. எனவே, சிறிது ஓய்வு கிடைக்கும் போது கம்பன் கவியின்பம் காண விரும்புவார், என்ன செய்வார்? கம்பராமாயணப் பாடல் எல்லாவற்றையும் படித்தல் இயலுமோ? இயலாது; இயலாது.

ஆகவே, கிடைத்தற்கரிய ஒய்வு நேரத்தில் சில கவிகளையேனும் படிக்க ஆவல் கொண்டார்க்கு இச்சிறு திரட்டு பெரிதும் பயன்படும். இந்த நோக்கில் தான் இத்திரட்டு வெளியிடப்படுகிறது. இவர்களையே கருத்தில் கொண்டு பாடல்கள் சந்தி பிரித்துத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பாடல்களின் கருத்தும், விளக்கமும், பதவுரையும் தரப்பட்டுள்ளன.

ஓரளவு தமிழ்ப் பயிற்சியுடையாரும் எளிதில் படித்து விளங்கிக் கொள்ளும் வகையில் இத்திரட்டு வெளியிடப்படுகிறது.

கம்பராமாயணத்தின்பால் பற்றுடையோர் பலரும், எங்களுக்கு ஆக்கம் தந்து இம்முயற்சியில் எங்களை ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

**தொகுப்பாசிரியர்கள்**



## காப்புச் செய்யுள்

அஞ்சிலே ஒன்று பெற்றான்,
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக
ஆர் உயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு அயலார் ஊரில்,
அஞ்சிலே ஒன்று வைத்தான்
அவன் எம்மை அளித்துக் காப்பான்.

தொடக்கத்திலே ஆஞ்சநேயருக்கு வணக்கம் செலுத்துகிறார் கவி. அஞ்சிலே ஒன்று பெற்றவர் ஆஞ்சநேயர். ஐந்து என்பது அஞ்சு என்று மருவி வழங்கப்பட்டது.

ஐந்து எவை?

பஞ்ச பூதங்கள். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்பன பஞ்ச பூதங்கள் எனப்படும். இவை முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி என்றும் பெயர் பெறும்.

அஞ்சிலே ஒன்று பெற்றான் என்றால் ஐம்பெரும் பூதங்களிலே ஒன்றாகிய வாயுவின் புத்திரன் என்று பொருள். காற்றின் மைந்தன் என்றும் இவரை அழைப்பதுண்டு.

எனவே அஞ்சிலே ஒன்று பெற்றான் என்றால் காற்றின் மைந்தனாகிய ஆஞ்சநேயன் என்று பொருள்.

ஆஞ்சநேயர் என்ன செய்தார்? அஞ்சிலே ஒன்றை தாவினார். அஞ்சிலே ஒன்று எது? ஐம்பெரும் பூதங்களிலே ஒன்றாகிய நீரைத் தாவினார். அதாவது கடலைத் தாவினார். எப்படித் தாவினார்? அஞ்சிலே ஒன்று வழியாகத் தாவினார். அதாவது ஆகாய வழியாகத் தாவினார். தாவி எங்கே சென்றார்? அயலார் ஊருக்குச் சென்றார். அயலார் ஊர் எது? இலங்கை. இலங்கைக்குச் சென்றார்.

எதற்காகச் சென்றார்? ஆருயிர் காக்க. யாருடைய ஆருயிர் காக்க? சீதையின் ஆருயிர் காக்க.

சென்று யாரைக் கண்டார்? அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டார். அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு யார்? சீதை. அதாவது பூமிதேவியின் பெண். சீதையைக் கண்டார். ஐம்பெரும் பூதங்களிலே ஒன்று நிலம் அல்லவா? அந்த நில மடந்தையின் மகளைக் கண்டார். கண்டபின் என்ன கொண்டார்? சீற்றம் கொண்டார். யார்மீது? இராவணன்மீது.

சீற்றம் கொண்டவர் என்ன செய்தார்? இலங்கைக்குத் தீவைத்தார்.

அத்தகைய ஆஞ்சநேயர் நம்மைப் எல்லாம் காப்பார் என்று காப்புச் செய்யுள் பாடித் துதிக்கிறார் கம்பர்.

* * *

அஞ்சிலே ஒன்று - பஞ்ச பூதங்களிலே ஒன்று; அதாவது வாயு. பெற்றான் - பெற்றவனாகிய அநுமன்.

அஞ்சிலே ஒன்றைத் தாவி - பஞ்ச பூதங்களிலே ஒன்றாகிய கடல் நீரைத் தாவி.

அஞ்சிலே ஒன்று ஆறு ஆக - ஐம்பெரும் பூதங்களிலே ஒன்று வழியாக - அதாவது வான் வழியாக; ஆருயிர் காக்க - சீதையின் ஆருயிரைக் காத்தல் பொருட்டு; ஏகி - சென்று.

அசோக வனத்திலே சீதாபிராட்டியைக் கண்டபோது சிறையிலிருந்த செல்வி எப்படி இருந்தாள்? தன் உயிர்விடும் நிலையில் இருந்தாள். 'ராம ராம' என்று ராம நாமத்தைக் கூறி சீதாபிராட்டியைக் காக்கிறான் அநுமன். நிலமடந்தையின் மகளாகிய சீதையைக் கண்டு!

அயலார் ஊரில் - அயலாராகிய அரக்கர்தம் ஊரிலே; அதாவது இன்றைய இலங்கையிலே; அஞ்சிலே ஒன்று வைத்தான் - ஐம்பெரும் பூதங்களிலே ஒன்றாகிய தீ வைத்தவன் (அதாவது அநுமன்), நம்மை அளித்துக் காப்பான்.

* * *

கண்டனன் இலங்கை மூதூர்
  கடிபொழில் கனக நாஞ்சில்
மண்டல மதிலும் கொற்ற
  வாயிலும் மணியிற் செய்த
வெண்தளக் களப மாட
  வீதியும் பிறவும் எல்லாம்
அண்டமும் திசைகள் எட்டும்
  அதிரத் தோள் கொட்டி ஆர்த்தான்.

இலங்கை என்ற மிகப்பழம் பெருநகரின் மாடமாளிகைகளையும், வெண்மையான சுண்ணாம்பு தீட்டப்பட்ட மாடங்கள் கொண்ட வீதிகளையும் வெற்றிக், கோபுரமும் கண்டான் அநுமன்; மகிழ்ந்தான்; அம் மகிழ்ச்சியிலே அண்ட கோளங்களும் அஷ்ட திக்குகளும் அதிரத் தோள் கொட்டி ஆரவாரம் செய்தான்.

* * *

இலங்கை மூதூர் - இலங்கை என்ற பழமையான நகரத்தின்; கடிபொழில் - காவல் உள்ள சோலைகளையும்; கனக நாஞ்சில் - பொன்னாலான மதில் பகுதிகளையும்; மண்டல மதிலும் - வட்டமான கோட்டைச் சுவர்களையும்; கொற்ற வாயிலும் - வெற்றிக் கோபுர வாசலையும்; மணியில் செய்த - மணிகள் பதிக்கப் பெற்ற; வெண்தள களப மாட வீதியும் - வெண்மையான சுண்ணாம்பு தீற்றிய மாடங்களை உடைய வீதிகளையும்; பிறவும் எல்லாம் - மற்றும் பிறவற்றையும்; கண்டனன் - அநுமன் கண்டான்; அண்டமும் திசைகள் எட்டும் அதிர - (கண்ட அவன்) அண்டங்களும் எட்டுத் திசைகளும் அதிரும்படியாக; தோள் கொட்டி ஆர்த்தான் - தன் தோள்களைக் கொட்டிக் கொண்டு ஆரவாரம் செய்தான்.

வால் விசைத்து எடுத்து, வன்தாள்
மடக்கி, மார்பு ஒடுக்கி, மானத்
தோள் விசைத் துணைகள் பொங்கக்
கழுத்தினைச் சுருக்கித் தூண்டிக்
கால் விசைத்து இமைப்பில்லோர்க்கும்
கட்புலன் தெரியா வண்ணம்
மேல் விசைத்து எழுந்தான் உச்சி
விரிஞ்சன் நாடு உரிஞ்ச வீரன்.

மகேந்திர மலையிலே நின்று கொண்டு வானுற வோங்கி இலங்கை மாநகரைக் கண்ட அநுமன், கடலைத் தாண்டி அவ் இலங்கை சேரும் பொருட்டு வாலை வேகமாக வீசினான்; தனது வலிய கால்களை ஒடுக்கிக் கொண்டான்; மார்பை ஒடுக்கினான்; கழுத்தை உள்ளுக்கு இழுத்து முன்னே தள்ளி காற்று போல வேகத்தை வருவித்துக் கொண்டான்; வானத்திலே வெகு உயரமாகப் பாய்ந்தான்.

* * *

வீரன் - அநுமன்; வால்விசைத்து எடுத்து - வாலை வேகமாக வீசி; வன்தாள் மடக்கி - வலிய கால்களை மடக்கி; மார்பு ஒடுக்கி - மார்பை ஒடுக்கிக் கொண்டு; மான - பெரிய; விசை - வெற்றியுடைய; தோள் துணைகள் - இரு தோள்களும், பொங்க - பூரிக்க; கழுத்தினை சுருக்கி தூண்டி - கழுத்தினை உள்ளுக்கு இழுத்து முன்னே தள்ளி; கால்விசைத்து - காற்றுப் போல வேகத்தை உண்டாக்கி; இமைப்பு இல்லோர்க்கும் - கண் இமையாத தேவர்கட்கும்; கட்புலம் தெரியாவண்ணம் - கண்பார்வைக்குத் தெரியாத படி; மேல்விசைத்து - மேல் நோக்கி வேகம் எடுத்து; உச்சி விரிஞ்சன் நாடு உரிஞ்ச - பிரம்மலோகம் போய் உராயும் வண்ணம்; எழுந்தான் - வானத்தே எழுந்தான்.

ஆயவன் எழுத லோடும்
அரும்பனை மரங்கள் தாமும்
வேய் உயர் குன்றும் வென்றி
வேழமும் பிறவும் எல்லாம்
நாயகன் பணி ஈது என்ன
நளிர்கடல் இலங்கை நாமும்
பாய்வன என்ன வானம்
படர்ந்தன பழுவ மான.

* * *

அவ்வாறு அநுமன் வானத்தில் எழுந்தபோது என்ன நிகழ்ந்தது? பெருங்கிளைகளைக் கொண்ட மரங்கள், மூங்கில்கள் வளரப் பெற்ற குன்றுகள், யானைகள் இன்னோரன்ன பலவும் நிலை பெயர்ந்து, அநுமன் பின்னே தொடர்ந்து பறந்தன. எதனாலே? அநுமன் சென்ற வேகத்தினாலே. அது எது போலிருந்தது?

"இராம காரியமாக அநுமன் செல்கிறான். நமக்கும் அப் பணியிலே பங்குண்டு. ஆதலின் அநுமனைத் தொடர்ந்து நாமும் செல்வோம்" என்று அவை கருதுவன போல விளங்கினவாம்.

* * *

ஆயவன் - (அவ்வாறு) அநுமன்; எழுதலோடும் - வானத்தில் எழுந்த போது; அரும்பனை மரங்கள் தாமும் - அரிய பெரிய கிளைகளை உடைய மரங்களும்; வேய் உயர் குன்றும் - மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்துள்ள குன்றுகளும்; வென்றி வேழமும் - வெற்றிமிகு யானைகளும்; பிறவும் எல்லாம் - இன்னும் பலவும்; நாயகன் பணி ஈது என்ன - நாயகனாகிய இராமனுக்கு நாம் செய்யும் தொண்டு இதுவே என்று; தாமும் - அம்மரங்கள் முதலியனவும்; நளிர்கடல் -

குளிர்ந்த கடலால் சூழப்பெற்ற; இலங்கை பாய்வன என்ன - இலங்கையை நோக்கிப் பாய்ந்து செல்வன என்று சொல்லும் படி; வானம் பழுவம் மான - வானமே ஒரு சோலை போல் விளங்க; படர்ந்தன - சென்றன.

முன்பு மலைகள் யாவும் சிறகு பெற்றிருந்தன. எங்கும் பறந்து சென்று அழித்து வந்தன. இது கண்டு கோபம் கொண்டான் இந்திரன். தனது வச்சிராயுதத்தினால் அவற்றின் சிறகுகளை வெட்டி எறிந்தான். பின்னர் அவை பறத்தல் ஒழிந்தன.

மைந்நாகம் எனும் மலையானது இந்திரனுக்கு அஞ்சிக் கடலில் புகுந்து ஒளிந்து கொண்டது.

அநுமன் வரவு கண்டு மேலே வந்தது. அது எப்படி இருந்ததாம்? பாற்கடலிலிருந்து ஐராவதம் என்ற யானை தோன்றியது போல் இருந்ததாம்.

மேலே வந்த மைந்நாகம் அநுமனை வரவேற்றது. சிறிது தங்கி இளைப்பாறிச் செல்லுமாறு வேண்டியது.

அநுமன் இசைந்தான் அல்லன். "இராம காரியமாக செல்கிறேன். இப்போது இளைப்புப் பற்றி சிந்திக்கவே நேரமில்லை. திரும்பி வரும்போது உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்" என்றான்.

"சரி" என்று சொல்லி வழி விட்டது மைந்நாகம்.

இது, முதல் இடையூறு. இனி இரண்டாவது இடையூறு வருமாறு :

சுரசை என்பவள் தக்ஷனின் மகள்; காசியபரின் மனைவி. அவள் ஓர் அரக்கி உருக்கொண்டு அநுமனை விழுங்க வந்தாள்.

அநுமன் தனது உருவினைச் சிறிதாக்கிக் கொண்டு கண்ணிமைப் போதிலே அவள் வாய் வழிப் புகுந்து மீண்டான்.

மூன்றாவது இடையூறு அங்கார தாரகை என்ற ஓர் அரக்கி அவளையும் கொன்று பவழமலைக்குத் தாவினான் அநுமன்.

அங்கிருந்து இலங்கையைப் பார்க்கிறான் அநுமன்.

*　　*　　*

மண் அடி உற்று மீது
வானுறு வரம்பின் தன்மை
எண் அடி அற்ற குன்றின்
நிலைத்து நின்று, உற்று நோக்கி,
விண்ணிடை உலகம் எனும்
மெல்லியல் மேனி நோக்க,
கண்ணடி வைத்தது அன்ன
இலங்கையைத் தெரியக் கண்டான்.

தேவருலகத்தை ஓர் அழகிய பெண் என்று சொன்னால் அந்தப் பெண் தன் மேனியழகு காண வைத்திருக்கும் கண்ணாடி என்று சொல்லலாம் இலங்கையை.

அதாவது தேவலோகத்தின் பிரதிபிம்பமாக விளங்கிற்றாம் அந்த இலங்காபுரி. அதனைக் கண்டான் அநுமன். எங்கு நின்று? பவழமலையில் நின்று.

*　　*　　*

அடி மண் உற்று - அடிப்புறம் நிலத்தில் படிந்து; மீது - உச்சி; வான்உறும் - வானத்தைப் பொருந்தி நிற்கும்; வரம்பின்தன்மை - அளவின் எல்லையை; எண் அடி அற்ற - கணக்கிட முடியாத; குன்றின் - அந்தப் பவழ மலையின் மீது; நிலைத்து நின்று - உறுதியாக நின்று கொண்டு; உற்று நோக்கி - கூர்ந்து கவனித்து; விண்ணிடை உலகம் என்னும் மெல்லியல் - வானுலகம் என்னும் பெண்; மேனி நோக்க - தன் உடல் அழகைக் காண; கண்ணடி வைத்தது அன்ன,

கண்ணாடி வைத்தது போன்ற; இலங்கையை - இலங்கா புரியை; தெரியக் கண்டான் - நேரே தெரியப் பார்த்தான்.

பொன் கொண்டு இழைத்த
மணியைக் கொடு பொதிந்த
மின் கொண்டமைத்த
வெயிலைக் கொடு சமைத்த
என் கொண்டு இயற்றிய
எனத் தெரிவிலாத
வன் கொண்டல் விட்டு
மதி முட்டுவன மாடம்.

இந்த இலங்காபுரி "எதனால் கட்டப்பட்டது? பொன்னால் இழைக்கப்பட்டதோ? இரத்தினங்கள் பொதிக்கப்பட்டதோ? மின்னலால் அமைக்கப்பட்டதோ? என்ன என்று விளங்கவில்லையே! இந்த மாடங்கள் எல்லாம் மதிமுட்டுகின்றனவே!" என்று அதிசயித்தான் அநுமன்.

* * *

மாடம் - (இந்த இலங்கை மாநகரின் வீதிகளில் காணும்) மாடங்கள்; பொன் கொண்டு இழைத்த - பொன் கொண்டு செய்யப்பட்டன; மணியைக் கொடு பொதிந்த - இரத்தினங்களைக் கொண்டு பொதிந்த - மின் கொண்டு அமைத்த - மின்னலைக் கொண்டு அமைக்கப் பெற்றன; வெயிலைக் கொடு சமைத்த - சூரிய ஒளியைக் கொண்டு ஆக்கப் பெற்றன; (என்று இவ்வாறு மயங்குவது அல்லாது) என் கொண்டு இயற்றின என - எதனைக் கொண்டு செய்யப்பட்டன என்று; தெரிவு இலாத - அறிய முடியாதன வாயிருக்கின்றன; (அவை) வன்கொண்டல் விட்டு - வலிய மேக மண்டலத்தைக் கடந்து; மதிமுட்டுவன - சந்திர மண்டலத்தை முட்டிக் கொண்டிருக்கின்றன.

* * *

நாகாலயங் களோடு
நாகர் உலகும் தம்
பாகர் மருங்கு துயில்
என்ன உயர் பண்ப
ஆகாயம் அஞ்ச
அகல் மேருவை அனுக்கும்
மாகால் வழங்கு சிறு
தென்றலென நின்ற

அந்த இலங்கை மாநகர், மாட மாளிகைகளின் நடுவே தேவர் வாழும் மாளிகைகளும் இருப்பன போல உயர்ந்த தோற்றத்தை அளித்தது. வலிய காற்றும் அம் மாட மாளிகைகளால் தடுத்து வலியிழக்கப் பெற்றது; தென்றல் போல் மெல்லென வீசியது.

* * *

(அம் மாடங்கள்) நாகாலயங்களோடு - தேவர் வாழும் மாளிகைகளோடு கூடிய; நாகர் உலகம் - தேவலோகமும்; தம் - இலங்கையிலுள்ள மாடங்களின்; பாகு ஆர் மருங்கு - தம் பகுதியாய் விளங்கும் இடை நிலத்தில்; துயில் என்ன - தங்குவன என்று சொல்லும்படியாக; உயர்பண்ப - உயர்ந்து நிற்கும் தன்மை உடையனவாக; ஆகாயம் அஞ்ச - வானம் அஞ்சும்படி; அகல்மேருவை அனுக்கும் - அகன்று நிற்கும் மேருமலையை வருத்தி, நிலை தளரச் செய்யும்; மா கால் - பெருங்காற்று; வழங்கு சிறு தென்றலென நின்ற - மென்மையாக வீசும் சிறிய தென்றல் காற்று எனும்படி வலியிழக்கச் செய்து அவை நின்றன.

* * *

மாகாரின் மின்கொடி
மடக்கினர் அடுக்கி
மீகாரம் எங்கணும்
நறும் துகள் விளக்கி

ஆகாய கங்கையினை
அங்கையினில் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர்
வீசுபடு அகாரம்.

சர்க்கரைப்பாகு போன்று தித்திக்கும் சொல்லினர் ஆகிய பணிப் பெண்டிர் அந்த மாட மாளிகைகளை எல்லாம் சுத்தம் செய்கிறார்கள். எப்படிச் சுத்தம் செய்கிறார்? மேகத்திலே தோன்றும் மின்னல் கொடிகளையெல்லாம் பிடித்து அடுக்கித் துடைப்பமாக வைத்துக்கொண்டு கீழே சிந்திக் கிடக்கிற மணம் வீசும் குங்குமக் குப்பைகளை எல்லாம் அப்புறப்படுத்துகிறார்கள். பிறகு, ஆகாய கங்கை நீரைத் தம் கையால் அள்ளித் தெளிக்கிறார்கள்.

* * *

அகாரம்-அம் மாளிகைகள்; பாகு ஆய செஞ் சொலவர்-சர்க்கரைப் பாகு போன்ற இனிய சொற்கள் பயிலும் பணிப் பெண்கள்; மாகாரின் மின்கொடி - பெரிய மேகங்களில் தோன்றும் மின்னல் கொடிகளை; மடக்கினர் அடுக்கி - மடக்கித் துடைப்பமாக அடுக்கிக் கையில் வைத்துக்கொண்டு: மீகாரங் எங்கணும் - மேல் மாளிகைகளில் எல்லா இடங்களிலும் உள்ள; நறும்துகள் விளக்கி - (அங்கு சிந்திக் கிடக்கும்) நறுமணமுள்ள கலவைப் பொடிகளான குப்பைகளை அகற்றி; அங்கையினில் - தம் உள்ளங் கைகளால்; ஆகாய கங்கையினை அள்ளி - ஆகாய கங்கை நீரை அள்ளி; வீசுபடு - வீசித் தெளிக்கப்படுவன.

* * *

நான நாண் மலர் கற்பக
நறு விரை நான்ற
பானம் வாயுற வெறுத்த
தாள் ஆறுடைப் பறவை

தேனவாம் விரைச் செங்கழு
நீர்த் துயில் செய்ய
வானயாறு தம் அரமியத்
தலம் தொரும் மடுப்ப.

கற்பக தருக்களிலே தேனையுண்ட வண்டுகள், திகட்டிப்போய் அத் தேனை வெறுத்து அம்மாட மாளிகை தோறும் வந்து பாயும் வான கங்கையிலே மலர்ந்துள்ள செங்கழு நீர்ப் பூவிலே தேனை மாந்தித் துயில்கின்றனவாம்.

*　　　*　　　*

நான கற்பக நாள் மலர் நறு விரை நான்ற பானம் - வானிலுள்ள கஸ்தூரி மணம் மிகுந்த கற்பக மரங்களின் அன்று அலர்ந்த மலர்கள் நன் மணத்தொடு சொரிந்த தேன்; வாய் உற - தம் வாயில் வந்து புக; வெறுத்த - (ஏராளமாகக் குடித்துப் பின் வேண்டாம் என்று) வெறுத்த; ஆறுதாள் உடை பறவை - ஆறு கால் கொண்ட வண்டு; வானயாறு - ஆகாய கங்கையிலே; விரை செங்கழுநீர் - மணம் வீசும் செங்கழுநீர் மலரிலே உள்ள; தேன் அவாம் - தேனை விரும்பி; துயில் செய்ய - குடித்து அம் மயக்கத்தினால் துயில; தம் அராமிய தலம் தொறும் மடுப்ப - அவ்வான ஆறு மாடங்களின் நிலா முற்றங்கள் தோறும் வந்து நிறைய (அம்மாடங்கள் உயர்ந்து விளங்கின என்றபடி.)

*　　　*　　　*

குழலும் வீணையும் யாழும் என்று
இனையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கு
இருந்து அளிக்கின்ற
சுழலும் நல்நெடும் தடமணிச்
சுவர்தொறும் துவன்றும்
நிழலும் தன்மையும் மெய்ம்மை
நின்று அறிவரு நிலைய

குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளும் தோல்வி அடையக்கூடிய இனிய குரலில் கிளியுடன் அமர்ந்து பேச்சுப் பழக்குகிறார்கள் பெண்கள். அந்த மாடத்தின் சுவர்களிலே, அவர்கள் போலவே பல பிம்பங்கள் பிரதிபலிக்கின்றன. எது உண்மையுருவம் எது பிரதிபிம்பம் என்று காணமுடிய வில்லை. அப்படிப்பட்ட பளபளப்பு வீசும் சுவர்களை - கண்ணாடிபோலும் சுவர்களைக் கொண்டன அம்மாடங்கள்.

* * *

குழலும் வீணையும் யாழும் என்று இனையன - குழல், யாழ், வீணை என்று கூறப்படும் இத்தகைய இசைக் கருவிகள்; குழைய - தளர்ந்துபோக; மென் மழலை மொழி- மெல்லிய மழலைச் சொற்களை; இருந்து கிளிக்கு அளிக்கின்ற மகளிர் - தாம் இருந்துகொண்டு கிளிக்குப் பழக்குகின்ற மாதர்கள்; சுழலும் நல் நெடும் தடமணி சுவர்தொறும் - ஒளி சுற்றி வருவனவும் நல்ல இலக்கணங்கள் அமைந்தனவுமாகிய நீண்டு உயர்ந்த மணிகள் பதித்த சுவர்கள் தொறும்; துவன்றும் நிழலும் - ஒன்று பலவாகத் தோன்றும் தம் நிழல்களையும்; தம்மையும் - தம்மையும்; மெய்ம்மை நின்று அறிவு அருநிலைய - உண்மையாக அறிய முடியாத நிலையில் இருந்தன அம்மாடங்கள்.

* * *

இனைய மாடங்கள்
இந்திரற்கு அமைவர எடுத்து
வனையும் மாட்சிய என்னில்
அச் சொல்லும் மாசி உண்ணும்
அனையவாம் எனின்
அரக்கர் தம் திருவுக்கும் அளவை
நினையலாம் அன்றி உவமையும்
அன்னதா நிற்கும்.

இந்த மாளிகைகள் எல்லாம் தேவேந்திரன் வாழ்வதற்குரிய மாண்புடையன எனின் அப்படிச் சொல்வதே குறையாகும். அப்படியானால் அரக்கரின் செல்வத்திற்கு எல்லையுண்டோ? உவமை கூற முடியுமா? முடியாது.

*    *    *

இனைய மாடங்கள் - இத்தகைய மாடங்கள்; இந்திரற்கு அமைவர எடுத்து வனையும் மாட்சிய என்னில் - தேவேந்திரன் வாழ்தற்குப் பொருந்தக் கட்டப்பெற்று அழகு செய்யப்பட்ட பெருமை உடையது என்று சொன்னால்; அச்சொல்லும் - அவ்வாறு கூறுதலும்; மாசு உண்ணும் - குறையாகும்; அனையதாம் எனின் - அவ்வாறு இந்திர மாளிகைக்கு ஒப்பாகக் கூறுதலே குற்றமாகும் எனும்போது; அரக்கர் தம் திருவுக்கும் - அரக்கர் தம் செல்வச் செழிப்புக்கும்; அளவை நினையலாம் - உள்ளதோர் எல்லையற்றதோர் அளவை மனத்தால் நினைக்கலாம்; அன்றி - அவ்வளவுதானேயன்றி; உவமையும் - உவமை கூறுவதும்; அன்னதா நிற்கும் - அவ்வாறே மாசுடையதாகும்.

*    *    *

மரம் அடங்கலும் கற்பகம்
  மலையெலாம் கனகம்
அர மடந்தையர் சில தியர்
  அரக்கியர்க்கு; அமரர்
உரமடங்கி வந்து
  உழையராய் உழல்குவர் : ஒருவர்
தரம் அடங்குவது அன்று இது!
  தவம் செயத் தகுமால்!

இலங்காபுரியிலே உள்ள மரங்கள் எல்லாம் கற்பகத் தருக்களே. வீடுகள் எல்லாம் பொன்மயம் ஆனவையே. அரக்கியரின் பணிப்பெண்டிர் யாவரும் தேவ மாதரே. இது

எதனாலே? தேவர் தகுதி இழந்தனரா? இல்லை, இராவணன் செய்த தவத்தினாலே. ஆகவே தவமே செய்யத்தக்கது ஆகும்.

*　　*　　*

மரம் அடங்கலும் கற்பகம் - மரங்கள் எல்லாம் கற்பக மரங்களே; மனை எலாம் கனகம் - வீடுகள் யாவும் பொன்னால் ஆனவையே; அரக்கியர்க்கு அரமடந்தையர் சிலதியர் - அரக்கியர்க்குப் பணிப்பெண்டிர் தேவமாதர்; அமரர் உரம் அடங்கி வந்து உழையராய் உழல்குவர் - தேவர் தம் வலி குன்றி (இந்நகர்க்கு) வந்து (அரக்கர்க்கு) அருகில் நின்று குற்றேவல் செய்பவராய்ச் சூழ்ந்து வருவர்; இது - இவ்வாறு அமைந்த இத்தன்மை; ஒருவர் தரம் அடங்குவது அன்று - ஒருவர் தகுதியின்பால் அடங்கக் காண்பது அன்று; (ஆதலால்) தவம் செயத் தகும் - தவமே செய்யத்தக்கது ஆகும்.

*　　*　　*

தேவர் என்பவர் யாரும் இத்
　　திரு நகர்க்கு இறைவற்கு
ஏவல் செய்பவர்; செய்கிலாதவர்
　　எவர்? என்னில்
மூவர் தம்முளும் இருவர்
　　என்றால் இனி முயலில்
தாவில் மாதவ மல்லது
　　பிறிது ஒன்று தகுமோ.

தேவர்கள் எல்லாரும் இலங்கையரசனாகிய இராவணனின் ஏவல் செய்வோரே. அப்படிச் செய்யாதவர் எவர்? பிரும்மா, விஷ்ணு, சிவன் எனப்படும் மூவருள் இருவரே. அவர் யாவர் எனின் சிவனும் விஷ்ணுவுமே.

*　　*　　*

தேவர் என்பவர் யாவரும் - தேவர் என்று சொல்லப் படுகிறவர் எல்லாரும்; இ திரு நகர்க்கு இறைவர்க்கு - இந்த அழகிய இலங்காதிபனாகிய இராவணனுக்கு; ஏவல் செய்பவரே - பணி செய்வோரே; செய்கிலாதவர் எவர் எனின் - அப்படி ஏவல் செய்யாதவர் எவர் என்று கேட்டால்; மூவர் தம்முளும் இருவர் - மும்மூர்த்திகளில் இருவர்; பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று சொல்லக்கூடிய மூவரில் இருவர் (சிவன், விஷ்ணு ஆகிய இருவரே) என்றால் - எனும் போது; இனி முயலில் - இனி முயற்சி செய்தால்; தா இல் மாதவம் அல்லது பிறிது ஒன்று தருமோ - குற்றமற்ற தவமே யன்றி வேறு ஒன்று முயற்சி செய்யத் தருமோ? (தகாது என்றபடி).

* * *

போர் இயன்றன தோற்ற என்று
இகழ்தலில் புறம் போம்
நேர் இயன்றவன் திசைதொறும்
நின்ற மா நிற்க
ஆரியன் தனித் தெய்வமாக்
களிறும் ஓராழிச்
சூரியன் தனித் தேருமே
இந்நகர்த் தொகாத

இராவணனுடன் போர் செய்து தோற்றுவிட்டன திக்கு யானைகள். அதனால் பயந்து ஓடிச் சென்று திசைக்கு ஒன்றாக நின்றுவிட்டன. ஐயனாருடைய யானை வாகனமும் சூரியனுடைய ஒற்றைச் சக்கரத் தேரும் தவிர மற்றைய யாவும் இலங்கையில் உள்ளனவே.

* * *

போர் இயன்றன - போர் செய்தனவாய்; தோற்ற - தோற்று ஓடின; என்று இகழ்தலில் - என்று இகழப்பட்டமை

யால்; புறம்போய் - அப்பால் சென்று; நேர் இயன்றவன் திசை தொறும் - நேராக உள்ள வலிய திசைகள் தோறும்; நின்றமா - நின்ற திக்கு யானைகள்; நிற்க - ஒருபுறம் நிற்க; ஆரியன் - ஐயனாராகிய சாஸ்தாவின்; தனி தெய்வ மா களிறும் - ஒப்பற்ற தெய்வத் தன்மை வாய்ந்த வாகனமான யானையும்; சூரியன் - சூரியனுடைய; ஓர் ஆழி தனிதேருமே- ஒரே சக்கரங்கொண்ட ஒப்பற்ற தேருமே; இந்நகர் - இந்த இலங்காபுரியில்; தொகாத - சேராதன; (பிற யானைகளும் தேர்களும் இங்கே உள்ளன என்றபடி)

*　　　*　　　*

வாழும் மன்னுயிர் யாவையும்
　　ஒரு வழி வாழும்
ஊழிநாயகன் திருவயிறு
　　ஒத்துளது இவ்வூர்!
ஆழி அண்டத்தின் அருக்கன் தன்
　　அலங்கு தேர்ப் புரவி
ஏழும் அல்லன ஈண்டுள
　　குதிரைகள் எல்லாம்!

ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற தேரிலே பவனி வருகிறான் சூரியன். அந்த ஏழு குதிரைகள் நீங்க மற்று எல்லாக் குதிரைகளும் இந்த இலங்கை மாநகரில் உள்ளன.

சுருங்கச் சொன்னால், ஊழிக் காலத்திலே இந்த உலகத்துயிர்கள் எல்லாம் சரணடைந்திருக்கும் திருமாலின் திருவயிறுபோல் இருந்தது இலங்கை மா நகரம்.

*　　　*　　　*

இவ்வூர் - இந்த இலங்கை மா நகரமானது; வாழும் மன்னுயிர் யாவையும் - உலகில் வாழும் நிலை பெற்ற உயிர்கள் எல்லாம்; ஒருவழி வாழும் - ஓரிடத்தில் கூடி

வாழும்; ஊழி நாயகன் திரு வயிறு ஒத்துளது - ஊழி இறுதிக் காலத்திலே உறையுமிடமாகிய திருமாலின் திரு வயிறு ஒத்து இருந்தது; ஆழி அண்டத்தின் - வட்டமாயுள்ள அண்டத்தில் உள்ள (குதிரைகளுள்) அருக்கன்தன் - சூரியனுடைய; அலங்குதேர் - அசைகின்ற தேரில் கட்டியுள்ள; புரவி ஏழும் அல்லன - குதிரைகள் ஏழு நீங்கலாக மற்றக் குதிரைகள் எல்லாம்; ஈண்டு உள் - இங்கே உள்ளன.

*　　　*　　　*

தழங்கு பேரியின் அரவமும்
　　தகை நெடுங் களிறு
முழங்கும் ஓதையும் மூரி நீர்
　　முழக்கொடு முழங்கும்;
கொழுங் குரல் புதுக்குந்தலையர்
　　நூபுரக் குரலும்
வழங்கு பேர் அரும் சதிகளும்
　　வயின் தொறும் அறையும்

அந்த இலங்கை மா நகரிலே பேரிகைகள் முழக்கத்தோடு யானைகளின் முழக்கமும் கேட்கும்; கடல் ஓசையும் கலந்து வரும். பெண்கள் காலிலே அணிந்த சிலம்பொலியுடனே அவர்கள் ஆடும் ஜதிசப்தமும் இடந்தொறும் கலந்து வரும்.

*　　　*　　　*

தழங்கு பேரியின் அரவமும் - ஒலிக்கின்ற முரசின் சப்தமும்; தகை நெடும் களிறு முழங்கும் ஓதையும் - சிறப்பமைந்த பெரிய யானைகளின் முழக்கமும்; மூரிநீர் முழக்கொடு முழங்கும் - கடல் ஓசையுடன் சேர்ந்து முழங்கும்; கொழும் குரல் புது குதலையர் - வளப்பம் பெற்ற குரலோடு (பேசும்போது எல்லாம்) புதியனவாகத் தோன்றும் குதலைச் சொற்களை வழங்கும் மகளிருடைய; நூபுரக் குரலும் - சிலம்பின் ஒலியும்; வழங்குபேர் அரும் ஜதிகளும் -

அவர்கள் செய்யும் பெரிய அரியதான ஒத்துக்களும்; வயின் தொறும் - இடந்தொறும்; அறையும் - ஒலிக்கும்.

* * *

பாடுவார் பலர் என்னின்
மற்று அவரினும் பலரால்
ஆடுவார் எனின் அவரினும்
பலருளர் அமைதி
கூடுவார் இடை இன்னியாங்
கொட்டுவார் வீடில்
வீடு காண்குறுந் தேவரால்
விழு நடங் காண்பார்.

அந்த நகரத்திலே நாட்டிய விருந்து நடைபெறும்; தேவ மாதர் பலர் பின்பாட்டுப் பாடுவார். மேலும் பலரான தேவ மாதர் ஆடுவர். சுருதி கூட்டுவாரும், மத்தளம் வாசிப்பாரும் இன்னும் பலராயிருப்பர். எல்லாரும் தேவமாதரே. அரக்கர் அந்த நாட்டியக் கச்சேரி கண்டு களிப்பர்.

* * *

(நடனத்தில்) பாடுவார் பலர் என்னின் - வாய்ப்பாட்டு பாடுவார் பலர் என்றால்; மற்று அவரினும் பலர் ஆடுவார் - அவரைவிட மற்றும் பலர் ஆடுவார்; எனின் - இவர்கள் இப்படி என்றால்; அமைதி கூடுவார் - சுருதி கூட்டுவாரும்; இடை இன்னியம் கொட்டுவார் - நடுவே மத்தளம் முதலிய இனிய கருவிகளை வாசிப்பாரும்; அவரினும் பலர் உளர் - ஆடுவரைவிடப் பலராயுள்ளனர். (இவ்வாறு அந்நகரில் வாழ்வோர்) வீடில் வீடு - தடையற்ற விடுதலை; காண்குறும் தேவரால் - காண விரும்பும் தேவரால் (செய்யப்படும்); விழு நடம் காண்பார் - விழுமிய நடனங்களைக் காண்பார்கள்.

* * *

வான மாதரோடு இகலுவர்
விஞ்சையர் மகளிர்;
ஆன மாதரோடு ஆடுவர்
இயக்கியர்; அவரைச்
சோனை வார் குழல் அரக்கியர்
தொடர்குவர்; தொடர்ந்தால்
ஏனை நாகியர் அரு நடக்கிரியை
ஆய்ந் திருப்பார்.

* * *

இவ்வாறு தேவ மகளிர் ஆடுதல் கண்டு அவருடன் போட்டியிட்டு நடனம் ஆடுவர் வித்யாதர மகளிர்; அப்படிப் போட்டியிட்டு ஆடும் மகளிருடனே யக்ஷ மகளிர் ஆடுவர்; அவரைத் தொடர்ந்து அரக்கியர் ஆடுவர்; எஞ்சிய நாகலோக நங்கையர் நாட்டியக் கிரியைகளைக் கவனிப்பர்.

* * *

(அப்படி நடனமாடும்போது) விஞ்சையர் மகளிர் - வித்தியாதரப் பெண்கள்; வானமாதரோடு - தேவமகளிருடன்; இகலுவர் - போட்டியிட்டு நடனம் ஆடுவர்; ஆன மாதரோடு - அப்படிப் போட்டியிட்ட வித்தியாதர மகளிரோடு; இயக்கியர் ஆடுவர் - யக்ஷப் பெண்கள் ஆடுவார்கள்; அவரை - அந்த யக்ஷ மகளிரை; சோனைவார் குழல் அரக்கியர் - கருமேகம் போன்ற நீண்ட கூந்தலை உடைய அரக்கியர்; தொடர்குவர் - தொடர்ந்து போட்டியிட்டு ஆடுவார்கள்; தொடர்ந்தால் - அவ்வாறு தொடர்ந்து ஆடுமிடத்து; ஏனை - எஞ்சிய; நாகியர் - நாகலோகப் பெண்கள்; அரு நடகிரியை ஆய்ந்திருப்பார் - நாட்டியத்துக்கு வேண்டிய அரிய கிரியைகளை ஆராய்ந்திருப்பர்.

* *

மடங்கல் அரி ஏறும்
மத மால் களிறும் நாண
நடந்து தனியே புகுதும் நம்பி
நனி மூதூர்
அடங்கரிய தானை அயில்
அந்தகனது ஆணைக்
கடுந்திறலின் வாய் அனைய
வாயில் எதிர் கண்டான்.

இத்தகைய இலங்கையின் புறநகரிலே தனியே நடக்கிறான் அநுமன். எப்படி நடக்கிறான்? துணை ஏதுமின்றி நடக்கிறான். பயந்து நடக்கிறானா? இல்லை; இல்லை. ஆண் சிங்கமும், மதம் பிடித்த மாபெரும் யானையும் வெட்கமடையும்படி நடக்கிறான். அப்படி நடந்து அந் நகரின் கோபுர வாயிலை அடைகிறான்.

* * *

மடங்கல் - பிடரி மயிர் மடங்கிய; அரி ஏறும் - ஆண் சிங்கமும்; மதமால் களிறும் - மதங்கொண்ட பெரிய யானையும்; நாண - வெட்கம் அடையும்படி; தனியே நடந்து - துணை எவருமில்லாமல் தனியே நடந்து; புகுதும் - கம்பீரமாக அந்த மதில் அருகே செல்லும்; நம்பி - ஆடவரில் சிறந்த அநுமன்; அடங்கு அரிய - எண்ணிக்கையில் அடங்காத; தானை - அரக்கர் சேனை உடையதும்; அயில் அந்தகனது - சூலாயுதம் ஏந்திய இமயனுடைய; ஆணை கடுந்திறலின் - கட்டளை தவறாத கொடிய வலிமை கொண்ட; வாய் அனைய - வாய்போன்ற; நனி மூது ஊர் - பெரிய பழமையான அந் நகரின்; வாயில் - கோபுர வாயிலை; எதிர்கண்டான் - எதிரில் பார்த்தான்.

* * *

"மேருவை நிறுத்தி வெளி
செய்தது கொல்? விண்ணோர்
ஊர்புக அமைத்த படுகால் கொல்?
உலகு ஏழும்
சோர்வில நிலைக்க நடுவிட்ட
தொரு தூணோ?
நீர் புகு கடற்கு வழியோ?"
என நினைத்தான்.

அந்தக் கோபுர வாயிலைப் பார்த்த உடனே என்ன நினைத்தான்? "இது என்ன மேருவைத் தூக்கி நிறுத்திவைத்து அதிலே கோபுரவாயில் எனும் இடைவெளி செய்யப் பட்டதோ? விண்ணோர் இலங்கை புக வைத்த ஏணியோ? ஏழுலகங்களும் தளராமல் நிலைத்திருக்கும் பொருட்டு நடுவிலே முட்டுவைத்த தூணோ? கடலிலே நீர் சென்று புக அமைத்ததொரு வழியோ?" எனப் பலவாறு சிந்தித்தான்.

* * *

மேருவை நிறுத்தி வெளி செய்தது கொல்? - மேரு மலையைக் கோபுரமாக நிற்கச் செய்து (அதன் வாயிலாக) இடைவெளி உண்டாக்கியதோ? (அன்றி) விண்ணோர் ஊர் புக அமைத்த படுகால் கொல் - தேவர்கள் இலங்கை புக அமைத்த ஏணியோ? உலகு ஏழும் சோர்வில நிலைக்க நடுவிட்டதொரு தூணோ? - ஏழு உலகங்களும் தளர்வற்றனவாய் நிலைத்து நிற்கும் பொருட்டு நடுவே கட்டிவிட்ட ஒரு தூணோ? கடற்கு நீர்புகு வழியோ? கடலிலே நீரைப் புக விடுதற்கு அமைத்த ஒரு வழியோ?—என நினைத்தான் என்று அநுமன் எண்ணினான்.

* * *

வெள்ளமொரு நூறொரு
　　இருநூரு மிடை வீரர்
கள்ளவினை வெம் வலி
　　அரக்கர் இரு கையும்
முள் எயிறும் வாளும் கூற
　　முன்ன முறை நின்றார்
எள்ளரிய காவலினை
　　அண்ணலும் எதிர்ந்தான்.

முன்னூறு வெள்ளம் என்று எண்ணிக்கை கொண்ட படைவீரர்கள்—வஞ்சத் தொழிலில் வல்ல கொடியர்கள்—ஆகிய அரக்கர்கள்—ஆயுதங்கள் தாங்கிப் போருக்குச் சித்தமாய் அந்த வாயிலின் இருபுறமும் நிற்கிறார்கள், இத்தகைய காவலினைக் கண்டான் அநுமன்.

*　　*　　*

ஒரு நூறொடு இருநூறு வெள்ளம் மிடை வீரர் - முன்னூறு வெள்ளம் என்ற எண்ணிக்கை கொண்ட நெருங்கிய படை வீரர்களாகிய; கள்ளவினை - வஞ்சத் தொழிலிலும்; வெம்வலி - கொடிய வலிமையும் (கொண்ட) அரக்கர் - அரக்கர்கள்; இருகையும் - வாயிலின் இரண்டு பக்கங்களிலும்; முள் எயிறும் - முள் போன்ற கூரிய பற்களும்; வாளும் - வாட்களும்; உற - கொண்டு; முன்னமுறை நின்றார் - போருக்கு முற்பட்டவர்களாய் முறையில் நின்றார்கள்; எள் அரிய காவலினை - (அத்தகைய) தள்ளுதற்கு அரிய காவலை; அண்ணலும் - பெரியோனான அநுமனும்; எதிர்ந்தான் - முன்னே கண்டான்.

*　　*　　*

"வாயில் வழி சேரல் அரிது!
அன்றியும் வலத்தோர்
ஆயில், அவர் வைத்த வழி ஏதல்
அழகு அன்றால்
காய் கதிர் இயக்கு இல்
மதிலைக் கடிது தாவிப்
போய் இ நகர் புக்கிடுவென்"
என்று ஓர் அயல் போனான்.

இந்தக் கோபுர வாயில் வழியே போகலாமா? கூடாதா? என்று ஒரு கணம் யோசித்தான். கட்டும் காவலும் நிறைந்த அவ்வழியைக் கடந்து செல்வது சிரமம். மாற்றார் வழி ஆதலின் அவ்வழியே செல்வது தகாது என்று முடிவு செய்தான். மதிலைத் தாண்டிச் செல்வது என்று எண்ணினான். அப்பால் சென்றான்.

* * *

வாயில் வழி - இந்த வாயில் வழியே; சேரல் அரிது - செல்லுதல் எளிது அன்று; அன்றியும் - அல்லாமலும்; ஆயில் - ஆராயுமிடத்து; வலத்தோர் - வலிமை மிக்கவர்; அவர் வைத்த வழி ஏகல் - அவர் வைத்துள்ள இவ்வழியே செல்லுதல்; அழகு அன்று - நமக்கு அழகு ஆகாது; ஆல் - ஆதலால்; காய்கதிர் - எரிக்கின்ற சூரிய கிரணங்களும்; இல் - கடந்து செல்லாத; மதிலைக் கடிது தாவிப் போய் - இம் மதிலை விரைவிலே தாண்டிச் சென்று; இந்நகர் புக்கிடுவேன் - இந்நகரின் உள்ளே புகுவேன்; என்று - என்று எண்ணி; ஓர் அயல் போனான் - அம் மதிலின் ஒரு புறத்தே போனான்; யார்? அநுமன்.

* * *

அநுமன் அவ்வாறு சென்றபோது, 'நில்; நில்' என்று கேட்டது ஒரு குரல். அவ்வாறு கூவிக் கொண்டே அநுமன்

எதிரே வந்து வழிமறித்து நின்றது அவ்வுருவம், அஃது ஒரு பெண் உருவம்.

"அவள் யார்?"

அவ் இலங்கை மாநகரீ காக்கும் தெய்வம். இலங்கா தேவி என்னும் பெயர் உடையவள்.

ஐந்து நிறங்கள் கொண்ட ஆடை உடுத்திருந்தாள் அவள்? பாம்புகள் எல்லாம் கண்டு அஞ்சத் தக்க கருடனு டைய வேகம் கொண்டவள்; இரக்கம் என்பதே சிறிதும் இல்லாதவள்; அழகிய பொன்னாலான மேலாடை தரித்து இருந்தாள்; சங்கினின்று தோன்றிய அழகிய முத்துக்களை மாலையாக அணிந்திருந்தாள்.

கண்டோர் அஞ்சத்தக்க கால்களை உடையவள்; மழைக் காலத்து மாரிபோல் ஒலிக்கும் சிலம்பு அணிந்திருந் தாள்.

எட்டுத் தோள்கள் உடையாள் அவள்; நான்கு முகத்தாள்; உலகம் ஏழும் தொட்டுத் திரும்பும் ஒளிபடைத்த மார்பினள்; தீப்பொறி பறக்க நாற்புறமும் சுழலும் கண்கள் கொண்டவள்; மூவுலகங்களையும் முட்டித் தாக்கும் வலியுடையாள்; பொறுமையே இல்லாதவள்.

சந்தனக் கலவை பூசியிருந்தாள்; தாரம் எனும் எடுத்தல் ஓசைக்கு ஒத்த குரலுடன் பேசுபவள்; தேவ தருக்களில் ஒன்றாகிய மந்தார மலர்களால் ஆன மாலை தரித்த மகுடத் தாள்.

"அறிவில்லாதவனே! இவ்வூரில் எவரும் செய்யத் துணியாத செயல் புரிந்தனை? அஞ்சினாயில்லை போலும்! கோட்டை மதில் தாவாதே! என் கோபத்துக்கு இரை யாகாதே! போ! போ!" என்று அதட்டினாள் இலங்காதேவி.

"இவ்வூர் காணும் ஆசையினால் வந்தேன்; எளியேன்; இங்கு வருவதால் உனக்கு என்ன நஷ்டம்?" என்று மரியாதை யாகக் கூறினான் அநுமன்.

"அடே! நீ யார்? போ என்று சொன்னதும் போகாமல் பதில் பேசுகிறாய்! முப்புரம் எரித்த சிவனும் இவ்வூருக்கு வர அஞ்சுவர். அங்ஙனமிருக்க எளிய குரங்காகிய நீ வரத்தக்க ஊர் இதுவோ?'' என்று கூறி நகைத்தாள் இலங்காதேவி.

அவளைக் கண்டு அநுமனும் தன் மனத்துளே நகைத்தான்.

''உன்னைக் கொன்றாலன்றி நீ போகாய்'' என்று கூறி அநுமன் மீது தனது போர்க் கருவிகளை வீசினாள் இலங்காதேவி.

* * *

வழங்கும் தெய்வப் பல்படை
காணாள்; மழை வான் மேல்
முழங்கும் மேகம் என்ன
முரற்றி முனிகின்றாள்;
கழங்கும் பந்தும் குன்று
கொடு ஆடும் கரம் ஓச்சித்
தழங்கும் செந்தீச் சிந்த
அடித்தாள் தகவு இல்லாள்.

அநுமன் மீது வீசிய ஆயுதங்கள் எல்லாம் பயன் இன்றிப் போயின. குன்றுகளை எடுத்துக் கழற்சிக்காய் விளையாடுவது போல் அநுமன் மீது வீசினாள். ஓங்கித் தன் கைகளால் அடித்தாள்.

* * *

தகவு இல்லாள் - நற்குணமற்றவளான இலங்கா தேவி; வீசும் தெய்வப் படைகாணாள் - (தான்) வீசும் தெய்வப் படைகள் எல்லாம் போன இடம் காணாதவளாய்; மேல் வான் முழங்கும் மழை என்ன - மேலேயுள்ள வானத்திலே முழங்குகின்ற மழை கொண்ட மேகம் போல; முரற்றி -

ஆரவாரம் செய்து; முனிகின்றாள் - கோபிக்கின்றவளாகி; தழங்கும் செந்தீ சிந்த - ஒலிக்கின்ற சிவந்த நெருப்புச் சிந்தி; குன்று கொடு - குன்றுகளைக் கையிலே எடுத்து; கழங்கும் பந்தும் ஆடும் - கழற்சிக் காய்கள் போலவும், பந்து போல வும் விளையாடி; கரம் ஓச்சி - தன் கைகளை ஓங்கி; அடித்தாள் - அநுமனை அடித்தாள்.

*　　　　*　　　　*

அடியா முன்னம் அங்கை
　　அனைத்தும் ஒரு கையால்
பிடியா, "என்னே! பெண் இவள்!
　　கொல்லிற் பிழை" என்னா
ஒடியான் நெஞ்சத்து ஓர் அடி
　　கொண்டான்; உயிரோடும்
இடியேறுண்ட மால்வரை போல்
　　மண்ணிடை வீழ்ந்தாள்.

*　　　　*　　　　*

அவள் கொடுத்த அடி தன் மீது விழு முன்னே அவளது கைகள் எட்டினையும் தன் ஒருகையால் பிடித்துக் கொண்டான் அநுமன், அவளைக் கொல்ல விரும்பவில்லை. 'இவள் பெண்; ஆதலின் இவளைக் கொல்வது தவறு' என்று நினைத்தான். அவளுடைய மார்பிலே ஒரு குத்து விட்டான். மலைமீது பேரிடி விழுந்து அது உருண்டு விழுவது போலே உயிருடன் பூமியில் விழுந்தாள் அவள்.

*　　　　*　　　　*

அடியா முன்னம் - அவள் அடிக்கும் முன்னே; அங்கை அனைத்தும் - அவளுடைய எட்டு கைகளை எல்லாம்; ஒரு கையால் பிடியா - தன் ஒரு கையினாலே பிடித்துக்கொண்டு; என்னே - என்ன இது? இவள் பெண் - இவள் ஒரு பெண்;

(ஆதலின்) கொல்லிற் பிழையாம் - இவளைக் கொல்வது பிழை; எல்லா - என்று; ஒடியான் - சோர்வுற்றவனாகி; நெஞ்சத்து - அவளுடைய மார்பிலே; ஓர் அடி கொண்டான் - ஓர் அடி கொடுத்தான்; இடி ஏறு உண்ட - பேரிடியால் தாக்கப்பட்ட; மால் வரை போல் - பெரிய மலை போல; உயிரோடும - உயிருடன்; மண்ணிடை வீழ்ந்தாள் - பூமியிலே விழுந்தாள்.

* * *

ஆத்துறு சாலை தோறும்
ஆனையின் கூடந் தோறும்
மாத்துறு மாடம் தோறும்
வாசியின் பந்தி தோறும்
காத் துறுஞ் சோலை தோறும்
கருங்கடல் கடந்த காலால்
பூந்தொறும் வாவிச் செல்லும்
பொறி வரி வண்டில் போனான்.

அப்படி விழுந்த இலங்காதேவி ரத்த வெள்ளத்தில் அழுந்தி வருந்தினாள். முன்பு பிரம தேவன் அவளுக்கிட்ட கட்டளையை நினைவு கூர்ந்தாள்; எழுந்தாள். இராம தூதனாகிய அநுமன் முன் நின்றாள்.

"ஐய! கேட்பாயாக! பிரமதேவனுடைய கட்டளையைச் சிரமேல் தாங்கி இவ் இலங்காபுரியைக் காவல் புரியும் இலங்காதேவி நான். 'எத்தனை காலம் காவல் புரிய வேண்டும் நான்' என்று பிரமனைக் கேட்டேன். வலிமை வாய்ந்த குரங்கு ஒன்று உன்னைத் தொட்டுத் தன் கைகளால் தாக்கும் வரை காவல் புரிவாய், பிறகு அந்நகர் அழிவுறும்' என்றான் பிரமன்.

பிரமன் வாக்கு இன்று பலித்துவிட்டது. இனி இவ் இலங்கை மாநகர் அழிவது உறுதி. மறம் தோற்று அறம்

வெல்வது உறுதி. நீ கருதியன யாவும் கைகூடும். உன் விருப்பம்போல் இந்நகருள் செல்வாய்" என்றாள்.

அநுமனும் சென்றான்.

*  *  *

கோ மடங்கள் எங்கும் சுற்றிப் பார்த்தான் அநுமன்; ஆனை கட்டும் மடங்கள் எங்கும் தேடினான்; குதிரைலாயங்களில் எல்லாம் தேடினான். பூஞ்சோலைகள் எங்கும் தேடினான். வண்டானது ஒவ்வொரு மலராகத் தாவிச் செல்வது போல் எங்கும் சென்றான்.

*  *  *

கருங்கடல் கடந்த காலால் - கரிய கடலைத் தாவிச் சென்ற (தன்) கால்களால் (அநுமன்) ஆ துறு சாலை தோறும் - பசுக்கள் நிரம்பிய கொட்டில்கள் தோறும்; ஆனையின் கூடம் தோறும் - யானை கட்டப்பட்ட கொட்டராம் தோறும்; மாதுறு மாடம் தோறும் - பலவகை விலங்குகள் கட்டப்பட்டுள்ள இடங்கள் தோறும்; வாசியின் பந்தி தோறும் -குதிரை லாயங்கள் தோறும்; காதுறும் சோலைகள் தோறும்-காவல் உள்ளபூஞ்சோலைகள் தோறும்; பூதொறும் வாவி செல்லும் - ஒவ்வொரு பூவிலும் தங்கிப்பின் ஒவ்வொன்றாகத் தாவிச் செல்கிற; பொறிவரி வண்டின் - புள்ளிகளும் கோடுகளும் கொண்ட வண்டு போல்; போனான் - அவ்வீதிகளில் சென்றான் அநுமன்.

*  *  *

பெரிய நாள் ஒளிகொள்
 நானாவித மணிப்பித்திப் பத்தி
சொரியுமா நிழல் அங்கங்கே
 சுற்றலால் காலின் தோன்றல்
கரியனாய் வெளியனாகிச்
 செய்யனாய்க் காட்டும்; காண்டற்கு
அரியனாய் எளியனாம் தன்
 அகத்துறை அழகனே போல்

சுவர்களிலே நானாவித இரத்தினங்கள் இழைக்கப் பட்டுள்ளன. அவை நட்சத்திரங்கள் போல் ஜ்வலிக்கின்றன. அவ்வழியே அநுமன் செல்லும்போது ஓரிடத்தில் கருப்பாக வும், இன்னோரிடத்தில் சிவப்பாகவும், பிறதோரிடத்தில் வெண்மையாகவும் தோன்றினான்.

கருப்பாகத் தோன்றும்போது திருமாலாகவும், வெண்மையாகத் தோன்றும்போது பிரமனாகவும், சிவப் பாக தோன்றும்போது ருத்திரனாகவும் காட்சி தந்தான்.

அநுமனின் உள்ளத்தில் இருந்து நீங்காத இராமன் எப்படி காண்பாற்கு அரியனாயும், அண்டினார்க்கு எளியனா யும் தோன்றுகிறானோ அப்படி.

* * *

பெரிய நாள் ஒளிகொள் - பெரிய நட்சத்திரங்களின் ஒளிபடைத்த; நானாவித மணி பித்தி பத்தி - பல்வகை இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற சுவர் வரிசைகள்; சொரி யும் - வீசுகின்ற; மாநிழல் - சிறந்த ஒளி; அங்கங்கே சுற்றலால் - ஒவ்வோரிடத்திலும் சூழ்ந்திருப்பதனாலே; காலின் தோன்றல் - காற்றின் மைந்தனாகிய அநுமன்; காண்டற்கு - பார்ப்பதற்கு; அரியனாய் - அருமையானவனா யும்; எளியனாம் - அன்புடன் நாடுவார்க்கு எளியனாயும் இருந்து; தன் அகத்து உறையும் அழகனே போல் - அநும னுடைய நெஞ்சு நீங்காது உறையும் இராமனே போல்; (தானும்) கரியனாய் - ஓரிட்த்தில் கருநிறங் கொண்ட திருமாலாகவும்; வெளியனாய் - மற்றையோரிடத்தில் வெண் நிறமுடைய பிரமனாகவும்; பிறிதோரிடத்தில் செய்யனாய் - செம்மை நிறங்கொண்ட சிவபெருமானாகவும் தோன்று கிறான்.

* * *

கானக மயில்கள் என்னக்
களிமட அன்னம் என்ன
ஆனன கமலப் போது
பொலிதர அரக்கர் மாதர்

தேன் உகு சரளச் சோலைத்
தெய்வ நீர் ஆற்றல் தெள்நீர்
வானவர் மகளிர் ஆட்ட
மஞ்சனம் ஆடு வாரை

தேவதாரு மரங்கள் அடர்ந்த ஒரு சோலையிலே ஆகாச கங்கை நீரிலே தேவமாதர் நீராட்டிக் கொண்டிருந் தார்கள். யாரை? அரக்கியரை. அங்கே சென்று சீதை யைத் தேடினான் அநுமன்.

* * *

தேன் உகு சரள் சோலை - தேன் சிந்தும் தேவதாரு மரங்கள் அடர்ந்த சோலைகளில்; தெய்வ நீர் ஆற்று தெள் நீரில் - ஆகாச கங்கையின் தெளிந்த நீரில்; கானக மயில்கள் என்ன - காட்டிலுள்ள மயில்கள் போலவும்; களிமட அன்னம் என்ன - களித்திடும் அன்னங்கள் போலவும்; ஆனை கமலம்போது பொலிதர - தம் முகங்களாகிய தாமரை மலர்கள் விளங்க; வானவ மகளிர் - தேவ மாதர்கள்; மஞ்சனம் ஆட்ட - நீராட்ட; ஆடுவாரை - நீராடும் அரக்கியரை (அநுமன் கண்டான்).

* * *

இயக்கியர் அரக்கி மார்கள்
நாகியர் எஞ்சில் விஞ்சை
முயல் கறையிலாத திங்கள்
முகத்தியர் முதலினோரை
மயக்கற நாடி எங்கும் மாருதி
மலையின் வைகும்
கயக்கமில் துயிற்சிக் கும்ப
கன்னனைக் கண்ணில் கண்டான்.

இயக்கப் பெண்கள், அரக்கியர்கள், நாக கன்னிகைகள், வித்தியாதர மங்கையர், ஆகிய பெண்களைச் சந்தேக மில்லாதபடி நன்கு பார்த்துக்கொண்டே செல்கிறான் மாருதி.

இப்படி ஒவ்வோர் இடமாகப் பார்த்துக்கொண்டு வந்த அநுமன் மலை போன்ற உருவமும், கலக்கமற்ற தூக்கமும் கொண்டு படுத்துக் கிடந்த கும்பகர்ணனைக் கண்டான்.

* * *

இயக்கியர் - யக்ஷப் பெண்டிர்; அரக்கிமாகள் - அரக்கப் பெண்டிர்; நாகியர் - நாக கன்னிகைகள்; எஞ்சில் விஞ்சை - குறைவில்லாத வித்தியாதரர்; முயல் கறை இலாத திங்கள் முகத்தினர் - மருவில்லாத பூரண சந்திரன் போன்ற முகமுடைய பெண்கள்; முதலினோரை - முதலானவரை; எங்கும் மயக்கு அறநாடி - எல்லா இடங்களிலும் தெளிவுபட ஆராய்ந்து; மாருதி - அநுமன்; மலையின் வைகும் - மலை போன்ற பெரும் உருவத்துடனே படுத்துக் கிடந்த; கயக்கம் இல் துயிற்சி - கலக்கமில்லாமல் தூங்கிக் கொண்டிருந்த; கும்பகன்னனை - கும்பகர்னனை; கண்ணில் கண்டான் - தன் கண்களின் நேரே கண்டான்.

* * *

வானவ மகளிர் கால்
வருட, மாமதி
ஆனனங் கண்ட மண்டபத்துள்
ஆய் கதிர்க்
கானகு காந்தம் மீக்
கான்ற, காமர் நீர்த்
தூநிற நறுந்துளி
முகத்தில் தோற்றவே.

அவனுடைய கால்களைத் தேவ மாதர் வருடிக் கொண்டிருக்கின்றனர். அந்த மண்டபத்திலே உள்ள தூய சந்திரகாந்தக் கற்கள் வீசிய நீர்த்துளிகள் கும்பகர்ணன் முகத்தில் விழ அவன் உறங்கினான்.

* * *

வானவ மகளிர் - தேவ மாதர்; கால் வருட - அவன் கால்களைப் பிடிக்க; ஆனனம் மாமதி கண்ட - அத்தேவ மாதர்களின் பூரண சந்திரன் போன்ற முகங்களைக் கண்ட; மண்டபத்துள் - அந்த மண்டபத்துள்; ஆய் கதிர் - சிறந்த ஒளிக் கதிர்களை; கால் நகு காந்தம் - வீசி விளங்கும் சந்திர காந்தங் கற்கள்; மீகான்ற - மேலே கக்கிய; காமர் தூநிற - இனிய தூய நிறத்தை உடைய; நறும் நீர் துளி - மணமுள்ள நீர்த்துளிகள்; முகத்தில் தோற்றவே - கும்பகன்னன் முகத்தில் விழுந்து தோற்றம் அளிக்க (அவன் உறங்கினான்).

* * *

குறுகி நோக்கி மற்றவன்
தலை ஒரு பதும் குன்றத்
திறுகு திண்புயம் இருபதும்
இவற்கிலை எனா
மறுகி ஏறிய முனிவு எனும்
வடவை வெங்கனலை
அறிவு எனும் பெரும் பரவை
அம் புனலினால் அவித்தான்.

தேவ மாதர் கால் வருடத் தூங்கும் கும்பகன்னனைக் கண்ட உடனே "இவன்தான் இராவணன் போலும்" என்று எண்ணினான் அநுமன். சினம் பொங்கியது. அருகில் சென்றான்; உற்றுக் கவனித்தான். "பத்துத் தலை காணோம். இருபது புயங்கள் இல்லை. இவன் இராவண ன்

அல்லன்" என்ற முடிவுக்கு வந்தான். பொங்கிவந்த சினம் எனும் வடவா முகாக்கினியை, அறிவு எனும் கடல் நீர் கொண்டு அவித்தான்.

* * *

மற்று - பிறகு; குறுகி நோக்கி - அவனை நெருங்கிப் பார்த்து; அவன் - அந்த இராவணனுடைய; தலை ஒருபதும் - பத்துத் தலைகளும்; குன்றத்து இறுகு திண்புயம் இருபதும் - குன்றுபோல் பருத்து இறுகிய வலிய தோள்கள் இருபதும்; இவற்கு இலை - இங்குப் படுத்திருக்கும் இவனுக்கு இல்லை; எனா - என்று கண்டு (அநுமன்) மறுகி - கலங்கி; எறிய - கொதித்து எழுந்த; முனிவு எனும் - கோபமாகிய; வடவை வெம் கனலை - வடவா முகாக்கினியை; அறிவு எனும் - அறிவாகிய பெரும்; அம்பரவை நீரினால் - பெரிய அழகிய கடல் நீரினாலே; அவித்தான்.

* * *

அவித்து நின்று 'எவன்
　　ஆகிலும் ஆக' என்று அங்கை
கவித்து நீங்கிடச் சில
　　பகல் என்பது கருதாச்
செவிக்குத் தேன் என இராகவன்
　　புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன் அனையவன்
　　உறையுளைக் கடந்தான்.

"இவன் எவன் ஆயினும் ஆகுக. இன்னும் சில காலம் இப்படியே கிடக்கட்டும்" என்று கூறித் தன் உள்ளங்கை கவித்து ஆசி கூறி, அப்பால் சென்றான் வானரத் தலைவனான அநுமன்.

* * *

வீராகவன் புகழினை - இராமபிரானின் புகழை; செவிக்குத் தேன் என - கேட்போர் காதிலே தேன்போலும் இனிமையாக; திருத்தும் - திருத்தமாகத் தெரியப்படுத்தும்; கவிக்கு நாயகன் - வானரத் தலைவனான அநுமன்; அவித்து நின்று - தன் கோபத்தைத் தணித்துக்கொண்டு நின்று; "எவனாகிலும் ஆக' - இங்குக் கிடப்பவன் எவன் ஆகிலும் ஆகட்டும்; என்று - என்று கூறி; சில பகல் நீங்கிட என்பது கருதி - சில காலம் இப்படியே கிடக்கட்டும் என்று எண்ணி; அங்கை கவித்து - தன் உள்ளங்கை கவித்துக் கூறி; அனையவன் - அக்கும்பகன்னனின்; உறையுளை - மாளிகையை; கடந்தான் - தாண்டிச் சென்றான்.

* * *

மாட கூடங்கள் மாளிகை
ஒளிகள் மகளிர்
ஆடு அரங்குகள் அம்பலம்
தேவர் ஆலயங்கள்
பாடல் வேதிகை பட்டி மண்டபம்
முதல் பலவும்
நாடி ஏகினன், இராகவன் புகழ்
எனும் நலத்தான்.

மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் எங்கும் சுற்றினான்; தெருக்களில் திரிந்தான்; மகளிர் ஆடும் அரங்குகள் கண்டு நோக்கினான்; அம்பலங்களில் பார்த்தான்; தேவாலயங்களில் தேடினான்; இசை மேடைகளில் இருப்பாளோ சீதை என்று நோக்கினான்.

* * *

மாட கூடங்கள் - மண்டபங்களின் சிகரங்களும்; மாளிகை ஒளிகள் - மாளிகைகளின் வரிசைகளும்; மகளிர் ஆடு அரங்குகள் - மாதர் ஆடும் நாட்டிய சாலைகளும்;

அம்பலம் - பலர் வந்து கூடும் இடங்களும்; தேவர் ஆலயங்கள் - தேவாலயங்களும்; பாடல் வேதிகை - சங்கீத மேடைகளிலும்; பட்டி மண்டபம் - பட்டி மண்டபங்களிலும்; முதல் - முதலிய; பலவும் - பல இடங்களிலும்; நாடி - சீதையைத் தேடி; ஏகினான் - சென்றான்; இராகவன் புகழ் எனும் நலத்தான் - இராமனது புகழ் ஓர் உருக் கொண்டு வந்ததோ என்று சொல்லத்தக்க சிறப்புடைய அநுமன்.

* * *

மணிகொள் வாயிலில் சாளரத்
தலங்களில் மலரில்
கணிகொள் நாளத்தில் கால் எனப்
புகை எனக் கலக்கும்,
நுணுகும்; வீங்கும்; மற்று அவன்நிலை
யாவரே நுவல் வார்?
அணுவில் மேருவின் ஆழியான்
எனச் செலும் அறிவோன்.

மாளிகை வாயில்களிலும் சாளரங்களிலும் தாவித் தேடினான். மலரிலும், மலரின் தண்டுகளிலும் ஊடுருவிச் சென்று பார்த்தான். காற்றுப் போலவும், புகை போலவும் எங்கும் நுழைந்தான். சில இடங்களில் பேருருவம் கொள்வான். மற்றும் சில இடங்களில் சிறிய உருவம் எடுப்பான். அவன் செய்த சித்து விளையாட்டெல்லாம் எவரே சொல்ல வல்லார்?

* * *

அநுமன்,

மணி கொள் வாயில் - அழகு கொண்ட அந்நகர் மாளிகைகளின் வாயில்கள் உள்ளும்; சாளரத்தலங்களில் - சாளரங்களிலும்; மலரில் - மலர்களிலும்; கணிகொள்

நாளத்தில் - ஊன்றி உணரத்தக்க மலர்த்தண்டுகளின் உள் துளைகளிலும்; கால் என - காற்றுப் போலவும்; புகை என - புகை போலவும்; கலக்கும் - உட்புகுந்து தேடுவான்; நுணுகும் வீங்கும் - அந்த அந்த இடத்திற்கு ஏற்றபடி மிகச் சிறிய உருவும் பெரிய உருவும் கொள்வான்; அவன் நிலை - வேண்டிய வடிவு கொள்ளும் அந்த அநுமனின் சிறப்பை; யாவரே நுவல்வார்? எவர் தான் சொல்ல வல்லார்; அணுவின் - அணுவிலும்; மேருவின் - மிகப் பெரிய மேருவிலும் விளங்கும்; ஆழியான் என - ஆழி ஏந்திய திருமால் போல (உட்புகுந்து) செலும் - செல்வான்.

நுணுகும், வீங்கும் என்பன அஷ்டமா சித்திகளின் பாற்பட்டனவாகும். இவ்வகை சித்திகள் யோகிகளே கைவரப் பெறுவர். அநுமன் மாபெரும் யோகி, ஆதலின் இந்த சித்தி பெற்றான் என்பர். மிகவும் நுண்ணிய வடிவம் கொள்ளுதல் அணிமா என்ற சித்தியாகும். மிகப் பெரிய வடிவம் கொள்ளுதல் மணிமா என்ற சித்தியாகும்.

* * *

பளிக்கு வேதிகைப்
பவழத்தின் கூடத்துப் பசுந்தேன்
துளிக்குங் கற்பகப் பந்தரில்
கரு நிறத்தோர் பால்
வெளுத்து வைகுதல் அரிது என
அவர் உருமேவி
ஒளித்து வாழ்கின்ற தருமம்
அன்னான் தனை யுற்றான்.

பளிங்கினாலாகிய மேடையிலே, பவழ மயமான மண்டபத்துள்ளே, பசுந்தேன் துளிக்கும் மலர்களை உடைய விதானத்தின் கீழே, விபீஷணனைக் கண்டான். வெண்மை நிறம் பொருந்திய தரும தேவதையானது அந்த அரக்கர்

நடுவே தன் இயற்கை நிறத்துடன் வாழ்வது இயலாது என்று கருதி, கருநிறங் கொண்டு வந்தது போல இருந்தானாம் அந்த விபீடணன்.

* * *

பளிக்கு வேதிகை - பளிங்குக் கற்களால் ஆன மேடை மீது; பவழத்தின் கூடத்து - பவழ மயமான மண்டபத்துள்; பசும் தேன் துளிக்கும் - புதிய தேன் துளிர்த்துக் கொண் டிருக்கும்; (மலர்களை உடைய) கற்பகப் பந்தரில் - கற்பக விதானத்தின் கீழ்; கரு நிறத்தோர் பால் - கருநிறங் கொண்ட அரக்கரிடையே; வெளுத்து வைகுதல் அரிது என - வெண்மை நிறத்துடன் வாழ்தல் அரிது என்று எண்ணி; அவர் உரு மேவி - அவ்வரக்கரின் கரிய உருக்கொண்டு; ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னான்தனை - தன்னை மறைத்துக் கொண்டு வாழ்கின்ற தரும தேவதையை ஒத்த விபீஷணனை; உற்றான் - அடைந்தான்.

* * *

உற்று நின்று அவன் உணர்வைத்
தன் உணர்வினால் உணர்ந்தான்
குற்ற மில்லதோர் குணத்தினன்
இவன் எனக் கொண்டான்
செற்ற நீங்கிய மனத்தினன்
ஒருதிசை சென்றான்
பொற்ற மாடங்கள் கோடியோர்
நொடியிடைப் புக்கான்.

விபீடணன் அருகே சென்றான்; நின்றான்; அவன் உணர்வதைத் தன் கூர்மதியினால் உய்த்து உணர்ந்தான் குற்றமில்லாத குணத்தவன் இவன் என்று கண்டான். பகை யில்லாத் நெஞ்சினனாய் பிறிதொருபால் சென்று மலை யொத்த மாளிகைகளிடையே புகுந்தான்.

உற்று நின்று - விபீடணனை நெருங்கி நின்று; அவன் உணர்வை - அவனது மனப்பான்மையை; தன் உணர்வினால் - தன் கூர்மதியினால்; உணர்ந்தான் - அறிந்து கொண்டான்; இவன் - இந்த விபீடணன்; குற்றம் இல்லது ஓர் குணத்தினன் - குற்றமற்றதான நற்குணங்கள் நிரம்பப் பெற்றவன்; எனக் கொண்டான் - என்று எண்ணிக் கொண்டான்; (அதனால்) செற்றம் நீங்கிய மனத்தினன் -பகையில்லாத மனத்தினனாய்; ஒரு திசை சென்றான் -வேறு ஒரு வழியிலே சென்றான்; ஓர் நொடியிடை - ஒரு நொடியில்; பொற்ற மாடங்கள் கோடி புக்கான் - மலைகளைப் போன்ற மாளிகை பலவற்றுள் புகுந்து தேடினான்.

* * *

முந்து அரம்பையர் முதலினர்
முழுமதி முகத்துச்
சிந்துரம் பயில் வாய்ச்சியர்
பலரையும் தெரிந்து
மந்திரம் பல கடந்து தன்
மனத்தின் முன் செல்வான்
இந்திரன் சிறையிருந்த
வாயிலின் கடை எதிர்ந்தான்.

பூரண சந்திரன் போல் விளங்குகின்ற அழகிய முகம் கொண்ட அரம்பையர்கள், தங்கள் உதடுகளுக்குச் சிவப்பு நிறந்தடவி மேலும் அழகுடன் சோபிக்கிறார்கள். இவர்களிடையே சீதாபிராட்டி இருக்கிறாளோ என்று தேடுகிறான் அநுமன். கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னும் பல மாளிகைகளைக் கடந்து செல்கிறான். வேகமாகச் செல்கிறான்.

மனோ வேகத்தை விட அதிவேகமாகச் செல்கிறான். இந்திரனைச் சிறை வைத்திருக்கும் வாயில் முன் வந்து நிற்கிறான்.

* * *

முந்து - முதன்மையான; முழுமதி முகத்து - பூரண சந்திரனையொத்த முகங்களிலே; சிந்துரம் பயில் வாய்ச் சியர் - சிவப்பு நிறம் தீட்டப்பட்ட வாய்களையுடைய; அரம்பையர் பலரையும் தெரிந்து - அரம்பை முதலிய மகளிர் முதலியவரையும் பார்த்து விட்டு; பல மந்திரம் கடந்து - பின்னும் பல வீடுகள் தாண்டி; தன் மனத்தின் முன் செல்வான் - தன் மனோவேகத்தை விட அதிவேகமாகச் செல்லும் அநுமன்; இந்திரன் இருந்த சிறைவாயிலின் கடை முன் - இந்திரசித்தனால் பிடித்து வைக்கப்பட்ட இந்திரன் சிறையிருந்த; சிறைக்கோட்ட வாயில் எதிரே நின்றான்.

* * *

ஏதியேந்திய தடக்கையர்
பிறை எயிறு இலங்க
மூதுரைப் பெருங்கதைகளும்
பிதிர்களும் மொழிவார்
ஓதில் ஆயிரம் ஆயிரம்
முறுவலி அரக்கர்
காது வெஞ்சினக் களியினர்
காவலைக் கடந்தான்.

இந்திரசித்தின் மாளிகைக்குக் கட்டுக் காவல் அதிகம். ஏன்? அங்கே தான் இந்திரன் சிறையிருக்கிறானே. ஆயிரக் கணக்கான அரக்கர்கள் ஆயுதம் ஏந்தியவராய் அம்மாளிகை யைக் காத்து நிற்கின்றார். கள் குடித்து விட்டுப் பழங்கதை பல பேசிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய காவலைத் தாண்டி உள்ளே செல்கிறான் அநுமன்.

* * *

ஓதில் - ஆராயந்து சொல்லப் போனால்; ஏதி ஏந்திய தடக்கையர் - ஆயுதங்கள் ஏந்திய அகன்ற கைகள் கொண்ட வரும்; காது வெஞ்சினக் களியினர் - பகைவரைக் கொல்ல

வல்ல சினமாகிய கள்ளினைக் குடித்தவரும்; பிறை எயிறு இலங்க - பிறையொத்த தங்கள் பற்கள் தெரியும்படி; மூதுரை பெருகதைகளும் - பழைய பாட்டி கதைகளையும்; பிதிர்களையும் - விடுகதைகளையும்; மொழிவார் - தமக்குள் பேசிக் கொண்டு இருப்பவருமான; ஆயிரம் ஆயிரம் உறுவலி அரக்கர் - ஆயிரக்கணக்கினரும், வலிமை மிக்கவருமான அரக்கர் கொண்ட காவலை - காவல் கூடங்களை; கடந்தான் - (அநுமன்) தாண்டி உள்ளே சென்றான்.

* * *

முக்கண் நோக்கினன் முறை
மகன் அறுவகை முகமும்
திக்கு நோக்கிய புயங்களும்
சில கரந்து அனையான்
ஒக்க நோக்கியர் குழாத்திடை
உறங்கு கின்றானைப்
புக்கு நோக்கினன் புகை
புகா வாயினும் புகுவான்.

தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் மகளிர் கூட்டத்திடையே உறங்கும் இந்திரசித்தனைக் கண்டான் அநுமன். குமரக்கடவுள் தனது ஆறுமுகமும் பன்னிரு கைககளும் விளங்காவண்ணம் ஒளித்துக்கொண்டு, ஒரு சிரமும் இரு கரமும் கொண்டு விளங்குவான் போல் தோற்றமளித்தான் இந்திரசித்.

* * *

புகை புகா வாயினும் புகுவான் - புகை நுழைய முடியாத இடங்களிலும் புகுந்து செல்லக் கூடிய அநுமன்; புக்கு - இந்திரசித்தின் பள்ளி அறையினுள்ளே புகுந்து; முக்கண் நோக்கினன் - மூன்று கண்களால் பார்க்கின்ற சிவபெருமானின்; முறை மகன் - மகன் முறை பெற்ற

ஆறுமுகக் கடவுள்; அறுவகை முகமும் - ஆறுமுகங்களையும்; திக்கு நோக்கிய புயங்களும் - திசைதொறும் விளங்கும் பன்னிரு தோள்களையும்; சில கரந்து அனையான் - சிலவற்றை ஒளித்து (ஒரு முகமும் இரு கைகளுமே கொண்டவனாய்) விளங்கியவன்போல்; ஒக்க நோக்கியர் - ஒருவர் போலவே அனைவரும் தன்னையே நோக்கும் மகளிர்; குழாத்திடையே - கூட்டத்தினிடையே; உறங்குவானை - உறங்குகின்றவனை; நோக்கினன் - பார்த்தான்.

* * *

'வளையும் வாள் எயிற்று
அரக்கனோ? கணிச்சியான் மகனோ?
அளையில் வாளரி அனையவன்
யாவனோ? அறியேன்!
இளைய வீரனும் ஏந்தலும்
இருவரும் பலநாள்
உளையும் வெஞ்சமம் இவனுடன்
உளது!' என உணர்ந்தான்.

குகையிலே கிடக்கும் சிங்கம் போன்ற இவன் அரக்கனோ? அன்றி, சிவபெருமானின் மகனாகிய குமரனோ? எவனோ' அறியேன். எவன் ஆயினும் ஆகுக. இராமர் லட்சுமணர் ஆகிய இருவரும் இவனுடனே நீண்ட நாள் செய்யவேண்டிய கொடிய போர் முன்னே யுளது என்று அநுமன் அறிந்து கொண்டான்.

* * *

அளையில் - மலைக்குகையிலே கிடக்கும்; வாள் அரி அனையவன் - கொடிய சிங்கம் போன்றவனான இவன்; வளையும் வாள் எயிற்று அரக்கனோ - வளைந்த ஒளியுள்ள பற்கள் கொண்ட அரக்கனோ? கணிச்சியான் மகனோ? - மழுவேந்திய சிவபெருமானின் மகனாகிய குமரனோ?

யாவனோ? - வேறு எவனோ? அறியேன் - அறிகின்றேன் அல்லன்; (எவனே ஆயினும்) இளைய வீரனும் - இளைய வீரப் பெருமானாகிய லட்சுமணனும்; ஏந்தலும் - இராம பிரானும்; இருவரும் - ஆகிய இருவரும்; பல நாள் உளையும் வெம் சமம் உளது - நீண்ட நாட்கள் இவனுடன் செய்ய வேண்டிய கொடிய போர் உள்து; என உணர்ந்தான் - என்று அநுமன் உணர்ந்து கொண்டான்.

*          *          *

கரிய நாழிகை பாதியில்
        காலனும்
வெருவி யோடும் அரக்கர் தம்
        வெம்பதி
ஒருவனே ஒரு பன்னிரெண்டு
        யோசனைத்
தெருவு மும்மை நூறாயிரம்
        தேடினான்.

நடுநிசி. காலனும் அஞ்சும் அரக்கர் பதியில் அந்த நேரத்திலேயே அநுமன் ஒருவனாகவே மூன்று லட்சம் தெருக்களுள்ள, பன்னிரண்டு யோசனை விஸ்தீரணமுள்ள இலங்கையின் அக நகரிலே—அரசர் வாழும் பகுதியிலே—சீதா பிராட்டியைத் தேடினான்.

*          *          *

காலனும் வெருவியோடும் - யமனும் அஞ்சி ஓடத்தக்க; அரக்கர் வெம்பதி - அரக்கர்களுடைய அந்தக் கொடிய நகரிலே; கரிய நாழிகை பாதியில் - இரவின் நடுநிசியில்; ஒரு பன்னிரண்டு யோசனை - பன்னிரண்டு யோசனை விஸ்தீரண முள்ள; மும்மை நூறு ஆயிரம் தெருவும் - மூன்று லட்சம் தெருக்களிலும்; ஒருவனே - தான் ஒருவனாகவே (அநுமன்)

தேடினான் - சீதாபிராட்டி இருக்கும் இடத்தைத் தேடினான்.

*　　*　　*

வேரியும் அடங்கின;
　　நெடுங்களி விளைக்கும்
பாரியும் அடங்கின;
　　அடங்கியது பாடல்;
காரியம் அடங்கினர்கள்
　　கம்மியர்கள்; மும்மைத்
தூரியம் அடங்கின;
　　தொடங்கியது உறக்கம்!

அந்த நள்ளிரவிலே கள் குடிப்போர்தம் கும்மாளங்கள் அடங்கின; களியாடல்களுக்குரிய வாத்தியங்கள் எல்லாம் ஓய்ந்தன; பாடல்கள் அடங்கின; காரியம் செய்பவர்கள் காரியம் செய்தல் ஒழிந்தனர். மூன்று வகையான முரசும் ஓய்ந்தன. எங்கும் உறக்கம்.

*　　*　　*

வேரியும் அடங்கின - அந்த நடுநிசியிலே கள் குடிப்போர் தம் கும்மாளங்களும் அடங்கின; நெடுங்களி விளைக்கும் பாரியும் அடங்கின - நீண்ட களியாட்டல் விளைக்கின்ற வாத்தியங்களும் முழங்குவது ஒழிந்தன: பாடல் அடங்கியது - பாடல்களும் ஓய்ந்தன. கம்மியர்கள் காரியம் அடங்கினர் - தொழிலாளர் தம் தொழில் அடங்கினர்; மும்மைத் தூரியம் அடங்கின - மூன்று வகைத்தான முரசுகளும் முழங்குவது ஓய்ந்தன; உறக்கம் தொடங்கியது - எல்லாருக்கும் உறக்கம் வந்துவிட்டது.

இறங்கின நிறங்கொள்
பரி, ஏமமுற எங்கும்
கறங்கின மறங் கொள்
எயில் காவலர் துடிக்கண்
பிறங்கின நறுங் குழலர்
அன்பர் பிரியாதோர்
உறங்கினர் பிணங்கி எதிர்
ஊடினர்கள் அல்லார்.

பல நிறங்கொண்ட குதிரைகள் உறங்கின; மதில் காவல் வீரர் தம் முரசங்கள் ஒலிப்பது நின்றது. கணவனுடன ஊடல் கொண்டவரே உறங்காதிருந்தனர். காதலர் அன்பில் பிணைப்புண்டவர் உறங்கினர். அர்த்த ஜாம பறைகள் மட்டும் முழங்கின.

* * *

நிறங்கொள் பரி - பலவித நிறங்கொண்ட குதிரைகள்; இறங்கின - தலை சாய்த்து உறங்கின; மறங்கொள் எயில் காவலர் - வீரமுடைய மதில் காவலர்; துடிக்கண்- (அடிக்கும்) இரவு காவல் பறையின் முழக்கம்; ஏமம் உற - சாமத்துக்கு ஒரு முறை முழங்கின; எதிர் பிணங்கி ஊடினர் கள் - கணவரோடு ஊடல் கொண்டவர்கள்; அல்லார் - அல்லாதவர்களான; அன்பர் பிரியாதோரும் - தங்கள் காதலரைப் பிரியாதோரும்; பிறங்கின நறுங்குழலார் - விளக்கமும் மணமும் கொண்ட கூந்தல் உடைய மகளிரும்; உறங்கினர் - உறக்கம் கொண்டனம்.

* * *

இவ்விதம் சீதா பிராட்டியைத் தேடித் தெருதெருவாகச் சுற்றினான் அநுமன். அழகியதோர் மாளிகை தனித்திருக்கக் கண்டான். அதன் அழகை வியந்தான்.

"இந்த அழகிய மாளிகை தனித்திருக்கக் காரணம் என்ன? சீதையை இங்கே சிறை வைத்திருக்கிறானோ?" என்று ஐயுற்றான். உள்ளே சென்றான்.

மயன் மகளும் இராவணனுடைய முதல் மனைவியு மாகிய மண்டோதரி உறங்குகிறாள். அவளுடைய கால் களைத் தேவ மாதர் வருடிக் கொண்டிருக்கின்றனர். மற்றும் சில தேவ மகளிர் யாழ் மீட்டி மெல்லிசை எழுப்பு கின்றனர். கற்பக மலர் வீசும் நறுமணம் எங்கும் பரிமளிக் கின்றது. மணி விளக்குகளின் ஒளி மயங்கும் வண்ணம் பேரொளி வீசும் உடல் வனப்புடன் உறங்குகின்றாள் மண்டோதரி.

கண்டான் அநுமன் "இவள்தான் சீதை போலும்" என்று கருதினான். பொங்கியது சினம். பெருந்துயர் உற்றான்; வருந்தினான்.

"அன்பாகிய பிணைப்பையும், உயர்குடிப் பிறப்பையும் கைவிட்டுக் கற்பு நெறியினின்றும் வழுவினாளோ சீதை" என்று ஐயுற்றான்.

* * *

'மானுயர்த் திரு வடிவினள் அவள்; இவள்
மாறு கொண்டனள்; கூறில்
தான் இயக்கியோ? தானவர் தையலோ?
ஐயுறும் தகை ஆனாள்!
கான் உயர்த்த தார் இராமன்மேல் நோக்கிய
காதல் காரிகையர்க்கு
மீன் உயர்த்தவன் மருங்குதான் மீளுமோ?
நினைந்தது மிகை' என்றான்.

"இல்லை; இல்லை. அவள் மானிட வடிவங் கொண்ட வள். இவளோ மாறாக இருக்கின்றாள், ஆகவே இவள்

சீதை அல்லள். இவள் யக்ஷ மாதோ அல்லது அசுரப் பெண்ணோ என்று ஐயுறும் வண்ணம் இருக்கின்றாள். இராமன் மீது காதல் கொண்ட ஒருத்தி பால் காமன் திரும்புவானோ? திரும்பான். இவளைச் சீதை என்று நினைத்தது தவறு" என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

* * *

அவள் மானுயர் திருவடிவினள் - சீதையாகிய அவள் மானிடப் பெண்ணின் அழகிய உருவம் கொண்டவள்; இவள் - இவளோ; மாறு கொண்டனள் - அதற்கு மாறாக இருக்கின்றாள்; கூறல் - கூறப்போனால்; தான் இயக்கியோ- இவள் யக்ஷ மாதோ (அல்லது) தானவர் தையலோ-அசுரப் பெண்ணோ (என்று) ஐயுறும் தகை ஆனாள் - சந்தேகம் கொள்ளும்படியான வகையில் இருக்கின்றாள்; காரிகையர்க்கு - பெண்களுக்கு; கான் உயர்த்த - மணம் மிக்க; தார் இராமன் மேல் - மாலையணிந்த இராமபிரானதுமேல்; நோக்கிய காதல் - சென்ற காதல்; மீன் உயர்த்தவன் - மீன் கொடி ஏந்திய மன்மதன்; மருங்குதான் - பக்கம்தான்; திரும்புமோ? - திரும்பாது; நினைந்தது மிகை - இவளைச் சீதை என்று நினைத்தது தவறு என்றான்.

* * *

கண்டனன்; காண்டலோடும்
கருத்தின் முன் காலச் செந்தீ
விண்டன கண்கள் சிந்தி வெடித்தன;
கீழு மேலும்
கொண்டதோர் உருவமாயோன்
குறளினுங் குறுகி நின்றான்
திண்டலை பத்தும் தோள்கள்
இருபதும் தெரிய நோக்கி

முன்பு மகாவிஷ்ணு கொண்ட வாமனாவதாரத்தினும் குறுகிய வடிவத்துடன் நின்ற அநுமன், பத்துத் தலைகளும், இருபது கைகளும் கொண்டு விளங்கிய இராவணனைக் கண்டான். இவன்தான் இராவணன் என்று அறிந்தான். சினம் பொங்கியது. விழிகள் துடித்தன. தீப்பொறி கக்கின.

* * *

மாயோன் - திருமால்; கொண்டது - முன்னே மேற் கொண்ட; ஓர் உருவ - ஓர் உருவமாகிய வாமன வடிவத்தி னும்; குறுகி - குள்ளமாகி; நின்நான் - அங்கு நின்றவனாகிய அநுமான்; திண்தலை பத்தும் - வலிய தலைகள் பத்தும்; தோள்கள் இருபதும்; தெரிய - தன் கண்களுக்குப் புலப்பட; நோக்கி - பார்த்து; கண்டனன் - இவன்தான் இராவணன் என்று அறிந்துகொண்டான்; காண்டலோடும் - அவ்வாறு அறியவே; கருத்தின் முன் - அவனுடைய எண்ணத்திலே; (சீற்றம் பொங்க) கண்கள் கீழும் மேலும் வெடித்தன - கண் களின் மேலும் கீழும் உள்ள இமைகள் துடித்தன. கால செந்தீ விண்டன - ஊழிக் காலத்துச் செந்தீயைக் கக்கின.

* * *

தோளாற்றல் என் ஆகும்?
மேல் நிற்கும் சொல் என் ஆம்?
வாளாற்றற் கண்ணாளை
வஞ்சித்தான் மணிமுடி என்
தாளாற்றலால் இடித்துத்
தலைபத்தும் தகர்த்து உருட்டி
ஆளாற்றல் காட்டேனேல்
அடியேனாய் முடியேனே.

"வாள் போலும் கண்ணுடைய சீதா பிராட்டியை வஞ்சனையால் கவர்ந்து வந்தவன் இவ்இராவணன்; வலிமை மிகுந்த எனது கால்களினாலே இவனை எட்டி

உதைத்து இவன் மணிமுடிகள் சிதறச் செய்து, தலைகள் பத்தும் தரையிலே உருளச் செய்யாவிடில் எனது தோள் வலி என் ஆவது? நான் இராமனின் அடிமை என்பதற்கு என்ன பொருள் இருக்கிறது?'' இவ்வாறு அநுமன் தனக்குள் பேசிக் கொண்டான்.

* * *

(சினம் மிக்க அநுமன் தனக்குள் பின் வருமாறு கூறிக் கொண்டான்).

வாள் ஆற்றல் கண்ணாளை - வாள்போலும் ஆற்றல் அமைந்த கண்களையுடைய சீதா பிராட்டியை; வஞ்சித் தான் - வஞ்சனையால் கவர்ந்து வந்த இந்த இராவணனின்; மணிமுடிகள் - மணிகள் பதித்த கிரீடங்கள் பத்தையும்; என் தாள் ஆற்றலால் இடித்து - என் கால் வலிமையினால் சிதறச் செய்து; தலை பத்தும் - தலைகள் பத்தும்; சிதறி விழச் செய்து; உருட்டி - தரையில் உருட்டி; ஆள் ஆற்றல் காட்டேனேல் - என் ஆண்மைத் திறத்தை இப்பொழுது காட்டேனாகில்; அடியேனாய் முடியேனோ - நான் இராம பிரானுக்கு அடியவன் என்ற பெருமை இல்லாமல் போவேனோ; (அன்றியும்) தோள் ஆற்றல் - என் தோள் வலிமைதான்; என் ஆகும் - எதற்குப் பயன்படும்? மேல் நிற்கும் சொல் என் ஆம்? - எதிர்காலத்தில் நிற்கும் புகழ் சொல் யாது ஆகும்?

* * *

நடித்து வாழ் தகைமையதோ
அடிமை? நன்னுதலைப்
பிடித்த வாள் அரக்கனார்
யான் கண்டும் பிழைப்பரோ?

ஒடித்து வான் தோள் அனைத்தும்
தலை பத்தும் உதைத்து உருட்டி
முடித்து இவ்வூர் முடித்தால் மேல்
முடிந்தவா முடிந்து ஒழிக.

"சீதா பிராட்டியைக் கொண்டு வந்த இந்த அரக்கன் எனது கண்களுக்கு அகப்பட்ட பிறகும் உயிரோடு பிழைப்பானோ? இவனைப் பிடித்து, இவனது வலிய தோள்களை ஒடித்து, எட்டி உதைத்து, இவனது தலைகள் பத்தும் தரையிலே உருளச் செய்து, உருட்டி இவ்வூரையும் அழித்து விடுவேனாகில் மேலே நடப்பது நடக்கட்டும்."

* * *

அடிமை தான் நடித்து வாழ் தகைமையதோ? - அடிமைத் தன்மை என்பது (செயலில் காட்டாமல்) வெளி வேடத்தால் நடித்து வாழும் தகைமையதோ? நன்னுதலை - அழகிய நெற்றியுடைய சீதா பிராட்டியை; பிடித்த - கவர்ந்து கொண்டு வந்த; வாள் அரக்கனார் - கொடிய அரக்கன்; யான் கண்டும் - நான் பார்த்த பிறகும்; பிழைப்பரோ? - உயிரோடு பிழைத்து இருப்பாரோ? வான் தோள் அனைத்தும் - பெரிய தோள்கள் எல்லாவற்றையும்; ஒடித்து - ;உதைத்து; தலை பத்தும் உருட்டி - அவனுடைய தலைகள் பத்தும் தரையிலே உருளச் செய்து; இவ்வூர் முடித்து - இந்த இலங்கா பட்டணத்தையும் நிர்மூலமாக்கி; முடித்தால் - முடிப்பேன் ஆனால்; மேல் முடிந்தவா முடிந்து ஒழி க - மேலே நடக்கிறபடி நடக்கட்டும்.

* * *

என்று ஊக்கி எயிறு கடித்து
இருகரமும் பிசைந்து எழுந்து
நின்று ஊக்கி உணர்ந்து
உரைப்பான் நேமியான் அருள் அன்றால்

ஒன்று ஊக்கி ஒன்று இழைத்தல்
உணர்வுடை யோர்க்கு உரித்தன்றால்
பின் தூக்கில் இவை சாலப்
பிழைக்கும் எனப் பெயர்ந்தான்.

மனத்திலே உறுதி கொண்டான்; பற்களை நறநற என்று கடித்தான்; கரங்கள் இரண்டையும் பிசைந்தான். எழுந்து நின்றான். அதற்குள் மற்றோர் எண்ணம் தோன்றியது. "சரி நாம் கருதியவாறு செய்துமுடித்தோம் ஆயின் ஒன்று செய்ய முயன்று மற்றொன்று விளைந்தால் என் செய்வது? சீ; சீ; அறிவுள்ளவன் செய்கிற செயலா இது? இராமபிரான திருவுளத்துக்கு ஏற்ற செயலா? தவறு; தவறு" என்று எண்ணி அப்பால் போனான்.

* * *

என்று எண்ணி - இவ்வாறு கூறி; ஊக்கி - உள்ளத்திலே ஊக்கம் கொண்டு; எயிறு கடித்து - தன் பற்களை 'நறநற' என்று கடித்து; இரு கரமும் பிசைந்து - தனது கைகள் இரண்டையும் பிசைந்து கொண்டு; எழுந்து நின்று - உயர்ந்து நின்று; (பின்) ஊக்கி - மனதில் ஆராய்ந்து; உணர்ந்து - தெரிந்து; உரைப்பான் - (தன் மனத்துளே பின் வருமாறு சொல்லிக் கொண்டான்) ஒன்று ஊக்கி ஒன்று இழைத்தல் - ஒன்று செய்ய முயன்று மற்றொன்று செய்தல்; உணர்வுடையோர்க்கு - அறிவுடையவர்களுக்கு; உரித்து அன்று - உரிய செயல் ஆகாது; (அன்றியும்) நேமியான் - இராமபிரான்; அருள் அன்று - திருவுளம் ஒப்பும் செயலன்று; பின் - பிறகு; தூக்கில் - சீர் தூக்கின்; இவை - நான் கருதிய இச் செயல்கள்; சால - பெரிதும்; பிழை - தவறானவை; என - என்று எண்ணி; பெயர்ந்தான் - அப்பால் போனான்.

* * *

இற்றைப் போர் பெரும் சீற்றம்
என்னோடு முடிந்திடுக
"கற்றைப் பூங்குழலாளைச்
சிறை வைத்த கண்டகனை
முற்றப் போர் முடித்தது ஒரு
குரங்கு என்றால் முனைவீரன்
கொற்றப் போர்ச் சிலைத் தொழிற்குக்
குறையுண்டாம்" எனக் குறைந்தான்

போரிலே என்னைத் தூண்டிவிடும் இந்தக் கோபம் எனக்குள்ளேயே அடங்கிக் கிடக்கட்டும். சீதையைச் சிறை வைத்த கண்டகனை ஒரு குரங்கு வந்து போரிட்டுக் கொன்றது என்றால் அந்த இராமனின் போர்த் திறமைக்கு மாசு படரும் என்று எண்ணி சினம் அடங்கினான்.

* * *

இற்றைப் போர்ப் பெரும் சீற்றம் - போர் செய்வதாக இப்போது நான் கொண்ட கடுங்கோபம்; என்னோடு முடிந்திடுக - எனக்குள்ளே அழுந்திக் கிடக்கட்டும்; பூங்கற்றைக் குழலாளை - அழகிய அடர்ந்த கூந்தலுடைய சீதாபிராட்டியை; சிறை வைத்த கண்டகனை - சிறையில் வைத்த கொடியவனை; ஒரு குரங்கு - ஒரு குரங்கானது; முற்ற - அவன் முடியும்படி; போர் முடித்தது என்றால் - போரி செய்த அழித்தது என்று சொன்னால்; முனை வீரன் - போர் வீரனாகிய இராமனின்; கொற்றப் போர் சிலைக்கு - வெற்றி தரும் போர்த் தொழிலுக்கு; குறை உண்டாம் - குறைவு ஏற்படும்; என - என்று எண்ணி; குறைந்தான் - சினம் அடங்கினான்.

"இனி, இங்கே நிற்பதால் யாதொரு பயனுமில்லை" என்று கூறி அந்த இராவணனின் அரண்மனை நீங்கி அப்பால் சென்றான் அநுமன்.

"எல்லா இடமும் தேடிவிட்டேன். பிராட்டியைக் காணோமே" என்று விம்மி வருந்துகிறான்.

* * *

கொன்றானோ? கற்பு அழியாக்
குலமகளைக் கொடும் தொழிலால்
தின்றானோ? எப்புறத்தே
செறித்தானோ? சிறை சிறியேன்
ஒன்றானும் உணாகிலேன்; மீண்டு
இனிப் போய் என் உரைக்கேன்?
பொன்றாத பொழுது, எனக்கு இக்
கொடும் துயரம் போகாதால்.

எங்கு தேடியும் காணவில்லை பிராட்டியை. மனம் உடைந்தான் அநுமன்.

"எங்கும் காணவில்லையே! கொன்று விட்டானோ? எங்கேனும் சிறை வைத்திருக்கிறானோ? ஒன்றும் தெரியவில்லையே! என்ன செய்வேன்? எப்படித் திரும்புவேன்? போய் இராகவனுக்கு என்ன பதில் சொல்வேன்? இத் துன்பத்துக்கு என்ன செய்வேன்? என் உயிரைவிட்டால் அன்றி இத் துன்பம் நீங்காது போலிருக்கிறதே?"

* * *

கற்பு அழியாக் குலமகளை - கற்பு அழியாத உயர் குலத்துப் பிறந்த சீதையை; கொன்றானோ - இராவணன் கொன்று விட்டானோ; கொடுந்தொழிலால் - நரமாமிசம் தின்னும் கொடிய செயலால்; தின்றானோ - தின்று விட்டானோ; எப்புறத்தே சிறை செறித்தானோ - எந்த இடத்திலே சிறை வைத்தானோ; சிறியேன் - சிறியேனாகிய நான்; ஒன்றானும் உணர்கிலேன் - ஒன்றும் அறிய முடியாதவனாயிருக்கிறேன்; இனி மீண்டு போய் - இனித் திரும்பிப் போய்; என் உரைக்கேன் - (இராமனிடம்) என்ன சொல்

வேன்; பொன்றாத பொழுது - நான் உயிர் விட்டாலன்றி; எனக்கு இக் கொடும் துயரம் போகாது - எனக்கு இக் கொடிய துயரம் போகாது.

* * *

கண்டு வரும் என்று இருக்கும்
காகுத்தன்; கவிகுலக்கோன்
கொண்டு வரும் என்று இருக்கும்
யான் இழைத்தகோள் இதுவால்
புண்டரிக நயனத்தன் பால்
இனியான் போவேனோ?
விண்டவரோடு உடன் வீயாது
யான் வாளா விளிவேனோ?

சீதையைக் கண்டு வருவேன் என்று ஆவலோடு இருப்பானே காகுத்தன்? நல்ல சேதி கொண்டு வருவேன் என்று காத்திருப்பானே சுக்கிரீவன்? செந்தாமரைக் கண்ணனாகிய அந்த இராமன்பால் நான் திரும்பிச் செல்வேனோ? வானர வீரர் உயிர் துறக்க முயன்றபோது நானும் அவருடன் உயிர் விடாமல் போனேனே. இனி வீணில் மாள்வேனோ? என்று கலங்குகிறான் அநுமன்.

* * *

காகுத்தன் - இராமன்; கண்டு வரும் என்று இருக்கும் - நான் சீதையைக் கண்டு வருவேன் என்று கருதி இருப்பான்; கவிகுலக்கோன் - குரங்கினத்தின் அரசனாகிய சுக்கிரீவன்; கொண்டு வரும் என்று இருக்கும் - சீதை பற்றிய நல்ல சேதி கொண்டு வருவேன் என்று இருப்பான்; யான் இழைத்த கோள் இதுவால் - நான் செய்த செயலோ இவ்வாறு இருக்கிறது; புண்டரீக நயனத்தன் பால் - செந்தாமரை மலர் போலும் கண் உடைய இராமன் பால்; இனி யான் போவேனோ - இனி நான் செல்வேனோ; விண்டவர் உடன்

வீயாது - வானர வீரர் உயிர் துறக்க முயன்றபோது நானும் அவருடன் உயிர் விடாமல்; யான் வாளா விளிவேனோ - இங்ஙனம் வந்து நான் வீணில் மாள்வேனோ?

* * *

வல் அரக்கன் தனைப் பற்றி
வாய் ஆறு குருதி உகக்
கல் அரக்கும் கரதலத்தால்
"காட்டு'' என்று காண்கேனோ?
எல் அரக்கும் அயில் நுதிவேல்
இராவணனும் இவ் ஊரும்
மெல் அரக்கின் உருகி விழ
வெம் தழலால் வேய்கேனோ?

வலிய அந்த அரக்கனைப் பிடித்து, மலையையும் பொடியாக்கும் எனது கைகளால் ஒரு குத்துவிட்டு வாயிலிருந்து ரத்தம் கக்கச் செய்து ''சீதை எங்கே காட்டு'' என்று கேட்டு அங்கே சென்று காணலாமா? இந்த இராவணனும் இவனது இலங்கை நகரும் அரக்குப் போல உருகி ஒடும்படி தீயிட்டுப் பொசுக்கலாமா?''

இவ்விதம் பலவாறு எண்ணிய வண்ணம் சுற்றித் திரிகிறான் அநுமன். சீதை இருந்த அசோக வனம் நண்ணினான்.

* * *

வல் அரக்கன் தனைப் பற்றி - கொடிய அரக்கனாகிய இராவணனைப் பிடித்து; வாய் குருதி உக - அவனது வாயிலிருந்து இரத்தம் கக்கும்படியாக; கல் அரக்கும் கரதலத்தால் - கல்லையும் அழிக்கவல்ல என் கைகளால்; (குத்தி) காட்டு என்று - சீதை எங்கே காட்டு என்று; காண்கேனோ - (அவன் காட்டக்) காணக் கடவேனோ (அன்றி); எல் அரக்கும் - சூரிய ஒளியையும் அழிக்கின்ற; அயில் நுதி வேல்-

கூரிய நுனியுள்ள வேலாயுதத்தை உடைய இராவணனும்; இவ் ஊரும் - இந்த ஊரும்; மெல் அரக்கின் - மெல்லிய அரக்கினால் செய்யப் பட்டவைப் போல; உருகி விழ - உருகித் தரையில் விழ; வெம் தழலால் வேய்கேனோ - வெப்ப மிக்க தீயால் பொசுக்க மாட்டேனோ?

*　　　*　　　*

வன் மருங்கில் வாள் அரக்கியர்
　　நெருக்க அங்கிருந்தாள்
கன் மருங்கு எழுந்து என்றும்
　　ஓர் துளி வரக் காணா
நன் மருந்து போல் நலன் அற
　　உணங்கிய நங்கை
மென் மருங்குல் போல்
　　வேறுள அங்கமும் மெலிந்தாள்.

அந்த அசோக வனத்திலே அரக்கியர் நடுவே சீதையைக் கண்டான் அநுமன். கற்பாறையிலே தோன்றி என்றுமே நீர்த்துளி காணாத சஞ்சீவினி மருந்துபோல விளங்கினாள் சீதை. பொலிவு இழந்து வாடி, மெலிந்து காணப்பட்டாள் அவள்.

*　　　*　　　*

கன் மருங்கு எழுந்து - (வலிய) கல்லிடத்து முளைத்து வளர்ந்து; என்னும் ஓர் துளி வர காணா - எப்பொழுதும் ஒரு துளி நீர் கூடத் தன்மேல் விழுந்து அறியாத; நல் மருந்து போல் - சிறந்த சஞ்சீவி மருந்து போல; நலன் உற உணங்கிய அழகு இன்றி வாடிய; நங்கை - சீதை; மெல் மருங்குப் போல் - அவளுடைய மெல்லிய இடை போல்; வேறு உள் அங்கமும் - வேறாக உள்ள அவயவங்களும்; மெலிந்தாள் - மிகவும் இளைத்துப் போனவளாய்; மருங்கில் - பக்கங்களில்; வல் - வலிய; வாள் - வாள் ஏந்திய அரக்கியர் நெருக்க -

காவலராகிய அரக்கப் பெண் பயமுறுத்த; அங்கு இருந்தாள் - அந்த அசோக வனத்தில் சிறையிருந்தாள்.

* * *

துயில் எனக் கண் இமைத்தலும்,
முகிழ்த்தலும் துறந்தாள்,
வெயிலிடைத் தந்த விளக் கென
ஒளியிலா மெய்யாள்
மயில் இயல் குயில் மழலையாள்
மானினம் பேடை
அயில் எயிற்று ஏவல் புலிக்
குழாத்து அகப்பட்டது அன்னாள்.

மயிலின் சாயலும் குயிலின் இனிய குரலும் கொண்ட அந்தச் சீதை உறக்கம் ஒழித்தாள்; கண் மூடினாள் அல்லள்; கடும் புலிகளின் கூட்டத்திலே சிக்கியதொரு பெண் மான் குட்டி போல் விளங்கினாள்.

* * *

துயில் என - தூக்கம் என்று சொல்லும்; கண் இமைத்தலும் முகிழ்த்தலும் - கண்களை இமைப்பதும் மூடுவதும்; துறந்தாள் - துறந்தவளாய்; வெயில் இடைத் தந்த விளக்கு என - வெயிலின் இடையே ஏற்றிய விளக்கு போல; ஒளி இலா மெய்யாள் - ஒளியிழந்த மேனிகளாய்; மயில் இயல் - மயில் போலும் சாயலும்; குயில் மழலையாள் குயில் போலும் இனிய சொல்லினாள்; இளம் மான் பேடை - இளம் பெண் மான்; அயில் எயிற்று வெம்புலி குழாத்து - கூரிய பற்களை உடைய கொடிய புலிக் கூட்டத்தின் இடையே; அகப்பட்டது அன்னாள் - சிக்கியது போல வருந்தினாள்.

* * *

அரிய மஞ்சினோடு அஞ்சனம்
இவை முதல் அதிகம்
கரிய காண்டலும் கண்ணில் நீர்
கடல் புகக் கலுழ்வாள்;
உரிய காதல் ஒருவரோடு
ஒருவரை உலகில்
பிரிவு எனும் துயிர் உருவு
கொண்டாலன்ன பிணியாள்.

அந்தச் சீதை காண்பதற்கு அரிய கருமேகங்களைக்கண்ட போதும், நல்ல கருமையான மை முதலியவற்றைக் கண்ட போதும் இராமனை நினைத்துக் கண்ணீர் சொரிவாள். காரணம் பிரிவு ஆற்றாமை.

*　　*　　*

அரிய மஞ்சினோடு - அருமையான மேகத்தோடு; அஞ்சனம் முதல் - மை முதலான; இவை அதிகம் கரிய காண்டலோடும் - இவை போன்ற மிகக் கரு நிறமுடைய பொருள்களைப் பார்க்குமிடத்தும்; கண்ணில்நீர் கடல் புகக் கலுழ்வாள் - (இராமபிரான் திருமேனியை நினைத்து) கண்ணீர் ஆறாகப் பெருகிக் கடலில் போய்ச் சேர வருந்தி அழுவாள்; உலகின் - இவ்வுலகத்தில்; உரிய காதலர் ஒருவரோடு ஒருவர் - உரிமையாகக் கொண்ட காதலர் ஒருவர்பால் மற்றொருவர்; பிரிவு எனும் துயர் - பிரிதல் எனும் துன்பமே; உருவு கொண்டால் அன்ன - ஒரு வடிவம் கொண்டுள்ளது போன்ற; பிணியாள் - நோயுடையவளாய் இருந்தாள்.

*　　*　　*

துப்பினால் செய்த கையொடு
கால் பெற்ற துளி மஞ்சு
ஒப்பினான் தனை நினை தொறும்
நெடும் கண்கள் உகுத்த

அப்பினால் நனைந்து அரும்துயர்
உயிர்ப்புடை யாக்கை
வெப்பினால் புலர்ந்து ஒரு
நிலையுறாத மென்துகிலாள்.

நீருண்ட மேகம் போன்ற அக் காரி நிற வண்ணன் இராமனை நினைக்கிறாள் சீதை. அப்படி நினைக்கும் போதெல்லாம் கண்கள் நீர் சொரிகின்றன. அதனால் அவளது ஆடை நனைந்து விடுகிறது. துயரத்தால் பெரு மூச்சு விடுகிறாள். அந்த உடல் சூட்டினால் ஈரமான புடவை காய்ந்துவிடுகிறது.

* * *

துப்பினால் செய்த - பவழத்தால் செய்யப்பெற்ற; கையொடு கால் பெற்ற - கைகளோடு கால்களையும் பெற்ற; துளி மஞ்சு - நீர் தெளிக்கும் கருமேகம்; ஒப்பினான் தனை - ஒத்த இராமனை; நினைதொறும் - எண்ணும் பொழுதெல்லாம்; நெடும் கண்கள் - நீண்ட கண்கள்; உகுத்த - சொரிந்த; அப்பினால் - நீரால்; நனைந்து - ஈரமாகி; அரும் துயர் - பெரும் துன்பத்தால் உண்டாகும்; உயிர்ப்பு உடை யாக்கை - பெருமூச்சு விடும் உடலினது; வெப்பினால் - வெப்பத்தினால்; புலர்ந்து - உலர்ந்து; ஒரு நிலை உறாத - எப்பொழுதும் ஒரு நிலை அடையாத; மென் துகிலாள் - மெல்லிய ஆடையுடையவளாக இருந்தாள்.

* * *

அரிது போகவோ விதிவலி
கடத்தல் என்று அஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும்
பழியையும் பாராச்

சுருதி நாயகன் வரும் வரும்
என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும்
அளிக்கின்ற கண்ணாள்.

சூரிய வமிசத்திலே தோன்றியவன் இராமன். இப்பொழுது அவனுக்கு ஒரு பழி ஏற்பட்டுள்ளது. என்ன பழி? தன் மனைவியை மற்றொருவன் கவர்ந்து சென்றான் என்ற பழி. அப்பழி போக்கிக் கொள்ள வேண்டுவதே சுத்த வீரனாகிய இராமனுக்கு அழகு. ஆகவே அதற்காகவேனும் இராமன் வருவான்; தன்னை மீட்டுச் செல்வான் என்ற நம்பிக்கை சீதைக்கு. அந்த நம்பிக்கையினாலே, "அவன் வருகிறானோ" என்று எல்லாத் திசைகளையும் துருவிப் பார்க்கின்றன அவளது கண்கள்.

* * *

விதி வலி கடத்தல் - விதியின் வலிமையைக் கடந்து செல்வது; போகவோ அரிது என்று - போக முடியாத அரிய காரியம் என்று; அஞ்சி - பயந்து; சுருதி நாயகன் - வேதங்களுக்குத் தலைவனான இராமன்; பரிதி வானவன் - (தான் அவதரித்த) சூரியனுடைய குலத்தையும்; வமிசப் புகழையும்; பழியையும் - இப்பொழுது தன்னால் ஏற்பட்டுள்ளதொரு பழியையும்; பாரா - பார்த்து; வரும் வரும் என்பதோர் துணிவால் - அப் பழியை நீக்கிக்கொள்ள வாகிலும் விரைவிலே வருவான் என்பதோர் தைரியத்தினாலே; கருதி - அவனது வருகையை எண்ணி; மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள் - திசைகள் எல்லா வற்றையும் துழாவிப் பார்க்கும் கண்களை உடையவள் ஆனாள்.

* * *

கமையினாள் திருமுகத்து அயல்
கதுப்புறக் கதுவிச்
சுமையுடைக் கற்றை
நிலத்திடைக் கிடந்த தூமதியை
அமைய வாயில் பெய்து உமிழ்கின்ற
அயில் எயிற்று அரவில்
குமையுறத் திரண்டு ஒரு
சடையாகிய குழலாள்.

கூந்தலுக்கு எண்ணெய் தடவிச் சீவி முடிந்தாள் அல்லள். ஆகையினாலே அவளுடைய கரிய கூந்தல் சடையாகிக் கன்னம் வழியாகத் தரையில் புரண்டு கொண்டிருக்கிறது. அது எப்படியிருக்கிறது? அவளுடைய முகமாகிய சந்திரனை கூந்தலாகிய இராகு எனும் பாம்பு விழுங்கி உமிழ்வது போல் இருக்கிறது!

சீதையின் முகம் சந்திரனுக்கு உவமை; கூந்தலின் தலைப்பகுதி, இராகுவாகிய பாம்பின் தலைக்கு உவமை; சடைப் பகுதி, பாம்பின் உடலுக்கு உவமை.

*       *       *

கமையினாள் - பொறுமையுடைய சீதையின்; திரு முகத்து - அழகிய முகத்திற்கு; அயல் - பக்கங்களில் உள்ள; கதுப்பு உற - கன்னங்களில் பொருந்த; கதுவி - பற்றிக் கொண்டு; சுமை உடை - பாரம் உடைய; கற்றை - கூந்தல்; நிலத்து இடை - பூமியினிடையே; கிடந்த தூமதியை - களங்கமற்ற தூய சந்திரனை; அமைய - பொருந்த; வாயில் பெய்து உமிழ்கின்ற - வாயில் இட்டு மீண்டும் வெளியே உமிழ்கின்ற; அயில் எயிற்று அரவில் - கூரிய பற்கள் கொண்ட ராகு என்னும் கிரகமாகிய பாம்பு போல; குமை உற திரண்டு -

குவிந்து சேர்ந்து; ஒரு சடை ஆகிய - ஒரு சடையாகத் திரிந்துள்ள; குழலாள் - கூந்தலையுடையவள்;

* * *

ஆவி அம் துகில் புனைவது ஒன்று
அன்றிவேறு அறியாள்
தூவி அன்ன மென் புனலிடைத்
தோய்கிலா மெய்யாள்
தேவு தெளி கடல் அமிழ்து
கொண்டு அனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே
ஒக்கின்ற உருவாள்.

அந்தச் சீதை தான் உடுத்திய ஆடை தவிர மாற்று ஆடை உடுத்தினாள் அல்லள்; ஸ்நானம் செய்தாள் அல்லள்.

பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்தை எடுத்து ஒரு பதுமையாகச் செய்கிறான் மன்மதன். அந்தப் பதுமை தூசி படிந்து மங்கி ஒளியிழந்து தோன்றினால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தாள்.

* * *

ஆவி அம் துகில் - உடலுக்கு உயிர் போல் சிறந்த ஆடை; புனைவது ஒன்று அன்றி - உடுத்தியது ஒன்றேயல்லாமல்; வேறு அறியாள் - வேறு ஒரு மாற்று ஆடை உடுத்து அறியாதவள்; தூவி அன்ன - காக்கை இறகு போன்ற; மென் புனலிடை - மெல்லிய நீரில்; தோய்கிலா மெய்யாள் - குளிக்காத உடல் உடையவள்; தேவு தெள் கடல் - தெய்வத் தன்மை பொருந்திய திருப்பாற் கடலில் தோன்றிய; அமிழ்து கொண்டு - தேவ அமிர்தத்தைக் கொண்டு; அனங்கவேள் செய்த - மன்மதன் செய்து அமைத்த; ஓவியம் - சித்திரம்; புகை உண்டதே ஒக்கின்ற - புகை படிந்து மங்கிப்

போனது போன்ற; உருவாள் - உருவத்தை உடையவளாக இருந்தாள்.

* * *

வீடினது அன்று அறன்;
யானும் வீக லேன்;
தேடி னென்; கண்டனன்
தேவியே எனா
ஆடினன்; பாடினன்;
ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
ஓடினன்; உலாவினன்;
உவகைத் தேன் உண்டான்.

சீதா தேவியைக் கண்ட அநுமன் 'இவள் தேவியே' என்று தெளிந்தான்; மகிழ்ந்தான். அம் மகிழ்ச்சியில் மதுவருந்தியவன் போல் ஆனான். ஆடினான்; பாடினான்;. அங்குமிங்கும் ஓடினான்; தாவினான். தருமம் அழியவில்லை நானும் சாகமாட்டேன் என்று கூவினான்.

* * *

அறம் வீடினது அன்று - தருமம் அழியவில்லை; யானும் வீகலேன் - நானும் இனி இறக்கமாட்டேன்; தேடினேன்; கண்டனன் - இது வரை தேடி வந்த நான் இப்பொழுது கண்டு கொண்டேன்; தேவியே எனா - "இவள் சீதா தேவியே ஆவள்" என்று; உவகைத் தேன் உண்டான் - மகிழ்ச்சி மது வருந்திய அநுமன்; ஆடினன் - அந்த மகிழ்ச்சியின் பொங்குதலால் கூத்தாடினன்; பாடினன் - பலவாறு புகழ்ந்து பாடினான்; ஆண்டும் ஈண்டும் - அங்கும் இங்கும்; பாய்ந்து ஓடினன் - தாவி ஓடினான்.

* * *

அழுக்குப் படிந்த இரத்தினம் போன்றவளும், சூரிய வெளிச்சத்தில் ஒளி மங்கிய சந்திரன் போன்றவளும், அழுக்கு மூடிய கூந்தலையுடையவளுமாகிய சீதா பிராட்டியை நோக்கினான் அநுமன். அவளது கற்பு நிலை கண்டான். வியந்தான். இவ்வாறு வியந்து பாராட்டி ஆங்கு ஓர் மரப் பொந்திலே ஒளிந்து நின்றான் அநுமன். அதுபோது அரக்கனாகிய இராவணன் வருகிறான்.

* * *

சிகர வண்குடுமி நெடுவரை எவையும்
ஒரு விழித்திரண்டன சிவண
மகரிகை வயிரக் குண்டலம் அலம்பு
திண்டிறல் தோள் புடை வயங்கச்
சகர நீர் வேலை தழுவிய கதிரின்
தலை தொறும் தலைதொறும் தயங்கும்
வகைய பண் மகுடம் இளவெயில் எறிப்பக்
கங்குலும் பகல் பட வந்தான்.

இருபது தோள்கள் கொண்டவன் இராவணன். அந்த இருபது தோள்களும் எத்தகைய காட்சி வழங்குகின்றன? நீண்ட மலைச் சிகரங்கள் எல்லாம் ஓரிடத்திலே சேர்ந்து வந்தன போன்ற காட்சி. அந்த இருபது தோள்களிலும் மகர மீன் வடிவாயுள்ள தோள் வளையல்கள்! வயிரம் பதித்த மகர குண்டலங்கள்! தலை ஒவ்வொன்றிலும் மகுடங்கள்! இள வெயில் போல ஒளி வீசுகின்றன. இப்படி அந்த அசோக வனத்துக்கு வந்தான் இராவணன்.

* * *

சிகர வண்குடுமி - சிகரங்களாகிய வளமுள்ள முடிகளை உடைய; நெடுவரை எவையும் - நீண்ட மலைகள் எல்லாம்; ஒரு வழி திரண்டன சிவண - ஓரிடத்திலே சேர்ந்து வந்தன போல; மகரிகை - மகர வடிவாய் உள்ள தோள் வளையல்

களும்; வயிர குண்டலம் - வயிரம் பதித்த மகர குண்டலங் களும்; அலம்பு - அசைந்தாடப் பெற்ற; திண் திரள் தோள் புடை வயங்க - மிக்க வலிமையுடைய தோள் இருபதும் இரு பக்கங்களில் விளங்க; சகர நீர் வேலை - சகரர்களால் தோண்டப்பட்ட நீர் மிகுதியுள்ள கடலை; தழுவிய கதிரின்- தழுவி எழும் சூரியனைப் போல; தலைதொறும் தலை தொறும் தயங்கும் - ஒவ்வொரு தலையிலும் விளங்கும்; வகைய - தன்மையுடைய; பல் மகுடம் - பத்தான பல மகுடங்கள்; இளவெயில் எறிப்ப - இள வெயிலைப் போல் ஒளி வீசவும்; கங்குலும் பகல் பட - அந்த இரவு நேரமானது பகலே போலும் விளங்கவும்; வந்தான் - சீதா பிராட்டி யிருந்த அந்த அசோகவனத்துக்கு வந்தான் இராவணன்.

*　　　*　　　*

உருப்பசி உடைவாள் ஏந்தினள் தொடர
மேனகை வெள்ளடையுதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
அரம்பையர் குழாம் புடை சுற்றக்
கருப்புறச் சாந்துங் கலவையும் மலரும்
கலந்து உமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்பு ஏர் மாதிரக்களிற்றின்
வரிக்கை வாய் மூக்கிடை மடுப்ப

தேவ மங்கையாகிய ஊர்வசி அந்த இராவணனுடைய உடைவாளை ஏந்தித் தொடர்ந்து வந்தாள். மேனகை எனும் மற்றொரு தெய்வ மாது அவன் அருகே நின்று வெற்றிலை மடித்துக் கொடுத்து வந்தாள். திலோத்தமை என்பவள் அவனுடைய செருப்பைத் தூக்கிக் கொண்டு பின்னே சென்றாள். வேறுள அரம்பையர் யாவரும் அவனைச் சூழந்து சென்றனர். பச்சைக் கற்பூரம் முதலிய வாசனா திரவியங்கள் கலந்த சந்தனமும், பரிமள கந்தம் வீசும் மலர்களும், வாசனை வீசித் திசைக் களிறுகளின் மூக்கைத் துளைத்தன,

உருப்பசி - ஊர்வசி என்கிற தெய்வப் பெண்; உடைவாள் ஏந்தினள் - உடை வாளைக் கையிலே ஏந்தியவராய்; தொடர - தன்னைப் பின் தொடர்ந்து வரவும்; மேனகை - மேனகை என்ற தெய்வ மாது; வெள்ளடை உதவ - அருகில் நின்று வெற்றிலை மடித்துக் கொடுக்கவும்; செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல - திலோத்தமை என்ற தேவ மகள் இராவணனுடைய செருப்புக் களை ஏந்தியவளாய் உடன் செல்லவும்; அரம்பையர் குழாம் புடை சுற்ற - அரம்பையர் கூட்டம் நாலா பக்கமும் சுற்றி வர; கருப்புர சாந்தும் கலவையும் - தான் அணிந் துள்ள பச்சைக் கற்பூரம் சேர்ந்த சந்தனக் குழம்பும், கலவையும்; மலரும் - மலர்களும்; கலந்து - ஒன்று சேர்ந்து; உமிழ் - வெளியே வீசும்; பரிமளகந்தம் - நறுமணமானது; மருப்பு உடை பொருப்பு ஏர் - தந்தங் களையுடைய மலைகள் போன்ற மாதிரக் களிற்றின் - பெரிய யானையின்; வரி கை வாய் மூக்கிடை மடுப்ப - கோடுகள் அமைந்த துதிக்கை வாய் மூக்கிலே தங்க.

* * *

நீனிறக்குன்றின் நெடிது உடன் தாழ்ந்த
நீத்த வெள் அருவியின் நிமிர்ந்த
பானிறப் பட்டு மாலை உத்தரியம் பசப்புறப்
பசும் பொன் ஆரத்தின்
மாணிற மணிகளிடைப் படர்ந்து வருகதிர்
இளவெயில் பொருவச்
சூனிறக் கொண்மூச் சுழித்து இடைகிழிக்கும்
மின் என மார்பில் நூல் துளங்க.

உத்தரீயம் எனும் அங்கவஸ்திரம் அணிந்து வந்தான் அவன். அது எப்படியிருந்தது? நீல நிற மலையிலிருந்து

விழும் நீர் அருவி போல் இருந்தது. மார்பிலே விளங்கிய பூணூல் எப்படி இருந்தது? கருக் கொண்ட நீல மேகத்தைக் கிழித்துக்கொண்டு ஒளி வீசும் மின்னலைப் போல் இருந்தது.

* * *

நீல நிறக் குன்றின் - நீல நிறத்தை உடைய குன்றில்; நெடிது உடன் தாழ்ந்த - நீண்டு நெருங்கித் தாழ்ந்து விழும்; நீத்த வெள் அருவியின் - நீராகிய வெண்மை நிறம் பொருந்திய அருவி போல; நிமிர்ந்து - நீண்டு விளங்கிய; பால் நிறப் பட்டு மாலை உத்தரியம் - பால் போலும் வெண்மையான பட்டு மாலை போல் விளங்கும் மேலாடை; பசப்பு உற - நிற வேறுபாடு கொண்டு விளங்க; பசும் பொன் ஆரத்தின் - பசுமையான பொன்னால் செய்யப்பட்ட ஆரத்தில் விளங்கும்; மால் நிற மணிகள் - சிறந்த ஒளியோடு கூடிய இரத்தினங்கள்; இடையுற படர்ந்து - இடையிடையே படர்ந்து விளங்கி; வருகதிர் இளவெயில் பொருவ - உதய சூரியனின் இளம் வெயில் போல; சூல் நிற கொண்மூச் சுழித்து - கருக் கொண்ட நீல மேகத்தைக் கிழித்துக் கொண்டு; இடை கிழிக்கும் - அதனிடையே கிழித்து விளங்கும்; மின் என - மின்னலைப் போல; மார்பின் நூல் துளங்க - மார்பில் அணிந்துள்ள பூணூல் அசைய.

* * *

தோள் தொறும் தொடர்ந்த மகரவாய்
வயிரக்
கிம்புரி வலயமாச் சுடர்கள் நாள் தொறும்
சுடரும் கலி கெழு விசும்பின்
நாளொடு கோளினை நக்கத்தாள் தொறும்

தொடர்ந்து தழங்கு பொற் கழலின்
தகையொளி நெடுநிலம் தடவகேடொறும்
தொடர்ந்த முறுவல் வெண்ணிலவின்
முகமலர் இரவினும் கிளர

தோள் ஒவ்வொன்றிலும் வயிர மணிகள் பதிக்கப்பெற்ற கிம்புரி எனும் தோள் வளையல் அணிந்திருந்தான். அந்த வளையல் வீசும் ஒளி எப்படியிருந்தது? வானிலுள்ள மீன் களையும், கோள்களையும் நாவினால் நக்குவது போல் இருந்தது. காலிலே பூட்டியிருந்த வீரக் கழலின் ஒலியானது நிலத்தைத் தடவி வந்தது. தன்னைத் தொடர்ந்து வந்த சுற்றத்தினரையெல்லாம் பார்த்துப் புன்னகை பூத்தான். அந்த நிலவொளியிலே அவனது முகங்களாகிய தாமரை மலர்கள் அந்த இரவிலும் ஒளி வீசின.

* * *

தோள் தொறும் - ஒவ்வொரு தோளிலும்; தொடர்ந்த - பூணப்பெற்றுள்ள; மகர வாய் - மகர மீனின் வாய் வடிவாய் அமைந்துள்ள; வயிர கிம்புரிவலய மாசுடர்கள் - வயிர மணிகள் பதிக்கப் பெற்ற கிம்புரி எனும் தோள் வளையல்களின் பெரும் சுடர்கள்; நாள்தோறும் - ஒவ்வொரு நாளும்; சுடரும் - ஒளி வீசுகின்ற; கலிகெழு விசும்பின் - மிகத் தழைந்த ஆகாயத்தில் உள்ள; நாளொரு கோளினை நக்க - நட்சத்திரங்களோடு கிரகங் களையும் தம் நாவினால் நக்குவன போல விளங்க; தாள் தொறும் தொடர்ந்து - இரண்டு கால்களிலும் பூட்டப் பெற்று; தழங்கு பொற் கழலின் - ஒலிக்கின்றதும் பொன் னால் செய்யப்பட்டதுமான வீரக்கழலின்; தகைஒளி - சிறந்த ஒளியானது; நெடு நிலம் தடவ - நீண்ட நிலத்தைத் தடவி வர; கேள் தொறும் தொடர்ந்த - தன்னுடன் வரும் சுற்றத் தார் ஒவ்வொருவரிடமும் தொடர்ந்து செல்கின்ற; முறுவல்

வெள் நிலவின் - புன்சிரிப்பாகிய வெள்ளிய நிலவினால்; முக மலர் - அவனது முகங்களாகிய தாமரை மலர்கள்; இரவினும் கிளர - அந்த இரவுப் போதிலும் ஒளி வீச.

* * *

அன்னபூம் சவுக்கம் சாமரை உக்கம்
ஆதியாய் வரிசையின் அமைந்த
உன்னரும் பொன்னின் மணியினில் புனைந்த
உழைக்குலம் மழைக்குலம் அனைய
மின்னிடைச் செவ்வாய்க் குவிமுலைப்
பணைத்தோள் வீங்குதேர் அல்குலார்
தாங்கி
நன்னிறக் காரின் வரவுகண்டு உவக்கும்
நாடக மயில் என நடப்ப

மலர்களால் ஆன சதுர விதானம், வெண் சாமரம், ஆல வட்டம் ஆகிய அரசர்க்குரிய வரிசைகளை எல்லா அரக்கியர் ஏந்தி வந்தனர். கார்மேகம் கண்டு மகிழும் மயில் போல அந்த இராவணனைக் கண்டு மகிழ்ந்து அவன் அருகே ஆடி நடந்து அசைந்து வந்தனராம். அப்படி வந்த பெண்கள் எப்படியிருந்தார்கள்? சிவந்த வாயும், குவிந்த முலையும், நுண் இடையும் கருமேக நிறமும் கொண்டு விளங்கினார் களாம்.

* * *

அன்ன - அத் தன்மையதாக; மழைக் குலம் அனைய - மேகத்தின் கூட்டம் போன்று கரு நிறம் கொண்ட; மின் இடை - மின்னல் போலும் நுண் இடையுடைய; செவ்வாய் - சிவந்த வாயும்; குவி முலை - குவிந்த பருத்த முலைகளும் கொண்ட; பணைத் தோள்-மூங்கில் போலும் வழவழப்பான தோள்களை உடைய; வீங்கு தேர் அல்குலார் - பெரிய தேர் போன்ற அல்குல் உடைய அரக்கப் பெண்கள்; பூம் சவுக்கம் -

பூக்களால் ஆன நாற்கோணச் சதுரமாகிய விதானம்; சாமரை - வெண் சாமரங்கள்; உக்கம் - ஆலவட்டங்கள், ஆதியாய் வரிசையின் அமைந்த - இவை முதலாக அரசர்க்கு உரிய வரிசைகளில் அமைந்திருந்தவைகளையும்; உன்னரும் பொன்னின் - நினைத்தற்கு அரிய சிறப்புடைய பொன்னாலும்; மணியினால் - இரத்தினங்களாலும்; புனைந்த - அழகுற அமைக்கப்பட்ட; உழைகுலம் - மான்களையும்; தாங்கி - ஏந்தியவர்களாய்; நல்நிற காரின் வரவு கண்டு உவக்கும் - நல்ல கருமேகத்தின் வருகை கண்டு மகிழும்; நாடக மயில் என - நடனமிடும் மயிலே போல்; நடப்ப - இராவணனோடு நடந்து செல்ல.

* * *

அந்தியன் அனங்கன் அழல் படத் துரந்த
வயின்முகப் பகழி வாயறுத்த
வெந்துறு புண்ணின் வேல் நுழைந்தென்ன
வெண்மதிப் பசுங்கதிர் விரவ
மந்த மாருதம் போய் மலர்தொறும் வாரி
வயங்கு நீர் மாரியின் வருதேன்
சிந்து நுண் துளியின் சீகரத்திவலை
உருக்கிய செம்பு எனத்தெறிப்ப

காமன் தனது கணைகளை ஏவுகிறான். யார் மீது? இராவணன் மீது. அது அவனைச் சுடுகிறது. அவ்வாறு சுட்டதினால் வெந்த புண்ணிலே வேல் கொண்டு பாய்ச்சினால் எப்படியிருக்கும்? அப்படித் துடித்தனாம் இராவணன். வேல் பாய்ச்சியவர் யார்? வானத்திலே தோன்றிய முழு நிலவு. இது போதாது என்று மந்தமாருதம் வீசுகிறதாம். சும்மா வீசுகிறதா? இல்லை. மலர்தொறும் மலர்தொறும் தவழ்ந்து தவழ்ந்து மணம் சுமந்து நீர்த்துளி சுமந்து இராவணன் மேல் தெறிக்கிறதாம். அஃது எப்படியிருக்கிறது? செம்பை காய்ச்சி உருக்கி தெளிப்பது போல் இருக்கிறதாம்.

* * *

அந்தியில் - மாலைப் போதில்; அனங்கன் - மன்மதன்; அழல் பட துரந்த - நெருப்பு எனச் சுட ஏவிய; அயில் முகப் பகழி வாய் அறுத்த - கூரிய நுனியுடைய அம்பு கொண்டு அறுத்த; வெந்துறு புண்ணில் - வெந்திருக்கிற புண்களில்; வேல் நுழைந்தென்ன - வேல் நுழைந்தாற் போல; வெண் மதி பசும் கதிர் விரவ - வெண்மையான சந்திரனுடைய குளிர்ந்த நிலவு கலந்து கொள்ள; மந்த மாருதம் - இளம் தென்றல் காற்று; மலர் தொறும் போய் - ஒவ்வொரு மலரினும் சென்று; வாரிவரு - வாரிக் கொண்டு வருகிற; வயங்கு நீர் வாரியின் - விளங்கும் நீரையுடைய மழை போன்ற; தேன் - தேனின்றும்; சிந்து நுண் துளியின் - சிந்துகிற நுண்ணிய துளிகளின்; சீகரத் திவிலை - சில் என்ற திவிலைகளால்; உருக்கிய செம்பு எனத் தெறிப்ப - பழுக்கக் காய்ச்சி உருக்கிய செம்பு வீழ்வது போல் தன் மேல் தெறிக்க.

• • •

மாலையும் சாந்தும் கலவையும் பூணும்
வயங்க நுண் தூசொடு காசும் சோலையின்
தொழுதிக் கற்பகத்தருவும்
நிதிகளும் கொண்டுபின் தொடர பாலின்
வெண் பரவைத்திரை கருங்கிரிமேல்
பரந்தெனச் சாமரை பதைப்ப
வேலை நின்றுயரும் முயலில்வான் மதியின்
வெண்குடை மீதுற விளங்க

இரு புறமும் வெண் சாமரம் வீசுகிறார்கள். அது எப்படியிருந்தது? பாற்கடலிலே எழும் வெண்மை பொருந்திய அலைகள் கரிய மலைமேல் படிவதுபோல் இருந்தது. களங்கமற்ற பூரண சந்திரனைப் போலே அவனது தலைக்குமேல் வெண்கொற்றக் குடை பிடித்து வந்தார்கள். அவனுக்குப் பின்னே சங்கம் பதுமம் ஆகிய

நவநிதிகளையும், மலர்களையும், சந்தனமும், அணிகளையும், இரத்தினங்களையும் மெல் ஆடைகளையும் கொண்டு வந்தார்கள்.

* * *

சோலையின் தொழுதி கற்பகத் தருவும் - சோலை போல் அடர்ந்த கற்பக விருக்ஷமும்; நிதிகளும் - சங்கம் பதுமம் ஆகிய நவநிதிகளும்; மாலையும் - பலவித மலர் மாலைகளும்; சாந்தும் - சந்தனமும்; கலவையும் - பலவித வாசனைக் கலவைகளும்; பூணும் - அணிகளும்; வயங்கு நுண் தூசொடு காசும் - விளங்கும் மென்மையான ஆடைகளுடன் இரத்தினங்களையும்; கொண்டு பின் தொடர - எடுத்துக் கொண்டு பின்னே தொடர்ந்துவர; பாலின் பரவை வெண் திரை - பாற்கடலின் வெண்மையான அலைகள்; கரும் கிரிமேல் பரந்தென - கரிய மலைமேல் படிந்தாற் போல; சாமரை பதைப்ப - சாமரங்கள் இருபுறமும் அசைந்து வீச; வேலை நின்று உயரும் - கடலிலிருந்து மேலே உயர்ந்து தோன்றும்; முயல் இல்வால் மதியின் - முயல் எனும் கறை இல்லாத வெண்மதி போல; வெண் குடை மீது உற விளங்க - வெண் கொற்றக்குடை மேலே விளங்க.

* * *

விரிதளிர் முகை பூ கொம்பு அடைமுதல் வேர்
இவை யெலாம் மணிபொனால் வேய்ந்த
தருவுயர் சோலை திசைதொறும் கரியத்
தழல் உமிழ் உயிர்ப்பு முன் தவழத்
திருமகள் இருந்த திசை அறிந்திருந்தும்
திகைப்புறு சிந்தையால் கெடுத்தது
ஒரு மணி தேடும் பஃறலை அரவின்
உழை தொறும் உழைதொறும் உலாவி

இராவணன் பார்க்கின்ற திசைகளிலே எல்லாம் இருக்கின்ற தளிர், அரும்பு, மலர், கொம்பு, அடிமரம் முதலிய எல்லாம் கருகிப் போகும்படியாக தீ கக்கும் பெருமூச்சு விட்டுக்கொண்டு வந்தான்! சீதாதேவி எங்கே இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியும். தெரிந்தாலும் விரக வேதனையால் புத்தித் தடுமாறி நாகரத்தினத்தை இழந்துவிட்டுத் தேடும் பத்து தலைப் பாம்பு போல் ஒவ்வோரிடமாகத் திரிந்து திரிந்து வந்தான்.

* * *

விரி தளிர் - விரிந்து விளங்கும் தளிர்களும்; முகை - அரும்புகளும்; பூ - மலர்களும்; கொம்பு - கிளைகளும்; முதல் - அடி மரமும்; வேர் - வேர்களும்; இவைஎலாம் - ஆகிய இவை எல்லாம்; மணி பொன்னால் வேய்ந்த - மணிகளாலும் பொன்னாலும் வேய்தன போன்ற; தரு உயர் சோலை - மரங்கள் உயர்ந்து விளங்கிய அச் சோலை; திசைதொறும் - இராவணன் பார்க்கின்ற திசைகளில் எல்லாம்; கரிய - கருகிப் போகும்படி; தழல் உமிழ் உயிர்ப்பு முன் தவழ - தீ கக்கும் பெருமூச்சு தன் முன்னே தவழ்ந்து செல்ல; திருமகள் இருந்த திசை - திருமகளாகிய சீதா பிராட்டி இருந்த இடத்தை; அறிந்திருந்தும் - தான் அறிந்திருந்தும்; திகைப்பு உறு சிந்தையால் - விரக வேதனையால் புத்தித் தடுமாறி; கெடுத்தது ஒரு மணி தேடும் - கெட்டுப் போக்கிய ஒப்பற்ற நாகரத்தினத்தைத் தேடிசெல்லும்; பஃறலை அரவின் - பல தலைகள் கொண்ட பாம்பு போல; உழைதொறும் உழைதொறும் - ஒவ்வோரிடமும் விடாமல்; உலாவி - உலாவிக்கொண்டு.

* * *

இவ்வாறு கோலாகலமாக வந்தான் இராவணன். வந்து என்ன செய்தான்? தனது தலைகள் பத்தும் மணிக் கிரீடமும் தரையிலே பதியச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம்

செய்தான். தன்னை அடிமையாக ஏற்கவேண்டும் என்று கெஞ்சினான்.

அப்போது சீதா பிராட்டி அவ் இராவணனுடன் நேரில் பேசினாள் அல்லள். ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டாள். போட்டு அதனை முன்னிலைப் படுத்திப் பின்வருமாறு சொல்கிறாள்.

* * *

மேருவையுருவ வேண்டின்
விண்பிளந்து ஏக வேண்டின்,
ஈரோடு புவனம் யாவும்
முற்றுவித்திடுதல் வேண்டின்,
ஆரியன் பகழி வல்லது
அறிந்திருந்து அறிவிலாதாய்
சீரிய அல்ல சொல்லித்
தலை பத்தும் சிந்து வாயோ?

மேரு மலையைத் துளைக்க வேண்டுமா? வானத்தைப் பிளந்து செல்ல வேண்டுமா? ஈரேழு பதினான்கு உலகங் களையும் அழிக்க வேண்டுமா? இராமபாணம் ஒன்றே இவற்றை செய்யவல்லது. இதை நீ அறிவாய். அறிந்தும் அறியாதார்போல என்னிடம் தகாத வார்த்தை பேசி உன் தலைகள் பத்தும் சிந்துவாயோ?

* • *

அறிவு இலாதாய் - அறிவு இல்லாதவனே; ஆரியன் பகழி - இராமனின் அம்பு; மேருவை உருவ வேண்டின் - மேரு மலையைத் துளைத்துச் செல்ல விரும்பினாலும்; விண் பிளந்து ஏக வேண்டின் - வானம் பிளந்து அப்பால் செல்ல விரும்பினாலும்; ஈர் ஏழு புவனம் யாவும் - பதினான்கு உலகங்களையும்; முற்று வித்திடுதல் வேண்டின்,

அழிக்க விரும்பினாலும்; வல்லது - வல்லமை உடையது; அறிந்திருந்து - இதனை நீ அறிந்தும்; சீரிய அல்ல சொல்லி - சிறப்பில்லாத தீய சொற்களைக் கூறி; தலை பத்தும் சிந்துவாயோ - உன் தலைகள் பத்தும் அறுந்து கீழே விழும்படி செய்து கொள்வாயோ?

* * *

மலை எடுத்து எண் திசை
காக்கும் மாக்களை
நிலை கெடுத்தேன் எனும்
மாற்றம் நேரும் நீ
சிலை எடுத்து இளையவன்
நிற்கச் சேர்ந்திலை
தலை எடுத்து இன்னமும்
மகளிர் தாழ்தியோ?

"கயிலாய மலையைப் பெயர்த்தேன்; திசைக் களிறுகளை நிலை கலங்கி ஓடச் செய்தேன் என்று பெருமை பேசிக் கொள்கிறாய். அத்தகைய வீராதி வீரன் ஆகிய நீ எங்கள் இளைய பெருமாள் வில்லேந்தி நின்று எனக்குக் காவலிருந்தபோது வந்திலை; அத்தகைய ஆண்மையற்ற நீ இன்னமும் உனது பத்துத் தலைகளுடன் பெண்போல் தலை குனிந்து நிற்கலாமோ? வெட்கமாயில்லை!"

* * *

மலை எடுத்து - கயிலை மயிலையை நீ எடுத்து; எண் திசை காக்கும் மாக்களை - அட்டதிக்குகளிலும் நின்று பாதுகாத்து வரும் யானைகளை; நிலை கெடுத்தேன் எனும் மாற்றம் நேரும் நீ - அவை நிலைகெட்டு ஓடும்படி செய்தேன் என்று பெருமை பேசும் நீ; இளையவன் - இளைய பெருமாளாகிய லட்சுமணன்; சிலை எடுத்து நிற்க சேர்ந்திலை - வில் ஏந்தி என்னைக் காத்து நின்ற

போது வந்தாய் அல்லை; தலை எடுத்து இன்னமும் மகளிர் தாழ்தியோ - அத்தகைய ஆண்மையற்ற நீ உன் பத்துத் தலைகளையும் தூக்கிக் கொண்டு மகளிரைப்போல் தலை குனிவாயோ?

* * *

குன்று நீ எடுத்த நாள் தன்
சேவடிக் கொழுந்தால் உன்னை
வென்று வன்புரங்கள் வேவத்
தனிச் சரம் துரந்த மேரு
என் துணைக் கணவன் ஆற்றற்கு
உரனிலாது இற்று வீழ்ந்த
அன்று எழுந்து உயர்ந்த
ஓசை கேட்டிலை போலும்

கயிலாய கிரியை நீ பெயர்த்தாயே! அப்போது சிவபெருமான் தமது கால்விரல் நுனியை அழுத்தி உன்னை வென்றாரன்றோ? அச் சிவபெருமான் திரிபுர தகனம் செய்தபோது எந்த வில்லைக்கொண்டு அம்பு தொடுத்தாரோ அதே வில்தான் எனது கணவராகிய இராமனின் வலிமைக்கு ஆற்றாது ஒடிந்தது. அப்போது எழுந்த ஒலியை நீ கேட்டிலையோ? கேட்டிருந்தால் என்னை அபகரித்து வந்திருக்கமாட்டாய்.

* * *

குன்று எடுத்த நாள் - கயிலை மலையை நீ எடுத்த அன்று; தன் சேவடிக் கொழுந்தால் - தன்னுடைய சிவந்த பாதத்தின் நுனி விரலால்; உன்னை வென்றவன் - உன்னை அம் மலையின் அடியில் வைத்து அழுத்தி வென்ற சிவபெருமான்; புரங்கள் வேவ - முப்புரங்கள் நெருப்பால் எரிந்து வெந்து அழிய; தனிசரம் துரந்த - ஒப்பற்ற பாணம்

விடுவதற்கு இடமாய் அமைந்த; மேரு - மேரு போன்ற திரியம்பகம் என்ற சிவதனுசு; என் துணை கணவன் - எனது வாழ்க்கைத் துணையாகிய இராமனின்; ஆற்றற்கு - வலிமைக்கு; உரன் இலாது - வலிமை இல்லாமல்; இற்று வீழ்ந்த அன்று - ஒடிந்து வீழ்ந்தபோது; எழுந்து உயர்ந்த ஓசை - எழுந்து ஒங்கிய பேரொலியை; கேட்டிலைப் போலும் - நீ கேட்கவில்லை போலும்.

* * *

அஞ்சினை ஆதலாலே
ஆண்டகை அற்ற நோக்கி
வஞ்சனை மானொன் றேவி
மாயையால் மறைத்து வந்தாய்
உஞ்சனை போதியாகில் விடுதி
உன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை எதிர்ந்த போது
நோக்குமே நினது நாட்டம்

வீரனாகிய இராமன் எதிரே அஞ்சினாய். ஆதலினாலே உனது வஞ்சனையினாலே மான் ஒன்றை ஏவினாய். இராமன் அம் மான் பின்னே சென்றபோது வந்தாய். எப்படி வந்தாய்? உனது உண்மை உருவுடன் வந்தாயா? இல்லை. மாயத்தாலே சந்நியாசி வேடம் பூண்டு வந்தாய். உயிர் பிழைக்க வேண்டுமானால் என்னை நீ அவரிடம் சேர்ப்பாய்.

* * *

அஞ்சினை - இராமன் எதிரே வர நீ பயந்தாய்; ஆதலாலே ஆகையினாலே - வஞ்சனை; மான் ஒன்று ஏவி - வஞ்சகமாக மாய மான் ஒன்றை ஏவிவிட்டு; ஆண்டகை - இராமன்; அற்றம் நோக்கி - இல்லாத சமயம் பார்த்து; மாயையால் மறைத்து வந்தாய் - நீ கற்ற மாயை வித்தையால் உன் உருவத்தை மறைத்து

வந்தாய்; உஞ்சனை போதி ஆகில் - நீ உன் உயிர் பிழைத்துப் போக விரும்பினால்; விடுதி - என்னை இராமனிடம் கொண்டு போய் விட்டுவிடுவாய்; உன் குலத்துக்கெல்லாம் நஞ்சினை - உனது குலமாகிய அரக்கர்களுக்கு எல்லாம் விடமாகிய இராமனை; எதிர்ந்தபோது - எதிர்த்து நின்று போர் செய்யும்போது; நோக்குமே நினது நாட்டம் - உனது கண்கள் நேர் நின்று அவனைப் பார்க்கும் திறமை உடையன ஆகுமோ? (ஆகா).

* * *

பெற்றுடை வரனும் நாளும்
பிறந்துடை உரனும் பின்னும்
மற்றுடை எவையும் தந்த
மலரவன் முதலோர் வார்த்தை
விற்றொடை இராமன் கோத்து
விடுதலும் விலக்குண்டு எல்லாம்
இற்றுடைந்து இறுதல் மெய்யே
விளக்கின் முன் இருள் உண்டாமோ.

ஏராளமான வரங்களைப் பெற்றுள்ளோம் என்று இறுமாப்புக் கொள்ளாதே. அரக்கர் குலத்தில் பிறந்துள தால் மிகுந்த வலிமையுடையோம் என்று நினையாதே! பிரம தேவனிடம் நீண்ட வாழ்நாள் பெற்றுவிட்டோம் என்று கர்வம்கொள்ளாதே. இவை எல்லாம் இராமனின் அம்பு கண்ட அளவில் விலகும் என்பது திண்ணம். விளக்கு வந்தால் இருள் இருக்குமோ?

* * *

பெற்றுடை வரனும் நாளும் - நீ பெற்றுள்ள வரங்களும் வாழ்நாளும்; பிறந்து உடை உரனும் - (அரக்கர் குலத்திலே) பிறந்து அப்பிறப்பால் அடைந்த வலிமையும்; பின்னும் மற்று உடை எவையும் - பிறகு நீ அடைந்த எல்லாவற்றை

யும்; தந்த - உனக்கு அளித்த; மலரவன் முதலோர் வார்த்தை - பிரமதேவன் முதலியவர்களுடைய உறுதி மொழிகளும்; இராமன் வில் தொடை கோத்து விடுதலும் - இராமன் தனது வில்லிலே அம்பு தொடுத்து விடும் அளவிலே; எல்லாம் விலக்குண்டு - அந்தப் பாதுகாவல் யாவும் விலக்கப் பட்டு; இற்று உடைந்து இறுதல் மெய்யே - கட்டழிந்து உடைப்பட்டுப் போதல் திண்ணம்; விளக்கின் முன் இருள் உண்டாமோ? - விளக்கு வந்தால் இருள் இருக்குமா?

* * *

அப்பொழுது இராவணன் சொல்கிறான் : "வஞ்சனையால் உன்னைக் கவர்ந்து வந்தேன் என்று சொல்கிறாய். அவ்விதமின்றி உன் கணவனாகிய இராமனுடன் போர் செய்து அப் போரிலே அவனைக் கொன்றுவிடில் நின் உயிர் யாதாகும்? நீ உயிர் விடுவாய் அன்றோ? யான் கருதியது கைகூடாது அன்றோ? அப்படி உன்னை இழந்து விட்டால் எனது உயிரும் போய்விடும் அன்றோ? இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னரே நான் வஞ்சனை செய்தேன். மானின் பின்னே சென்ற அந்த மானிடர் திரும்பி எங்கே வரப் போகிறார்? அதிலும் உன்னைக் கவர்ந்து சென்றவன் நான் என்று அறிந்தால் வரவே மாட்டார். அற்ப வலிமை பொருந்திய அந்த மானிடரை ஒரு கையால் பற்றி இங்கே கொண்டுவந்து உன் எதிரே நிறுத்தி எனக்கு ஏவல் செய்ய வைப்பேன். அந்த அயோத்திக்குச் சென்று பரதன் முதலியவர் தம் உயிர் குடிப்பேன். மிதிலைக்குச் சென்று உன் தந்தை முதலியோரை அழித்து இங்கு வந்து உன்னையும் கொல்வேன். நான் யார் என்பதை நீ இன்னும் அறிந்தாய் அல்லை.'

இவ்வாறு சினந்து கடும் மொழிகள் கூறினான் இலங்கை வேந்தன்: "நயத்தாலோ பயத்தாலோ எப்படியோ அந்தச் சீதை என் விருப்பத்திற்கு இசையுமாறு செய்யுங்கள்" என்று அரக்கியருக்கு ஆணை பிறப்பித்தான்; அகன்றான்.

அரக்கியரும் சீதையை அச்சுறுத்தத் தொடங்கினர். அப்போது விபீடணனின் மகளாகிய திரிசடை என்பாள் அரக்கியரைத் தடுத்து விலக்கினாள்.

சிறிது நேரத்தில் அரக்கியர் எல்லாரும் உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

* * *

என்னை? நாயகன் இளவலை
எண்ணிலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு
அறிவிலள் எனத் துறந்தானே?
முன்னை ஊழ்வினை முடிந்ததோ?
என்று என்று முறையால்
பன்னி வாய் புலர்ந்து உணர்வு
தேய்ந்து ஆருயிர் பதைப்பாள்.

அசோக வனத்திலே சிறை இருந்த சீதை புலம்புகிறாள்' இராமன் என்னை மறந்தானோ? லட்சுமணனை நான் நிந்தித்துக் கூறினேனே! அது கேட்டு என் மீது கோபம் கொண்டு என்னைத் துறந்தானோ? நான் செய்த ஊழ்வினை தான் இவ்வாறு வந்து முடிந்ததோ?

இவ்வாறு எண்ணி எண்ணி, ஏங்கி ஏங்கிப் புலம்பிப் புலம்பி, நா வறண்டு வாய் உலர்ந்து, உணர்ச்சி சோர்ந்து பதைக்கிறாள்.

* * *

எண்ணிலா வினையேன் - எண்ணி அளவிடுதற்கு அரிய தீவினை உடைய நான்; இளவலை - லட்சுமணனை; சொன்ன வார்த்தை கேட்டு - சொன்ன கடுஞ் சொற்களைக் கேட்டு; நாயகன் - இராமன்; அறிவிலள் எனத் துறந்தானோ இவள் அறிவில்லாதவள் என்று கருதி வெறுத்து

விட்டானோ; (அல்லது) முன்னை ஊழ்வினை முடிந்ததோ - முற்பிறப்பில் செய்த கரும வசத்தால் இவ்வாறு நிகழ்ந்ததோ; என்னை - என்னவோ தெரியவில்லையே; என்று என்று முறையால் - ஒன்று ஒன்றன்பின் ஒன்றாக திரும்பத் திரும்பப் பலமுறை; பன்னி - சொல்லிச் சொல்லி; வாய் புலர்ந்து - நா வறண்டு; உணர்வு தேய்ந்து - அறிவு சோர்ந்து - ஆருயிர் பதைப்பாள்.

* * *

வன் கண் வஞ்சனை அரக்கர்
இத்துணைப் பகல் வையார்
தின்பர்; என் இனி செய்யத் தக்கது
என்று தீர்ந்தானோ?
தன் குலப் பொறை தன் பொறை
எனத் தணிந்தானோ?
என் கொல் எண்ணுவது? என்னும்
அங்கு இராப்பகல் இல்லாள்.

கொடியவர்களான இந்த அரக்கர்கள் உயிரோடு இத்தனை நாள் என்னை வைத்திருக்க மாட்டார்கள் என்று கருதினாரோ? கொன்று தின்று விடுவார்கள் என்று எண்ணினாரோ? இனி என்ன செய்யமுடியும் என்று சும்மா இருந்து விட்டாரோ? என்று புலம்புகிறாள்.

இரவு என்றும் பகல் என்றும் அறியாமல் கவலையால்—உறக்கமின்றி ஏங்குகிறாள்.

* * *

வன்கண் - கொடிய தன்மையுடைய; வஞ்சனை - வஞ்சகம் மிக்க; அரக்கர் இத்துணைப் பகல் வையார் - இவ்வளவு நாள் உயிருடன் வைத்திருக்க மாட்டார்; தின்பர் - கொன்று தின்றிருப்பர்; என் இனிச் செய்யத்

தக்கது - இனி செய்வது யாது? என்று தீர்ந்தானோ - என்று முடிவு செய்து தேடுதல் ஒழித்தானோ; (அன்றி) தன் குலப் பொறைதான் - தான்பிறந்த சூரிய குலத்தின் பொறுமை; தன் பொறை - தானும் வகிக்கத் தக்கதொரு குணம் ஆகும்; (என்று) தணிந்தானோ - கோபம் தணிந்தானோ? என் கொல் எண்ணுவேன்? - என்ன என்று நினைப்பேன்? என்னும் - என்று கவலைப்படுவாள்; அங்கு இராப்பகல் இல்லாள் - அந்த இலங்கையிலே இரவும் பகலும் இன்னது என்று அறியாத சீதை. அதாவது கவலையால் இரவு தூங்குதல் ஒழித்தாள்; அதனால் இரவும் பகலும் ஒன்றே ஆயின.

* * *

பொறை இருந்து ஆற்றி
 என் உயிரும் போற்றினேன்
அறை இரும் கழலவன்
 காணும் ஆசையால்
நிறை இரும் பல் பகல்
 நிருதர் நீள் நகர்ச்
சிறை இருந்தேனை அப்
 புனிதன் தீண்டுமோ?

பொறுத்திருந்தேன்; உயிர் பாதுகாத்தேன்; இராமனைக் காணும் ஆசையால். இந்த அரக்கர் நகரில் சிறை இருந்த என்னை அந்தப் புனிதன் இனித் தீண்டுவானோ?

* * *

அறை இருங்கழலவன் - ஒலிக்கின்ற பெரிய வீரக்கழலை அணிந்த இராமனை; காணும் ஆசையால் - மீண்டும் காணப் பெறுவேன் என்ற ஆசையினால்; இருந்து - இங்கே இருந்து; பொறை ஆற்றி - எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக்

கொண்டு; என் உயிரையும் போற்றினேன் - என் உயிரையும் போக ஒட்டாது தடுத்து பாதுகாத்தேன். (ஆயினும்) நிறை இரும் பல பகல் - நிறைந்த மிகப் பல நாளாக; நிருதர் நீள் நகரீ - அரக்கரது பெரிய நகரில்; சிறை இருந்தேனையும் - சிறை இருந்த என்னை; அப் புனிதன் தீண்டுமோ - பரிசுத்தனாகிய அந்த இராமன் மீண்டும் ஏற்பாரோ?

* * *

என்று என்று உயிர் விம்மி
　　இருந்து அழிவாள்
மின் துன்னும் மருங்குல்
　　விளங்கு இழையாள்
ஒன்று என் உயிர் உண்டு
　　என்ன உண்டு இடர்; யான்
பொன்றும் பொழுதே
　　புகழ் பூணும் எனா

இவ்வாறு கருதிக் கருதிக் கண்ணீர் வடிப்பாள்; விம்முவாள்; ஏங்குவாள்.

''என் உயிர் இருக்கும் வரை இத் துன்பம் நீங்காது. என் உயிர் நீங்கினால் தான் எனக்குப் புகழ் உண்டாகும்'' என்று நினைக்கிறாள்.

* * *

மின் துன்னும் மருங்குல் - மின்னல் போல் இடையும்; விளங்கு இழையாள் - ஒளி விளங்கும் அணியும் உடைய சீதை; என்று என்று-என்று பலவாறாகக் கூறி; உயிர் விம்மி - பெருமூச்சு விட்டு; இருந்து - இடம் விட்டுப் பெயராமல்; அழிவாள் - வருந்துபவளாய்; என் உயிர் ஒன்று உண்டு எனின் - எனது உயிர் ஒன்று மட்டும் இந்த உடலில் இருக்குமானால்; (உயிர் இருக்கும் வரை) இடர் உண்டு - துன்பம்

உண்டு. யான் பொன்றும் பொழுதே - நான் உயிர் விட்ட போதே; புகழ் பூணும் - எனக்குப் புகழ் உண்டாகும்; எனா - என்று.

*　　*　　*

"ஆதலால் இறத்தலே
அறத்தின் ஆறு" எனாச்
சாதல் காப்பவரும் என்
தவத்தில் சாம்பினார்
ஈது அலாது இடமும்
வேறு இல்லை என்று ஒரு
போது உலாம் மாதவிப்
பொதும்பர் எய்தினாள்.

ஆகவே உயிர் விடுவதே நல்லது. அதுவே அறமும் ஆகும். இங்கே எனக்குக் காவல் செய்யும் அரக்கியரும் தூங்குகின்றனர். நல்ல காலம். தடுப்பார் எவரும் இலர். இதுவே சமயம்.

இவ்வாறு எண்ணி அங்கே உள்ள குருக்கத்தி மரப்புதரை அடைந்தாள்.

*　　*　　*

ஆதலால் - ஆதலால்; இறத்தலே - சாதலே; அறத்தின் ஆறு - தருமத்தின் முறையாகும்; எனா - என்று எண்ணி; சாதல் காப்பவரும் - சாதலினின்று என்னைக் காப்பவரும் (அரக்கியரும்) என் தவத்தில் - நான் செய்த நல்வினைப் பயனாய்; சாம்பினார் - இப்போது உறங்கி கிடக்கின்றார்; ஈது அலாது - இந்த சமயம் அல்லாது; (உயிர் துறக்கத் தக்க சமயம்) வேறு இடமும் இல்லை - வேறு சமயமும் இல்லை; என்று - என்று நினைத்து; போது உலாம் - மலர்கள் அசையப் பெற்ற; ஒரு மாதவிப் பொதும்பர் - ஒரு குருக்கத்தி மரச் செறிவை; எய்தினாள் - அடைந்தாள்.

எய்தினாள் பின்னும்
    எண்ணாத எண்ணி 'ஈங்கு
உய்திறம் இல்லை' என்று ஒருப்பட்டு
    ஆங்கு ஒரு
கொய் தளிர்க் கொம்பிடைக்
    கொடி இட்டே தலை
பெய்திடும் ஏல் வையில்
    தவத்தின் பெற்றியால்.

மீண்டும் ஒரு முறை சிந்தித்தாள். "நான் செய்த முடிவே சரி" என்று தீர்மானிதாள்; கிளையில் கொடி ஒன்றை எடுத்தாள். சுருக்குப் போட்டாள், தலையை நாட்டும் சமயம்.

* * *

எய்தினள் - அவ்வாறு அடைந்த சீதை; பின்னும் எண்ணாத எண்ணி - மீண்டும் என்ன என்னவோ நினைத்து; 'இங்கு உய்திறம் இல்லை - இங்கு உய்யும் வழி இல்லை; என்று ஒருப்பட்டு - ஒரு முடிவுக்கு வந்து; ஆங்கு - அங்கே இருந்த; ஒரு கொய் தளிர்க் கொம்பிடைக் கொடி இட்டே - தளிர் கொய்யப்பட்ட கிளையில் உள்ள கொடியை இட்டு; தலை பெய்திடும் ஏல்வையில் - தலையை மாட்டும் தருணத்தில்; தவத்தின் பெற்றியால் - முன் செய்த நல்வினைப் பயனால்.

* * *

கண்டனன் அநுமனும்;
    கருத்தும் எண்ணினான்;
கொண்டனன் துணுக்கம்;
    மெய் தீண்டக் கூசுவான்;

அண்டர் நாயகன் அருள் தூதன்
யான் எனாத்
தொண்டை வாய் மயிலினைத்
தொழுது தோன்றினான்.

அநுமன் கண்டு விட்டான். சீதை கொண்ட கருத்தையும் உணர்ந்து விட்டான். நடுக்கம் கொண்டான். 'இராமன் அனுப்பிய தூதன் நான்' என்று கூறிய வண்ணம் கை கூப்பிச் சீதை எதிரில் தோன்றினான்.

* * *

அநுமனும் கண்டனன் - சீதையின் செயலைக் கண்டான்; கருத்தும் எண்ணினான் - அவள் கொண்ட கருத்தையும் அறிந்தான்; துணுக்கம் கொண்டனன் - அச்சம் கொண்டனன்; மெய் தீண்டக் கூசுவான் - உடலைத் தொட்டு அச் செயலினின்றும் தடுக்கக் கூசினவனாய்; அண்டர் நாயகன் அருள் தூதன் யான் எனாத் - தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய இராமன் அனுப்பிய தூதன் நான் என்று கூறி; தொண்டை வாய் மயிலைத் தொழுது - கோவைப்பழம் போலும் வாய் கொண்ட மயில் போலும் சாயல் உடைய சீதையைத் தொழுது கொண்டே; தோன்றினான்.

* * *

"இராமன் கட்டளைப்படி அடியேன் இங்கு வந்துளேன்; உன்னைத் தேடிக் காண்பதன் பொருட்டு உலகெங்கும் சென்றவர் கணக்கற்றோர். நான் முன் செய்த தவப்பயனால் நின் சேவடி நோக்கினேன். உன் பிரிவால் வாடும் இராமன் நீ இங்கிருப்பது அறிந்திலன் என்னைப் பற்றிய ஐயம் உனக்கு எள்ளளவும் வேண்டாம். இராமபிரான் கொடுத்தனுப்பிய அடையாளப் பொருளும், கூறிய அடையாளச் சொற்களும் என்னிடம் உள, அவற்றை நேரில் காண்பாய்." என்று கூறினான் அநுமன்.

''இவன் குரங்கோ? அரக்கனோ? யாரோ தெரிய வில்லை'' என்று ஒரு கணம் ஐயம் கொண்டாள் சீதை.

''அரக்கனே ஆயினும் சரி. வேறு எவனாயினும் சரி. இங்கு வந்து இராமனுடைய பெயர் சொன்னான். என் உயிர் காத்தான். இதை விடப் பெரிய உதவி வேறு ஏதேனும் உண்டோ'' என்று மனதைத் திடம் செய்து கொண்டு அநுமனிடம் பேசுகிறாள்.

''வீரனே! நீ யார்?'' என்று கேட்டாள் சீதை.

உடனே அநுமன் தன்னுடைய வரலாறு கூறுகிறான். பிறகு தான் வந்த காரணமும் கூறுகிறான்.

* * *

எய்தினன் உரைத்தலோடும்
எழுந்து பேருவகை ஏற
வெய்துறல் ஒடுங்கும் மேனி
வான் உற விம்மி ஓங்க
உய்தல் வந்து உற்றதோ?
என்று அருவி நீர் ஒழுகு கண்ணாள்
அய்ய! சொல்! அனையன் மேனி
எப்படித்து?' அறிவி என்றாள்.

* * *

அந்தச் சொற்கள் கேட்டாள். ''நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது போலும்'' என்று மகிழ்ந்தாள். துயருற்றதால் வாடியிருந்த அவளது மேனி பருத்தது; கண்கள் நீர் சொரிந்தன. அதே சமயத்தில் ஓர் ஐயமும் தோன்றியது.

''இவன் உண்மையில் இராம தூதனோ அல்லது அரக்கர் தான் மாய உருக்கொண்டு நம்மை வஞ்சிக்க வந்தனரோ'' என்பதுதான் அந்த ஐயம்,

"அரக்கரே ஆயினும் சரி; வேறு எவராயினும் சரி" என்று துணிந்தாள்.

"ஐயனே! அந்த இராமன் எப்படியிருப்பான் சொல்" என்று கேட்டாள்.

*          *          *

எய்தினன் - அநுமன் (வந்த நோக்கத்தை) உரைத்தலோடும் - சொன்ன அளவில்; (சீதை) பேருவகை எழுந்து ஏற- (மனத்திலே) பெருங்களிப்புத் தோன்றிப் பெருக - வெய்து உறல் ஒடுங்கும் மேனி - துன்பத் தீயால் வாடிய தன் உடம்பு; வான்உற விம்மி ஓங்க - பெருத்துப் பூரித்து உயர்ந்து; உய்தல் வந்து உற்றதோ - துன்பம் நீங்கி இயிர் பிழைக்கும் காலமும் எனக்கு வந்ததோ; என்று - என்று நினைத்து; அருவி நீர் ஒழுகு கண்ணாள் - அருவி நீர்ப் பெருக்கு போல கண்களில் இருந்து நீர் பெருக; ஐய - பெரியவனே! அனையன் மேனி - இராமனது திருமேனி; எப்படித்து? - எவ்வாறு இருக்கும்? அறிவி - சொல்வாய்; என்றாள்.

*          *          *

உச்சி முதல் உள்ளங்கால் வரை இராமனது திருமேனியை வர்ணிக்கிறான் அநுமன்.

பிறகு மாயமான் பின்னே சகோதரர் சென்ற நாள் முதல் அதுவரை நிகழ்ந்த எல்லாவற்றையும் விவரிக்கிறான்.

இராமன் கூறிய அடையாள வார்த்தைகளை எல்லாம் சொல்கிறான்.

சொல்லிய பின் இராமனின் கணையாழியைப் பிராட்டியிடம் அளிக்கிறான் அநுமன்.

*          *          *

இழந்தமணி புற்றரவு
எதிர்ந்தது எனல் ஆனாள்
பழந்தனம் இழந்தன
படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மலடிக்கு
உவமை கொண்டாள்
ஒழிந்த விழி பெற்ற தொரு
உயிர்ப் பொறையும் ஒத்தாள்.

நல்ல பாம்பு ஒன்று தன்னுடைய நாக ரத்தினத்தை இழந்துவிட்டது. இழந்த அந்த ரத்தினத்தை மீண்டும் கண்டுகொண்டது. அதன் மகிழ்ச்சி எத்தகையதாயிருக்கும். அம்மாதிரி மகிழ்ந்தாள் சீதை. நீண்ட காலமாக மகப்பேறு இல்லாமல் இருந்தாள் ஒருத்தி. மலடி என்று எல்லாரும் சொன்னார்கள். திடீரென்று அவளுக்கு மகப்பேறு உண்டா யிற்று. அவள் எப்படி மகிழ்வாள்? அப்படி மகிழ்ந்தாள் சீதை. பெரும் செல்வத்தை இழந்துவிட்டான் ஒருவன். அச் செல்வம் மீண்டும் அவனுக்குக் கிடைத்துவிட்டது. கண்பார்வை இழந்துவிட்டான் ஒருவன். மீண்டும் அவனுக்கு பார்வை வந்துவிட்டது. இவர்களைப்போலவே மகிழ்ந்தாள் சீதை.

புற்று அரவு - புற்றில் வாழும் பாம்பு; இழந்த மணி - இழந்த தன் மணியாகிய நாகரத்தினத்தை; எதிர்ந்தது - நேரே கண்டு கொண்டது; எனல் ஆனாள் - என்று சொல்வதற்கு ஒப்பானாள்; இழந்தன - இழந்தனவாகிய; பழம் தனம் - தமது பழைய செல்வங்களை படைத்தவரை ஒத்தாள் - மீண்டும் பெற்றவர் அடைந்த நிலைக்கு ஒப்பானாள். மலடி - மலடியாக இருந்த ஒருத்தி; குழந்தையை உயிர்த்தற்கு - ஒரு குழந்தையைப் பெற்ற தற்கு; உவமை கொண்டாள் - உவமையானாள்; ஒழிந்த விழி - பார்வை அற்றுப் போன கண்கள்; பெற்றதோர் உயிர்

பொறையும் ஒத்தாள் - திரும்பவும் பார்வை பெற்றது போன்ற ஓர் உடலை ஒத்தாள்.

* * *

வாங்கினள்; முலைக்கு வையில்
வைத்தனள்; சிரத்தால்
தாங்கினள்; மலர்க் கண் மிசை
ஒத்தினள்; தடந்தோள்
வீங்கினள்; மெலிந்தனள்
குளிர்ந்தனள்; வெதுப்போடு
ஏங்கினள்; உயிர்த்தனள்
இனி இன்னது எனலாமே.

அநுமன் கொடுத்த அந்தக் கணையாழியைத் தன் கைகளால் வாங்கினாள் சீதை. மார்பிலே வைத்து அணைத்தாள்; உச்சி மேல் வைத்துக் கொண்டாள்; கண்களிலே ஒத்திக் கொண்டாள்; இராமபிரானை நேரிலே கண்டவள் போலே மகிழ்ந்தாள். அந்த மகிழ்ச்சியிலே அவளது தோள்கள் பூரித்தன; உள்ளம் குளிர்ந்தாள். மறுகணம் பெரு மூச்சு விட்டு ஏங்கினாள். உடல் மெலிந்தாள். ஏன்? இராமனை நேரில் காண முடியவில்லை அல்லவா! அவள் அடைந்த மனோநிலை இன்னது என்று விவரித்தல் முடியாது.

* * *

வாங்கினள் - அந்த மோதிரத்தைத் தன் கைகளிலே வாங்கிக் கொண்டாள்; முலைக் குவையில் வைத்தனள் - தனது தனங்களின் முகட்டிலே வைத்து அணைத்துக் கொண்டாள்; சிரத்தால் தாங்கினள் - தலைமேல் வைத்துக் கொண்டாள்; மலர் கண் மிசை ஒத்தினள் - தாமரை மலர் போன்ற தனது கண்களிலே ஒத்திக்கொண்டாள்; தடம் தோள் வீங்கினள் - அந்த மகிழ்ச்சியால் இராமனை நேரில் கண்டவள் போலத் தனது பெரிய

தோள்கள் பூரிக்கப் பெற்றாள். குளிர்ந்தனள் - மகிழ்ச்சியால் உள்ளம் குளிரப் பெற்றாள்; மெலிந்தனள் - இராமனை அடையாததால் ஏங்கி மெலிந்தாள்; வெதுப்போடு ஏங்கினள் - வாட்டமுற்று ஏங்கினாள்; உயிர்த்தனள் - பெருமூச்சு விட்டாள்; இது இன்னது எனல் ஆமே - பிராட்டி அடைந்த நிலை இன்னது என்று சொல்லாகுமோ?

*　　　*　　　*

மோக்கும்; முலை வைத்து உற
　　முயங்கும்; இழி நன்னீர்
நீக்கி நிறை கண் இணை
　　ததும்ப நெடு நீள
நோக்கும்; நுவலக் கருதும்;
　　ஒன்றும் நுவல் கில்லாள்;
மேக்கு நிமிர் விம்மலள்;
　　விழுங்கல் உறுகின்றாள்.

அதை முகர்வாள்; மாரபில் அணைப்பாள்; ஆனந்தக் கண்ணீர் சொரிவாள்; அதைத் துடைப்பாள். மேலும் அக் கண்ணீர் பெருகும். அதோடு அந்த மோதிரத்தையே நீண்ட நேரம் உற்று நோக்குவாள்; அதோடு பேச விரும்புவாள். பேசாது மௌனமாயிருப்பாள். ஓயாமல் விம்முவாள். அந்த விம்மலை அடக்கி விழுங்க முயல்வாள்.

*　　　*　　　*

மோக்கும் - அம் மோதிரத்தை கூர்ந்து பார்ப்பாள்; முலை வைத்து உற முயங்கும் - தனங்களின் மேலே வைத்து நன்றாகத் தழுவிக் கொள்வாள்; இழி] நின்ற நல் நீர் நீக்கி - கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பின் அதைத் துடைப்பாள்; கண் இணை ததும்ப - இரண்டு கண்களும் மீண்டும் நீர் சொரிய; நெடு நீள நோக்கும் - நீண்ட நேரம்

அந்த மோதிரத்தையே உற்று நோக்குவாள், நுவலக் கருதும் - அதனோடு பேச நினைப்பாள்; ஒன்றும் நுவல் கில்லாள் - ஒன்றும் பேச முடியாமல் மௌனமாயிருப்பாள்; மேக்கு நிமிர் விம்மலள் - மேலும் மேலும் விம்முவாள்; விழுங்கல் உறுகின்றாள் - விம்மலை விழுங்க முயல்கிறாள், முடியவில்லை.

* * *

"பாழிய பணைத்தோள் வீர!
துணை கிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே! யான் மறு
இலா மனத்தேன் என்னின்
ஊழி ஓர் பகலாய் ஓதும்
யாண்டு எலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும்
இன்று என இருத்தி" என்றாள்.

"வீங்கிய தோள்களை உடைய வீரனே! என் துன்பம் தீர்த்த வள்ளலே! நீ வாழ்க!

இந்த ஈரேழு பதினான்கு உலகங்களும் அழிந்தாலும் இன்றுபோல் என்றும் சிரஞ்சீவியாய் இருப்பாயாக!"

* * *

பாழிய பணைத் தோள் வீர - வலிமை பொருந்திய பருத்த தோள்களை உடைய வீரனே; துணை இலேன் பரிவு தீர்த்த வள்ளலே - ஒரு துணையும் இல்லாதவளாய்; துன்புற்றிருக்கும் - எனது துன்பம் தீர்த்த வள்ளலே; வாழிய - நீ வாழ்வாயாக; யான் மறு இலா மனத்தேன் என்னின் - கற்பு நிலையில் களங்கமில்லாத மனத்தை உடையேன் ஆனால்; ஊழி ஓர் பகல் ஆய் ஓதும் யாண்டு எலாம் - பல

யுகங்கள் சேர்ந்து ஒருநாள் என்று சொல்லப்படுகிற பிரமனது ஆயுளாகிய ஆண்டுகள் எல்லாவற்றிலும்; உலகம் ஏழும் ஏழும் - ஈரேழு பதினான்கு உலகங்களும்; வீவுற்ற ஞான்றும் - அழிவுற்ற போதும்; இன்று என இருத்தி - இன்று போலவே என்றும் சிரஞ்சீவியாய் இருப்பாயாக; என்றாள் - என்று சீதை அநுமனை வாழ்த்தினாள்.

*   *   *

மீண்டுரை விளம்பலுற்றாள்
விழுமிய குணத்தோய்! வீரன்
யாண்டையான் இளவலோடும்
எவ்வழி எய்திற்று உன்னை?
ஆண்டகை அடியேன் தன்னை
ஆர் சொல அறிந்தான் என்றாள்
தூண் திரண்டனைய தோளான்
உற்றது சொல்லலுற்றான்.

ஒருவாறு தனது பொங்கிய உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக்கொண்டு தேவி கேட்கிறாள் :

"உயர்ந்த குணமுடைய அநும! இரகுவீரன் இளைய பெருமாளுடன் எங்கிருக்கிறார்? அவர் உன்னைப் பெற்றது எப்படி? நான் இங்கு இருக்கும் நிலையை அவருக்கு யார் சொன்னார்."

இவ்வாறு சீதா பிராட்டி கேட்கவே, மானின் பின்னே சென்றது முதல் அதுவரை நிகழ்ந்தவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாகக் கூறினான் அநுமன்.

*   *   *

மீண்டு உரை விளம்பல் உற்றாள் - மறுபடியும் சீதா தேவி அநுமனை நோக்கிச் சொல்கிறாள்; விழுமிய குணத்தோய் - சிறந்த நற்குணங்கள் பொருந்திய அநுமனே!

வீரன் - இரகுவீரனாகிய இராமன்; இளவலோடும் யாண்டை யான்? - இளைய பெருமாளோடு எங்கே இருக்கிறான்? எவ்வழி எய்திற்று உன்னை - உன்னை அடைந்தது எப்படி? ஆண்டகை அடியேன் தன்னை யார் சொல அறிந்தான்? - ஆடவரில் சிறந்த இராமபிரான் என் நிலையை யார் சொல்ல அறிந்தான்? என்றாள் - என்று கேட்டாள். தூண் திரண்டனையை தோளான் - தூண் திரண்டு உள்ளன போன்ற தோள்களை உடைய அநுமனும்; உற்றது சொல்ல லுற்றான் - மான் பின்னே சென்றது முதல் அதுவரை நிகழ்ந்தவற்றையெல்லாம் சொல்லத் தொடங்கினான்.

* * *

இன்னும் ஈண்டு ஒரு
திங்கள் இருப்பல் யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது
நீதியோய்
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன்
அந்த
மன்னன் ஆணை இதனை
மனக்கொள் நீ.

"நீதி நெறி நிற்பவனே! நான் இன்னும் ஒரு மாத காலம் வரையில் தான் இங்கே உயிரோடு இருப்பேன். இந்த ஒரு மாத காலத்துக்குள் இராமன் வந்து மீட்காவிடில் நான் உயிர் விடுவது திண்ணம். மன்னனாகிய இராமபிரான் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இதை நீ உறுதியாக உன் மனத்தில் கொள்வாயாக."

* * *

நீதியோய் - நீதி நெறி நிற்பவனே! யான் இன்னும் ஒரு திங்கள் ஈண்டு இருப்பல் - இன்னும் ஒரு மாத காலமே நான்

இங்கே இருப்பேன். பின்னை ஆவி பிடிக்கின்றிலேன் - பிறகு உயிரோடிருக்கமாட்டேன்; அந்த மன்னன் ஆணை - அந்த இராமபிரான் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்; நின்னை நோக்கிப் பகர்ந்தது இதனை - உன்னைப்பார்த்துச் சொன்ன இந்த உறுதியை; நீ மனக்கொள் - உன் மனதிலே திடமாக வைத்துக் கொள்வாயாக.

* * *

ஆரந்தாழ் திரு மார்பற்கு
அமைந்த தோர்
தாரந்தான் அலள் ஏனும்
தயா என்னும்
ஈரம் தான் அகத்தில்லை
என்றாலும் தன்
வீரம் காத்தலை வேண்டு
என்று விளம்புவாய் நீ.

இராமபிரானுடைய மனைவி நான். என்னை மீட்டுச் செல்ல வேண்டும் என்கிற கடமைக்காக இல்லாவிட்டாலும் என் மீது கருணை என்ற ஈரப்பசை தன் நெஞ்சிலே இல்லா விட்டாலும் தன்னுடைய வீரத்தை நிலை நாட்டுதற் பொருட்டாவது இங்கு வந்து போரிட்டு என்னை மீட்கச் சொல்லு.

* * *

ஆரம் தாழ் திரு மார்பற்கு - மாலையணிந்த அழகிய மார்புடைய இராமபிரானுக்கு; அமைந்தது - ஏற்ற; ஓர் தாரம் தான் அலள் ஏனும் - மனைவி என்ற முறையில் அல்லாவிடினும்; தயா எனும் ஈரம் தான் அகத்தில்லை என்றாலும் தயை என்கிற ஈரப்பசை மனத்தில் இல்லா விடினும்; தன் வீரம் காத்தலை - தனக்கே உரிய வீரத்

தன்மையைக் காத்தல்; வேண்டும் என்று - நீர் விரும்பத் தக்கது என்று; நீ விளம்புவாய் - நீ சொல்வாயாக.

*　　*　　*

ஏத்தும் வென்றி
　　இளையவற்கு ஈது ஒரு
வார்த்தை சொல்லுதி
　　மன் அருளால் எனைக்
காத்திருந்த தனக்கே
　　கடனிடை
கோத்த வெஞ்சிறை
　　வீடென்று கூறுவாய்.

இராமபிரான் இட்ட கட்டளைப்படி என்னைக் காத்து நின்றார் இளைய பெருமாள். நடுவிலே வந்து புகுந்தது இச் சிறை. இதனின்று என்னை மீட்க வேண்டிய கடமையும் உண்டு என்று அந்த இளையவரிடம் சொல்லு.

*　　*　　*

ஏத்தும் வென்றி இளையவற்கு - யாவரும் கொண்டாடும் வெற்றி மேம்பாடுடைய இளைய பெருமாளுக்கு; மன் அருளால் - இராமபிரானுடைய கட்டளைப்படி; எனைக் காத்திருந்த - எனக்குக் காவல் இருந்த; தனக்கே - அவர் தமக்கே; இடை கோத்த - நடுவில் வந்து புகுந்த; வெம் சிறை - வெம்மை பொருந்திய இச் சிறையிலிருந்து; வீடு - விடுதலை அளிக்க வேண்டியது; கடன் - கடமையாகும் என்று; ஈது ஒரு வார்த்தை சொல்லுதி - இந்த ஒரு செய்தியைச் சொல்லுவாயாக.

*　　*　　*

திங்கள் ஒன்றில் என்
செய்தவம் தீர்ந்ததால்
இங்கு வந்திலனே எனின்
யாணர் நீர்க்
கங்கையாற்றங்
கரை அடியேற்குத் தன்
செங்கையால் கடன்
செய்கென்று செப்புவாய்.

ஒரு மாத காலத்துக்குள் இராமன் இங்கு வரவில்லையானால், கங்கையாற்றின் கரையிலே எனக்கு அந்திம கிரியைச் செய்யும்படி சொல்வாய்.

* * *

திங்கள் ஒன்றில் - நான் முன் கூறியபடி ஒரு மாத காலத்தில்; என் செய் தவம் தீர்ந்ததால் - நான் உயிர் வைத்திருப்பதாகச் சொன்ன தவ நியமம் முடிந்துவிடும் ஆதலால்; இங்கு வந்திலேன் எனின் - அந்தக் கால அளவுக்குள் இராமபிரான் இங்கு வரவில்லையானால்; யாணர் நீர்க் கங்கை ஆற்றங்கரை - அழகிய நீர்ப் பெருக்கினை உடைய கங்கை ஆற்றின் கரையிலே; அடியேற்கும் - அடியளாகிய எனக்கும்; தம் செம் கையால் - தமது சிவந்த கைகளால்; கடன் செய்க என்று - இறந்தவர்க்குச் செய்யும் அந்திம கிரியையாகிய கடனைச் செய்யுமாறு; செப்புவாய் - சொல்வாய்.

* * *

சிறக்கு மாமியர் மூவர்க்கும்
சீதை ஆண்டு
இறக்கின்றாள் தொழுதாள்
எனும் இன்ன சொல்

அறத்தினாயகன் பால்
அருள் இன்மையால்
மறக்குமாயினும் நீ
மறவேல் ஐயா!

"எனது மாமிமாராகிய கௌசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவரிட்மும் உமது மருமகளாகிய சீதை இலங்கையிலே இறக்கும் நிலையில் இருக்கின்றாள். உங்களுக்குத் தனது வணக்கம் தெரிவித்தாள் என்று சொல்வாய் ஐயா! தருமப் பிரபுவாகிய இராமன் என் மீது கருணை இன்மையால் சொல்ல மறப்பினும் மறவாமல் நீ சொல், ஐயா!"

* * *

ஐயா! - அப்பனே! சிறக்கும் - சிறப்பு மிக்க; மாமியர் மூவர்க்கும் - என் மாமியார்களான கௌசலை, கைகேயி, சுமத்திரை ஆகிய மூவருக்கும்; ஆண்டு இறக்கின்றாள் சீதை - அந்த இலங்கையிலே இறக்கும் நிலையில் உள்ள சீதை; தொழுதாள் எனும் - உங்களை வணங்கினாள் என்ற; இன்ன சொல் - இந்த வார்த்தையை; அறத்தின் நாயகன் பால் - தருமத்தின் தலைவனாகிய இராமபிரானிடத்திலே; அருள் இன்மையால் - கருணை இல்லாததால்; மறக்குமாயினும் - என்னைப் பற்றி என் மாமியாரிடம் சொல்ல அவன் மறந்து போனாலும்; நீ மறவேல் - நீ மறவாதே.

* * *

வந்து எனைக் கரம்
பற்றிய வைகல் வாய்
இந்த இப் பிறவிக்கு
இரு மாதரைச்

சிந்தையாலுந் தொடேன்
என்ற செவ்வரம்
தந்த வார்த்தை
திருச் செவி சாற்றுவாய்.

அந்த நாளிலே மிதிலா நகரிலே வந்து என் கரம் தொட்டு மணம் முடித்தபோது, இப் பிறவியிலே மற்றொரு மாதைச் சிந்தையாலும் நினையேன் என்று அளித்த வரத்தை அவர் காதிலே மெல்லச் சொல்லுவாய்.

* * *

வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய் - இராமபிரான் மிதிலா நகரிலே வந்து எனை மணந்து கொண்ட அந்த நாளில்; இந்த இ பிறவிக்கு - இந்த மானிடப் பிறவியில்; இரு மாதரை - இரண்டாவது பெண்ணை; சிந்தையாலும் தொடேன் - மனத்தாலும் நினைக்க மாட்டேன்; என்ற - என்று உறுதிமொழி; செவ்வரம் தந்த வார்த்தை - சிறந்த வரம் போன்ற செய்தியை; திருச்செவி - அவர் காதிலே; சாற்றுவாய் - (மெல்ல) சொல்லுவாய்.

* * *

ஈண்டு நான் இருந்து
இன் உயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து
தன் மேனியைத்
தீண்டலானதோர்
தீவினை தீர் வரம்
வேண்டினாள் தொழுது
என்று விளம்புவாய்.

இந்த இலங்கையிலே இருக்கும் என்னை நீங்கள் மீட்காமல் நானும் இறந்து படுவேனாயின், மீண்டும் வந்து

இந்த உலகிலே பிறந்து இராமபிரானின் திருமேனியைத் தழுவும் பாக்கியமுள்ளதொரு வரம் தருமாறு அவரை வேண்டினேன் என்று சொல்.

* * *

ஈண்டு - இந்த இலங்கையிலே; யான் இருந்து - நான் சிறை மீட்கப்படாமல் இருந்து; இன் உயிர் மாயினும் - இனிய உயிர் நீங்கி மாண்டு போயினும்; மீண்டு வந்து பிறந்து - மறுபடியும் உலகில் நான் பிறந்து; தான் மேனியை தீண்டலாவது - அப் பெருமானுடைய திருமேனி தழுவி மகிழும்படியான; ஓர் தீவினைதீர் வரம் - ஒரு நல்ல பாக்கியமுள்ள வரம்; தொழுது வேண்டினாள் - வணங்கிக் கேட்டுக் கொண்டாள்; என்று விளம்புவாய் - என்று நீ விண்ணப்பம் செய்வாயாக.

* * *

எந்தையர் முதலினர்
　　கிளைஞர் யார்க்கும் என்
வந்தனை விளம்புதி
　　கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனை
　　தொடர்ந்து காத்துப் போய்
அந்தமில் திரு நகர்க்கு
　　அரசனாக்கு என்பாய்.

எனது தந்தைக்கும் இதர சுற்றத்தினருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவிப்பாயாக. இராமபிரானைத் தொடர்ந்து பாதுகாத்து அயோத்திக்குப் போய் அங்கே அவருக்கு முடிசூட்டுமாறு சுக்கிரீவனை நான் கேட்டுக் கொண்டதாகச் சொல்.

* * *

எந்தையர் முதலினர் - எனது தந்தையாகிய கனக மகாராஜன் முதலாய; கிளைஞர் யார்க்கும் - என் சுற்றத்தார் எல்லாருக்கும்; என் வந்தனை விளம்புதி - எனது வணக்கத்தைத் தெரிவிப்பாயாக; கவியின் மன்னனை - வானரங்களுக்கு அரசனாகிய சுக்கிரீவனை நோக்கி; சுந்தரத் தோளனை - அழகிய தோள்களை உடையவனாகிய இராமபிரானை; தொடர்ந்து - பின் தொடர்ந்து; காத்து - பாதுகாத்து; போய் - அயோதிக்குச் சென்று; அந்தம் இல் திரு நகர்க்கு - அழிவற்றதான அழகிய அந்த அயோத்திக்கு; அரசன் ஆக்கு - முடி சூட்டி அரசனாக்குவாயாக என்று; (நான் கேட்டுக் கொண்டதாக) என்பாய் - சொல்வாயாக.

ஈண்டு ஒரு திங்கள் நீ
இடரின் வைகவும்
வேண்டுவது அன்று; யான்
விரைவில் வீரனைக்
காண்டலே குறைவு; பின்
காலம் வேண்டுமோ?
ஆண்டகை இனி ஒரு
பொழுதும் ஆற்றுமோ?

"இன்னும் ஒரு மாத காலம் இத் துன்பத்தை சகித்துக் கொண்டு உயிரோடிருப்பேன் என்று சொன்னாயே, தாயே! அந்த ஒரு மாத காலம் கூட வேண்டுவது இல்லை. நான் வேகமாகச் சென்று இராமபிரானிடம் சொல்ல வேண்டியது ஒன்றுதான் குறை. அடுத்த நிமிடமே புறப்பட்டு வருவார். கணமும் தாமதிக்க மாட்டார்."

* * *

ஈண்டு - இங்கு; ஒரு திங்கள் - இன்னும் ஒரு மாத காலம்; நீ இடரின் வைகவும் - நீ துன்பத்துடனே உயிர் வைத்துக் கொண்டிருக்கப் போவதாகச் சொன்னாயே;

வேண்டுவது அன்று - அது வேண்டுவது இல்லை; யான் விரைவில் வீரனைக்காண்டவே குறைவு - நான் விரைந்து சென்று வீரனான இராமபிரானை காண்பது ஒன்று தான் குறைவு; பின் காலம் வேண்டுமோ - அதற்குப் பிறகு கால தாமதம் வேண்டுமோ? (வேண்டாம்) ஆண்டகை - இராம பிரான்; இனி ஒரு பொழுதும் ஆற்றுமோ - ஆடவரிலே சிறந்த இராமபிரான் இனி ஒரு கணமும் பொறுத்திருப் பாரோ? (இருக்கவே மாட்டார்)

* * *

ஆவி உண்டு என்னும்
  ஈதுண்டு உன் ஆருயிர்ச்
சேவகன் திருவுருத்
  தீண்டத் தீந்திலாப்
பூவிலை; தளிரிலை;
  பொரிந்து வெந்திலாக்
காவிலை; கொடியிலை
  நெடிய கானெலாம்.

இராமபிரான் உயிருடன் இருக்கிறான் என்று மட்டும் கூறலாமேயன்றி வேறு எதுவும் கூறிவிட முடியாது. உணர்ச்சியற்றவனாயிருக்கிறான். அவனது விரகத் தீயால் அவன் தீண்டிய சோலை, கொடி, தளிர், பூ எல்லாம் எரிந்து போயின; பொரிந்து போயின; வெந்து போயின.

* * *

ஆவி உண்டு - இராமபிரானுக்கு உயிர் உள்ளது; என்னும் ஈது உண்டு - என்று சொல்வதற்கு அடையாளம் உண்டு (அவ்வளவு தான்); நெடிய கான் எலாம் - நீண்ட காடு எங்கும்; உன் ஆருயிர் சேவகன் - உன் அரிய உயிர் போன்ற மகாவீரன் இராமனுடைய; திருஉரு - அழகிய திருமேனி; தீண்ட - படுவதால்; தீந்து இலா - எரிந்து போகாத; பூ இலை தளிர் இலை - பூவும் இல்லை; தளிரும் இல்லை; பொரிந்து

வெந்திலா - பொரிபோலாகி வெந்து; போகாத; கா இலை சோலை இல்லை; கொடி இலை - கொடிகளும் இல்லை.

*    *    *

மத்துறு தயிரென
    வந்து சென்றிடை
தத்துறும் உயிரொடு
    புலன்கள் தள்ளுறும்
பித்த நின் பிரிவினில்
    பிறந்த வேதனை
எத்தனை உள அவை
    எண்ணும் ஈட்டவோ?

உன்னுடைய பிரிவினால் இராமன் அடைந்துள்ள துன்பம் இவ்வளவு என்று சொல்ல முடியாது. புலன்கள் எல்லாம் தன் செயலற்று உணர்ச்சியற்றுப் பித்துப் பிடித்தவன் போலிருக்கிறான். மத்தினால் கடையப் பெறும் தயிர் எப்படி குழம்புமோ அப்படிக் குழம்பியிருக்கிறான்.

*    *    *

மத்து உறு தயிர் என - மத்தினால் கடையப்படும் தயிர் குழம்புவது போல; வந்து சென்று குடை தந்துறும் -முன்னும் பின்னும் சென்று இடையே தடுமாறி உழலும்; உயிர் ஒடும் - உயிரினோடும்; புலன்கள் தள்ளுறும் பித்தம் - ஐம்புலன் களும் தள்ளப்பட்டு உணர்ச்சியற்று நிற்கும் பைத்திய நிலை; எத்தனை உள் - எத்தனை விதம் உள்ளனவோ; அவை - அவை எல்லாம்; நின் பிரிவினில் பிறந்த வேதனை - உன் பிரிவினால் இராமபிரானுக்கு உண்டான வேதனைகளே; எண்ணும் ஈட்டவோ? - அவை மனத்தினால் சிந்தித்துப் பார்க்கவும் கூடியனவோ?

*    *    *

"இந் நிலை உடையவன்
தரிக்கும் என்று எணும்
பொய்ந்நிலை காண்டி; யான்
புகன்ற யாவும் உன்
கைந்நிலை நெல்லியம்
கனியிற் காட்டுகேன்
மெய்ந்நிலை உணர்ந்து நீ
விடை தந்து ஈ" என்றான்.

"இத்தகைய மனோநிலை கொண்டுள்ள இராமன் உன்னை மீட்டுச் செல்ல ஓடி வராமல் உயிர் கொண்டு தாமதிப்பான் என்று நினைக்கிறாயே அது பொய் நிலை; உண்மை நிலை அதுவன்று. நான் சொன்னவை எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுவேன்."

* * *

இந்நிலை உடையவன் - இத்தகைய மனச் சோர்வுடைய இராமபிரான்; தரிக்கும் என்று எணும் - உன்னைப் பிரிந்து உயிர் தரிப்பான் என்று நினைக்கிறாயே, (தாமதிப்பான் என்று கருதுகிறாயே-அது); பொய் நிலை - உண்மையல்லாத நிலையாகும்; காண்டி - அதை நீ நேரிலே காண்பாய்; மெய் நிலை - இத்தகைய உண்மை நிலையை; நீ உணர்ந்து - நீ அறிந்து; விடை தந்து ஈ - விடை தந்து அருள்; யான் புகன்ற யாவும் - நான் கூறியன எல்லாம்; உன் கை நிலை நெல்லி அம் கனியில் - உனது உள்ளங்கை நெல்லிக் கனி போல்; காட்டுவேன் - காட்ட வல்லேன்.

* * *

தீர்த்தனும் கவிக்குலத்து
இறையும் தேவி நின்
வார்த்தை கேட்டு உவப்பதன்
முன்ன மாக்கடல்

தூர்த்தன இலங்கையைச்
சூழ்ந்து மாக்குரங்கு
ஆர்த்தன கேட்டு உவந்து
இருத்தி அன்னை நீ

தேவியாகிய நீ என் மூலம் சொல்லியனுப்பிய சொற்கள் கேட்டு இராமபிரானும் சுக்கிரீவனும் மகிழ்கிற அந்தக் கண நேரத்திற்கு முன்பே பெரிய பெரிய வானரங்கள் எல்லாம் இந்த இலங்கையைச் சூழ்ந்து கொண்டு பெரு முழக்கம் செய்வன கேட்பாய்.

* * *

அன்னை - தாயே! தீர்த்தனும் - தூயவனாகிய இராம பிரானும்; கவிக்குலத்து இறையும் - குரங்கினங்களின் அரசனாகிய சுக்கிரீவனும்; தேவி நின் வார்த்தை கேட்டு - தேவியான நீ சொல்லியனுப்பிய சொற்களைக் கேட்டு; உவப்பதன் முன் - மகிழ்வதன் முன்னதாக; மா கடல் தூர்த்தன - இடையேயுள்ள பெரிய கடலைத் தூர்த்தவை களாய்; இலங்கையைச் சூழ்ந்து - இந்த இலங்கைச் சுற்றி வளைத்துக் கொண்டு; மா குரங்கு - பெரிய குரங்குகள்; ஆர்த்தன கேட்டு - பெரு முழக்கம் செய்வன கேட்டு; நீ உவந்து இருத்தி - நீ மகிழ்ந்திருப்பாயாக.

* * *

எண்ணரும் பெரும் படை
ஈண்டி இந் நகர்
நண்ணிய பொழுதது
நடுவண் நங்கை நீ
வில்லுறு கலுழன் மேல்
விளங்கும் விண்டுவின்
கண்ணனை என் நெடு
புயத்தில் காண்டியால்.

வெகு சீக்கிரத்திலே வானரப் படைகள் இந்த இலங்கை நகரை அடையும். அப் படை நடுவே, கருடாழ்வார்மீது விளங்கும் திருமால் போலே எனது தோள்கள்மீது இராமபிரான் எழுந்தருளியிருக்கக் காண்பாய்.

*　　　*　　　*

நங்கை - பிராட்டியே! எண் அரும் பெரும் படை - கணக்கிட முடியாத பெரிய வானர சேனை; ஈண்டி - திரண்டு; இ நகர் நண்ணிய பொழுது - இந்த இலங்கை நகரை அடைந்த போது; அது நடுவண் - அந்த வானரப் படை நடுவே; விண் உறு கலுழன் மேல் விளங்கும் - வானத்திலே சஞ்சரிக்கின்ற கருடன்மீது எழுந்தருளி விளங்கும்; விண்டுவின் - மகாவிஷ்ணுவைப் போல; என் நெடு புயத்தில் - என்னுடைய நெடிய தோள்களின் மீது; கண்ணனை - கமலக் கண்ணனாகிய இராமபிரானை; காண்டி - நீ காண்பாய்.

*　　　*　　　*

அங்கதன் தோள் மிசை
　　இளவல் அம் மலைப்
பொங்கு இளம் கதிர் எனப்
　　பொலியப் போர்ப் படை
இங்கு வந்து இறுக்கும் நீ
　　இடரின் எய்துறும்
சங்கையும் நீங்குதி
　　தனிமை நீங்குவாய்.

உதயகிரியிலே எழும் இளஞாயிறு போல லட்சுமணன் அங்கதன் தோள்மீது வீற்றிருப்பான். வானரப் படைகள் இந்த இலங்கையிலே வந்து இறங்கும். உனது துன்பம் நீங்கும். இராமன் வருவானோ மாட்டானோ என்ற ஐயமும் நீங்கும். இராமனைப் பிரிந்து இருக்கின்ற உனது தனிமையும் நீங்குவாய்.

அங்கதன் தோள் மிசை - அங்கதனுடைய தோள்களின் மீது; இளவல் - இளைய பெருமாளாகிய லட்சுமணன்; அம் மலை பொங்கு இளம் கதிர் எனப்பொரிய - அழகிய உதயகிரிமேல் கிளம்பித் தோன்றும் எழு ஞாயிறு ஒப்ப விளங்க; போர் படை - போரில் வல்ல வானரப் படைகள்; இங்கு வந்து இறுக்கும் - இந்த இலங்கையில் வந்து இறங்கித் தங்கும்; நீ இடரின் எய்தறும் சங்கையும் - நீ இனித் துன்பமடைவாய் என்ற சந்தேகத்தையும்; நீங்குதி - நீங்கி இருப்பாய்; தனிமை நீங்குவாய் - இராமபிரானை விட்டுத் தனித்திருக்கும் இந் நிலைமையும் நீங்குவாய்.

*　　　*　　　*

சூடையின் மணி கண்மணி
　　ஒப்பது தொல் நாள்
ஆடையின் கண் இருந்தது
　　பேர் அடையாளம்
நாடி வந்து எனது இன் உயிர்
　　நல்கினை நல்லோய்
கோடி என்று கொடுத்தனள்
　　மெய் புகழ் கொண்டாள்.

"என்னைத் தேடி வந்து எனக்கு உயிரளித்த நல்லவனே! எனது கண்மணி போன்ற சூடாமணியை எனது ஆடையிலே முடிந்து வைத்திருந்தேன். அதைத் தருகிறேன். பெற்றுக் கொள். என்னைக் கண்டதற்கு அடையாளமாக இதை அவனிடம் கொடு" என்று கூறி சூடாமணியை அநுமனிடம் அளித்தாள்.

அநுமனும் வணங்கி அதை வாங்கிக்கொண்டான்.

சூடாமணி என்பது பெண்கள் தலையிலே சூட்டிக் கொள்ளும் ஓர் இரத்தின ஆபரணம். சூரிய வமிசத்து அரசர் ஒருவருக்கு வருண பகவான் வெகுமதியாக அளித்தது.

தசரத மகாராசனால் பேணிக் காப்பாற்றப்பட்டது. சீதாராம கல்யாணத்தின்போது மாமனார் வெகுமதியாகத் தசரதன் சீதைக்கு அளித்தது சீதையால் தன் கண்மணி போல் பாதுகாத்துத் தனது ஆடையில் முடிந்து வைக்கப் பட்டது.

*　　　*　　　*

நாடி வந்து - என்னைத் தேடி வந்து; எனது இன் உயிர் நல்கினை - எனது இனிய உயிர் கொடுத்தாய்; நல்லோய் - நல்லவனே! கண்மணி ஒப்பது - கண்ணின் கருவிழி ஒத்ததும் (அரியது) தொல்நாள் - நீண்ட நாளாக எனது ஆடையில் முடித்து வைக்கப்பட்டு இருந்ததும்;(ஆகிய) சூடையின் மணி- இந்தச் சூடாமணியை; பேர் அடையாளம் - பெரிய அடையாளமாகக்; கோடி - கொள்வாயாக; என்று கொடுத்தனள் மெய் புகழ் கொண்டாள்.

*　　　*　　　*

தொழுது வாங்கினன்;
　　சுற்றிய தூசினின் முற்றப்
பழுதுறாவகை பந்தனை
　　செய்தனன்; பல் கால்
அழுது மும்மை வலம் கொடு
　　இறைஞ்சினன்; அன்போடு
எழுது பாவையும் ஏத்தினாள்;
　　ஏகினன் இப்பால்.

சீதையை வணங்கி அவள் தந்த சூடாமணியைப் பெற்றுக் கொண்டான் அநுமன். தன்னுடைய ஆடையிலே அதைப் பத்திரமாக முடிந்து கொண்டான். அந்த சீதா தேவியைப் பிரியவேண்டுமே என்று அழுதான். மும்முறை பிராட்டியை வலம் வந்தான். வணங்கினான். பிராட்டியும் அநுமனை அன்புடன் ஆசீர்வதித்தாள். சென்றான் அநுமன்.

தொழுது - சீதையை வணங்கி; வாங்கினான் - அநுமன் அந்தச் சூடாமணியை வாங்கிக் கொண்டு; முற்ற பழுது உறா வகை - அதற்கு எவ்வித பழுதும் வராதபடி; சுற்றிய தூசினின் - தான் உடுத்திருந்த ஆடையில்; பந்தனை செய்தனன் - முடிந்து பத்திரபடுத்தி வைத்துக் கொண்டான்; பல்கால் அழுது - சீதா பிராட்டியைப் பிரிந்து போக வேண்டுமே என்று பல முறையும் அழுது; மும்மை வலம் கொண்டு - மும்முறை பிரதக்ஷிணம் செய்து; இறைஞ்சினன் - வணங்கினான்; எழுது பாவையும் - சித்திரத்தில் எழுதிய பாவை போன்ற சீதா பிராட்டியும்; அன்போடு ஏத்தினள் அன்புடன் அநுமனைப் புகழ்ந்து ஆசீர்வதித்தனள்; ஏகினன் - அநுமனும் அவ்விடம் விட்டுச் சென்றான்; இப்பால் - இதன் பிறகு யாது நடந்தது என்று கூறுவாம்.

* * *

சூடாமணியைப் பெற்றுக்கொண்டு அப்பால் சென்ற அநுமன் சிறிது நின்றான்; யோசித்தான்.

வந்தாயிற்று. சீதா பிராட்டியைக் கண்டாயிற்று. "சென்றேன்; கண்டேன், வந்தேன்" என்று சொன்னால் அதிலே என்ன பெருமை இருக்கிறது? ஆகவே பெருமை தரும் செயல் ஏதாவது செய்யவேண்டும் என்று கருதினான்.

அசோக வனத்தை அழிக்கத் தொடங்கினான். "அசோக வனத்தை அழித்தால் அரக்கர் சண்டைக்கு வருவர். அவன் அவர்களை அழித்தால் இராவணனே போருக்கு வருவான். அப்போது அவனது தலைகள் பத்தையும் நன்றாக இடித்து நொறுக்கிவிட்டு ஊருக்குப் போனால் அதுவே ஆண்மைக்குரிய செயல் ஆகும்" என்று கருதினான் அநுமன்.

பேர் உருக் கொண்டான் அநுமன். முன் காலத்திலே பூமியைத் தன் பற்களிடையே கொண்ட வராகமூர்த்தியை ஒத்தான். காவல் மிகுந்த அசோக வனம் எனும் அந்த சோலையில் உள்ள மரங்களைத் தன் கால்களால் தாக்கித் துகைத்து அழித்தான்.

மரங்கள் சில முறிந்தன; வேறு சில பிளந்தன. மற்றும் சில கீழ் மேலாகக் கவிழ்ந்தன: துண்டு துண்டாயின. வேரோடு பிடுங்கப்பட்டு பெயர்ந்து ஓடின; வெந்தன சில; விண்ணில் பறந்தன சில; கடலில் வீழ்ந்தன சில; அரக்கர் மாளிகைகள் மேல் விழுந்து அவற்றைத் தகர்த்தன சில.

ஆனைக் கட்டும் இடங்களும், ஆடல் அரங்குகளும், அரக்கர் மதுபானம் செய்யும் இடங்களும், குதிரை லாயங் களும் நாசமாயின. எதனால்? அநுமன் பிடுங்கி வீசிய மரங்களால்.

பருவங்கள் ஆறு. கார், கூதிர், முன் பனி, பின் பனி, இளவேனில், முதுவேனில் என்பன. இந்த ஆறு பருவங் களுக்கும் உரிய தேவர் அறுவர். இந்த அறுவரும் இராவணனுடைய கட்டளைப்படி அந்த அசோகவனத்தைக் காவல் புரிந்து வந்தனர். அந்த வனத்தை மாருதி அழித்தது கண்டு அஞ்சினர் அவர். இராவணனிடம் சென்று கூறினர்.

இராவணன் சீறினான். எண்பதாயிரம் கிங்கரர்களை ஏவினான்.

"அந்த குரங்கு தப்பி ஓட முடியாதபடி வழியடைத்து அதைக் கொல்லாமல் உயிருடன் பிடித்து வருக" என்று கட்டளையிட்டான்.

வெகு வேகமாக வந்த அக் கிங்கரர்களை வெகு சீக்கிரத்தில் யமனுலகுக்கு அனுப்பினான் அநுமன். பிறகு சம்புமாலி வந்தான். அவனையும் யமனுலகுக்கு அனுப்பி னான் அநுமன். சம்புமாலியைத் தொடர்ந்து பஞ்ச சேனாபதிகள் பெரும் படையுடன் வந்து அழிந்தார்கள்.

இந்திரசித்தின் தம்பியும் மண்டோதரியின் இளைய குமாரனுமாகிய அக்ஷய குமாரன் வந்து அநுமனுடன் போரிட்டான். அவனும் யமனுலகு சென்றான். கடைசியாக இந்திரசித்து வந்தான். போரிட்டான். பிரமாஸ்திரத்தால்

அநுமனைக் கட்டிப் போட்டான். ஒரு முகூர்த்தக் காலம் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று ஆதியில் பிரமன் விதித்தபடியால் அநுமனும் அதற்குக் கட்டுப்பட்டான்.

கட்டுண்ட அநுமனை அரக்கர் எல்லாரும் தெருத் தெருவாக இழுத்துச் சென்று இராவணன் முன் நிறுத்தினர்.

*　　*　　*

நேமியோ குலிசியோ?
　　நெடும் கணிச்சியோ?
தாமரைக் கிழவனோ?
　　தறுகண் பல்தலைப்
பூமி தாங்கும் ஒருவனோ?
　　பொருது முற்றுவான்
நாமமும் உருவமும்
　　கரந்து நண்ணினாய்.

"யார் நீ? சக்கராயுதம் ஏந்திய திருமாலோ? வச்சிராயுதம் தாங்கிய இந்திரனோ? தாமரையில் வசிக்கும் பிரமனோ? பூமியைத் தாங்கும் ஆதிசேஷனா? பெயரும் உருவமும் மறைத்து இங்கு வந்தது எதற்கு? போரிட்டு அழிந்து போவதற்கா?'

*　　*　　*

நேமியோ - சக்கரம் ஏந்திய திருமாலோ? குலிசியோ - வச்சிரப்படை ஏந்திய இந்திரனோ? நெடும் கணிச்சியோ - நீண்ட சூலாயுதம் ஏந்திய சிவனோ; தாமரைக் கிழவனோ - தாமரை மலரில் தோன்றிய பிரம தேவனோ; தறுகண் - அஞ்சாமையும்; பல் தலை - பல தலைகளும் கொண்டு; பூமி தாங்கும் ஒருவனோ - பூமியைத் தாங்கி நிற்கும் ஆதிசேடனோ; பொருது - போர் செய்து; அழிவான் - அழிந்து போவதற்காக; நாமமும் - பெயரும்; உருவமும் -

தோற்றமும்; கரந்து - மறைத்து; நண்ணினாய் - இங்கு வந்தாய்.

*　　　*　　　*

யாரை நீ? என்னை இங்கு
　　எய்து காரியம்?
ஆர் உனை விடுத்தவர்?
　　அறிய ஆணையால்
சோர்விலை சொல்லுதி
　　என்னச் சொல்லினான்
வேரொடும் அமரர் தம்
　　புகழ் விழுங்கினான்.

"யார் நீ? இங்கு எதற்காக வந்தாய்? உன்னை ஏவியவர் யார்? அறியும்படி சொல். இது என் கட்டளை" என்றான் தேவர் புகழை வேரோடும் விழுங்கிய இராவணன்.

*　　　*　　　*

யாரை நீ - சொன்ன இவர்களில் யார் நீ; இங்கு எய்து காரணம் என்னை - இங்கு வந்ததன் காரணம் யாது? ஆர் உனை மிடுத்தவர் - உன்னை அனுப்பியவர் யார்? அறிய - நான் அறிய விரும்பி; ஆணையால் - நான் இடும் கட்டளை; சோர்வு இலை - தவறுதல் இல்லாமல்; சொல்லுதி - சொல் வாயாக; என்னச் சொல்லினான் - என்று அநுமனை நோக்கிக் கூறினான்; வேரொடும் அமரர் தம் புகழ் விழுங்கினான் - தேவர்களது புகழை அடியோடு விழுங்கி யவனான இராவணன்.

*　　　*　　　*

சொல்லிய அனைவரும்
　　அல்லேன்; சொன்ன அப்
புல்லிய வலியினோர்
　　ஏவல் பூண்டிலேன்

அல்லி அம் கமலமே அனைய
செங்கண் ஓர்
வில்லிதன் தூதன் யான்
இலங்கை மேயினேன்.

நீ சொன்ன எவரும் அல்லேன்; நீ சொன்ன அந்த அற்ப வலிமை படைத்தவர் எவர்க்கும் நான் ஏவல் மேற்கொள்ள வில்லை. அன்றலர்ந்த குளிர்ந்த செந்தாமரை போன்ற சிவந்த கண்களை உடைய ஒப்பற்ற வில் வீரன் தூதன் யான். இலங்கை வந்துளேன்.

*　　　*　　　*

சொல்லிய அனைவரும் அல்லேன் - நீ சொல்லியவர் எவரும் அல்லேன்; சொன்ன - நீ சொன்ன; அப்புல்லிய வலியினோர் - அந்த அற்ப வலிமை படைத்தவரின்; ஏவல் பூண்டிலேன் - கட்டளையை மேற்கொண்டு வந்தேன் அல்லன்; அல்லி அம் கமலமே அனைய - அக இதழ்கள் நிறைந்த அழகிய செந்தாமரை மலர் போன்ற; செங்கண் - சிவந்த கண்கள் உடைய; ஓர் வில்லி தன் - ஒப்பற்ற வில் வீரனது; தூதன் - தூதனாக; யான் - நான்; இலங்கை மேவினன் - இலங்கை வந்தேன்.

*　　　*　　　*

ஈட்டிய வலியும் மேனாள்
இயற்றிய தவமும் யாணர்
கூட்டிய படையும் தேவர் கொடுத்த
நல்வரமும் கொட்பும்.
தீட்டிய பிறவும் எய்தித்
திருத்திய வாழ்வும் எல்லாம்
நீட்டிய பகழி ஒன்றால்
முதலொடு நீக்க நின்றான்.

நீங்கள் பெற்றுள்ள வலிமையையும், முற்பிறப்பில் செய்த தவமும், நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் படைகளையும், தேவர் கொடுத்த நல்ல வரங்களையும் நீங்கள் கொண்டுள்ள சிறப்புக்களையும், ஆங்காங்கே வெற்றித் தூண் நாட்டி நீங்கள் தீட்டியுள்ள மெய்க் கீர்த்தியையும் நீங்கள் பெற்ற பின் திருத்தி வைத்திருக்கிற ஆட்சியும், சுகபோக வாழ்வும் எல்லாம் நீட்டிய தனது கணை ஒன்றால் அடியோடு ஒழிக்கக் கங்கணம் கட்டி நிற்பவன்.

*　　　*　　　*

ஈட்டிய வலியும் - நீங்கள் பெற்றிருக்கின்ற உடல் வலிமையையும்; மேனாள் இயற்றிய தவமும்-முற்காலத்திலே நீங்கள் செய்திருக்கிற தவத்தையும்; யாணர் கூட்டிய படையும்-நீங்கள் சேர்த்து வைத்திருக்கிற ஆயுதங்களையும்; தேவர் கொடுத்த நல்வரமும் - தேவர்கள் உங்களுக்கு அளித்துள்ள நல்ல வரங்களையும்; கொட்பும் - மற்றும் நீங்கள் கொண்டுள்ள சிறப்புக்களையும்; தீட்டிய பிறவும் - நீங்கள் ஆங்காங்கு ஜெயஸ்தம்பங்கள் நாட்டி அவற்றிலே தீட்டி வைத்திருக்கிற வீரப் பிரதாபங்களையும் பிறவற்றையும்; எய்தித் திருத்திய வாழ்வும் - நீங்கள் பெற்றுப் பின் திருத்திக்கொண்ட அரசாட்சி, சுகபோக வாழ்வு முதலியவும்; எல்லாம் - இன்னும் உங்களுக்குரிய எல்லாவற்றையும்; நீட்டிய பகழி ஒன்றால் - நீண்ட தனது அம்பு ஒன்றினால்; முதலொடு நீகக - பூண்டோடு அழிக்க; நின்றான் - உறுதி கொண்டுள்ளான் அவன்.

*　　　•　　　*

தேவரும் பிறரும் அல்லன்
　　திசைக் களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன்
　　கயிலையங்கிரியும் அல்லன்;

மூவரும் அல்லன்; மற்றை
முனிவரும் அல்லன்; எல்லைப்
பூவலயத்தை ஆண்ட
புரவலன் புதல்வன் போலாம்.

அந்த வில் வீரன் தேவரும் அல்லன்; பிறரும் அல்லன்; திக்கஜங்கள் அல்லன்; அஷ்டதிக் பாலர் அல்லன்; கயிலை ஈசனும் அல்லன்; திருமூர்த்திகளும் அல்லன்; ஏனைய முனிவரும் அல்லன்; பூமியின் எல்லை வரை ஆண்ட தசரத சக்கரவர்த்தியின் புதல்வன் ஆவான்.

* * *

(அந்த வில் வீரன்) தேவரும் - தேவர்களும்; பிறரும் - மற்றையோரும் அல்லன்; திசைக்களிறு அல்லன் - அஷ்டதிக் கஜங்களும் அல்லன்; திக்கின் காவலர் அல்லன் - திசைக் காவலரும் அல்லன்; ஈசன் கயிலையங்கிரியும் அல்லன் - கயிலையங்கிரி ஈசனும் அல்லன்; மூவரும் அல்லன் – மும் மூர்த்திகளும் அல்லன்; மற்றை முனிவர்களும் அல்லன்; வேறு முனிவர்களும் அல்லன்; எல்லைப் பூவலயத்தை ஆண்ட - நிலவுலகின் எல்லை எதுஉண்டோ அதுவரை ஆண்ட; புரவலன் - தசரத சக்கரவர்த்தியின்; புதல்வன் - மைந்தன்.

* * *

அறம் தலை நிறுத்தி வேதம்
அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூணச்
செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்து உக நூறித் தக்கோர்
இடர் துடைத்து ஏக ஈண்டுப்
பிறந்தனன் தன் பொற் பாதம்
ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.

தருமத்தை நிலைநாட்டி, மக்கள்பால் அருள்சுரந்து வேதம் சொல்லிய நீதி முறைகளை அறிந்து உலகத்தினர் மேற்கொண்டு ஒழுகும்படி அவர்களை சன்மார்க்க நெறியிலே செலுத்தி தீயவரை அழித்து, நல்லவரைக் காத்து மீண்டும் தன் இருப்பிடம் சேர்வதன் பொருட்டு பொன்னார்ந்த தன் திருவடி துதிப்பார் தம் பிறவி அறுப்பவனாகிய திருமால் இவ்வுலகில் பிறந்துளான்.

* * *

தன் பொற்பாதம் ஏத்துவார் - தன் பொன்னான திருவடிகளைத் துதிப்போர்; பிறப்பு அறுப்பான் - பிறவியைப் போக்கி அருள்பவனாகிய திருமால்; அறம் தலை நிறுத்தி - தருமத்தை நிலை நாட்டி; வேதம் அருள் சுரந்து அறைந்த - வேதங்கள் கருணை கொண்டு மக்களுக்காக சொல்லிய; நீதித்திறம் தெரிந்து - நீதி முறைகளை அறிந்து. உலகம் பூண - உலகத்தினர் மேற்கொண்டு ஒழுகும்படி; செந்நெறி செலுத்தி - அவர்களைச் சீரிய வழியிலே செலுத்தி; தீயோர்-தீங்கு செய்வோரை; இறந்து உக நூறி - இறந்து ஒழிய அழித்து; தக்கோர் இடர் துடைத்து - நல்லவர் துன்பம் போக்கி; ஏக - தன் இருப்பிடம் சேர; ஈண்டுப் பிறந்தனன் - இவ்வுலகிலே பிறந்தவன்.

* * *

அன்னவர்க்கு அடிமை செய்வேன்
நாமதும் அநுமன் என்பேன்
நன்னுதல் தன்னைத் தேடி
நால் பெரும் திசையில் போந்த
மன்னரில் தென் பால் வந்த
தானைக்கு மன்னன்; வாலி
தன் மகன்; அவன் தன் தூதன்;
வந்தனன் தனியே என்றான்.

"அத்தகைய சக்கரவர்த்தித் திருமகனுக்கு ஏவல் செய்பவன் நான். அநுமன் என்பது என் பெயர். சீதையைத் தேடி நான்கு திக்கிலும் சென்ற வானர சேனைகளில் தெற்கு நோக்கி வந்த சேனைத் தலைவன் வாலியின் மகன். அவனுடைய தூதன் நான். தனியே வந்துளேன்" என்றான்.

*　*　*

அன்னவர்க்கு அடிமை செய்வேன் - அத் தன்மையனான சக்கரவர்த்தி திருமகனுக்கு அடிமைத் தொழில் செய்பவன் யான்; நாமமும் அநுமன் என்பேன் - அநுமன் எனும் பெயர் உடையேன்; நல் நுதல் தன்னைத் தேடி - அழகிய நெற்றியுடைய சீதையைத் தேடி; நால் பெரும் திசையும் போந்த - பெரிய திசை நான்கும் சென்ற; மன்னரில் - தலைவரில்; தென் பால் வந்த தானைக்கு - தென் திசை நோக்கி வந்த சேனைக்கு; மன்னன் - தலைவன்; வாலிதன் மகன் - வாலியின் மகன் அங்கதன் ஆவான்; அவன் தன் தூதன் - அவனது தூதனாய்; தனியேன் வந்தனன் - தனி ஒருவனாக வந்தேன் நான்; என்றான் - என்று சொன்னான்.

*　*　*

என்றலும் இலங்கை வேந்தன்
　　எயிற்றினம் எழிலி நாப்பண்
மின் திரிந்தது என்ன நக்கு
　　வாலி சேய் விடுத்த தூத!
வன் திறல் ஆய வாலி வலியன்
　　கொல்? அரசின் வாழ்க்கை
நன்று கொல்? என்ன யோடும்
　　நாயகன் தூதன் நக்கான்.

என்று இவ்வாறு அநுமன் சொல்லக் கேட்டான் இராவணன். கருமேகத்தின் ஊடே மின்னல் பளிச்சென்றது போல பல்லைக் காட்டிச் சிரித்தான்.

"வாலியின் மகனாகிய அங்கதன் அனுப்பிய தூதனே! வலிமை மிக்க வாலி நலமா? அவனது அரச வாழ்க்கை நன்கு நடைபெறுகிறதா?" என்று விசாரித்தான்.

அவ்விதம் விசாரிக்கவே இராம தூதன் இயம்பலுற்றான்.

* * *

என்றலும் - என்று அநுமன் சொன்ன உடனே; இலங்கை வேந்தன் - இலங்கை அரசனாகிய இராவணன்; எழிலி நாப்பண் - மேகத்தின் நடுவே; மின் திரிந்தது என்ன - மின்னல் பளிச்சிட்டது போல; எயிற்றினம் - பல் வரிசை தோன்ற; நக்கு - சிரித்து; வாலி சேய் விடுத்த தூத - வாலியின் மைந்தனாகிய அங்கதன் விடுத்த தூத; வன் திறல் ஆய வாலி - மிக்க வலிமையுடைய வாலி; வலியன் கொல் - உடல் வலிமையுடன் நலமாயிருக்கிறானா? அரசின் வாழ்க்கை நன்று கொல் - அவனது அரசு நன்கு நடைபெறுகிறதா? என்ன லோடும் - என்று கேட்ட அளவில்; நாயகன் தூதன் - இராம தூதன்; நக்கான் - இயம்பலுற்றான்.

* * *

திக் விஜயம் செய்து யாவரையும் போரில் வென்றான் இராவணன்; வாலியுடன் போர் செய்யக் கருதினான். வாலி இருந்த கிட்கிந்தை சென்றான்; அப்பொழுது வாலி அங்கே இல்லை; நான்கு கடலிலும் நீராடி நித்ய கர்மானுஷ்டானங்கள் செய்யச் சென்றிருந்தான் வாலி இருந்த இடம் தேடிச் சென்றான் இராவணன். தெற்குக் கடற்கரையிலே வாலியைக் கண்டான். அப்போது வாலி தியானத்தில். இருந்தான். வாலி அறியாமல் அவன் பின்னே சென்று கட்ட எண்ணி மெதுவாக ஓசை செய்யாமல் போனான்; அவன் தன் வால் அருகே வந்ததும் அந்த வாலினாலேயே அவனைச் சுற்றி அவனையும் தூக்கிக் கொண்டு வான வீதி வழியே மற்றைய கடல்களுக்கும் சென்று தன் கர்மானுஷ்டானங்களை முடித்துப் பின் தன் நகரடைந்து இராவணனை கீழே அவிழ்த்து விட்டான் வாலி. அதற்குள் மிகத்

துன்புற்றான் இராவணன்; அன்று முதல் வாலியின் நண்பன் ஆனான்.

* * *

அஞ்சலை! அரக்க! பார் விட்டு
அந்தரம் அடைந்தான் அன்றே
வெஞ்சின வாலி மீளான்;
வாளும் போய் விளிந்தது அன்றே
அஞ்சன மேனியான் தன்
அடுகணை ஒன்றால் மாள்கித்
துஞ்சினன்? எங்கள் வேந்தன்
சூரியன் தோன்றல் என்றான்.

"அஞ்சாதே! அரக்கனே! இம் மண் விட்டு விண் சென்றான் வாலி. இனித் திரும்பவும் வாரான். உன் கொட்டம் அடக்கிய அவன் வாளும் போயிற்று.

"மை வண்ணத்தனாகிய இராமனின் கணை ஒன்றினால் விண் புக்கான் வாலி. இப்பொழுது எங்கள் அரசன் சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவன் ஆவான்" என்றான்.

* * *

அரக்க - அரக்கனே! அஞ்சலை - அஞ்சாதே; வெம் சின வாலி - கொடிய கோபம் உடைய வாலியானவன்; அன்றே - சில மாதங்கள் முன்பே; பார் விட்டு - இந்நில வுலகு விட்டு; அந்தரம் அடைந்தான் - வான் உலகு புகுந்தான்; மீளான் - இனித் திரும்பி வரமாட்டான்; அன்றே - அவன் இறந்த அப்பொழுதே; வாளும் போய் விளிந்தது - அவனுடைய வாளும் அவனோடு போயிற்று; அஞ்சன மேனியான் தன் - மை போலும் கரிய நிறமுடைய இராமனின்; அடுகணை ஒன்றால் - பகையழிக்கும் அம்பு ஒன்றால்; மாள்கி - வருந்தி; துஞ்சினன் - இறந்தான்; எங்கள்

வேந்தன் - இப்போது எங்கள் அரசன்; சூரியன் தோன்றல் - சூரிய குமாரனாகிய சுக்கிரீவன்; என்றான்.

* * *

என்னுடைய ஈட்டினால் அவ்
வாலியை எறும்வாய் அம்பால்
இன்னுயிர் உண்டது? இப்போது
யாண்டையான் இராமன் என்பான்
அன்னவன் தேவி தன்னை
அங்கதன் நாடல் உற்ற
தன்மையை உரை செய்க என்னச்
சமீரணன் தனயன் சொல்வான்.

அந்த வாலியை இராமன் கொன்றது ஏன்? இராமன் மனைவி சீதையை அங்கதன் தேடி வந்த காரணம் என்ன? விளக்கமாகச் சொல் என்று கேட்டான் இராவணன். அநுமன் சொல்லத் தொடங்கினான்.

* * *

இராமன் என்பான் - இராமன் என்று சொல்லப் படுகிறவன்; எறும்வாய் அம்பால் - வலிமை பொருந்திய அம்பினாலே; அவ்வாலியை இன் உயிர் உண்டது - அந்த வாலியைக் கொன்றது; என் உடை ஈட்டினால் - என்ன கருதி? இப்போது யாண்டையான் - அந்த இராமன் இப்போது எங்கே இருக்கிறான்? அன்னவன் தேவி தன்னை - அவனுடைய தேவியாகிய சீதையை; அங்கதன் நாடல் உற்ற தன்மையை - அங்கதன் தேடி வந்த நிலையை; உரை செய்க என்ன - சொல்வாயாக என: சமீரணன் தனயன் - வாயு புத்திரனாகிய அநுமன்; சொல்வான் - பின் வருமாறு சொல்லத் தொடங்கினான்.

* * *

தேவியை நாடி வந்த செங்கணாற்கு
 எங்கள் கோமான்
ஆவி ஒன்றாக நட்டான்;
 அருந்துயர் துடைத்தி என்ன
ஓவியற்கு எழுத ஒண்ணா
 உருவத்தன் உருமையோடும்
கோவியல் செல்வம் முன்னே
 கொடுத்து வாலியையும் கொன்றான்.

இராமபிரான் தனது தேவியைத் தேடி வந்தான் சுக்ரீவன் அவனுடன் ஆருயிர் நட்புக் கொண்டான். வாலியினால் தனக்கு ஏற்பட்ட துன்பம் போக்குமாறு கேட்டுக் கொண்டான் சுக்ரீவன். அவனது மனைவியாகிய உருமையையும் அரச பதவியையும் அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தான் இராமன். வாலியைக் கொன்றான்.

* * *

தேவியை நாடி வந்த - தன் தேவியாகிய சீதையைத் தேடிக்கொண்டு வந்த; செங்கணாற்கு - சிவந்த கண்களை உடைய இராமபிரானுக்கு; எங்கள் கோமான் - எங்கள் தலைவனாகிய சுக்ரீவன்; ஆவி ஒன்று ஆக - இருவரும் ஓர் உயிர் போல; நட்டான் - நட்புக் கொண்டான்; அரும் துயர் துடைத்தி என்ன - வாலியால் தனக்கு ஏற்பட்ட பெரும் துன்பத்தை நீக்கி அருள வேண்ட; ஓவியர்க்கு எழுத ஒண்ணா உருவத்தன் - சித்திரம் எழுதுவோர் எழுத முடியாது திகைக்கும் உருவம் கொண்ட இராமன்; உருமையோடும் - சுக்ரீவன் மனைவியாகிய உருமையோடு; கோ இயல் செல்வம் - வானர அரசுக்கு இயல்பாக அமைந்த அரசு செல்வத்தையும் முன்னே உறுதியளித்து; வாலியையும் கொன்றான் - வாலியையும் கொன்றான்.

* * *

தம் முனைக் கொல்வித்து அன்னான்
கொன்றவர்க்கு அன்பு சான்ற
உம்மினத் தலைவன் ஏவ
யாது எமக்கு உரைக்கலுற்றது.
எம்முனைத் தூது வந்தாய்?
இகல்புரி தன்மை என்னை?
நொம் மெனக் கொல்லாம்
நெஞ்சம் அஞ்சலை நுவல்தி என்றான்.

"இன்னொருவனை அழைத்து வந்து தனக்கு மூத்தவனைக் கொல்லச் செய்து, அப்படிக் கொன்றவனுடன் நட்புக் கொண்டுள்ள உங்கள் குலத் தலைவன் எமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டது யாது? அஞ்சாமல் சொல். அவசரப்பட்டு உன்னைக் கொல்லமாட்டோம்" என்றான் அரக்கர் கோன்.

* * *

தம் முனைக் கொல்வித்து - தன்னுடைய முன்னவனை (பிறன் ஒருவனைக் கொண்டு) கொல்லச் செய்து; அன்னான் கொன்றவற்கு - அப்படிக் கொன்றவனுக்கு; அன்பு சான்ற - அன்பு கொண்ட; உம்மினத் தலைவன் ஏவ - உங்கள் இனத் தலைவனாகிய சுக்ரீவன் கட்டளையிட; எமக்கு உரைக்கல் உற்றது யாது? - நீ எனக்குச் சொல்ல வந்தது யாது? எம் முனைத் தூது வந்தாய் - எம் முன் ஒரு தூதனாக வந்த நீ; இகல் புரி தன்மை என்னை? - போர் கோலம் பூண்ட கருத்து யாது? நொம் எனக் கொல்லாம் - எல்லாவற்றையும் கேட்டுத் தெளியாமல் திடீரென்று உன்னைக் கொல்ல மாட்டோம். நெஞ்சம் அஞ்சலை - பயப்படாதே; நுவல்தி - சொல்வாய்; என்றான்-என்று கூறினான் இலங்கை வேந்தன்.

* * *

வெறுப்புண்டாய ஒருத்தியை வேண்டினால்
மறுப் புண்டாய பின் வாழ்கின்ற வாழ்வினில்
உறுப்புண்டாய மிக ஓங்கிய நாசியை
அறுப்புண்டாவது அழகெனலாகுமோ.

தன் மீது விருப்பமில்லாத பெண்மணி ஒருத்தியை விரும்பி, அவனால் மறுக்கப்பட்ட பின்பும் உயிர் வைத்துக் கொண்டு வாழ்கிற வாழ்க்கை என்ன வாழ்க்கை? மூக்கறு பட்டபின் முகத்துக்கு அழகுண்டோ?

* * *

வெறுப்புண்டாய ஒருத்தியை - தன் மீது பிரியமில்லாது வெறுப்புடைய பெண்மணி ஒருத்தியை; வேண்டினால் - விரும்பினால்; மறுப்பு உண்டாய பின் - நேரே மறுக்கப்பட்ட பின்பும்; வாழ்கின்ற வாழ்வில் - வெட்கமில்லாமல் உயிரை வைத்துக்கொண்டு வாழ்கிற வாழ்வை விட; உறுப்பு உண்டாய - பார்வைக்கு அழகிய அவயமாகிய; மிக ஓங்கிய நாசியை - எடுப்பாயுள்ள மூக்கை; அறுப்பு உண்டால் - ஒருவரால் அறுக்கப்படும் ஆயின்; அது - அந்த முகம்; அழகு எனல் ஆமோ - அழகுடையது என்று சொல்ல முடியுமோ.

* * *

பாரை நூறுவ
பற்பல பொற்புயம்
ஈரை நூறு தலை
உள எனினும்

ஊரை நூறுங்
கடுங்கனலுட் பொதி
சீரை நூறவை
சேமம் செலுத்துமோ?

உனக்கு இப்பொழுது இருப்பன போல் இருபது தோள்களும், பத்துத் தலைகளும் அன்றி ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் கூட இருந்தாலும் அவை உனக்கு நலன் தருமோ? தரமாட்டா. அவை எல்லாம் நெருப்புப் பொறியினை உள்ளடக்கிய கந்தைத் துணி போன்றனவே யாகும்.

* * *

பாரை நூறுவ பல் பல பொன் புயம் - உலகை அழிக்க வல்ல பற்பல அழகிய தோள்களும்; ஈர் ஐ நூறு தலை உள எனினும் - ஆயிரம் தலைகளும் உனக்கு உள்ளன என்றாலும்; சேமம் செலுத்துமோ? அவை உனக்கு நலன் தருமோ (தரா) அவை; ஊரை நூறும் கடும் கனல் உள் பொதி - அவை ஊரையே அழிக்க வல்ல கொடிய கனலினை உள்ளே கொண்டுள்ள; நூறு சீரை - பல சீலைகளே ஆம்.

* * *

ஈறில் நாள் உக,
எஞ்சல் இல்நல் திரு
நூறி, நொய்தினை ஆகி,
நுழைதியோ?
வேறும் இன்னும் நகை
ஆம் வினைத் தொழில்
தேறினார் பலர் காமிக்கும்
செவ்வியோய்,

தெளிந்த அறிவுடைய பலரும் விரும்பும் சிறப்புக்கள் பொருந்தியவனே! நீ பெற்ற மூன்றரைக் கோடி வாழ்நாளும் மூவுலகாளும் இச்செல்வமும் அழிய எளியவன் போலாகி இழித்து நகைத்தற்கான செயலில் நுழைய விரும்புகிறாயா?

* * *

தேறினார் பலர் - தெளிந்த ஞானமுடையோர் பலரும்; காமிக்கும் - விரும்பும்; செவ்வியோய் - சிறந்த குணங்களை உடையவனே; ஈறில் நாள் உக - அந்தமில்லாத உனது மூன்றரைக் கோடி ஆயுளும் சிந்தி அழிய; எஞ்சல் இல் நல் திருநூறி - குறைவு படாத மூவுலகாளும் நல்ல செல்வங்களையும் அழித்துக் கொண்டு; நொய்தினை ஆகி - எளியவனாகி; வேறும் - இப் பெருவாழ்வினை விட்டு வேறாகிய இன்னும் நகை ஆம் - இன்னும் நகைப்புக்கு இடமாகிய; வினைதொழில் - செய்கையில்; நுழைதியோ - நுழைய விரும்புகிறாயா?

* * *

ஆதலால் தன்
அரும் பெறல் செல்வமும்
ஓது பல் கிளையும்
உயிரும் உறச்
சீதையைத் தருக என்னச்
செப்பினான்
சோதியான் மகன்
நிற்கு என்று சொல்லினான்.

"பெறுதற்கு அரிய இச்செல்வமும், உனது சுற்றமும், உனது உயிரும் நிலைத்திருக்க வேண்டுமானால் இராமபிரானிடம் சீதையைக் கொண்டுவந்து கொடுத்துவிடு. என்று உனக்குச் சொல்லுமாறு என் மூலம் சொல்லி

அனுப்பினான் சூரியன் மகனாகிய சுக்ரீவன்" என்றான் அநுமன்.

*　　*　　*

ஆதலால் - ஆகையால்; தன் பெறல் அரும் செல்வமும் - பிறர் அடைதற்கு அரிய பெரிய செல்வமும்; ஓது பல் கிளையும் - பல பந்துக்கள் என்று சொல்லப்படுகிறவர்களும்; உயிரும் - உனது உயிரும்; உற - நிலை பெற்று இருக்க; சீதையைத் தருக என்னச் - சீதையை இராமன் பால் கொண்டு தருவாய் என்று; செப்பினான் - சொன்னான்; சோதியான் மகன் - சூரியன் மகனாகிய சுக்கிரீவன்; நிற்கு என்று சொல்லினான் - நினக்கு என் மூலம் சொல்லி யனுப்பினான்; என்று அநுமன் இராவணனிடம் சொன்னான்.

*　　*　　*

இவ்வாறு அநுமன் சொன்ன உடனே சினங் கொண்டான் இராவணன்; அநுமனை கொன்று போடு என்று கட்டளையிட்டான்.

அப்போது விபீடணன் எழுந்து தமையனை வணங்கினான். தூது வந்தவரைக் கொல்வது அரச நீதி அன்று என்று புகன்றான்.

அதுகேட்ட இராவணன் கோபம் தணிந்தான். "விபீடணன் கூறியதும் சரியே" என்று ஏற்றுக் கொண்டான். அநுமன் வாலிலே தீ வைக்குமாறு கட்டளையிட்டான்.

வாலிலே தீ வைப்பதன் பொருட்டு அநுமனை இழுத்துச் சென்றார்கள் அரக்கர்கள்.

*　　*　　*

ஒக்க ஒக்க உடன் விசித்த
　　உலப்பிலாத உடல் பாசம்
பக்கம் பக்கம் இரு கூறாய்
　　நூறாயிரவர் பற்றினார்

புக்க படை ஓர் புடை காப்போர்
புணரிக் கணக்கர் புறம் செல்வோர்
திக்கின் அறிவால் அயல் நின்று
காண்போர்க்கு எல்லை தெரிவு அரிதால்.

நூறாயிரம் அரக்கர் இரு பிரிவாகப் பிரிந்து இரு பக்கமும் நின்றனர், அநுமன் உடலிலே கட்டப்பட்ட கயிறுகளைப் பிடித்துக்கொண்டார்கள். ஆயுதம் ஏந்திய வீரர் பலர் கடல்போல அவர்களுக்குப் பாதுகாவலாகச் சென்றனர். சூழ்ந்து உடன் சென்றார் பலர். அவர்களின் தொகையோ திக்கெட்டும் பரவியது. இவர்களுக்கு அப்பால் வேடிக்கை பார்த்து நின்றவர் தொகையோ இவ்வளவு என்று சொல்ல முடியாதது.

* * *

புக்க படை ஓர் - அங்கு வந்து புகுந்த ஆயுதங்கள் ஏந்திய வீரர்; புணரிக் கணக்கர் - கடல் போன்றவர்; புறம் செல்வோர் - அவர்களுக்குப் புறமாய்ச் சூழ்ந்து உடன் செல்பவர்கள்; திக்கின் அளவு ஆல் - திக்குகள் உள்ள அளவும் பரந்து நின்றனர்; (ஆதலின்) அயல் நின்று - இவர்களுக்கு அப்பால் நின்று; காண்போர் - பார்க்கின்றவரின்; எல்லை தெரிவதால் - அளவைத் தெரிந்து கொள்ள முடியாததாகும். ஒக்க ஒக்க-பல ஒன்று சேரும்படி; உடன் விசித்த -ஒன்றின்மேல் ஒன்றாய் இறுக்கிக் கட்டிய; உலப்பு இலாத - அழியாத; உடல் பாசம் - அனுமன் உடலில் கட்டப்பட்ட கயிறுகளை; பக்கம் பக்கம்-இரு பக்கங்களிலும்; இரு கூறாய் - இரண்டு பிரிவுகளாக; நூறு ஆயிரவர் பற்றினார் -நூறாயிரம் அரக்கர்கள் பிடித்துக் கொண்டார் கள்; புடை காப்போர் - பக்கத்திலிருந்து காவல் புரிபவர்களாய்.

* * *

அநுமனின் வாலிலே துணியைச் சுற்றினார்கள் அரக்கர்கள். தீ வைத்தார்கள். "இதுவும் நன்மைக்கே" என்று எண்ணினான் அநுமன். மாட மாளிகைகள் மீது தாவினான். இலங்கையைத் தீக்கிரையாக்கினான். இலங்கை தீப்பற்றி எரிந்தது.

* * *

வில்லும் வேலும் வெங்குந்தமும்
முதலிய விறகாய்
எல்லுடைச் சுடர் எனப் புகல்
எஃகெலாம் உருகித்
தொல்லை நன்னிலை தொடர்ந்த
பேருணர்வினார் தொழில் போல்
சில்லி உண்டையில் திரண்டன
படைக்கலத் திரள்கள்.

வில், வேல், எரி ஈட்டி முதலிய ஆயுதங்கள் எல்லாம் தீயிலே விறகுகளாய் எரிந்தன. அவற்றின் எஃகு பாகங்கள் உருகித் தம் பழைய நிலையாகிய உருண்டை வடிவம் பெற்றன. அது எப்படியிருந்தது? பெரிய ஆத்ம ஞானிகள் தங்கள் கர்மவசத்தினால் பல்வேறு பிறவிகளில் உழன்று பின் தம் பண்டை உயரிய நிலை அடைவதுபோல் இருந்தது.

* * *

வில்லும் வேலும் - ஆயுதசாலையிலே இருந்த விற்களும் வேல்களும்; குந்தமும் - கொடிய எரியீட்டிகளும்; முதலிய - முதலிய படைக்கலங்கள் எல்லாம்; விறகாய் - விறகுகளாய் அமைய; எல் உடை சுடர் எனப் புகல் - ஒளியையுடைய சூரியன் என்று சொல்லும்படியாக; எஃகு எலாம் உருகி -

எஃகினால் அமைந்த அவற்றின் பகுதிகள் யாவும் உருகி; படைக்கல திரள்கள் - ஆயுதத் தொகுதிகள்; தொல்லை நல் நிலை தொடர்ந்த - (பல்வேறு பிறவிகளில் உழன்றபின்) தமது பழைய உயர் நிலையை நாடிச் சென்ற; பேர் உணர் வினர் தொழில்போல் - பெரிய ஆத்மஞானிகளின் செயலே போல; சில்லி உண்டையில் (அவற்றின் பழைய நிலையாகிய) சிறு உண்டையாக; திரண்டன - திரண்டு கிடந்தன.

* * *

செய்துடர்க்கன வல்லியும்
புரசையும் சிந்தி
நொய் தினிட்டவன் தறி பறித்து,
உடல் எரி நுழைய
மொய் தடச் செவி நிறுத்தி
வான் முதுகினின் முறுக்கிக்
கையெடுத்து அழைத்தோடின
ஓடை வெங்களிறு.

யானைகள் தீயின் தகிப்புத் தாங்க முடியாமல் சங்கிலி களை அறுத்துக்கொண்டு, கட்டுத் தறிகளைப் பிடுங்கிக் கொண்டுவாலை, முறுக்கி, துதிக்கை தூக்கிக் கதறி ஓடின.

* * *

ஓடை வெம் களிறு - நெற்றி பட்டம் அணிந்த கொடிய யானைகள்; உடல் எரி நுழைய - தம் உடலிலே தீப்பிடித்து எரிய; துடர் செய் கனவல்லியும் - சங்கிலியாகச் செய்யப்பட கனமான பூட்டு விலங்கையும்; புரசையும் - கழுத்திலுள்ள கயிற்றையும்; சிந்தி - சிதறவிட்டு; நொய்தின் இட்ட வல் தறி - தம்மைக் கட்டியிருந்த வலிய கம்பங்களை; பறித்து - எளிதில் பறித்து எறிந்து; மொய் தடசெவி நிறுத்தி - வலிய அகன்ற தம் காதுகளை மேலே தூக்கி நிறுத்தி; வால் முதுகினில் முறுக்கி - தம் வால்களை முதுகுப்

புறமாக முறுக்கி; கை எடுத்து அழைத்து - தம் துதிக்கைகளை மேலே தூக்கிக் கொண்டு வாய்விட்டுக் கதறின; ஓடின.

* * *

மருங்கின் மேல் ஒரு மகவு
கொண்டு ஒரு தனி மகவை
அருங்கையால் பற்றி மற்றொரு
மகவு நின்று அரற்ற
நெருங்கி நீள் நெடும் எரிகுழல்
சுறுக் கொள நீங்கிக்
கருங்கடல் தலை வீழ்ந்தனர்
அரக்கியர் கதறி.

இடுப்பிலே ஒரு குழந்தை; கையிலே பிடித்த வண்ணம் இன்னொரு குழந்தை. மூன்றாவது குழந்தை பின்னே அழுது கொண்டே வருகிறது. அவர் தம் அடர்ந்த கூந்தல் தீப் பிடித்துச் சுறுசுறு என்று கருகியது. தீயின் வெப்பம் தாங்க மாட்டாது அரக்கப் பெண்கள் கடலிலே போய் விழுந்தார்கள்.


* * *

மருங்கின்மேல் ஒரு மகவு கொண்டு - இடுப்பிலே ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு; ஒரு தனி மகவை - மற்றொரு குழந்தையை; அரும் கையால் பற்றி - தன் அரிய கையினால் பிடித்துக் கொண்டு; மற்று ஒரு மகவு நின்று அரற்ற - பின்னே நின்று வேறு ஒரு குழந்தை அழ; நெருங்கி நீள் நெடும் எரி குழல் சுறு கொள - அடர்ந்து நீண்ட தம் எரி போன்ற கூந்தல் அந்தத் தீயிலே சுறுசுறு என்று தீய்ந்துபோக; அரக்கியர் - அரக்கப் பெண்கள்; நீங்கி - தம் இடம் விட்டுச் சென்று; கதறி - வாய்விட்டு அழுது

கொண்டு; கரும் கடல் தலை வீழ்ந்தனர் - கரிய கடலிலே போய் விழுந்தார்கள்.

* * *

இவ்வாறு இலங்கையைத் தீக்கிரையாக்கிய பின் அநுமனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "சீதாபிராட்டிக்கு என்ன நேர்ந்ததோ" என்று எண்ணினான். சீதையிருந்த அசோக வனம் நண்ணினான். சீதை எவ்விதத் துன்பமும் இல்லாதிருப்பது கண்டான். வணங்கினான். பிறகு அங்கிருந்து மகேந்திர மலைக்குத் தாவினான்.



அநுமனின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த அங்கதன் முதலானோர் அநுமனைக் கண்டு மகிழ்ந்தனர். கூடினர்; குதித்தனர். சீதையை அநுமன் கண்டு வந்த செய்தி அறிந்தனர். பின் எல்லாரும் கிட்கிந்தை நோக்கிப் புறப்பட்டனர்.

அநுமன் முன்னே விரைந்து சென்றான். இராமனைக் கண்டான். தெற்கு நோக்கித் தரையில் வீழ்ந்து வணங்கி நின்றான்.

குறிப்பினால் செய்தி அறியும் இராமன் உணர்ந்து கொண்டான், பின்னே அநுமன் சொல்கிறான்.

* * *

"கண்டனன் கற்பினுக்கு
அணியைக் கண்களால்
தெண் திரை அலைகடல்
இலங்கைத் தொல் நகர்
அண்டர் நாயக இனித்
துறத்தி ஐயமும்
பண்டுள துயரும்'' என்று
அநுமன் பன்னுவான்.

"தேவர்கள் தலைவனே! இலங்கைத் தீவிலே கற்புக்கு அணியாக விளங்கும் சீதையைக் கண்டேன். இனித் தங்களுக்கு எவ்வித ஐயமும் வேண்டாம்" என்றான் அநுமன்.

* * *

அண்டர் நாயக - தேவர்கள் தலைவனே! தெள் திரை அலைகடல் - தெளிவான அலைகளை அலைக்கின்ற; இலங்கைத் தொல் நகர் - இலங்கையென்னும் பழம் நகரிலே; கற்பினுக்கு அணியை - கற்புக்கு அணியாய் விளங்கும் சீதையை; கண்களால் - எனது கண்களாலே; கண்டனன் - பார்த்தேன்; இனி - இனிமேல்; ஐயமும் - சீதை உயிருடன் இருக்கிறாளோ இல்லையோ, எங்கே இருக்கிறாளோ எனும் ஐயப்பாடும்; துயரமும் - துன்பமும்; துறத்தி - நீங்குவாயாக; என்று - என்று சொல்லி; அநுமன் பன்னுவான் - அநுமன் மேலும் சொன்னான்.

* * *

வில் பெருந் தடந்தோள் வீர!
வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நல் பெரும் தவத்தள் ஆய
நங்கையைக் கண்டேன் அல்லன்.

இல் பிறப்பு என்பது ஒன்றும்
இரும் பொறை என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும்
களி நடம் புரியக் கண்டேன்.

வில் ஏந்திய வீரனே! நீர் சூழ்ந்த அந்த இலங்கைத் தீவிலே நல்ல கற்பு ஒழுக்கமாகிய தவம் செய்யும் நங்கையைக் கண்டேன் அல்லன். உயர்குடிக் குணமும், பொறுமை எனும் குணமும், கற்பு எனும் குணமும் ஒருங்கு கூடிக் களிநடம் புரியக் கண்டேன்.

* * *

வில் பெரும் தடம் தோள் வீர - வில் ஏந்திய நீண்ட பெரும் கையுடைய வீரனே; வெற்பு - திரிகூட மலையின் மீதுள்ள; வீங்கு நீர் இலங்கையில் - மிக்க நீரினால் சூழப்பட்ட இலங்கையில்; நல் பெரும் தவத்தள் ஆய - நல்ல பெரிய கற்பு ஒழுக்கமான தவத்தை செய்கிற; நங்கையை - சீதையை; கண்டேன் அல்லன் - கண்டேன் அல்லேன்; இல்பிறப்பு என்பது ஒன்றும் - உயர்குடிப் பிறத்தலால் மேவும் பெருங் குணமும்; இரும்பொறை என்பது ஒன்றும் - சிறந்த பொறுமை எனும் குணமும்; கற்பு எனும் பெயரது ஒன்றும் - கற்பு எனும் பெயர் கொண்ட ஒன்றும்; (ஒருங்கு கூடி) களிநடம் புரிய - களிப்போடு நடம் புரியக்; கண்டேன் - கண்டேன்.

* * *

இவ்வாறு சொல்லிவிட்டுப் பிராட்டி அளித்த சூடாமணியை இராமபிரானிடம் கொடுத்தான் அநுமன்.

சூடாமணியைக் கண்ட இராமன் மெய்ம்மறந்து உணர்ச்சி வசப்பட்டான். உரோமங்கள் சிலிர்த்தன. கண்கள் தாரை தாரையாக நீர் சொரிந்தன. மார்பும் தோள்களும் துடித்தன. அழகிய வாய் மடிப்புண்டது. மூச்சு

உள்ளே போவதும் வெளியே வருவதுமாக உடல் பூரித்தது. அப்போது சுக்கிரீவன் இராமனைப் பார்த்துச் சொல்கிறான்.

"ஐயனே! சீதாப்பிராட்டி இருக்கும் இடம் அறிந்து கொண்டோம். இனியும் தாமதம் ஏன்?" என்று தூண்டினான்.

உடனே இராமன் எழுந்து நின்றான். "எழுக வானரப் படை" என்றான்.

எழுபது வெள்ளம் வானர சேனைகள் எழுந்தன.

அநுமன் வழிகாட்டி முன்னே சென்றான்.

பன்னிரண்டு நாட்கள் வழி நடந்து சென்று தென்திசைக் கடல் கண்டார்கள்.



# சுந்தர காண்டம்

## 1. கடல்தாவு படலம்

கடலைத் தாவும் அநுமனின் பேருருவையும், திருமேனியையும் தெய்வ பக்தியையும் திறம்பட வர்ணிக்கிறார் கம்பன். இப் படலத்தில் அநுமனே முக்கியமான பாத்திரமாகையால் அவனைப் பற்றியப் பாடல்கள் அதிகமாக உள்ளன. மாருதியைத் தவிர வேறு மூவரும் இப் படலத்தில் இடம் பெறுகின்றனர். மைந்நாகம், சுரசை, அங்காரதாரை ஆகியோரே மற்றைய மூவர். இவர்களுடைய வரலாற்றையும், அருமைப் பெருமைகளையும் திறம்பட வர்ணிக்கிறார் கம்பன். கடலைத் தாண்டிய வாயுவின் மகன் மலைமீது இறங்குகிறான்.

## 2. ஊர் தேடு படலம்

சுந்தர காண்டத்தின் மிகப் பெரிய படலங்களுள் ஒன்று. இலங்கையை அடைந்த அஞ்சனையின் மகன் அந்நகரின் அமைப்பையும், மக்களின் இணையற்ற ஆற்றலையும், அவர்களின் செல்வ வாழ்க்கையையும கண்டு வியக்கிறான். கம்பன் நம் கண்முன் அந் நகரை நிறுத்துகிறார். நாமும் அந்த நகர நாட்டை (சிடி—ஸ்டேட்) காண்கிறோம். ஆன்மீகத்தோடு ஒட்டாத அந் நகர மக்களின் வாழ்க்கையைக் கண்டு அனுதாபப்படுகிறோம். நகருள் புகுந்த அநுமன் மனைகளையெல்லாம் ஆராய்கிறான். கும்பகருணன், விபீடணன், இந்திரஜித்து ஆகிய மூவரையும் அநுமன் காண்கிறான்; நமக்கும் அறிமுகப்படுத்துகிறான். மண்டோதரியையும் காண்கிறான் அநுமன். உறங்கும் இராவணனையும் பார்க்கிறான். பிராட்டியார்பால் அவன் கொண்ட பக்தி அதிகரிக்கிறது.

## 3. காட்சிப் படலம்

இப் படலத்தை சுந்தரகாண்டத்தின் இதயம் எனலாம். அநுமன், அல்லல் உறும் பிராட்டியைக் காண்கிறான்; இராவணன் அவளைக் கண்டு சென்றதும் தன்னை மாய்த்துக்கொள்ள சானகி துணிந்ததைக் கண்டு துடிக் கிறான். உடன் அங்குத் தோன்றி ஆறுதல் புரிந்த செய்தி களை இப்படலம் கூறுகிறது. இலங்கை முழுமையும் தேடியும் காணாமல் மனமுடைந்த மாருதி, அன்னையைக் கண்டவுடன் அடைந்த ஆனந்தத்திற்கு ஈடுண்டோ? உலகியலுக்கு ஏற்ப அன்னை அண்ணலைப் பிரிந்து தவிக்கும் நிலையை கவிச் சக்கரவர்த்தி தவிர யாரே கூறவல்லார்? திரிசடையின் கனவையும் அன்னையிடம் விபீடணன் மகள் கொண்ட ஆழ்ந்த அன்பையும் காண்கிறோம். அரக்கியரை தன் விஞ்சையால் அயர்வுறச் செய்யும் மாருதியின் அரிய சக்தியை பார்க்கிறோம். அத்துடனா? கம்பநாட்டாழ்வார் பிராட்டியாரின் கற்பு நிலையையும், தூய்மையையும், தவத்தையும் எத்துணைச் சிறப்பாக எடுத்து உரைக்கிறார்.

இப் படலத்தில் இராவணனை இருமுறை சந்திக்கிறோம். முதலில் அவன் உறக்க நிலையில் காட்சி அளிக்கிறான். அடுத்து பிராட்டியை சந்தித்து அச்சுறுத்துகிறான். ஆணவத்தால், தீய எண்ணத்தால் குழையும் அவன் கோலத்தை கவி நமக்குத் திறம்பட காட்டுவதோடு அல் லாமல், அற உருக்கொண்ட சீதையையும் ஆணவம் கொண்ட இராவணனையும் வேற்றுமைபடுத்தி காட்டுகிறார் கம்பன். அறத்தில் பாதுகாவலாக பதுங்கியிருக்கும் அநுமனைப் பார்க்கிறோம். கற்புக்கரசியின் ஒரு சிறு துரும்பு, திண் தோள் இராவணனை தடுத்துவிடுகிறது. பிராட்டிக்குத் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான் அநுமன்.

## 4. உருக்காட்டு படலம்

இராமனின் அங்க வருணனைகளைக் கூறும் அநுமன் (மாருதி) உள்ளங்காலிலிருந்து உச்சி வரை வர்ணிக்கிறான்.

சாதாரண வர்ணனையா அது? இல்லை, இல்லை! தெய்வீக வர்ணனை—அத்துடனா? இராமபிரானுடைய நிலையையும், தன்னுடைய வரலாற்றையும் சொல்லி, இராமன் பிராட்டிக்கென கூறியனுப்பிய சில விசேட அடையாள உரைகளையும் கூறுகிறான். பின் அண்ணல் கொடுத்த கணையாழியையும் அன்னையிடம் கொடுக்கிறான்.

கணையாழியைக் கண்ட பிராட்டி உணர்ச்சிக் குவியல் ஆகிறார். ஆரண்ய கிட்கிந்தா காண்டங்களில் நடந்தவற்றை அறிந்த சனகனின் மகள் மென்மேலும் வேதனைப் படுகிறாள்.

## 5. சூடாமணிப் படலம்

பிராட்டி அநுமனுக்கு இராமபிரானிடம் சொல்ல சில செய்திகளைக் கூறினாள். அத்துடன் சூடாமணியையும் கொடுத்தாள். அன்னைக்குத் தன் பேருருவைக் காட்டினான் வாயுவின் மகன். சூடாமணிப் படலத்துடன் அநுமனை இலங்கைக்கு அனுப்பிய காரியம் வெற்றியுடன் முடிந்துவிட்டது. என்றாலும், ஆற்றலும் அறிவும் மிக்க இராம தூதன் அத்துடன் திரும்பவில்லை. தன் கோபத் தீயிக்கு தீனியும் போட்டான்.

6. பொழிலிறுத்த படலம்
7. கிங்கரர் வதைப்படலம்
8. சம்புமாலி வதைப்படலம்
9 பஞ்ச சேனாபதிகள் வதைப்படலம்
10. அக்ஷய குமாரன் வதைப்படலம்

சூடாமணி படலத்திற்குப் பின் வரும் இப் படலங்கள் யாவும் அரக்கர்களுடன் அநுமன் தனித்து நின்று போர் செய்த படலங்களாக அமைகின்றன. பொழிலிறுத்த படலம் முதல் அநுமன் இராவணனின் வளத்தை நிர்மூலமாக்கிப்

பெருஞ் சேனைகளை அழித்த வீரத்தையும் ஆற்றலையும் காண்கிறோம். கவிச் சக்கரவர்த்தி இக் காண்டத்தில் நேர் எதிர் மாறான காட்சிகளை சித்தரிக்கிறார். ஊரினைச் சுற்றி இழுத்துச் செல்லப்பட்ட அநுமனுக்கும், இராவணனை சந்தித்த மாருதிக்கும், வாலில் எரியூட்டப் பெற்ற அஞ்சனையின் மைந்தனுக்கும், சூடாமணியை பிராட்டியிடமிருந்து பெற்ற அநுமனுக்கும் எத்தனை வித்தியாசம்! சீதையின் அறத்திற்கும் இராவணனின் மறத்திற்கும் உள்ள வேற்றுமையை எவ்வளவு அழகாகக் காட்டுகிறார் கம்பநாடார். பொழிலிறுத்த படலம் போருக்குத் துவக்கம். கிங்கரர், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள், அக்ஷயகுமாரன் ஆகியோரின் வதைப் படலங்கள்மூலம் இராம காதையை படிப்படியாக முன்னேறச் செய்கின்றான்.

## 11. பாசப் படலம்

இப் படலத்தில் இந்திரஜித்து அநுமனைப் பாசத்தால் கட்டினான். கட்டுப்பட்ட அநுமனுக்கு இது ஒரு வெற்றியே. அநுமனுக்கு இராவணன் வாலில் தீயூட்டினாலும், அது இலங்கைக்குத் தீயூட்டிய செய்கை அல்லவா?

## 12. பிணிவிடு படலம்

பாச படலத்துடன் போர் முடிவடைகிறது. அநுமன். இராவணனைக் காணவேண்டும் என்று விரும்பினான் இராவணனுக்கு இதுவரை தோல்வியே. தோல்வி கண்டறியாத இராவணன் தன் மகன் அக்ஷயகுமரனையும், சேனாபதிகளையும் இழந்தான். என்றாலும் ஆடம்பரத்தில் குறைச்சலில்லை. அநுமன் இராவணனின் இழிகுணத்தையும், இராகவனின் பரந்த குணத்தையும் ஒப்பிடும்போது இராவணன் சினங்கொண்டு சீறுகிறான். உடன் என்ன? தன் நகர் அழிவதற்குத் தானே வித்திடுகிறான். அநுமனின் வாலுக்குத் தீயூட்டுகிறான்.

## 13. எரியூட்டு படலம்

வாலில் இட்ட தீயுடன் இலங்கை மாநகரையே தீயிடுகிறான் அநுமன். இதுவே இராவணனின் அழிவுக்கு முன் அறிகுறியாக அமைகிறது.


## 14. திருவடி தொழுத படலம்

அநுமன் இலங்கைக்கு எரியூட்டிய பின், பிராட்டியைக் காணச் செல்கிறான். அன்னையின் தாள்களிற் பணிந்த அவனை, அன்னை வாழ்த்தி அனுப்புகிறாள். விரைந்து சென்று, குன்றிடை குதிக்கிறான், ஜெய மாருதி. நண்பர்கள் மகிழ்கின்றனர். விரைகிறான் அண்ணலிடம். பிராட்டியாரின் தவ நிலையையும் கற்பின் சிறப்பையும் மிக மிகச் சிறப்பாகக் கூறி, பிராட்டியின் பெருமையை வானளாவ புகழ்கிறான்.

பின்?

''தென்றிசைப் பரவைக் கண்டார்'' என்று முடிக்கிறார் கம்பன்.

இதுவே அடுத்த காண்டத்தின் அஸ்திவாரமாகிறது.





# கம்பன் கவித் திரட்டு

(ஆறாம் பாகம்)

யுத்த காண்டம்

தொகுப்பாசிரியர்கள் :

அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன்

ஜலஜா சக்திதாசன்

வெளியீடு :

நித்யானந்த ஜோதி நிலையம்

தபால் பெட்டி எண் : 2184

V. K. ஐயர் ரோடு, சென்னை—28.

முதல் பதிப்பு : 1991

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

## நூன்முகம்

பிராட்டியாரைக் கண்ட அநுமன்மூலம் மண்ணின் மகள் இருக்குமிடத்தை அறிகிறான் இராமன். உடன் செயல்பட்டு அன்னையை மீட்க, மேற்கொள்ளும் நிகழ்ச்சிகள் அடங்கியதே யுத்தகாண்டம்.

வழுவலில் வெள்ளத்தானை தென்திசை வளர்ந்தது முதல், இராவணனையும் அவனைச் சார்ந்தோரையும் அழித்து, இராமபிரான் திருமுடி புனைந்து நின்றது வரை உள்ள வரலாறு இக் காண்டத்தில் அடங்கும். இராம காதை என்ற பெருங் காப்பியத்தின் ஆறாவது காண்டம் யுத்த காண்டம்; கம்பனின் இராமாயணத்தில் பெரும் பகுதியாக அமைந்து உள்ள இக் காண்டம் 39 படலங் களையும் 4323 செய்யுட்களையும் தன்னகத்தே கொண்டு உள்ளது. இத் திரட்டில் 95 பாடல்களே இடம் பெறு கின்றன. இக் காண்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் கடற் கரையிலும் இலங்கைத் தீவிலும் நிகழ்ந்தன என்றாலும், மீட்சிப்படலம், திருமுடி சூட்டுப் படலம், விடை கொடுத்த படலம், அயோத்தியில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

அறம் மறத்தை நிச்சயம் அழிக்கும் என்ற பேருண்மையைக் கூறுவதாக இராமாயணத்தைக் கொண் டாலும் அவ் வரலாறு முழுவதும் இராமனை, கருணையுடன் தன்னை அண்டினவர்க்கெல்லாம் அபயம் அளிக்கும் பரந்த மனங்கொண்ட செம்மலாகக் காண்கிறோம். பகைவருக்கும் அருளும் பண்பனாக காட்சித் தருகிறான். இராமாயணத்தை அதனால்தான் சரணாகதி சாத்திரம் என்கின்றனர் போலும்! பால காண்டத்தில் தேவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறான் கோசல இளவரசன்; அயோத்தியா காண்டத்தில் பரதனுக்குச் சரணாகதி தந்த

துறவி இராமன் வருகிறான். ஆரண்ய காண்டத்திலோ, முனிவர் சரணாகதியும், கிட்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன் சரணாகதியும், சுந்தர காண்டத்தில் பிராட்டி சரணாகதியும், காக்காசுரன் சரணாகதியும் இடம் பெறுகின்றன யுத்த காண்டத்தில் தன்னிடம் சரண் புகுந்த இலங்கேசனின் தம்பி விபீடணனுக்கு அபயம் தருகிறான்.

விபீடணனுக்கு முடி சூட்டுகிறான்; இலங்கைப் பற்றிய முழு விவரங்களும் அறிந்து, இராவணனின் மாயை, வலிமை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு போர் உத்திகளைக் கையாள்கிறான். இலங்கையில் அநுமன் புரிந்த அரிய வீரச் செயல்கள் படிப்போர் நெஞ்சை நிறைக்கின்றன.

இராமபிரான், திருமாலின் அவதாரமாக இருப்பினும், மானிடனாய் பிறந்ததால் அவனுக்கு ஏற்பட்ட போராட்டங்கள் ஏராளம், ஏராளம், இலங்கைக்கு வழிவிட காலந் தாழ்த்திய வருணன் முதல், ஒவ்வொரு செயலையும் நிறைவேற்ற அவன் போராடியே தீரவேண்டியிருந்தது. என்றாலும் எவ்வளவு துன்பம் வந்தாலும், ஏமாற்றங்களைச் சந்தித்தாலும், சூழ்ச்சிகளைக் கண்டு மனம் துயருற்றாலும், 'நேர்மை' என்ற கோட்டைத் தாண்டாத இராமன் கொள்கை வீரனாக எங்குமே விளங்குகிறான்.

இந்த கொள்கை வீரன் போற்றிய வேறொரு கொள்கை வீரனும் உண்டு. அவன் இவனுக்குப் பகையானவன். மறம் என்று தெரிந்தும் அண்ணனுக்காக போரிட்ட அரக்கன். அவனே கும்பகன்னன். தெரிந்தும் பிழை செய்யலாமோ? கூடாது என்பது ஒரு யதார்த்தமான பதில். ஆனால், கும்பகன்னன் 'தன் செஞ்சோற்றுக் கடனை' தீர்ப்பதிலே கண்ணாயிருந்தவன். நன்றிக் கடன் தீர்ப்பது பற்றி வள்ளுவம் உயர்வாக கூறும். இதைக் கடைபிடித்த கும்பகன்னன் கொடியவன் ஆவானா? அண்ணனிடம், போருக்குச் செல்லும்முன் விடைபெறும் தன்மைக் கண்டு கல்லும் உருகாதோ?

கும்பகன்னனைப் பற்றிக் கூறும்போது நம்முன் நிற்பான் மற்றொரு கொள்கை வீரன். அவன் இடம் பெறுவது இராமாயணத்தில் அல்ல; துரியோதனன் என்ற மானிடன் மண்ணாசையால் அழிந்த வரலாறான, மகாபாரதத்தில். நன்றிக் கடனைச் செலுத்த வேண்டி, தன்னை அழித்துக்கொண்ட கொடை வள்ளல் கர்ணனே அவன்.

சேது பாலம் உருபெற்று வருங்காலை பகைவனின் ஒற்றர்களுக்கும் கருணை காட்டுகிறான் இராகவன்' இராகவனையும் இராவணனையும் எதிரெதிரே நிறுத்து கிறான் கம்பநாடன் இலங்கையின் வடக்கு வாயிற் கோபுரத்தின் மேல் அரக்கர்கோன்; வடதிசை வாயில் ஏன்? வடக்கு நோக்குதல் இந்து மதக் கொள்கைப்படி வீடு பெற்றுத் தரக்கூடிய திக்கு எதிரே நிற்பதோ இராமன்; அறத்தின் உருவம். அறம் வீடு அளிக்கும் என சூசகமாக தெரிவிக்கிறானோ கவிச் சக்கரவர்த்தி!

துர் நிமித்தங்கள், நல் சகுனங்கள் காண்கிறோம் ஒவ்வொரு படலத்திலும். 'இன்று போய் நாளை வா' என்று ஆயுதமேதும் இன்றி தனியனாய் நிற்கும் இலங்கேசனுக்கு இராமன் காட்டிய கருணைக்கு ஒப்புவமையுண்டோ?

இலட்சுமணனை 'மகவு கொண்டு போய் மாம்புகு மந்தி. அநுமனின் திறமையைக் கண்டு வியக்கிறோம். மாயங்கள் பல செய்யும் அரக்கர் திறன் தானென்ன! அதன் விளைவு நிலைப்பதில்லையே! ஆனால் மறத்தினாலும் நன்மை விளைவதுண்டு! இல்லையெனில் நாகபாசம் என்ற மிகச் சிறந்த பகுதி யுத்த காண்டத்தில் இடம்பெறுமா? இல்லை, மருத்து மலையைத்தான் அநுமன் தூக்கி வந்திருப்பானோ? அக் கால போர்க் காட்சிகளையும் உத்திகளையும் நம் மனக்கண்முன் நாடகமாக அல்லவா ஆக்கிக் காட்டுகிறான் கம்பன். இந்திரசித்து சிறந்த வில்லாளனாக இருந்தும், முறைகேடுகள் மேற்கொண்டாலும், கடைசியில் நேர்மையே வெல்கிறது.

மைந்தனை இழந்த இராவணனின் சோகத்தில் நாமும் கரைகிறோம். ஆனால் அதே சமயம், அவன் தன் தவறுக்கு வருந்தாது, பரிகாரம் தேட மறுக்கிறானே என்று கவிஞனுடன் நாமும் ஏங்குகிறோம்.

இராம இராவண போரில் கம்பன் கூறும் உவமைகள் எவ்வளவு பொறுத்தமானவையாக அமைகின்றன. இருவரும் பெரிய வீரர்கள். இருவரில் யார் வெல்வர் என அனைவரும் ஆவலுடன் பார்க்கிற அளவுக்கு கவி மெள்ள மெள்ள எல்லோர் மனத்திலும் ஓர் ஆவல் உணர்ச்சியை தூண்டி விடுகிறான். கடைசியாக இராவணன் மாயங்கள் பயனற்று போனதை அறிந்து இராமன் மீது அம்பு விடுகிறான். ஆனால், இராமனின் அயன் படையோ இராவணனை மாய்க்கிறது.

இராவண வதத்திற்குப் பின் அண்ணனின் வரவு நோக்கிக் காத்திருக்கும் பரதனை நந்தி கிராமத்தில் பார்க்கிறோம். தீக்குளிக்கத் தயாராகும் அவனை ஐயன் "வந்தனன்!" என்ற அநுமனின் செய்தி, தடுக்கிறது.

அண்ணன் வருகிறான். முடிசூட்டு விழா நடக்கிறது. பின்னர் அனைவருக்கும் விடை கொடுத்தனுப்புகிறான் இராமன்.

துன்பம் நிலையானது அல்ல; அதற்கும் முடிவு உண்டு. அதனைத் தொடர்ந்து நிச்சயம் தீர்வு ஏற்பட்டு மன அமைதி ஏற்படும் என்ற பெரியதொரு தத்துவத்தைக் கூறுகிறது இக் காண்டம்.

எனவே, வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற விரும்புவோர் இக்காண்டத்தைப் படித்தால், வெற்றிக்கு நிச்சயம் வழிகோலும்.

இல்லங்களில் உள்ள குழப்பங்கள் தீரும்; சச்சரவுகள் மறையும்.

பிரிந்தவர் கூடுவர்; மாறுபட்டவர் ஒன்றிய கருத்துடைய வராக மாறுவர் என்று கற்றறிந்தோர் கூறுவர்.

இந்நூலுக்குத் தேவையான நூல்களை—டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் யுத்த காண்டம் முதல் மூன்று பாகங்களையும் கொடுத்துதவிய கலாக்ஷேத்திரத்தின் நிர்வாகி, உயர் திரு. சங்கரமேனன் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

நான்காம் பாகம் தந்துதவிய மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கும் எங்கள் ஆழ்ந்த நன்றி.

நவரசங்களை நாடகமாக்கி காட்டும் கம்ப நாடனின் பெருங்காவியத்தின் ஒரு சிறு துளியைத் தருகிறோம். தமிழ் அன்பர்கள் மேன்மேலும் இராம காதையைப் படித்து பயன் பெற வேண்டுகிறோம்.

வாழ்க தமிழ்! வாழ்க கவிச்சக்கரவர்த்தி!!

சக்திதாசன் சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன்

## யுத்த காண்டம் படலங்கள்

1. கடல் காண் படலம்
2. இராவணன் மந்திரப் படலம்
3. இரணியன் வதைப் படலம்
4. விபீடணன் அடைக்கலப் படலம்
5. இலங்கை வேள்விப் படலம்
6. வருணனை வழிவேண்டு படலம்
7. சேது பந்தனப் படலம்
8. ஒற்றுக் கேள்விப் படலம்
9. இலங்கை காண் படலம்
10. இராவணன் வானரத் தானை காண் படலம்
11. மகுட பங்கப் படலம்
12. அணி வகுப்புப் படலம்
13. அங்கதன் தூது படலம்
14. முதற் போர்புரி படலம்
15. கும்பகன்னன் வதைப் படலம்

16. மாயா சனகப் படலம்
17. அதிகாயன் வதைப் படலம்
18. நாகபாசப் படலம்
19. படைத் தலைவர் வதைப் படலம்
20. மகரக் கண்ணன் வதைப் படலம்
21. பிரமாத்திரப் படலம்
22. சீதை களம் காண் படலம்
23. மருத்து மலைப் படலம்
24. களியாட்டுப் படலம்
25. மாயா சீதைப் படலம்
26. நிகும்பிலை யாகப் படலம்
27. இந்திரசித்து வதைப் படலம்
28. இராவணன் சோகப் படலம்
29. படைக் காட்சிப் படலம்
30. மூல பல வதைப் படலம்
31. வேல் ஏற்று படலம்
32. வானரர் களம் காண் படலம்
33. இராவணன் களம் காண் படலம்
34. இராவணன் தேர் ஏறு படலம்
35. இராமன் தேர் ஏறு படலம்
36. இராவணன் வதைப் படலம்
37. மீட்சிப் படலம்
38. திருமுடி சூட்டு படலம்
39. விடை கொடுத்த படலம்

# யுத்த காண்டம்

## கடவுள் வாழ்த்து

''ஒன்றே, என்னின், ஒன்றே ஆம்;
'பல' என்று உரைக்கின், பலவே ஆம்;
'அன்றே' என்னின், அன்றே ஆம்;
'ஆமே' என்னின், ஆமே ஆம்;
இன்றே என்னின், இன்றே ஆம்;
'உளது' என்று உரைக்கின், உளதே ஆம்;
நன்றே, நம்பி முடி வாழ்க்கை!
நமக்கு இங்கு என்னோ
பிழைப்பு? அம்மா!

ஒன்றே என்றால் ஒன்றே. பல என்றால் பலவே ஆகும். அன்று என்றாலும் அன்றே யாம். இல்லை என்று கூறினும் இல்லையாகும். உள்ளது என்று சொல்லின் உளதே ஆகும். எம்பிரானுடைய இருப்பும் வாழ்க்கை வரலாறும் மிகவும் வியக்குமாறு உள்ளது. எனவே அருவமும் உருவமும் அருவுருவமும், ஆகி எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருளையும், அவனை அவன் தன் அருட்கண் கொண்டே காணக் கூடும் என்ற உண்மையையும், பரம்பொருள் சமயங்கட்கு அப்பாலானது என்பதையும் அதுவே இராமபிரான் என்றும் அவன் அவதரித்த செய்தியையும் அழகுப் பெறக் கூறுகின்றான் கம்பநாடன்.

# கடல் காண் படலம்

இராமபிரான் கடலைக் கண்ணாற் கண்டதை கூறும் படலம் இது. கடலைக் கண்ட இராமன் துயர் உறுகிறான். கடலிலே உள்ள முத்துக்களும் சங்குகளும் பிராட்டியின் நினைவையும் பிரிவையும் இன்னும் அதிகமாகத் தூண்டு கின்றன. தென்றல் தீயாகச் சுடுகிறது.

ஆரவாரத்துடன் ஓங்கிய அலைகள் எப்படியிருக் கின்றன? பெரியோர் முதன்முதலாக வருவதைக் கண்டு, தமது கைகளைத் தூக்கிய வண்ணம் மகிழ்ச்சியினால் ஆரவாரஞ் செய்துகொண்டு விரைவோடு அன்னாரை எதிர் கொள்வது போலிருக்கின்றன.

மேலும் கம்பநாடன் அடுத்தப் பாட்டில் என்ன கூறுகிறான்?

* * *

இன்ன தாய கருங்கடலை
யெய்தி இதனுக் கெழு மடங்கு
தன்னதாய நெடு மானந்
துயரங் காத லிவை தழைப்ப
என்ன தாகு மேல் விளைவு
என்றிருந்தான் இராம னிக லிலங்கைப்
பின்னதாய காரியமும் நிகழ்ந்த
பொருளும் பேசுவாம்.

இராமன் கடலை யடைந்த பின், தன்மானம் ஆகியன ஏழு கடலாக தன்னுடைய உள்ளத்திலே மிக, மேல் நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருந்தான்.

* * *

இராமன் - இராமபிரான்; இன்னது ஆய கருங் கடலை எய்தி - இத்தகையதான கரிய கடலை அடைந்து; இதனுக்கு ஏழு மடங்கு - இந்தக் கடலைக் காட்டிலும் ஏழு மடங்காக; தன்னது ஆய - தன்னிடமுள்ள; நெடு மானம் துயரம் காதல் இவை தழைப்ப - மிக்க மானமும் துன்பமும் ஆசையுமாகிய இவைகள் மிக; மேல் விளைவு என்னது ஆகும் என்று - இனி நிகழக்கூடிய செயல் யாதாகும் என; இருந்தான் - ஆராய்ந்து கொண்டு இருந்தான் (இது நிற்க); இகல் இலங்கை - பகை யால் மாறுபட்ட இலங்கையில்; பின்னது ஆய காரியமும் நிகழ்ந்த பொருளும் பேசுவாம் - (அநுமன் எரியூட்டிச் சென்ற) பின்னர் நடைபெற்ற காரியத்தையும் நிகழ்ந்த செயலையும் (இனிச்) சொல்வோம்.

* * *

இலங்கை அநுமனால் எரியுண்ட பின், தெய்வத்தச்சனை அந்நகரை மீண்டும் அமைக்கும்படி ஆணையிட்டான் இராவணன். புதிதாக அமைக்கப்பட்ட அந்நகர் முன்னைக் காட்டிலும் அழகுடன் விளங்கியது. இது கண்ட இலங்கேசன் பெருமகிழ்ச்சியடைந்தான். தெய்வத் தச்சனுக்கும் பிரம்ம னுக்கும் சன்மானம் வழங்கினான். புதிதாக அமைக்கப்பட்ட ஆயிரந் தூண் மண்டபத்தில் மந்திராலோசனையும் நடத்தினான் இராவணன். இந்த மந்திராலோசனையில் இடம் பெற்றவர் முனிவர்களோ, மற்ற ஞானவான்களோ அல்லர்; இராவணனுக்கு வேண்டிய அரக்கர்கள், மந்திரி, சேனாதிபதி, தம்பிகள் கும்பகன்னன், வீபீடணன் ஆகியோரே. தன் நாட்டிற்கு ஏற்பட்ட தீங்கை (அநுமன் எரியூட்டியதை) நினைத்து வருந்துகிறான் இலங்கையின் கோன். சேனைத்தலைவன் மகோதரன் ஆகிய மற்றைய அரக்கர் தம் கருத்துக்களைக் கூறுகின்றனர்.

கும்பகன்னன் இராவணனை அவன் சீதையைக் கவர்ந்தது முதல் தவறு; மாற்றான் மனைவியை காமுறுவது பெருந் தவறு; என்று இடித்துக் கூறுகிறான்.

* * *

ஆசில் பரதாரம் அவை
அம் சிறை அடைப்பேம்;
மாசில் புகழ் காதல் உறுவேம்;
வளமை கூரப்
பேசுவது மானம்; இடை
பேணுவது காமம்;
கூசுவது மானுடரை;
நன்று, நம் கொற்றம்.

"பிறர் மனைவியைக் கொண்டு வந்து சிறை வைப்போம்; ஆனால் புகழ் வேண்டும் என்று ஆசை கொள்வோம்; மானம் என்று பேசுவோம்; ஆனால் காமத்தைப் போற்றுவோம்; வீரம் பேசுவோம்; ஆனால் மானிடரைக் கண்டு கூசுவோம். இவ்விதம் முரண்பட்ட செயல்களே செய்கிறோம். நமது ஆட்சி எவ்வளவு நன்றாயிருக்கிறது!"

* * *

ஆசில் பரதாரம் அவை அஞ்சிறை அடைப்போம் குற்றமில்லாத பிறன் மனைவியை நமது சிறையில் அடைப் போம்; மாசில் புகழ் காதல் உறுவேம் - குற்றமற்ற புகழை விரும்புவோம்; வளமை கூரப் பேசுவது மானம் - வளம் பெருகப் பேசுவதோ மானம்; பேணுவது காமம் - ஆதரிப்பதோ மானக் கேடான காமம். (இவ்வண்ணம் ஒன்றுக்கொன்று முரணாக செயல்புரிவதனால்) கூசுவது மானுடரை - கூச்சம் கொள்வது மனிதரைக் கண்டு. நன்று நம் கொற்றம் - நமது வெற்றி ஆட்சி நன்றாயிருக்கிறதே.

* * *

சிட்டர் செயல் செய்திலை;
குலச் சிறுமை செய்தாய்;
மட்டவிழ் மலர்க் குழலினாளை
இனி, மன்னா!

விட்டிடுது மேல், எளியம் ஆதும்;
அவர் வெல்லப்
பட்டிடுது மேல், அதுவும் நன்று;
பழி அன்றால்.

"பெரியோர் செய்யும் செயல் நீ ஏதும் செய்தாய் இல்லை; நம் குலத்திற்கே சிறுமை தேடிவிட்டாய்; இனி சீதையைக் கொண்டுபோய் விட்டுவிடலாம் எனில் அது கேவலம். எனவே போர் செய்வது தவிர வேறு வழியில்லை. தோல்வியுற்று இறந்து பட்டாலும் நன்றே; பழியில்லாது போகும்."

*　　*　　*

மன்னா - மன்னனே! சிட்டர் செயல் செய்திலை - பெரியோர் செய்யும் செயல் புரிந்தாயில்லை; குலச்சிறுமை செய்தாய் - நம் குலத்திற்கே இழிவு வரும் செயல் செய்தாய். இனி - இனிமேல்; மட்டவிழ் மலர்க் குழலினாளை - தேன் சொரியும் மலரணிந்த கூந்தலுடைய சீதையை; விட்டிடுது மேல் - விட்டுவிட்டாலோ; எளிமையாம் - நாம் எளியவர் ஆவோம்; (எனவே, சீதையை விடாமையால் அவர்கள் தம்மீது போர் தொடுக்க) அதுவுமவர் வெல்லப் - அந்தப் போரிலும் அவர்களே வெற்றிபெற; பட்டிடுதுமேல் - நாம் இறந்துபடுவோமாயின், அதுவும் நன்று - அதுவும் நல்லதே; பழியன்றால் - பழியில்லாது போம்.

*　　*　　*

ஊறுபடை ஊறுவதன்
முன்னம் ஒரு நாளே
ஏறுகடல் ஏறி, நரர்
வானரரை எல்லாம்
வேறு பெயராத வகை
வேரொடும் அடங்க
நூறுவதுவே கருமம்
என்பது நுவன்றான்.

"மேலும் மேலும் பெருகி வரும் வானரப் படையானது இலங்கை வந்து சேருமுன்னம் கடல் தாண்டிச் சென்று நம் எதிரிகளான நரரையும் வானரரையும் தாக்கி வேறு திசைகளில் செல்லவொட்டாமல் நொறுக்குவதே இனி நாம் செய்யத்தக்கது ஆகும்."

இவ்வாறு கூறினான் கும்பகன்னன்.

* * *

ஊறுபடை - மேலும் மேலும் பெருகிவரும் வானரப் படையானது; ஊறுவதன் முன்னம் - இலங்கை வந்து நிரம்புவதன் முன்னால்; ஒரு நாளே - ஒரே நாளில்; ஏறு கடல் ஏறி - அலை புரளும் கடலைத் தாண்டிச் சென்று; நரர் வானரரை எல்லாம் - மனிதர், வானரர் ஆகியவர் எல்லாரையும்; வேறு பெயராத வகை - வேறு எங்கும் போய்விடாதபடி முடக்கி; வேரோடும் அடங்க - பூண்டோடு அழிந்து போகும்படி; நூறுவதுவே - அடித்து நொறுக்குவதே; கருமம் - நாம் செய்ய வேண்டிய காரியம்; என்பது நுவன்றான் என்று சொன்னான்.

* * *

கும்பகன்னன் கூறியதற்கு இசைந்து, போருக்குச் செல்லத் தீர்மானிக்கிறான். அப்போது, மண்டோதரியின் மகன் இந்திரசித்து, தந்தையின் செயலைத் தடுத்துக் கூறுகிறான்.

"உங்கள் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு வெற்றியே பெற்றுவரும் வலிமையுள்ள பலரிருக்கையில், அரசன் தானே போருக்குச் செல்வது சிறப்போ? இந்த அற்ப மானிடரை எதிர்க்க எங்களைப் படையுடன் அனுப்புதல் சிறுமையாகுமோ? உங்கள் மகன் நான்; உங்களுககாகப் பொருது உங்களுக்கு வெற்றித் தேடித் தருவேன்" என்று வீர சபதம் செய்கிறான். "வானரர்களை எல்லால் முற்றும் அழிப்பேன். மாற்றார் வலிமை அற்றவர்; அவர்களை வெல்ல, என்னை

அனுப்புங்கள்" என்று இராவணனை வணங்கி விடை வேண்டுகிறான். அப்போது விபீடணன் இந்திரசித்து சொல்லியதை கண்டிக்கிறான்.

"நீ சிறுவன்; அனுபவம் முதலியன பெற்ற பெரியோர் இருக்கவேண்டிய மந்திராலோசனைச் சபையிலே உனக்கிருக்க உரிமை இல்லை. உன்னை இச் சபையில் இருக்க வைத்தது, ஆலோசிக்கும் திறனோடு கண்ணையும் இழந்த குருடன் சித்திரம் எழுதுவதைக் கைக் கொண்டு, சித்திரத்தை அமைக்கத் தொடங்குவதுபோல் உள்ளது. உணர்ச்சி வயப்பட்டு பொருந்தாத முறையில் மற்றவரை ஏளனஞ் செய்கிறாய்; தேவர்களை வெல்லும் அளவுக்கு உனக்கு வலிமை இருந்திருக்கலாம். அது உன் தவப்பயனே ஆகும். அந்த வலிமை நிலைத்திருக்க வேண்டுமானால் நீ அறத்திற்குப் புறம்பானச் செயலை விட்டுவிடு; தீய வினைகளை நீக்கிவிடு."

இவ்வண்ணம் இந்திரசித்தை அதட்டிக் கூறி, இராவணனை நோக்கி நல்லுரை கூறுகிறான் விபீடணன்.

அற்பமான ஒரு குரங்கு இலங்கையை சுட்டெரித்ததே எதனால்? சானகியின் கற்பு வலிமையால் அன்றோ? எத்தனையோ பேராற்றல் உடைய அரசுகள் எதனால் அழிந்தன? கூர்ந்து ஆராய்ந்தால் காரணங்கள் தெரியும். ஒன்று பெண்ணாசை. மற்றொன்று மண்ணாசை. எனவே இந்த ஆசையை ஒழி. இன்றேல் உனக்குத் தீராப் பழி ஏற்படுவதுடன் கேடும் விளையும். "மனிதராவது என்னை வெல்வதாவது?" என்று இறுமாப்பு கொள்ள வேண்டாம். 'வானரத் துணைக்கொண்டு உன்னை வெல்வான் இராமன்' என்று உணர்த்த வேண்டி இராவணனுக்கு வேதவதி அளித்த சாபத்தை குறிப்பாக உணர்த்தினான்.

இராமனின் வீரமும் வலிமையும் வாய்மையும் வழி வழியாக வந்தவை. தேவர்கள் உன்னை வெல்லமுடியாது.

அவர்களால் உன்னைக் கொல்ல முடியாது என்ற வரத்தை நீ பெற்றிருப்பது உண்மையே. எனினும் மானிடராய் பிறந்துள்ள இராம இலட்சுமணன் இந்த விதிக்கு விலக்காக மாட்டாரோ என்று விபீடணன் மேலும் கூறிக்கொண்டு போவதைக் கேட்டு இராவணன் கோபத்துடன் சீறுகிறான்.

தான் தேவர்களை வென்றது தன் சொந்த வலிமையால், எவருடைய வரத்தினாலும் அன்று. எவருடைய சாபமும் தன்னை தீண்டாது என்கிறான் ஆணவத்தோடு. யார்? இராவணன். இராமனுக்கு ஏற்பட்ட தாழ்ந்த நிலைமையை எள்ளி நகையாடுகிறான்.

* * *

இசையும் செல்வமும் உயர்குலத்து
இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக்,
கிளையொடும் மடியாது
அசைவு இல் கற்பின் அவ் அணங்கை
விட்ட ருளுதி; இதன்மேல்
விசையம் இல் எனச் சொல்லினன்
அறிஞரின் மிக்கான்.

"உனது புகழும், செல்வமும் உயர்குலப் பண்பும் அழிய, பழிப்பும், தாழ்வும் மேலோங்க உனது சுற்றத்தாருடன் மாண்டு போகாமல் மாசற்ற கற்புடையளாகிய சீதையை விட்டுவிடு. இதற்குமேல் வெற்றிதரும் செயல் எதுவுமில்லை. இதற்கு மேற்பட்ட விஷயம் எதுவுமில்லை." என்றான் அறிஞரில் சிறந்த விபீடணன்.

* * *

இசையும் - உனது புகழும்; செல்வமும் - செல்வச் சிறப்பும்; உயர்குலத்து இயற்கையும் - உயர்குலப் பிறப்பிற்குரிய இயல்பும்; எஞ்ச - அழிய; வசையும் - பழிப்பும்;

கீழ்மையும் - தாழ்வும்; மீக்கொள - நம்மேல் வந்து ஓங்க; கிளையொடும் - சுற்றத்தோடு; மடியாது - அழிந்திடாது; அசைவு இல் கற்பின் - நீங்காத கற்புடைய; அவ்வணங்கை- அந்தத் தெய்வ மகளாகிய சீதையை; விட்டு அருளுதி - விட்டு விடுவாயாக; இதன் மேல் விசையம் இல் - இதற்கு மேல் வெற்றிதரும் செயல் வேறு ஒன்றுமில்லை; என்று சொல்லினான் அறிவில்மிக்கவன்.

* * *

விபீடணன் தன் அண்ணனின் கோபத்தைக் கண்டு அஞ்சவில்லை. தொடர்ந்து முயற்சிக்கிறான். இரணியனின் கதையைச் சொல்லி அவன் மனத்தைமாற்றப் பார்க்கிறான்.

இரணியன் கதையைச் சொல்வானேன்? இரணியனும் ஓர் அரக்கன். தேவர், மானிடர் யாராலும் தனக்கு முடிவு ஏற்படக் கூடாதென்று வரம் பெற்ற வலிமை மிக்கவன். "தானே தெய்வம்" என அனைவரையும் அச்சுறுத்தி வாழ்ந்தவன். அவன் மகன் பிரகலாதன். திருமாலின் பக்தன்; தந்தை மகனுக்குப் பகையானான். 'எங்கே உன் நாராயணன்?' என்று மிரட்டிய தந்தைக்கு 'தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்' எனக் கூறிய சிறுவனின் பதில் சினத்தைத் தூண்டியது. தூணை உடைத்தான். உடைத்த தூணிலிருந்து வெளிப்பட்டான் சிங்கப் பெருமாள். இரணியனைக் கொன்றான்.

இதே போன்று வரம் பெற்றுவிட்டதால், மறத்தை நிலைக்க செய்ய முடியாது. எந்த வரத்திற்கும் ஒரு விலக்கு உண்டு. எனவே சீதையை இராமனிடம் அனுப்பி நாட்டை யும் வீட்டையும் காக்கவேண்டும் என்று மன்றாடுகிறான் விபீடணன்.

ஆனால், இராவணன் என்ன சொல்கிறான்?

விபீடணனைத் திட்டுகிறான். பகைவன் இராமனிடம் அவன் அன்பு கொண்டுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறான். பிரகலாதனைப் போல் விபீடணனும் மாற்றானுடன்

சேர்ந்து தன் செல்வத்தையும் அரசையும் பறிக்கத் திட்ட மிட்டதாகச் குற்றஞ் சாட்டுகிறான். "பகைவருடன் உறவு கொண்டாடும் உள்நோக்கத்துடன்தான், முன்னர் அநுமனை கொல்வதை தடுத்தாய் போலும். இராம இலட்சுமணனை விட நீயே என் பகைவன்!" என கூறும் இராவணனைக் கண்டு வேதனைப்படுகிறான் அறிஞர்க்கறிஞன். உண்மையை இடித்துக்கூறிய தம்பியை 'போ, போ!' என விரட்டு கிறான். ஏன்! அவனுடைய கெட்ட காலம் அவனுக்குக் கெடுமதியைத் கொடுக்கிறது.

* * *

அஞ்சினை ஆதலின்
அமர்க்கும் ஆள் அலை
தஞ்சு என மனிதர் பால்
வைத்த சார்பினை;
வஞ்சனை மனத்தினை;
பிறப்பு மாற்றினை
நஞ்சினை உடன் கொடு
வாழ்தல் நன்மையோ?

"அட! பயங்கொள்ளி! நீ போருக்குத் தகுதியற்றவன். தஞ்சம் என மனிதர்பால் சார்பு கொண்டு விட்டவன் நீ. வஞ்சகா! அரக்கர் குலத்தில் பிறந்தும் அவ்வியல்பு சிறிதும் இல்லாது பிறவி மாறியவனே! பாம்புடன் வாழ்வது போல் உன்னுடன் வாழ்வது நலன் தருமோ?"

* * *

அஞ்சினை - நமது பகைவரைக் கண்டு நீ பயந்து விட்டாய்; ஆதலின் அமர்க்கும் ஆள் அலை - ஆகவே நீ போர் செய்யத் தகுதியற்றவன்; தஞ்சு என - நமக்குத் தஞ்சம் என்று; மனிதர்பால் வைத்த சார்பினை - மனிதர்

இடத்திலே சார்ந்துவிட்டாய்; வஞ்சனை மனத்தினை - மனத்திலே வஞ்சனையுடையவனே; பிறப்பு மாறினை - அரக்கனாகப் பிறந்தும் அந்த அரக்க ஒழுக்கம் மாறிவிட்டாய்; நஞ்சினை - விஷம் உள்ள பாம்பை; உடன் கொடு - உடன் வைத்துக்கொண்டு; வாழ்தல் நன்மையோ.

* * *

''பழியினை உணர்ந்து, யான்
படுக்கிலேன், உனை;
ஒழி, சில புகலுதல்;
எல்லை நீங்குதி;
விழி எதிர் நிற்றியேல்,
விளிதி'' என்றனன்,
அழிவினை எய்துவான்
அறிவு நீங்கினான்.

"உன்னை நான் கொன்று போடுவேன். தம்பியைக் கொன்ற பழி வருமே என்பதால் கொல்லவில்லை. எனக்குப் புத்தி சொல்வதை ஒழி. விரைவில் போ. என் கண்முன் நில்லாதே. நின்றால் கொன்று விடுவேன்!'' என்றான் அழிவு காலத்தை அடைந்துவிட்ட அறிவிலி இராவணன்.

* * *

பழியினை உணர்ந்து - உடன் பிறந்தவனைக் கொன்ற பழி வருமே என்று உணர்ந்து; உனை யான் படுக்கிலேன் - உன்னை நான் கொல்லவில்லை; சில புகலுதல் ஒழி - எனக்குப் பிடிக்காத சில சொற்கள் கூறுதலை ஒழித்து; எல்லை நீங்குதி - உடனே ஓடிவிடு; விழி எதிர் நிற்றியேல் - என் கண்முன் நின்றால்; விளிதி - (என் கையால்) இறந்து படுவாய்; என்றனன் - என்று கூறினான்; அழிவினை

எய்துவான் - அழிவு அடையும் பொருட்டு; அறிவு நீங்கினான் - அறிவு நீங்கப் பெற்ற இராவணன்.

* * *

விபீடணன் வானத்து எழுகிறான். மீண்டும் கூறுகிறான்;

"நீ வாழ நினைத்தால், இராமனின் திருவடிகளில் விழுந்து மன்னிப்புக் கேள். இல்லையெனின் அப்பிரானுடைய அம்பு உன்னையும், உன்னைச் சேர்ந்த அனைவரையும் அழித்துவிடும். என் குற்றத்தைப் பொறுத் தருள்க!" என இலங்கை விட்டு நீங்கினான்.

* * *

"எத்துணை வகையாயினும்
உறுதி எய்தின,
ஒத்தன, உணர்த்தினேன்;
உணரகிற்றலை;
அத்த! என் பிழை
பொறுத்தருளுவாய்'' என,
உத்தமன் அந் நகர்
ஒழியப் போயினான்.

''எல்லா வகையாலும் உறுதி பொருந்தியனவும் நீதி நூற்கு ஒத்தனவுமான கருத்துக்களை எல்லாம் உனக்கு உணர்த்தினேன். ஆனால், அவற்றை நீ உணரும் ஆற்றல் அற்றவன் ஆனாய்; என் தந்தைப் போன்றவனே! (பெரியோனாகிய உனக்கு அறிவுரை கூறிய)என் பிழையைப் பொறுத் தருள்வாயாக!'' என்று கூறிவிட்டுச் சிறந்த குண நலன்களை உடைய விபீடணன் அந்த இலங்கை நகரத்தை விடுத்துச் சென்றான்.

* * *

(அவனுடன் அனலன், அனிலன், அரன், சம்பாதி ஆகிய நால்வரும் உடன் சென்றனர்).

*    *    *

எத்துணை வகையினும் - எவ்வளவோ விதங்களிலும்; உறுதி எய்தின - நன்மை பயக்கக் கூடியனவும்; ஒத்தன - (நீதி நூலுக்கு) இயைந்தனவும் ஆன நல்ல பொருள்களை; உணர்த்தினேன் - தெரிவித்தேன்; உணரகிற்றிலை - நீ அவற்றை அறியும் ஆற்றலற்றவன் ஆயினை; அத்த - என் தலைவனே; என் பிழை பொறுத்தருள்வாய் எனா - நான் செய்த தவறுதல்களை மன்னித்தருள்வாயாக! என்று இராவணனை நோக்கிச் சொல்லிவிட்டு, உத்தமன் அந்நகர் ஒழிய போயினான் - குணம் செயல்களால் மிகச் சிறந்தவனான விபீடணன் அந்த இலங்காபுரியை நீத்துச் செல்லலானான்.

*    *    *

அனலன் முதலிய நால்வருடன் கடற்கரை செல்கின்றான் விபீடணன். ஏன்? இராமன் அங்கு வந்துள்ளான் என்பதைக் கேட்டவுடன் அங்கு சென்றான். வானர சேனையைக் கண்டு வியப்படைகிறான். "என் செய்வது?" என்று அவன் அமைச்சர்களை நோக்கி கேட்கவும்,

*    *    *

மாட்சியின் அமைந்தது
    வேறு மற்று இலை;
தாட்சி இல் பொருள்
    தரும் தரும மூர்த்தியைக்
காட்சியே இனிக் கடன்
    என்று, கல்வி சால்
சூட்சியின் கிழவரும்,
    துணிந்து சொல்லினார்.

தாழ்வு இல்லா ஞானப் பொருளைத் தரும் தருமமே வடிவாக உள்ள இராமனைக் காண்பதே இப்பொழுது செய்யத்தக்க கடனாகும். இதைப்போல சிறப்பமைந்த செய்கை வேறு ஒன்றும் இல்லை; என்று கல்வியறிவாற் சிறந்த, ஆலோசனைக்கு உரியவராகிய, அமைச்சர்களும் துணிந்து சொன்னார்கள்.

*　　　*　　　*

தாட்சி இல் பொருள் தரும் தரும மூர்த்தியை- எவ்வகையான தாழ்வும் இல்லாத உறுதிப் பொருள்களை அளிக்க வல்ல அறக்கடவுளான இராமபிரானை; காட்சியே இனி கடன் - தரிசித்தலே இனி நாம் செய்யவேண்டிய கடமை; மாட்சிமையின் அமைந்தது - பெருமையுடன் கூடியதும் (அதுவேயாம்); மற்று வேறு இலை - பிறிதொன்றும் இல்லை; என்று - என்று; கல்வி சால் சூழ்ச்சியின் கிழவரும் துணிந்து சொல்லினார் - ஆலோசனைக்குரியவரான அமைச்சர்களும் தெளிவாகச் சொன்னார்கள்.

*　　　*　　　*

(விபீடணன் அவர்கள் சொன்னதை ஆமோதித்தான். இரவு வந்தது. அவர்கள் ஓரிடத்தில் தங்கினர்.)

கடற்கரையில் இருந்த இராமன் இயற்கைக் காட்சிகளை கண்டான். அன்னையின் குவளைக் கண்களையும் பவளச் செவ்வாயையும் அவை நினைவூட்டின. சோலைகளைப் பார்த்தான். விரக தாபத்தால் வேதனைப்பட்டான். மனம் சோர்ந்தான். ஆணும் பெண்ணுமாக உறங்கும் அன்னப் பறவைகளைக் கண்டான். தன்னையும் அறியாது பெருமூச்சு விட்டான். ஆண் பறவை உணவு கொண்டுவரச் சென்றது. அது வரும் திசையை வைத்தக்கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த பெடை நாரையை கண்டபோது அவன் வேதனை அதிகரித்தது. இதனிடையே ஒரு பெண்

பறவைக்காக இரு ஆண் பறவைகள் சினத்துடன் போரிட்டன. இராமன் தன் புருவத்தை வளைத்தான்.

இது போதாதென்று வேறொரு புறம், ஒரு ஊடல் காட்சி. இராமன் இதை கண்டான். தனிமை, துன்பத்தை அதிகப்படுத்தியது.

* * *

உள் நிறை ஊடலில்
 தோற்ற ஓதிமம்
கண்ணுறு கலவியில்
 வெல்லக் கண்டவன்
தண் நிறப் பவள வாய்
 இதழை, தற் பொதி
வெண் நிற முத்தினால்,
 அதுக்கி விம்மினான்.

பெண் அன்னத்தின் உள்ளத்தில் நிறைந்த ஊடல் நிகழ்ந்த காலத்தில் (அதனை எதிர்த்தலாற்றாது பணிந்து) தோல்வியுற்ற ஆண் அன்னம், இரண்டுடம்பும் ஒன்று படுகின்ற கலவிக் காலத்தில் பேரின்பமுற்று வென்றதைப் பார்த்தான் இராமன்; இனிய நிறத்தையுடைய பவழம் போன்ற தன் வாயிதழை, வெண்மையான நிறத்தையுடைய முத்துப் போன்ற பற்களினால் அதுக்கிக்கொண்டு ஏக்கத்தால் விம்மினான்.

* * *

உள் நிறை ஊடலில் தோற்ற ஓதிமம் - உள்ளே நிறைந்த புலவியிலே தோல்வி உற்ற பெடையன்னம்; கண்ணுறு கலவியில் வெல்ல கண்டவன் - கண்ணுக்குப் புலப்படும் புணர்ச்சியிலே வெற்றி பெறக் கண்டவனான இராமன்; தண் நிறம்

பவளம் வாய் இதழை - இனிய நிறத்தையுடைய பவளம் ஒத்த வாயிதழை; தன் பொதி வெண் நிற முத்தினால் - தன்னால் மறைக்கப்படுகின்ற முத்துப் போலுள்ள பற்களினால்; அதுக்கி விம்மினான் - கடித்தவண்ணம் பொருமலுற்றான்.

* * *

இராமன் நிலை கண்ட சுக்ரீவன் முதலியோர் அண்ணலைத் தேற்றி அவன் தன் இருக்கைக்கு அழைத்துச் சென்றனர்.

* * *

உறைவிடம் எய்தினான்
ஒருங்கு கேள்வியின்
துறை அறி துணைவரோடு
இருந்த சூழலில்
முறை படு தானையின்
மருங்கு முற்றினான்—
அறை கழல் வீடணன்,
அயிர்ப்பு இல் சிந்தையான்.

இராமன் தன் இருப்பிடத்தை அடைந்தான். சிறந்த அறிவு உடைய அநுமனும், மற்ற அனைவரும் அங்கு இருந்தனர். வானர சேனை, அணிவகுத்ததுபோல் அமர்ந்து இருந்தன. பக்கத்தில் வந்து நின்றான், விபீடணன். அவன் எப்படிப்பட்டவன்? வீரக் கழல் அணிந்தவன். மனத்தில் ஐயமே இல்லாதவன்.

* * *

உறைவிடம் எய்தினான் - தனது இருக்கையைச் சென்றடைந்த இராமபிரான்; ஒருங்கு - ஒரு சேர; கேள்வியின் துறை அறி துணைவரோடு - கேட்டறிய வேண்டிய

நூல்களின் வழிகளை எல்லாம் அறிந்த தன் நண்பருடன்; இருந்த சூழலின் - அமர்ந்திருந்த எல்லையில்; முறைபடு தானையின் மருங்கு - (போர்க்கு) உரிய முறைப்படியே ஒழுகுகின்ற வானரப் படையின் அருகிலே; அறம்கொள் சிந்தையான் - தருமநெறியையே கருதுபவனான; அறை கழல் விபீடணன் - ஒலிக்கின்ற வீர கண்டை புனைந்த வீட்டணன்; முற்றினான் - சென்றடைந்தான்.

* * *

அரக்கர்களைக் கண்டான் மயிந்தன். அவர்கள் யாரென கேட்டான். அமைச்சன் அனலன், வீடணன் பற்றியும், அவன் அங்கு வந்த காரணம் பற்றியும் கூறும் போது, அரக்கர்கோன் வீடணனை ஏன் விரட்டினான் என்பதைப் பற்றியும் கூறினான். இதை மயிந்தன் இராமனிடம் சொன்னான்.

* * *

"ஏந்து எழில் இராவணன்,
இனைய சொன்ன நீ
சாம் தொழிற்கு உரியை,
என் சார்பு நிற்றியேல்;
ஆம் தினைப் பொழுதினில்
அகறியால்—எனப்
போந்தனன்" என்றனன்;
புகுந்தது ஈது என்றான்.

பிறரை வருத்துவதைத் தொழிலாகக் கொண்டுள்ள இராவணன், (விபீடணனை) நோக்கி, "இத்தன்மையான சொற்களைச் சொன்ன நீ என் முன் நிற்பாயானால் இறப்பதற்கே உரியவன் ஆவாய்; (ஆதலால்) தினையளவு பொழுதில் இவ்விடத்தை விடுத்துச் செல்வாயாக!" என்று வெகுண்டு கூறினான், எனவே அவனைத் துறந்து விபீடணன்

இங்குச் சரணடைய வந்தான் என்று (அனலன்) கூறினான். நிகழ்ந்தது இதுவே என்று மயிந்தன் இராமனிடம் கூறினான்.

* * *

'ஏந்து எழில் இராவணன் - உயர்ந்த அழகினையுடைய இராவணன்; இனைய சொன்ன நீ - இவ்வாறு எனக்கு பிடிக்காத வார்த்தைகளை மொழிந்த நீ; என் சார்பு நிற்றியேல் - என் பக்கம் நிற்பாயானால்; சாம் தொழிற்கு உரியை - இறப்பதற்கே தக்கவனாவாய்; (ஆகவே) ஆம் தினை பொழுதினில் அகல்தியாய் என - பொருந்திய தினையளவு நேரத்திற்குள்ளாக என்னைவிட்டு அகல்வாயாக என்று மொழிய; போந்தனன் என்றனன் - (அவ்விடத்தை விடுத்து இங்கு) அந்த வீடணன் வந்தனன் என்று அனலன் தெரிவித்து; புகுந்தது ஈது என்றான் - நிகழ்ந்தது இது' என்று (தான் கண்டதும் கேட்டதுமான செய்திகளை), மயிந்தன் என்ற வானர வீரன் இராமனிடம் அறிவித்தான்.

* * *

அப் பொழுது இராமனும்;
அருகில் நண்பரை
'இப் பொருள் கேட்ட இவன்
நீர் இயம்புவீர்—
கைப்புகற்பாலனோ? கழியற்
பாலனோ—
ஒப்புற நோக்கி, நும்
உணர்வினால்' என்றான்.

அப்போது இராமனும் தன் அருகில் இருந்த சுக்ரீவன் முதலிய நண்பரை நோக்கி: (அனலன் கூறியவற்றை) நீங்கள் கேட்பீர்கள். இவ்விபீடணன் நம்மிடத்தில் புகுதற்குத் தகுந்தவனா? அல்லது, புகாது திரும்பிப் போதற்குரியவனா? என்பதை உங்கள் உணர்வினால்

பொருந்த நோக்கி ஆராய்ந்து சொல்வீர்களாக" என்று பணிந்தான்.

*   *   *

அப்போது மயிந்தன் கூறிய சொற்களைக் கேட்ட போது; இராமனும் அருகில் நண்பரை - இராமபிரானும் (தம் அண்மையில் அமர்ந்திருந்த) துணைவரைப் பார்த்து; 'இப் பொருள் கேட்ட நீர் - இப்போது நடைபெற்ற செய்திகளைக் (மயிந்தன் வாய் மொழியாற்) செவியேற்ற நீங்கள்; கை புகல் பாலனோ - இந்த விபீட்டணன் நம்மிடம் புகுதற்கு உரியவனோ? அல்லது, கழியல் பாலனோ - அப்பால் சென்றிடற்கே உரியவனோ?; நும் உணர்வினால் - உங்கள் அறிவினால்; ஒப்புற நோக்கி - நடுவர் நிலைக்கேற்ப ஆராய்ந்து; இயம்புவீர் என்றான் - உரைப்பீர்களாக என்று சொன்னான்.

*   *   *

வெம் முனை விளைதலின் அன்று;
வேறு ஒரு
சும்மையான் உயிர் கொளத்
துணிதலால் அன்று;
தம் முனைத் துறந்தது,
தரும நீதியோ?
செம்மை இல் அரக்கரில்
யாவர் சீரியோர்?

விபீடணன் தன் தமையனைத் துறந்து வந்தது, அந்த இராவணனோடு தனக்குக் கொடிய போர் விளைந்தாலும் அன்று; அவனைக் கொல்ல நினைத்து. அவன் அண்ணன் இராவணன் வேறு எந்த அடாத செயலையும் செய்ய வில்லை. இத்தகைய பெரிய காரணங்கள் ஏதும் நிகழாத போது, தன்னுடன் பிறந்த அண்ணனை துறந்து வந்தது

தருமமோ? அன்றி நீதியோ? (இரண்டுமில்லை) மேலும் நேர்மைப் பண்பு இரண்டும் இல்லாத அரக்கர்களில் சிறப்புடையவர் எவருள்ர்? (எவருமிலர்)

(இங்கு சுக்ரீவன் வாலிக்கும் தனக்கும் ஏற்பட்ட பகையையும் விபீடணனுக்கு அவன் உடன்பிறப்புடன் ஏற்பட்ட பகையையும் ஒப்பிடுகிறான்.)

* * *

(இந்த விபீடணன் இச் சமயத்தில்) 'தம்முனை துறந்தது - தன் தமையனான இராவணனை விடுத்து வந்தது; வெம்முனை விளைதலின் அன்று - தமையனோடு கடும்போர் நிகழ்ந்ததால் அன்று; வேறு ஒரு சும்மையான் உயிர் கொளத் துணிதலால் அன்று - பிறிதொரு சுமையால் தன் உயிரையே கொள்வதற்குத் துணிவு கொண்டதாலும் அன்று; (ஆதலின் இவன் செயல்), தரும நீதியோ - அறநெறியாகுமோ? செம்மை இல் அரக்கரில், சீரியோர் யாவர் - நடுவு நிலைமை முதலிய நேர்மைக் குணங்கள் அற்ற அரக்கர் குழுவில் மேன்மை உடையவர் என்று புகலற்குரியவர் யாவர் - யார்? (யாருமில்லை என்றபடி).

* * *

இராமன் சாம்பனை விபீடணன் பற்றிய கருத்தைக் கேட்டபோது சாம்பனும், 'பகைவராகி நம்மை வந்தடைந்து உள்ள இவர்கள்பால் நற்குறிகள் மிகக் காணப்படுகின்றன என்பது கொண்டு இவர்களை ஏற்றுக் கொள்வதை உலகம் நன்றென ஒப்புமோ?' என்றான். நீலனும் மற்றவரும் விபீடணனுக்கு புகலிடம் கொடுத்து ஏற்றுக்கொள்வது தீதென தீர்மானமாகக் கூறினர்.

* * *

'உறு பொருள் யாவரும்
ஒன்றக் கூறினார்
செறி பெருங் கேள்வியாய்!
கருத்து என்? செப்பு' என,

நெறி தரு மாருதி என்னும்
நேர் இலா
அறிவனை நோக்கினான்,
அறிவின் மேல் உளான்.

அறிவினால் எல்லோரினும் மேம்பட்டவனாகிய இராமன், அரசியல் நெறியனைத்தும் தெரிந்த, மாருதி என்ற ஒப்புவமை இல்லா அறிஞனை நோக்கினான். "பொருள் செறிந்த பெரிய கேள்வி அறிவுடையவனே! செய்ய வேண்டிய செயலைப் பற்றி எல்லோரும் ஒரு தன்மையராகக் கூறிவிட்டார்கள்; நின் கருத்து என்ன? சொல்லுக" என வினவினான்.

* * *

அறிவின் மேல் உளான் - உணர்ந்தார்க்கும் உணர முடியாதபடி யாவையும் கடந்து நின்ற பரம்பொருளான இராமன்; நெறி தரும் மாருதி என்னும் நேர் இலா அறிவனை - யாவர்க்கும் நன்னெறியைக் காட்டவல்ல காற்றின் மைந்தனான அநுமன் என்னும் ஒப்புயர்வற்ற ஞானியை; 'செறி பெரும் கேள்வியாய் - பொருந்திய பரந்த கேள்வி ஞானமுள்ளவனே! உறுபொருள் யாவரும் ஒன்ற கூறினார் - செய்தற்குரிய காரியத்தைக் குறித்து யாவரும் ஒரு படித்தாக மொழிந்தார்கள்; (இனி, இவ் விபீடணனை ஏற்றுக் கொள்வதில்), கருத்து என் செப்பு, என - நீ கருதுவது சொல்வாயாக; என்ற கருத்துப் புலப்படுமாறு, நோக்கினான் - கண்ணால் பார்த்தான்.

* * *

அநுமனை இராமபிரான் விபீடணனைப் பற்றிய அபிப்பிராயம் கேட்டபோது அநுமன் தன் கருத்தினைக் கூறினான். விபீடணன் மற்றவர் கூறியதுபோல் தீயவன் அல்லன். இக் கருத்தினை அரக்கர்கோன் இராவணனின்

தம்பி விபீடணனின் முகமும், பேச்சும் உறுதி செய்யும். சுக்ரீவன் தன் அண்ணன் வாலி, தன்னிடமிருந்து கைப்பற்றிய தனது அரசை, மீண்டும் பெறவே தங்களிடம் வந்தான். விபீடணனோ அப்படி அல்ல, இலங்கேசனால் துரத்தப்பட்டு தங்களிடம் புகலிடம் கேட்டு வந்துளான். அவன் தக்க சமயத்திலேதான் வந்துள்ளான். விபீடணன் இராமனை நாடியதேன்? இராமன் சத்தியத்தின் உரு; கருணையின் வடிவம்; என்ற உண்மையை உணர்ந்தே இராமனை நாடினான். சீதையைக் கவர்ந்த நாள் முதல் இலங்காதிபனைத் திருத்த அவன் எடுத்த முயற்சிகள் எத்தனை, எத்தனை! 'சரண்' என வந்த அவனையும், அவனுடன் துணை வந்தவரையும் சந்தேகிக்கலாமோ? அரக்கராகப் பிறந்து விட்டதால், அவர் நமக்கு எப்போதும் மாயமே செய்வரென்று கொள்வது முறையாகுமா? தீங்கு தான் செய்வான் விபீடணன் என்று நினைத்தால், என்னை இராவணன் கொல்வதை, 'தூதுவரை கொல்லுதல் குற்ற மாகும்' என எடுத்துக் கூறி, காப்பாற்றியிருப்பானா? அரக்கர், விபீடணன் மாளிகையைச் சுற்றி பழிக்கக் கூடிய செயல்களைச் செய்தனர் என்றாலும் அவர் தம் தீயச் செயல்களை விபீடணன் மேற்கொள்ளாதது அவனுடைய நற்குணத்திற்குச் சான்று அன்றோ? அது மட்டுமா? விபீடணனின் ஒப்பற்ற மகள், திரிசடை அன்றோ பிராட்டியாருக்கு ஆறுதல் கூறி, அவர் உயிருடன் இருக்க உதவியவள்!

தான் கண்ட கனவைக் கூறி, அரக்கியர் அன்னையை துன்புறுத்தாவண்ணம் பாதுகாத்தவள் இங்கு, இன்று, வந்துள்ள விபீடணனின் மகள்தானே? அயனால் இராவணன் பெற்ற சாபத்தை அன்னைக்குக் கூறியவளும் அவளே அல்லவா?

* * *

தேவர்க்கும் தானவர்க்கும் திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கு முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் முண்டு நின்றாய்
ஆவத்தின் வந்த அபயம் என்றானை
யயிர்த்தல் விடுதியாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ கொற்ற வேந்தே.

'வெற்றியே பெறும் இயல்புடைய அரசே! தேவர்க்கும், அசுரர்க்கும், நான்முகனாகிய பிரமன் முதலான தலைமைத் தேவர்கள் மூவர்க்கும் முடித்தற்கு அரிய காரியத்தை முடிப்பதற்கு முனைந்திருக்கின்றோம்; (அத்தகைய நாம்) ஆபத்துக் காலத்தில் நம்மை நாடி வந்து அபயம் என்று கூறியவி பீடணனை ஐயுற்று விலக்கி விடுவோம் என்றால், பெரிய நீர் பரப்பையுடைய கடல், கிணற்றிலுள்ள சிறிய அளவான நீர் தன்னை அடித்துக் கொண்டு போய்விடுமோ என ஐயப்படுவதைப் போன்று ஆகாதோ?'

* * *

கொற்ற வேந்தே - வெற்றி பொருந்திய மன்னவ! தேவர்க்கும் தானவர்க்கும் - தேவகட்கும், அசுரர்கட்கும்; திசை முகனே முதலாய தேவதேவர் மூவர்க்கும் - பிரம தேவன் முதலான தேவாதி தேவர்களான மும்மூர்த்தி கட்கும்; முடிப்பரிய காரியத்தை - செய்து முடிக்கவியலாத செயலை; முற்றுவிப்பான் மூண்டு நின்றாய் - முடித்து தரும் பொருட்டு முனைந்துள்ளாய்; ஆவத்தின் - துன்பம் நேர்ந்த காலத்து; வந்து - நம்பால் வந்து; அபயம் என்றானை - அபயம் என்று சொல்லிக் கொண்டு நின்ற இவனை; அயிர்த்து - ஐயம் கொண்டு; அகல விடுதி ஆயின் - நீங்கும்படி விட்டுவிடுவாயாகில்; (அச்செயல்) கடல் - பெரும் நீர்ப்பரப்பான கடலானது; கூவத்தின் சிறு புனலை

அயிர்த்தது ஒவ்வாதோ? - கிணற்று நீரை (நம்மை அடுத்து கொண்டு சென்று விடுமோவென) ஐயுற்றதை நிகர்க்காதோ?

(அநுமன் கூறியதைக் கேட்டான் இராமன்) பின்,

* * *

இன்று வந்தான் என்று உண்டோ?
எந்தையை யாயை முன்னைக்
கொன்று வந்தான் என்று உண்டோ?
புகலது கூறுகின்றான்
துன்றி வந்து அன்பு பேணுந்
துணைவனும் அவனே; பின்னைப்
பொன்றும் என்றாலும், நம்பாற்
புகழ் அன்றி பிறிது உண்டாமோ?

நம்பால் அடைக்கலம் கோரி வந்தவன் முன்பின் அறியாதவன்; அன்றைக்குத்தான் வந்தவன் என்று விலக்குவது சரியோ? காலம் இதற்குத் தடையாகாது. தந்தையையும், தாயையும், அண்ணனையும் கொன்று வந்தவன் அடைக்கலமாக வந்தாலும் ஏற்றுக் கொள்வதே முறையான செயல் எனின் அத்தகு கொடுமை ஏதும் செய்தறியாத விபீட்டணனை ஏற்றுக் கொள்வதே முறை. பல நாளாக பழகி வந்து அன்பு செய்கின்ற நண்பனுமாவான் அவன். பின்னர் அவன் அந்நட்பு முறையினின்றும் மாறுபட்டு நமக்குத் தீமை விளைவித்தாலும் அதனால் நமக்குப் புகழுண்டாகுமே அன்றி பழி உண்டாகாது.

* * *

'புகலது கூறுகிறான்' - 'நான் உங்கள் அடைக்கலம்' என்று சொல்பவன்; இன்று வந்தான் என்று உண்டோ - இன்றைக்குத்தான் வந்தவன் என்று விலக்கி விடுவதற்கு

இடம் உண்டோ?; எந்தையை யாயை முன்னை கொன்று வந்தான் என்று உண்டோ - என் தந்தையையும் தாயையும் அண்ணனையும் கொலை புரிந்துவிட்டு வந்து சரணம் புக்கான் என்று கூறித் தள்ளத்தான் இடம் உண்டோ? துன்றி வந்து அன்பு பேணும் துணைவனும் அவனே - நம்மை நெருங்கி வந்தவனாகக் கருதி அன்பு பாராட்டு வதற்குத் தக்க நண்பனும் அவனே; பின்னை - இதன் பின்னை; பொன்றும் என்றாலும் - அவனால் நாம் இறத்தல் கூடும் என்ற போதும்; நம்பால் - அவனைப் புகலாக ஏற்ற நம்மிடத்து; புகழ் அன்றி பிறிது உண்டாமோ - புகழே அல்லாமல்; அதற்கு மாறான பழி நமக்குச் சேருமோ? (பழி அவனையேதான் சாரும்); ஓ - எதிர்மறை.

* * *

ஆதலான், "அபயம்!" என்ற
பொழுதத்தே, அபய தானம்
ஈதலே கடப்பாடு என்பது;
இயம்பினீர், என்பால் வைத்த
காதலான்; இனி வேறு எண்ணக்
கடவது என்? கதிரோன் மைந்த!
கோது இலாதவனை நீயே என்
வயின் கொணர்தி" என்றான்.

ஆதலால், "விபீடணன் அபயம் என்று சொன்னபோதே அபயதானம் கொடுத்தலே என் கடமையாகும். என்னிடம் வைத்த பேரன்பால் நீங்கள் அவனை ஏற்கலாகாது என்று முன் சொன்னீர்கள். இனி வேறு வகையாக எண்ண வேண்டுவது யாது? சூரியனின் மைந்தனாகிய சுக்ரீவனே! குற்றமற்றவனாகிய விபீடணனை நீயே என்னிடத்து அழைத்து வருவாயாக" என்று கூறினான்.

* * *

ஆதலான் - ஆகையால்; அபயம் என்ற பொழுதத்தே - அபயம் என்று என்னை வந்து சார்ந்த அப்பொழுதே; கடப்பாடு என்பது - கடமை என்று சொல்லப்படுவது; அபய தானம் ஈதலே - வந்தவர்க்கு அபயதானம் அளிப்பதே யாகும்; என்பால் வைத்த காதலால் இயம்பினீர் - நீங்கள் என்மீது கொண்டுள்ள அன்பினால் (இவனை ஏற்பது சிறிதும் பொருத்தம் அன்று என்று) சொன்னீர்கள்; இனி வேறு எண்ணக் கடவது என் - இனிமேல் (இந்த வீடணனை ஏற்பதில்) வேறாக ஆலோசிக்க வேண்டியது யாதுளது? 'கதிரோன் மைந்த - சூரியன் புதல்வனான சுக்கிரீவ! கோதிலா தவனை நீயே என் வயின் கொணர்தி என்றான் - குற்றமற்ற அந்த வீடணனை நீயே என்னிடம் அழைத்து வருக.' என்று சொன்னான் இராமபிரான்.

* * *

சுக்ரீவன் விபீடணனை அழைத்து வந்தான் அண்ணலிடம். "உனக்கு அபயம் வழங்கின இராமபிரானை வணங்குக!" என்று கூறினான். வீடணனும் இராமனை வணங்க, இராமன் அவனுக்கு இருக்கை ஈந்தான்.

* * *

'அழிந்தது பிறவி' என்னும்
அகத்து இயல் முகத்துக் காட்ட,
வழிந்த கண்ணீரின் மண்ணில்
மார்பு உற வணங்கினானைப்
பொழிந்தது ஓர் கருணை தன்னால்
புல்லினன் என்று தோன்ற,
"எழுந்து, இனிது இருத்தி" என்னா
மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.

இவ்வாறு இராவணனால் துரத்தப்பட்ட விபீடணன் இராமனைச் சரண் அடைந்தான். கண்கள் நீர் சொரிய

மண்ணில் விழுந்து வணங்கினான். வணங்கிய விபீடணனைக் கருணையோடு பார்த்து மலர்க்கையால் இருக்கை தந்தான் இராமன்.

* * *

பிறவி அழிந்தது - இனிப் பிறப்பெடுக்கும் தொல்லை ஒழிந்தது; என்னும் அகத்து இயல் - என்கின்ற அக எண்ணம்; முகத்துக் காட்ட வழிந்த கண்ணீரான் - ஆனந்தக் கண்ணீர் சொரியும் விபீடணன்; மண்ணில் மார்புஉற வணங்கினான் - தன் மார்பு தரையிலே கிடக்க வணங்கினான்; (இராமன்) பொழிந்தது ஓர் கருணை தன்னால் - சுரந்து வழியும் கருணையினால்; புல்லினன் என்று தோன்ற - தழுவினன் என்று சொல்லும்படி; எழுந்து - எழுந்திருந்து; இனிது இருத்தி என்னா - இனிதே அமர்வாயாக என்று கூறி; மலர்க் கையால் - தாமரை மலர் ஒத்த தனது திருக்கரங்களால் இருக்கை தந்தான்.

* * *

அத்துடனன்றி, ஏதுமின்றி வந்த வீடணனுக்கு இன்னும் ஒரு பெரிய பதவியையும் அளித்தான் கருணாமூர்த்தி.

அது யாது?

* * *

ஆழியான் அவனை நோக்கி,
அருள் சுரந்து, உவகை கூர
"ஏழினொடு ஏழாய் நின்ற உலகும்
என்பெயரும் எந்நாள்
வாழும் நாள் அன்று காறும்,
வளை எயிற்று அரக்கர்வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன்" என்றான்.

"ஈரேழு பதினான்கு உலகங்களும் என் பெயரும் உள்ள அளவும் இந்த இலங்கை ராஜ்யம் உனதே; உனக்கே அளித்தேன்."

இவ்வாறு அருள் சுரக்க, மகிழ்ச்சி ததும்பக் கூறினான் இராமன்.

*　　*　　*

ஆழியான் - சக்கராயுதம் ஏந்திய திருமாலின் அவதாரமாகிய இராமன்; அவனை நோக்கி - விபீடணனை பார்த்து; அருள் சுரந்து - அருள் பொழிந்து; உவகை கூர - மகிழ்ச்சி பொங்க; ஏழினொடு ஏழாய் நின்ற உலகும் - இந்தப் பதினான்கு உலகங்களும்; என் பெயரும் - இராமன் என்னும் என் பெயரும்; எந்நாள் வாழும் நாள் - என்றுவரை நிலை நிற்குமோ; அன்றுகாறும் - அன்று வரை; வாள் எயிறு அரக்கர் - வாள்போல் கூரிய பற்கள் கொண்ட அரக்கர்; வைகும் - வசிக்கும்; ஆழ்கடல் - ஆழ்ந்த கடல் நடுவே உள்ள; இலங்கைச் செல்வம் - இலங்கை அரசும் செல்வமும்; நின்னதே - உனதே; தந்தேன்.

"மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு
என்னிலங்கு நாமத்தளவும் அரசு
என்ற மின்னலங்காரன்" —பெரியாழ்வார்.

வீடணனுக்கு முடி சூட்டுமாறு இராமபிரான் லட்சுமணனைக் கட்டளையிட்டான். ஆனால் விபீடணன் ஒரு வரம் வேண்டினான். அது என்ன? இரகுவீரனின் தம்பி பரதனுக்குச் சூட்டிய மகுடத்தை தனக்கும் சூட்ட வேண்டும் என்று வேண்டினான்.

பரதனுக்குச் சூட்டிய மகுடம் இராமனின் பாதுகைகள். அதையே தனக்கும் வைக்கவேண்டுமென கேட்ட விபீடணனின் கருத்து யாது?

பிறப்பு இறப்பு ஆகிய இரட்டைகளிலிருந்து தனக்கு விடுதலை வேண்டுமென இராமனின் பாதங்களைப் பற்றினான் என்பது உட்கருத்து.

இதை அறிந்த இராமன், விபீடணனை நோக்கிக் கூறினான் :

* * *

"குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும், அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகலரும் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை."

"ஆதியில் தசரத சக்கரவர்த்திக்கு நாங்கள் நால்வரே பிள்ளைகளாய் பிறந்தோம்; குகனொடு ஐவர் ஆனோம்; சுக்கிரீவனொடு அறுவர் ஆனோம்; உன்னுடன் எழுவர் ஆனோம். எனக்குக் காடு கொடுத்ததால் புதல்வர் எழுவரைப் பெற்று விளங்கினான் உன் தந்தை" என்றான்.

* * *

எம்முழை அன்பின் வந்த - எம்மிடத்திலே அன்போடு வந்த; அகன் அமர் காதல் ஐய - உள்ளன்பு கொண்ட ஐய; முன்பு - முதலில்; குகனொடும் ஐவர் ஆனேம் - குகன் எங்களோடு வந்து சேர்ந்ததால் நாங்கள் உடன் பிறந்தோர் ஐவர் ஆனோம்; பின் - அப்பால்; குன்று சூழ்வான் - மலையைச் சுற்றிவரும் சூரியன்; மகனொடும் - மகனாகிய சுக்கிரீவனொடும்; அறுவரானோம் - நாம் அறுவர் ஆனோம்; நின்னொடும் எழுவர் ஆனேம் - உன்னோடு எழுவர் ஆனோம்; உந்தை - உனது தந்தையாகிய

தசரத சக்கரவர்த்தி; புகல் அரும் கானம் தந்து - புகுவதற்கு அரிய காட்டை எனக்கு அளித்து; புதல்வரால் பொலிந்தான்- புதல்வரால் மேன்மையுற்று விளங்கினான்.

விபீடணன் அடைக்கலத்தின் பின் அன்னையைப் பிரிந்த அண்ணல் பிரிவாற்றாமையால் வாடுகிறான். சுக்ரீவன் அவனைத் தேற்றி மேற்கொண்டு செய்யவேண்டியதை விபீடணனுடனும் கலந்து ஆலோசிப்பதே நல்லது!" எனக் கூறுகிறான். இராமபிரான் சிறிது நெளிந்து விபீடணனை வரவழைத்து விவரங்களைக் கேட்டறிகிறான்.

கடல் கடந்து சேனையுடன் எப்படி செல்வதென்று தீவிரமாகக் கலந்தாலோசிக்கிறான். விபீடணன் இராம னுக்கு இலங்கையின் வலிய அரணைப் பற்றியும், இராவணனது வலிமைப் பற்றியும் அவனைச் சார்ந்தோர் போராற்றல் பற்றியும் விரிவாகக் கூறுகிறான். அரக்கர் கோனின் சேனைப்பற்றிக் கூறினான்; அநுமன் இலங்கா புரியில் புரிந்த வீர சாகசங்களைப்பற்றி மிகவும் புகழ்ந்து உரைக்கிறான். இராமனும் மகிழ்ந்து அநுமனுக்கு வரமும் அளிக்கிறான்.

பிறகு இராமன் விபிடணனை, "கடலைக் கடக்கும் உபாயம் என்ன?" என்று கேட்கிறான்.

அதற்கு விபீட்ணன், 'வருணன் கடலின் கடவுள்; எனவே அவனைச் சரணடைந்து அவன் அருளைப் பெற்றால், கடலைக் கடக்க முடியும்' என்று கூறுகிறான். இராமன் வருணனை வேண்டி ஏழு நாட்கள் வருண மந்திரத்தை தர்பைமீது அமர்ந்து செபிக்கிறான். எனினும் வருணன் வரவேயில்லை. இராமன் சினந்து, தன் வில்லைக் கொண்டு பற்பல அம்புகளைத் தொடுத்தான். என்றாலும், வருணன் வராமையால், பிரமாத்திரத்தைப் பூட்ட, வருணன் பயந்து உடன் வந்தான். காணிக்கைகளை செலுத்தி அவன்

இராமனடியில் வீழுந்தான்; "அபயம், அபயம்!" என வேண்டினான்.

*   *   *

'ஆழி நீ: அனலும் நீயே;
அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே; அவற்று
உறை உயிரும் நீயே;
வாழியாய்! அடியேன் நின்னை
மறப்பேனோ? வயங்கு செந்தீச்
சூழுற உலைந்து போனேன்;
காத்தருள்—சுருதி மூர்த்தி!'

கடலுக்குத் தலைவனான வருணன் செருக்குக் குலைந்தான். இராமனை நோக்கி, "வேதங்களின் வடிவானவனே! இந்தக் கடலும் நீயே. இந்தக் கடலை எரிக்கின்ற தீயும் நீயே; இவையல்லாத எல்லாப் பொருள்களும் நீயே: உலகத்தை அழிக்கின்ற ஊழியும் நீயே; உலகும் நீயே; உலகின் உயிர்களும் நீயே. அத்தகைய பேராற்றல் உடைய இறைவனாகிய உன்னை, உன் அடியவனாகிய நான் மறப்பேனா? செந்தீ என்னைச் சூழ்ந்து கொண்டமையால் அழிந்து போனேன். என்னை அழிவினின்று காப்பாயாக!" என்று மிகவும் தாழ்மையுடன் வேண்டினான்!

*   *   *

(வருணன் இராமபிரானை நோக்கி), "சுருதி மூர்த்தி - வேதங்களால் மேலான பொருளாகப் புகழப்படுகின்ற சுவாமி! ஆழி நீ, அனலும் நீயே - கடலும் நீ, தீயும் நீயே; ஊழி நீ - உலகினை அழிக்கும் ஊழிக்காலமும் உன்னிடம் நின்று வெளிப்படுவதே; உலகும் நீயே - உலக வடிவானவனும் நீயே; அவற்று உறை உயிரும் நீயே - அவ்வுலகங்களி

ளிடத்துத் தங்கும் உயிர்குயிராய் இருப்பவனும் நீயே; வாழியாய் - என்றும் அழியாது வாழ்ந்திருப்பவனே! நின்னை அடியேன் மறப்பேனா? - நின்னை அடியேனாகிய நான் மறப்பேனா? வயங்கு செந்தீ சூழுற உலைந்து போனேன். ஒளியுடன் விளங்குகின்ற சிறந்த நெருப்பானது என்னைச் சூழ்ந்து; பொருந்த - மனம் வருந்தலானேன்; காத்தருள் - புரந்தருள்வாயாக.

* * *

இராமனைப் பலவாறு துதித்தான் வருணன். இராம பிரானும் சிற்றந் தணிந்தான். வருணனுக்கு அபயம் தந்தான். வருணன் தான் கட்டளைக்குப் பணியாத காரணத்தைக் கூறினான்.

"எடுத்த கணை சும்மா விடாது. எனவே இந்த பிரமாத்திரத்திற்கு ஒரு இலக்கு காட்டு" என்றான் கோசலை மகன். வருணனும் இலக்கு ஒன்றைக் காட்டினான். பிரம்மாத்திரத்தை அங்கு விடும்படி கடல் கடவுள் வேண்டினான். இராமனும் அங்ஙனமே செய்தான். இராமன் வழி வேண்டினான்.

வருணன் சேது கட்டச் சொன்னான். எங்கே?

* * *

'கல்லென வலித்து நிற்பின்,
கணக்கு இலா உயிர்கள் எல்லாம்
ஒல்லையின் உலந்து வீயும்;
இட்டது ஒன்று ஒழுகா வண்ணம்
எல்லை இல் காலம் எல்லாம்
ஏந்துவென்; இனிதின்! எந்தாய்!
செல்லுதி, "சேது" என்று ஒன்று
இயற்றி, என் சிரத்தின் மேலாய.

"எந்தையே! இக்கடலின் வற்றாத நீர், இறுகி கல்லாகிப் போனால் என்னிடத்து வாழ்கின்ற அளவிலா உயிர்கள் யாவும் விரைவில் மாண்டு ஒழியும். ஆதலால், என்மீது இட்ட கல் ஒன்றுகூட அழிந்து விடாதபடி, எக்காலமும் நிலைத்திருக்க அவற்றைத் தாங்கி நிற்பேன்; என் தலைமேல் 'சேது' என்ற ஓர் அணையைக் கட்டி அதன்மேல் எளிதாகச் செல்வாயாக" என்று கூறினான் வருணன்.

* * *

எந்தாய் - என் தந்தை போன்றவனே! 'கல் என வலித்து நிற்பின்—(நான் வற்றாமல்) கல்லை யொப்ப இறுகி நிற்பேனாகில்; கணக்கு இலா உயிர்கள் எல்லாம் - (என்னிடம் வாழும்) எண்ணிறந்த உயிர்கள் எல்லாம்; ஒல்லையின் உலந்து வீயும் - விரைவினில் கெட்டழியும்; இட்டது ஒன்று ஒழுகா வண்ணம் - வைத்தது நகராதபடி; எல்லையில் காலம் எல்லாம் இனிதின் ஏந்துவன் - எண்ணிறந்த காலம் எல்லாம் இனிது தாங்கி நிற்பன்; சேது என்று ஒன்று என் சிரத்தின் மேலாய், இயற்றி - சேது என்ற ஒரு அணையை என் தலைமீது அமைத்து, செல்லுதி - கடந்து செல்வாயாக; என்று மொழிந்தான் வருணன்.

* * *

வருணதேவன் தன்மீது அணைக் கட்டினால் அதைத் தாங்குவதாக உறுதி கூறினான்.

வருணன் சொல்லியபடி, நளனும் வானரரும் அணைக் கட்டத் தொடங்கினர்.

சேது அணையும் உருப்பெற்றது.

* * *

பப்பு நீர் ஆய வீரர்,
பரு வரை கடலில் பாய்ச்சத்,
துப்பு நீர் ஆய தூய
சுடர்களும் கறுக்க வந்திட்டு

உப்பு நீர் அகத்துத் தோய்ந்த
ஒளி நிறம் விளங்க அப்பால்
அப்பு நீர் ஆடுவான் போல்
அருக்கனும் அந்தம் சேர்ந்தான்.

பரவிய தன்மையினையுடைய வானர வீரர், அணை கட்டுவதற்காக பெரிய மலைகளைக் கடலிலே வீசினர். இதனால் பவளமென சிவந்திருந்த சூரிய கிரணங்கள் கடுமையாகத் தோன்றும்படி, கடலின் உப்பு நீர் தோய்ந்து, அவன் உடல் ஒளி விளங்கியது. அப்பாலுள்ள தண்ணீரிலே முழுகுபவனைப் போலச் சூரியனும் அத்தகிரியை அடைந்தான்.

* * *

பப்பு நீர் ஆய வீரர் - பரவும் தன்மை வாய்ந்த வானர வீரர்; பரு வரை கடலில் பாய்ச்ச - பெரிய மலைகளைக் கடலிடை இட்டதனாலே; துப்பு நீர் ஆய தூய சுடர்களும் - பவழம் போன்று செந்நிறம் பெற்ற தூய்மையான தன் கிரணங்களும்; கறுக்க வந்திட்டு - கறுத்திடுமாறு (அக்கடலினின்று தெறித்து வந்து; உப்பு நீர் அகத்துள் தோய்ந்த - உப்பு நீர் தன்னிடம் படிந்ததனால் (மங்குதல் அடைந்த); ஒளி நிறம் - ஒளியுடன் கூடிய நிறம்; விளங்க - விளங்கும்படி; அப்பால் - அதன் பிறகு; அப்பு நீர் ஆடுவான்போல் அருக்கனும் அந்தம் சேர்ந்தான் - அப்பு என்று சொல்லப் படும் தூய நீரில் மூழ்குபவன் போன்று அத்தமன கிரியை அடைந்தான்.

* * *

சேதுவைக் கட்டிமுடித்தான் நளன், வானரர் உதவியுடன். நளனின் சேவையைப் போற்றி இராமன் தனக்கு வருணன் அளித்த காணிக்கையைப் பரிசாக அளித்தான். உடன் சேதுவை சேனையுடனே கடந்தனர். சுவேல மலையில் இறங்கி, நளனையும் நீலனையும் தமக்குப் பாசறைகளை அமைக்குமாறு கூறினான். இராவணனின் ஒற்றர் இருவர் வானர உருக்கொண்டு வானர சேனையை வேவு

கண்டனர். அவர்களை உடன் கண்டுக்கொண்டான் விபீடணன். இராமனிடம் அவர்களை இழுத்துச் சென்றான். விவரத்தைச்ம் சொன்னான். அண்ணல் அவர்கட்கு அபயம் அளித்தான். இலங்கேசனுக்குச் சில செய்திகளைச் சொல்லி அனுப்பினான்.

இராவணன் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருந் தான்; அறிவுரை கூறிய மந்திரி மாலியனைக் கடிந்தான். பிரகதத்தன் பேசுகையில் ஒற்றர்கள் அங்கு வந்தனர். இராமன் கூறிய செய்திகளைக் கூறினர். இராவணனை வாழ்த்தினர்.

இராமன் சுவேல மலை மீதேறினான் - இலங்கையைக் கண்டான். அதே சமயம்,

மந்திராலோசனை சபையில், சேனைத்தலைவன், "இப்போது செய்யவேண்டியது போரே. வலிய அவர்களே இங்கு வந்துவிட்டதால், நன்மையே. ஆயிரம் வெள்ளம் சேனை நமக்குள்ளது. எனவே நமக்கு வலிமையைப் பற்றி கவலையில்லை. நீ எனக்கு விடை கொடு. நான் பகை வென்று வருகிறேன்!" என்றான் இராவணனிடம்.

ஆனால் மாலியனோ இராவணனுக்கு இராம இலட்சுமணர் தெய்வீகத் தன்மையைப் பற்றி எடுத் துரைத்தான். அநுமன் நம் நாட்டில் புகுந்து காவல் தேவதை இலங்கா தேவியை வென்ற செய்தியையும் கூறினான். "நாட்டின் நடப்புக்களோ நிம்மதியைத் தருவ தாக இல்லை. நம் அரக்கர் குலத்தை முன்னர் திருமால் ஒடுக்கியதை அறிவோம் அங்ஙனம் இருக்க, இப்போது நிகழும் நிகழ்ச்சிகள் அச்சத்தைக் கொடுப்பதாக உள்ளன. எவே, அழிவைத் தடுக்க, சீதையை இராமனிடம் கொடுத்தலே சரி" என்று வற்புறுத்திக் கூறினான்.

ஆனால் இராவணனோ அவன் அறிவுரைகளுக்குச் செவி சாய்க்கவில்லை. மாறாக, அவனை எள்ளி நகையாடினான். தன்னைப் பற்றி பெருமை அடித்துக்கொண்டான்.

இராமபிரானும் அவன் தம்பியும் சுவேல மலையின் உச்சியில் ஏறி இலங்கைக் கரையைப் பார்த்து அதிசயித்த போது, இராவணன், இலங்கையின் மிக்க உயரமான கோபுரத்தை அடைந்தான். ஏன்? வானரப் படையைக் கண்டு, சீர் தூக்கிப் பார்க்க.

இராமனைக் கண்டான், மருண்டான்.

இலங்கையின் வடதிசையின் இருந்த வாயிலின் கோபுரத்தின்மீது ஏறி நின்றான் இராவணன். அவனுடன் அவனுடைய படைத்தலைவர்களும் இருந்தனர்.

இவர்களைக் கண்ணுற்ற இராமன் விபீடணனை, இவர்கள் ஒவ்வொருவரும் யாரென்று கூறும்படி கட்டளையிட்டான். விபீடணன் அவர்களைச் சுட்டிக் காட்டிக் கூற ஆரம்பிக்கு முன்னரே பாய்ந்தான் சுக்ரீவன் சுவேல மலையிலிருந்து. யார் மீது? இராவணன் மீது. இருவருக்கும் நீண்ட நேரம் போர் நடந்தது. வெற்றி தோல்வியின்றி வெகு நேரம் மற்போர் நடந்தது. சுக்ரீவனை நீண்ட நேரம் காணாததால், இராகவன் கவலையுற்றான்; வருந்தினான்; அன்பனைக் காணாது துடித்தான்.

சுக்ரீவனும் பின்னர் வந்தான். இராமனின் திருவடிகளில் பற்பல உயர் ரக மணிகளை சமர்ப்பித்தான். தொழுதான். இந்த நாயக மணிகள் எங்கிருந்து கொண்டு வந்தான் வானர கோன்? இராவணனுடைய பத்து தலைகளிலிருந்த பத்து மகுடங்களில் இருந்து. எப்படி? மல்யுத்தம் செய்தான் அல்லவா? அப்போது இராவணனது மகுடங்களைக் கீழேத் தள்ளி, இந்த அரிய மணிகளைப் பறித்துவந்தான்.

இராமன் முதலில் சுக்ரீவனைக் கடிந்தான். விபீடணனோ, இராமன் கடிந்தவுடனேயே சுக்ரீவனின் வீரதீரச் செயலை வெகுவாகப் பாராட்டினான்.

இராமன் மனம் மாறி, சுக்ரீவனை பாராட்டியபோது, சூரியன் அஸ்தமித்தான். இதை கவி எவ்வாறு சித்தரிக்கிறார்?

*　　*　　*

தன் தனிப் புதல்வன் வென்றித்
தசமுகன் முடியில் தந்த
மின் தளிர்த்து அனைய பல் மா
மணியினை வெளியில் கண்டான்
"ஒன்று ஒழித்து ஒன்று ஆம்" என்று,
அவ் வரக்கனுக்கு ஒளிப்பான் போல
வன் தனிக் குன்றுக்கு அப்பால்
இரவியும் மறையப் போனான்.

தன் புதல்வனான சுக்ரீவன் இராவணனுக்கு வெட்கம் உண்டாகுமபடி செய்துவிட்டான். இராவணனின் மகுடங்களை குறை செய்திட்டான். சுக்ரீவனோ சூரியனின் புதல்வன். தன் மைந்தன் (சுக்ரீவன்) செய்த செயலுக்கு, தன் மீது பழிவாங்குவானோ என்று அஞ்சியதுபோல் கதிரோன் அத்தகிரிக்கு அப்பால் மறைந்தான்.

*　　*　　*

தன் தனி புதல்வன் - தன்னுடைய ஒப்பற்ற மகன்; வென்றி தசமுகன் முடியில் தைத்த - வெற்றி பொருந்திய இராவணனுடைய மகுடங்களிலே பதிக்கப்பெற்றிருந்த; மின் தளிர்த்தனைய - மின்னல் கொழுந்து விட்டாற் போன்ற; பல் மா மணியினை - பல சிறந்த மணிகளை; வெளியில் கண்டான் - வெளிப்படுத்தி நின்றான்; (அதனால்), 'ஒன்று ஒழித்து ஒன்றாம் - ஒன்று அழிய ஒன்று பொருந்தும்;' என்று - என்று பயந்து; அவ்வரக்கனுக்கு ஒளிப்பான் போல - அந்த இராவணனுக்குப் பயந்து ஒளிபவன் போன்று; வல் தனி குன்றுக்கு அப்பால் - வலிய தனிப்பட்ட மலைக்கு

அப்புறத்தில்; இரவியும் மறைய போனான் - சூரியனும் மறையும்படி சென்றான்.

* * *

எழுபது வெள்ளம் வானரப் படையோடு இலங்கையை முற்றுகையிட்டான் இராமன். இராவணனின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு வடக்கு வாயிலில் காத்திருந்தான். இராவணன் வரவேயில்லை. "ஒருவேளை இராவணன் மனம் மாறி, சீதையை இப்போதாவது கொடுக்க நினைத்தால், கொடுத்து விடட்டும். இல்லா விட்டால் இருக்கவே இருக்கிறது, போர்!" எனக் கருதி, அமைதியாக சிந்திக்கலானான்.

இராவணனின் மனம் திருந்தியிருப்பின், உடன் செயல்படுவதற்கான வழிமுறைகளைச் சிந்தித்தான். அவைகளிலொன்றை விபீடணனிடமும் கூறினான். அது என்ன? "இப்போதவாது சீதையைக் கொடுப்பாயா?" என்று இராவணனை கேட்டு தூது அனுப்புவோம். இப் போதும் மறுத்தால், போருக்குச் செல்வோம் என்றான் "

இக் கருத்தை விபீடணனும் சுக்ரீவனும் ஆதரித்தனர். ஆனால் இளையவனோ, "எப்போதும் எல்லோரிடமும் இரக்கம் காட்டுவது தகுதியன்று; நாம் இவ்வள்வு தூரம் வந்தபிறகு இனி சமாதானத்தைப்பற்றி கருதுவது சரியல்ல. அம்பைச் செலுத்திப் பகைவனை வெல்வதைத் தவிர, ஆலோசிக்க வேண்டுவது ஒன்றுமில்லை!" என்றான். தன் கூற்றை வலியுறுத்தும்படியாக இராவணன் செய்த முறைக் கேடுகளை எல்லாம் கூறினான். "இத்தகையவனுடன் வலிய சமாதானம் பேசலாமோ? அதுவும் போகட்டும். ஒரு வேளை இராவணன் நம் கருத்தினை ஏற்றுவிட்டால், விபீடணனுக்கு இலங்கை அரசை கொடுப்பதாக அளித்த வாக்கு என்னாவது? தண்டகாரண்யத்தில் அரக்கரை கொல்வ தாகச் சொல்லி இருடியர்க்கு அபயம் கொடுத்தோமே அது

என்னாவது? எனவே தூதுக்கு இப்போது இடமேயில்லை!'' என்றான் தீர்மானமாக.

தம்பி சொன்னதைக் கேட்டு புன்முறுவல் பூத்தான் இராமன். போர் தொடுப்பதில் எவ்வித அவசரமும் கூடாது என திட்டவட்டமாக காட்டியுள்ள அரச நீதியைச் சுட்டிக் காட்டினான்.

"பொறுமையை கடைபிடிப்போம். நம் சமாதான முயற்சி எதுவும் பலனளிக்காவிட்டால் கடைசி பட்சமாகப் போருக்கு எழுவோம்.''

பின்னர் யாரை தூது அனுப்புவதென்றும் கூறினான் இராகவன். ''முன்னம் ஒருமுறை சீதையைத் தேடுவதற்காக அநுமனை அனுப்பினோம். அவனையே மீண்டும் அனுப்பி னால், நம் பக்கம் வேறு வீரரில்லையோ என்று தவறாக பகைவர் எடைப் போடக்கூடும். எனவே அநுமனைப் போல் மிகப் பெரிய வீரர் பலர் நம்மிடம் உண்டு என்று பகைவர் அறியும்படி இம்முறை அங்கதனை தூது அனுப்புவோம். தீமைகள் சூழ்ந்தாலும் வெற்றியுடன் திரும்பும் ஆற்றலுடையவன் அவன்!" என்று கூறினான் இரகுவீரன். விபீடணனும் சுக்ரீவனும் இதனை ஏற்றனர்.

• • •

நெடுந்தகை விடுத்த தூதன்
இனையன நிரம்ப எண்ணிக்
கடுங்கனல் விடமும் கூற்றும்
கலந்து கால் கரமும் காட்டி
விடும் சுடர் மகுடம் மின்ன,
விரிகடல் இருந்தது அன்னக்
கொடுந்தொழில் மடங்கல் அன்னான்
எதிர் சென்று குறுகி நின்றான்.

அடுத்தபடி என்ன? "தூதுவன் ஒருவன் தன்னை விரைவில் தூண்டி மாதினை விடுதியோ என்று கேட்போம். மறுக்குமாகில் போர் தொடுப்போம்" என்று கூறினான் இராமன். அவ்வாறே அங்கதன் தூது சென்றனன். ஊழித் தீயும், ஆலகால விஷமும், இயமனும் ஒருங்குசேர்ந்து கால் களாகவும் கைகளாகவும் உருப்பெற்று, பெருங்கடல்போல் வீற்றிருந்த இராவணன் முன் சென்று நின்றான்.

* * *

நெடுந்தகை - உயர்குணத் தோன்றலாகிய இராமன்; விடுத்த - அனுப்பிய; தூதன் - தூதனாகிய அங்கதன்; இனையன - இவ்வாறு; நிரம்ப எண்ணி - (இராவணனைப் பற்றி)ப் பலவாறு நினைத்துக்கொண்டு; கடும் கனல் - ஊழித் தீயும்; விடமும் - நஞ்சும்; கூற்றும் - இயமனும்; கலந்து - ஆகிய யாவும் ஒன்றாகி; கால் - கால்களாகவும்; கரமும் - கைகளாகவும்; காட்டி-தோன்றப்பெற்று; விரிகடல் இருந்தது என்ன - பரந்த கடல் இருந்ததுபோல; சுடர்விடு மகுடம் மின்ன - ஒளிவீசும் மகுடமானது தன் முடிமீது விளங்க; கொடுந் தொழில் மடங்கல் அன்னான் - பாய்ந்து கொல்லும் கொடிய தொழில் உடைய ஆண் சிங்கம் போன்ற இராவணன்; எதிர் சென்று - எதிரே போய்; குறுகி - நெருங்கி; நின்றான்.

* * *

நின்றவன் தன்னை, அன்னான்
நெருப்பு எழ நிமிரப் பார்த்து, 'இங்கு
இன்று, இவண் வந்து எய்திய நீ யார்?
எய்திய கருமம் என்னை?
கொன்று இவர் தின்னா முன்னம்
கூறுதி, தெரிய' என்றான்
வன்திறல் வாலி சேயும்,
வாள் எயிறு இலங்க நக்கான்.

அவ்வாறு நின்ற அங்கதனை அவ்விராவணன் கண்களில் தீப்பொறி பறக்க நிமிர்ந்து பார்த்து, "நீ யார்? என்ன காரியம் பற்றி இங்கு வந்தாய்? இவர்கள் உன்னைக் கொன்று தின்பதற்கு முன் கூறு" என்றான்.

உடனே அங்கதன் சிரித்தான். சிரித்துவிட்டுப் பின் வருமாறு கூறினான்:

* * *

நின்றவன் தன்னை - அவ்வாறு வந்து நின்ற அந்த அங்கதனை; அன்னான் - அந்த இராவணன்; நெருப்பு எழ நிமிரப் பார்த்து - கண்களிலே தீப்பொறி தோன்ற நிமிர்ந்து பார்த்து; இன்று இவண் வந்து எய்திய நீ யார் - இன்று இங்கே வந்து அடைந்துள்ள நீ யார்?; எய்திய கருமம் ஏது - வந்த காரியம் என்ன?; இவர் கொன்று தின்னா முன்னம் - எனது பணியாளர் உன்னைக் கொன்று தின்பதன் முன்; கூறுதி தெரிய - நன்கு அறியுமாறு சொல்வாய்; என்றான் வன்திறல் - மிக்க வலிமையுடைய; வாலி சேயும் - வாலியின் மகனும்; வாள் எயிறு - ஒளிமிக்க பற்கள்; இலங்க - வெளியே ஒளிவீச; நக்கான் - சிரித்தான்.

* * *

(அங்கதன் தான் யார் என்பதைக் கூறினான்.)

★

'பூத நாயகன்; நீர் சூழ்ந்த
புவிக்கு நாயகன், இப்பூமேல்
சீதை நாயகன்; வேறு உள்ள
தெய்வ நாயகன், நீ செப்பும்
வேத நாயகன், மேல் நின்ற
விதிக்கு நாயகன், தான்விட்ட
தூதன் யான்; பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன்' என்றான்.

"நிலம், நீர், தீ, காற்று, வெளி என்று சொல்லப்பட்ட ஐம்பெரும் பூதங்களின் தலைவன்; கடலால் சூழப்பட்ட இந்த பூமண்டலத்தின் தலைவன்; புவியின் புதல்வியான சீதையின் நாயகன்; வேறுள்ள தெய்வங்கள் எல்லா வற்றிற்கும் தலைவன்; நீ ஓதும் வேதத்தின் தலைவன்; எதற்கும் மேலான விதிக்கும் தலைவன்; இத்தகைய இராமன் அனுப்பிய தூதன் நான். எனக்குக் கட்டளையிட்டபடி சொல்லும் பொருட்டு வந்தேன்" என்றான்.

* * *

பூத நாயகன் - நிலம், நீர், தீ, காற்று, வெளி என்று சொல்லப்பட்ட ஐம்பெரும் பூதங்களுக்கும் தலைவன்; நீர் - சூழ்ந்த - கடலால் சூழப்பட்ட; புவிக்கு - பூமிக்கு; நாயகன்- தலைவன்; இப்பூமேல் - இப்புவியின் புதல்வியாகப் பிறந்துள்ள; சீதை நாயகன் - சீதையின் கணவன்; வேறுள்ள தெய்வ நாயகன் - வேறுள்ள தெய்வங்கள் எல்லாவற்றுக்கும் தலைவன்; நீ செப்பும் - நீ ஓதுகின்ற; வேத நாயகன் - வேதத்தின் பொருளாய் விளங்கும் தலைவன்; மேல் நின்ற - எதற்கும் மேலாக நிற்கும்; விதிக்கு நாயகன் - ஊழ்வினைக் குத் தலைவன்; (ஆகிய இராமன்) தான் விட்ட - உன் பால் அனுப்பிய; தூதன் யான் பணித்த மாற்றம் - எனக்குக் கட்டளையிட்டபடி; சொல்லிய வந்தேன் என்றான் - சொல்ல வந்தேன் என்றான்.

* * *

(இதைக் கேட்ட இராவணன் இராமபிரானைப் பற்றி என்ன கூறினான்?)

* * *

'அரன் கொலாம்? அரி கொலாம்? மற்று
அயன் கொலாம்? என்பார் அன்றிக்
குரங்கெலாம் கூட்டி, வேலைக்
குட்டத்தைச் சேதுக்கட்டி

''இரங்குவானாகில், இன்னம் அறிதி''
என்று உன்னை ஏவும்
நரன் கொலாம் உலக நாதன்' என்று
கொண்டரக்கன் நக்கான்.

'சிவன் என்று சொல்வார்கள்; திருமால் என்று சொல்வார்கள்; பிரமன் என்று சொல்வார்கள். இப்படி உயர்வாக வியந்து சொல்லப்பட்ட இவர்களன்றி கேவலம் குரங்குகளை எல்லாம் திரட்டிக் கொண்டு இந்தச் சிறு குட்டையாகிய கடலுக்கு அணைகட்டி வந்து விட்டதனாலேயே தன்னைப் பெரியவனாக எண்ணி, என்பால் தூது அனுப்பும் மனிதனோ உலகநாதன், என்று கூறி நகைத்தான் இராவணன்.

* * *

அரன் கொல் ஆம் - சிவபெருமானோ; அரிகொலாம் - திருமாலோ; அன்றி - அல்லது; அயன் கொலாம் - பிரமன் தானோ; என்பார் அன்றி - இவர்களே யன்றி; குரங்கு எலாம் கூட்டி - குரங்குகளை எல்லாம் ஒரு படையாகத் திரட்டிக் கொண்டு; வேலைக் குட்டத்தைச் சேது கட்டி - சிறிய குட்டை போன்ற இச்சிறு கடலை அணை சேர்த்து (வந்து விட்டதானாலே தன்னைப் பெரியவனாக எண்ணிக்கொண்டு; இன்னும் - இப்போதாவது; இரங்குவான் ஆகில் - தான் செய்த காரியங்களுக்கு வருந்துவான் ஆனால் (போர் செய்யாது விடலாம்); அறிந்து வா - என்று உன்னை ஏவும்; நரன் கொலாம் உலக நாதன் - அற்ப மனித உலகிக்கு நாதன்; என்று கொண்டு - என்று சொல்லிக்கொண்டு; நக்கான் - நகைத்தான்.

* * *

'கங்கையும் பிறையும் சூடும்
கண்ணுதல் கரத்து நேமி
சங்கமும் தரித்த மால், மற்று
இந்நகர் தன்னைச் சாரார்

அங்கவர் தன்மை நிற்க
மனிசனுக்காக அஞ்சாது,
இங்கு வந்து இதனைச் சொன்ன
தூதன் நீ யாவன்?' என்றான்.

"கங்கையையும், பிறைச் சந்திரனையும் முடியிலே சூடியுள்ள நெற்றிக்கண்ணனாகிய சிவனும் சரி, சங்கு சக்கரம் தரித்த திருமாலும் சரி, இந்த இலங்கை மாநகரி வாரார்; பயப்படுவர். அவர்களை அப்படியிருக்கக் கேவலம் இந்த மனிதனுக்காக அஞ்சாது தூது வந்த நீ யார் சொல்!" என்று கேட்டான் இராவணன்.

* * *

கங்கையும் - கங்கா நதியையும்; பிறையும் - பிறைச் சந்திரனையும்; சூடும் - தன் முடிமீது அணிந்துள்ள; கண் நுதல் - நெற்றியிலே கண் உடைய சிவனும்; கரத்து - கைகளிலே; நேமி, சங்கமும் - சக்கரமும், சங்கமும்; தரித்த - ஏந்திய; மால் - திருமாலும்; இந்நகர தன்னைச் சாரார் - இந்த இலங்காபுரிக்கு வரமாட்டார்; அங்கவர் நிலைமை நிற்க - அவர்களது நிலைமையே அவ்விதம் இருக்க; மனிச னுக்கா - கேவலம் ஒரு மனிதன் பொருட்டு; அஞ்சாது - பயமின்றி; இங்கு வந்து - இந்த இலங்கை மாநகரை அடுத்து; இதனைச் சொன்ன - இவ்வார்த்தைச் சொன்ன; தூதன் - தூதினன்; நீ யாவன் - நீ யார்? என்றான் - என்று கேட்டான் இராவணன்.

* * *

தூதுவனைப் பார்த்து இராவணன் 'நீ யார்?' என்று கேட்கிறான்.

அப்போது அங்கதன் முதலில் தன் சிற்றப்பன் சுக்ரீவனை புகழ்கிறான். தன் தந்தை வாலியின் பராக்கிரமத்தையும், இராவணனை அவன் என்ன செய்தான் என்பது பற்றியும் நகைக்கும் வண்ணம் கூறுகிறான்.

இந்திரன் செம்மல் பண்டு ஓர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்களோடும்
வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன்
தேவர் உண்ண
மந்திரக் கிரியால் வேலைக்
கலக்கினான் மைந்தன் என்றான்.

"முன்பு ஒரு காலத்திலே இராவணன் என்பவனை அவனது அழகிய தோள்களுடன் தன் வாலிலே தொங்கக் கட்டி, மலைகள்தோறும் தாவித்திரிந்தவனும், தேவர்களுக்கு அமுதம் வழங்கும் பொருட்டு மந்திர கிரியால் பாற்கடலைக் கடைந்தவனும், இந்திரன் குமாரனுமாகிய வாலியின் மகன்" என்றான்.

* * *

இந்திரன் செம்மல் - இந்திரன் மகனும்; பண்டு - முன்பு ஒரு காலத்திலே; ஓர் இராவணன் என்பான் தன்னை - மிகப் புகழ்பெற்று விளங்கிய ஓர் இராவணன் என்பவனை; சுந்தரத் தோள்களோடும் - அவனது இருபது கரங்களோடும்; வாலிடைத் தூங்கச் சுற்றி - தன் வாலிலே சுற்றிக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு; சிந்துரக்கிரிகள் தாவித்திரிந்தனன் - யானைகள் உலவுகின்ற மலைகள்மீது தாவித்திரிந்தவனும்; தேவர் உண்ண - தேவர்கள் அமுதம் உண்ணும் பொருட்டு; வேலைக் கலக்கினான் - மந்தர கிரியால் பாற்கடலைக் கடைந்தவனுமாகிய வாலியின்; மைந்தன் - மகன்; என்றான்.

* * *

வாலியின் மைந்தன் அங்கதன்தான் இராமனின் தூதன் என்றறிந்த உடனே இலங்காதிபன் மிகவும் நயமாக அங்கதனை தன் பக்கம் ஈர்க்க முயற்சி செய்கிறான்.

அவன் இராமனின் தூதுவனாக இருப்பது மாபெருந் தவறு என்னும்படியும், அங்கதனின் மனத்தைக் கலைக்கப் பார்க்கிறான். ஏன்? தன் தந்தை வாலியைக் கொன்றவனுக்கு பணி செய்வது பெருங் குற்றமன்றோ?

சுருக்கமாக இராமனிடம் இருந்து அங்கதனைப் பிரிக்கப் பார்க்கிறான் இலங்கை வேந்தன்.

* * *

'உந்தை என் துணைவன் அன்றே
ஓங்கு அறஞ் சான்றும் உண்டால்
நிந்தனை இதன்மேல் உண்டோ?
நீ அவன் தூதன் ஆதல்
தந்தனன் நினக்கு யானே
வானரத் தலைமை; தாழா
வந்தனை நன்று செய்தாய்
என்னுடைய மைந்த!' என்றான்.

"அடடா! உன் தந்தை எனது துணைவன் அல்லவா! இதற்குத் தக்க சாட்சியும் உண்டே! நீ போய் இராமனுக்குத் தூது வரலாமோ? இதைவிடப் பழி வேறுண்டோ? வா! எனது மகனே! நானே உனக்கு வானரத் தலைமை தந்தேன். கால தாமதம் செய்யாமல் வந்தாய்!" என்றான்.

* * *

உந்தை என் துணைவன் அன்றே - உனது தந்தை எனது நண்பன் அல்லவா! ஓங்கு அறம் சான்றும் உண்டு - இதற்கு அறக்கடவுளாகிய அக்கினி சாட்சியும் உண்டு; (அப்படி எனது நண்பனாய் மகா வீரனாய் இருந்த வாலியின்

புதல்வனாகிய) நீ அவன் தூதன் ஆதல் - நீ [உன் தந்தையைக் கொன்ற] அவன் தூதன் ஆதலாகிய; நிந்தனை - பழிப்பு; இதன் மேல் உண்டோ - இதற்குமேல் வேறு ஏதாவது உண்டோ? (ஆகையால் தூது வந்ததை விடு) நினக்கு - உனக்கு; வானரத் தலைமை - வானர அரசு; யானே தந்தனன் - நானே கொடுத்துவிட்டேன்; என்னுடைமைந்த - எனது மகனே! தாழாவந்தனை - காலந்தாழ்த்தாது வந்தாய்; நன்று செய்தாய் - நல்ல காரியம் செய்தாய்.

* * *

தாதையைக் கொன்றான் பின்னே
தலை சுமந்து இருகை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தாய்
என்ப தோர் பிழையும் தீர்ந்தாய்
சீதையைப் பெற்றேன் உன்னைச்
சிறுவனுமாகப் பெற்றால்
ஏதெனக்கு அரிது என்றான்
இறுதியின் எல்லை கண்டான்.

"தந்தையைக் கொன்றவன் பின் இருகைகளையும் தலைமேல் கூப்பிக் கொண்டு வாழ்ந்தான் அறிவிலி! . என்கிற பழிச் சொல்லும் அகலப் பெற்றாய். சீதையைப் பெற்றேன். உன்னைச் சிறுவனுமாகப் பெற்றால் இந்த உலகிலே எனக்குக் கிடைத்தற்கு அரிய பொருள் வேறு என்ன இருக்கிறது?" என்றான் வாழ்நாளின் இறுதிக் காலத்தை எட்டிவிட்ட இராவணன்.

* * *

இறுதியின் எல்லை கண்டான் - முடிவு காலத்தின் எல்லையினை விரைவிலே அடைந்து கொண்டு இருக்கும் இராவணன் (பின்னும் அங்கதனைப் பார்த்துச் சொன்னான்) தாதையைக் கொன்றான் பின்னே - தந்தையைக்

கொன்றவன் பின்னால்; இருகை தலை சுமந்து நாற்றி - தன் இரு கைகளையும் தலைமேல் குவித்துக் கொண்டு; பேதையன் - அறிவிலி; என்ன - என்று; (உலகத்தார் பழிக்கும் வண்ணம், வாழ்ந்தாய் என்பதோர் பிழையும் தீர்ந்தாய் - என்று சொல்லப்படுகிற குற்றமும் நீங்கப் பெற்றாய்; சீதையைப் பெற்றேன் - சீதையைப் பெற்று விட்டேன்; இனி - இனிமேல்; உன்னைச் சிறுவனுமாகப் பெற்றால் - உன்னை எனது மகனாகவும் அடையப் பெறுவனேல்; எனக்கு அரிது ஏது என்றான் - இந்த உலகிலே நான் அடைய இயலாத அரியது எது? என்றான்.

* * *

'அந்நரர் இன்று, நாளை,
அழிவதற்கு ஐயம் இல்லை;
உன்னரசு உனக்குத் தந்தேன்;
ஆளுதி ஊழிக்காலம்:
பொன் அரி சுமந்த பீடத்து
இமையவர் போற்றி செய்ய,
மன்னவனாக, யானே
சூட்டுவன், மகுடம்' என்றான்.

"அந்த மானிடர் இன்றோ அல்லது நாளைக்கோ அழியப் போகிறார்கள். அதில் சிறிதும் ஐயம் வேண்டாம். உனது அரசை உனக்கே நான் தந்தேன். ஊழிக் காலம்வரை பொன்னால் செய்யப்பட்ட சிம்மாசனத்தில் அமர்ந்து, வானவர் உன்னைத் தொழ மன்னவனாக ஆளுதி. யானே நினக்கு மகுடம் சூட்டுவேன்!" என்றான்.

* * *

அந்நரர் - அந்த மானிடர்; இன்று நாளை - இன்றோ நாளையோ; அழிவதற்கு-இறந்து போவதில்; ஐயம் இல்லை- சந்தேகம் இல்லை; உன் அரசு உனக்குத் தந்தேன் - உனது

அரசை உனக்கே தந்துவிட்டேன்; ஊழிக் காலம் - ஊழிக் காலம்வரை; பொன் அரி சுமந்த பீடத்து - பொன்னால் செய்யப்பட்ட சிங்காதனத்தில்; இமையவர் போற்றி செய்ய - வானவர் துதிக்க; மன்னவனாக ஆளுதி - ஆட்சி புரிவாயாக; மகுடம் யானே சூட்டுவன் - நானே உனக்கு மணிமுடி சூட்டுவேன்; என்றான் -

* * *

அங்கதன் அதனைக் கேளா,
    அங்கையோடு அங்கைத் தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும்
    இலங்கையும் துளங்க, நக்கான்;
'இங்கு நின்றார்கட்கு எல்லாம்
    இறுதியே' என்பது உன்னி,
உங்கள் பால் நின்று எம்பால்
    போந்தனன் உம்பி' என்றான்.

அங்கதன் அதனைக் கேட்டுக் கைகொட்டிச் சிரித்தான். எப்படி? தன்னுடைய உயர்ந்த வலிய தோள்களும் மார்பும், இலங்கையும் குலுங்கும்படி உரக்கச் சிரித்தான். சிரித்துச் சொல்கிறான்: "இங்கு உள்ளவர்களுக்கெல்லாம் அழிவு காலம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து உனது தம்பி யாகிய விபீடணன், உன்னைவிட்டு நீங்கி எங்களுடன் சேர்ந்துவிட்டான்" என்றான்.

* * *

அங்கதன் அதனைக் கேளா - அங்கதன் அதனைக் கேட்டு; அங்கையோடு அங்கை தாக்கி - கைதட்டி ஆரவாரம் செய்து; துங்க வன் தோளும் - உயர்ந்த வலிய தோள்களும்; மார்பும் - இலங்கையும் - இலங்காபுரியும்; துளங்க- குலுங்க; நக்கான் - சிரித்தான்; இங்கு நின்றார்கட்கு எல்லாம் இறுதியே - இங்குள்ளோர்க்கெல்லாம் அழிவு

காலமே; என்பது உன்னி - என்பதை அறிந்து; உம்பி - உனது தம்பியாகிய விபீடணன்; நுங்கள்பால் நின்று எம்பால் போந்தனன் - உங்களைவிட்டு நீங்கி எங்கள்பால் வந்து விட்டான்; என்றான்-

* * *

வாய் தரத்தக்க சொல்லி
    என்னை உன்வசம் செய்வாயேல்
ஆய்தரத்தக்கது அன்றோ
    தூது வந்து அரசது ஆள்கை
நீ தரக் கொள்வேன் யானே இதற்கு
    இனி நிகர் வேறு எண்ணில்
நாய் தரக் கொள்ளும் சீயம்
    நல்லரசு என்று நக்கான்.

தூதனாக வந்த அங்கதன் மேலும் சிரித்தான். கைகொட்டி சிரித்துக்கொண்டே கூறினான்:

"ஆகா! எப்படி? நீ, எனக்கு அரசு தருவாய். நானதை ஏற்கவேண்டும். தூதனாகச் சென்ற நான் மாற்றான் வார்த்தைகளுக்கு மயங்கி, (இராமனுக்கு) வேறுபட்டேன் ஆகில், எனக்கு பெரும் பழி வராதோ? அதுவும் போகட்டும். உன்னிடம் அரசு பெறுவது எதைப்போலிருக்கும் தெரியுமா? நாயிடம் இருந்து அரசு பெற்றது போல (இழிவாக) இருக்கும்!" என்றான் ஏளனமாக.

* * *

வாய்தரத்தக்க சொல்லி - வாயில் வந்தவைகளை எல்லாம் சொல்லி; என்னை உன் வசம் செய்வாயேல் - உன் பக்கம் சேர்த்துக் கொள்வாயானால்; தூது வந்து அரசது ஆள்கை - தூதனாக வந்து அரசாட்சி ஏற்பது; ஆய்தரத் தக்கது அன்றோ - பெரியவர்களால் ஆராயத் தக்கது அல்லவா! நீ தரக் கொள்வேன் யானே - ஆட்சியை

நீ கொடுக்க நான் ஏற்பேனா? (மாட்டேன்) இதற்கு நிகர் - இதற்குச் சமம்; வேறு எண்ணில் - வேறு ஒன்று கூறினால் [அது எது?] சீயம் - சிங்கமானது; நல்லரசு - நல்லாட்சியை; நாய்தரக் கொள்ளும் - நாய்தர ஏற்குமோ? என்று நக்கான் - என்று நகைத்தான்.

* * *

'கூவி இன்று என்னை, நீ போய்த்
தன்குல முழுதும் கொல்லும்
பாவியை அமருக்கு அஞ்சி அரண்
புக்குப் பதுங்கினானைத்
தேவியை விடுக அன்றேல்
செருக்களத்து எதிர்த்துத்தன்
ஆவியை விடுக என்றான்
அருள் இனம் விடுகிலாதான்.'

இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. இந்தக் கடைசி நிமிடத்திலும் இராமனிடம் சீதையைக் கொடுத்துத் தன்னுயிரை இராவணன் காப்பாற்றிக் கொள்ளலாம். தன் குலத்தையும் அழிவின்றிக் காக்கலாம். "இதை நீ செய்ய விரும்பாவிடில், போர்தான் முடிவு. அச்சத்தினால் அரணில் பதுங்கியிராமல் உன்னை வெளியே வரச்சொன்னான் அருட் செம்மல் இராமபிரான்" என்று அங்கதன் இராவணனிடம் கூறினான்.

* * *

அருள் இனம் விடுகிலாதான் - (நீ பெரும் பிழை செய்தும் கூட) இன்னமும் உன்னிடம் இரக்கம் நீங்காத இராமன்; என்னைக் கூவி - என்னை அழைத்து; நீ போய் - நீ சென்று; தன் குல முழுதும் கொல்லும் பாவியை - தன் குலம் முழுவதையும் கொல்கின்ற பாவியாகிய இராவணனை அடைந்து; அமருக்கு அஞ்சி - போருக்குப் பயந்து; அரண் புக்குப் பதுங்கினானை - பாதுகாவலில் பதுங்கியிருக்கும்

அவனை நோக்கி; தேவியை விடுக அன்றேல் செருக்களத்து எதிர்த்துத் தன் ஆவியை விடுக - சீதையைவிடு. இல்லையேல் போர்க்களத்திலே நேர் நின்று போர் செய்து உயிர் விடுக; என்றான்-

* * *

இதைக் கேட்டு கடுங்கோபங் கொண்டான் இலங்கேசன். அங்கதனை பற்ற நால்வரை கட்டளையிட்டான். நால்வர் அவனைப் பற்றினர். ஆனால் அங்கதன் அவர்கள் தலையை துண்டித்து தண்டித்தான்.

சுற்றிலுமிருந்த வீரரை ஒருமுறை பார்த்தான் இராம தூதன்.

''இராமனின் அம்புகள் வந்து வீழ்வதற்கு முன்னரே வலிமையற்ற நீங்கள் எல்லோரும் உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிப் போய்விடுங்கள்!'' என்று கூறிக் கொண்டே வானத்தில் எழுந்தான்.

இராமனிடம் வந்தான். அவன் காலடியில் விழுந்து வணங்கினான். பகைவரோடு பொருததால் இரத்தம் படிந்திருந்த அவன் கால்களை அண்ணலும் கண்டான்.

* * *

உற்றபோது அவன்
உள்ளக் கருத்து எலாம்
கொற்ற வீரன் உணர்த்து
என்று கூறலும்
முற்ற ஓதி என்?
மூர்க்கன் முடித்தலை
அற்ற போது அன்றி
ஆசை அறான் என்றான்.

வெற்றி வீரன் இராமன் அங்கதனை தூதின் விளைவைப் பற்றிக் கேட்டான்.

என்ன சொல்லி என்ன பயன்?

"இராவணனின் பத்து தலைகளும் மகுடங்களும் கீழே விழுந்தாலன்றி, நல்லறிவுக்குச் செவி சாய்க்கமாட்டான். தனக்குக் கேடு விளையுமென்று தெரிந்தும் திருந்தமாட்டான். விடாப் பிடியாகவே உள்ளான்" என்றும் சுருக்கமாகக் கூறினான்.

* * *

உற்றபோது - திரும்பி வந்தபோது; அவன் உள்ளக் கருத்து எலாம் - அந்த இராவணனது மனத்தில் உள்ள எண்ணங்களை எல்லாம்; உணர்த்து - தெரிவிப்பாய்; என்று கொற்ற வீரன் கூறலும் - என்று வெற்றி வீரனாகிய இராமன் கூறவும்; முற்ற ஓதிஎன் - முழுவதும் சொல்லி என்ன பயன்; மூர்க்கன் - விடாப்பிடி கொண்ட அந்த இராவணன்; முடித் தலை அற்றபோது அன்றி - கிரீடங்கள் பொருந்திய தலை அறுத்துத் தள்ளப்பட்டால் அன்றி; ஆசை அறான் - தன் மனத்துள்ள ஆசை நீங்கப் பெறான்; என்றான் -

* * *

அங்கதன் கூறியதைக் கேட்டான் இராகவன். இனி போரைத் தவிர்க்க முடியாது. நிகழ்த்தியே ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான். வானர வீரர்களை அகழியைத் தூர்த்துக் கோட்டை மதிலை வளைக்க உத்திரவிட்டான்.

நான்கு வாயில்களிலும் அரக்கர் சேனை வந்தன. கடுமையாகப் பொருதன. வடக்கு வாயிலின் அரக்கப் படைத் தலைவன் வச்சிரமுஷ்டி. கடும் போருக்குப் பின் சுக்ரீவன் அவனைக் கொல்லவே, மற்றவர் அஞ்சி நகரி நோக்கி ஓடினர்.

கிழக்கு வாயிலிலும் கடும்போர் நிகழ்ந்தது. அரக்கர் சேனை சிதறியோடியது. ஓடும்போது வானர படையைக் குலைத்தது. எனினும் இடும்பன் என்ற கரடித் தலைவன் அரக்கப் படைத் தலைவனைப் பற்றி, உயிரிழக்கச் செய்தான். தலைவன் இறந்ததைக் கண்ட அரக்கன் பிரகஸ்தன் வானரப் படையைக் கோபமாகத் தாக்கினான். ஆனால் இறுதியில் வானரப் படைத் தலைவன் நீலன் அவனைத் தன் வாலால் கட்டினான்; சுழற்றினான்; வீழ்த்தினான்.

தெற்கு வாயிலில் அங்கதன் அரக்கரை ஓட ஓட விரட்டினான்.

மேற்கு வாயிலிலோ, அனுமன் அரக்கர் படைத் தலைவனை வீழ்த்தி, அரக்கர் படைகளைச் சின்னாபின்னம் ஆக்கினான்.

எல்லா திசைகளிலும் அரக்கர் படை தோல்வியைக் கவ்விய விவரம் இலங்கேசனுக்கு எட்டியது. இராவணன் போர்க் கோலம் பூண்டான். இராமனும் அவனைப் போரில் எதிர்க்கொள்ள வந்தான். அனுமனும், லட்சுமணனும் இராவணனுடன் பொருதனர். போரிலே லட்சுமணன் சளைத்தான். அனுமன் இராவணனுடன் மற் போர் செய்தான்; அச்சமயம் லட்சுமணன் மீண்டும் பங்கு கொள்ள வந்தான். இராவணன் பிரம்மாத்திரத்தை எய்தான். லட்சுமணன் மூர்ச்சை அடைந்தான். அவனைத் தூக்கிச் செல்ல இராவணன் முயன்றபோது, மாருதி குறுக்கிட்டு லட்சுமணனை தூக்கிச் சென்று இராமபிரானிடம் சேர்ப்பித்தான்.

''என் தோளில் ஏறி, இராவணனோடு போர் புரியுங்கள்'' என்று வேண்டினான்; வற்புறுத்தினான். இராகவனும் இசைந்தான். கடும்போர் நடந்தது.

பின்? முதல் நாள் போரின் இறுதியில் இராவணன் என்னவானான்?

*　　*　　*

ஒன்று நூற்றினோடு ஆயிரம்
　　கொடுந்தலை உருட்டிச்
சென்று தீர்வில எனைப்பல
　　கோடியும் சிந்தி
நின்ற தேரொடு இராவணன்
　　ஒருவன் நிற்கக்
கொன்று வீழ்த்தினது
　　இராகவன் சரம் எனும் கூற்றம்.

இராவணனை எதிர்த்து அம்பு மழை பெய்தான் தசரதனின் மகன். அந்த அம்புகள் எல்லா படை வீரர்களையும் வீழ்த்தி விடவே, இராவணன் தன்னந்தனியனாகத் தேருடன் நின்றான்.

*　　*　　*

இராகவன் - இராகவனுடைய; சரம் எனும் கூற்றம் - அம்பு என்ற யமன்; ஒன்று நூற்றினோடு ஆயிரம் - ஒரு நூறாயிரம்; கொடுந்தலை உருட்டி - கொடிய தலைகளை உருட்டி; சென்று தீர்வில - அதனோடு அமையாமல்; எனைப்பல கோடியும் சிந்தி - எத்தனையே பல கோடி வீரர்களையும் தலை சிந்தச் செய்து; நின்ற தேரொடு - நின்ற தேருடன்; இராவணன் ஒருவன் நிற்க - இராவணன் ஒருவன் மட்டும் தனியே நிற்க; கொன்று வீழ்த்தின - மற்றவர் எல்லாரையும் கொன்று வீழ்த்தியது.

*　　*　　*

ஆளையா! உனக்கு அமைந்தன
மாருதம் மறைந்த
பூளையாயின் கண்டனை;
இன்று போய் போர்க்கு
நாளை வா என நல்கினன்
நாகு இளங்கமுகின்
வாளை தாவுறு கோசலை
நாடுடை வள்ளல்.

இராவணன், படை அழிய, அனைத்தும் இழந்து தனியனாய் நின்றபோது) தான் வலியிழந்த நிலையில் இருப்பதையறிந்து வெட்கினான். கருணையால் அயோத்தி நாட்டுத் தலைவன் 'இன்று போய் நாளை வா' என்றது வேதனையைத் தந்தது.

* * *

ஆள் ஐயா - அரக்கரை ஆளும் ஐயா! உனக்கு அமைந்தன - உனக்குத் துணையாக அமைந்த படைகளும்; தேரும் பிறவும்; மாருதம் மறைந்த பூளையாயின - காற்றினால் வாரி எறியப்பட்ட பூளைப் பூண்டுகள்போல் ஆயின; கண்டனை - கண்டாய் அன்றோ! (ஆதலால்) இன்று போய் நாளை போர்க்கு வா - இன்று திரும்பிப் போய் நாளை உனது படை முதலியவற்றுடனே போருக்கு வா; என - என்று; நல்கினான் - உயிர் அளித்து விடை கொடுத்தான்; நாகு இளங்கமுகின் - மிக இளம் கமுகின் மீது; வாளை - வாளை மீன்; தாவுறு - துள்ளிப்பாய்கிற; கோசலை நாடுடை வள்ளல் - கோசல நாடுடைய வள்ளலாகிய இராமன்.

* * *

வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும

தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போக்கி
வெறுங்கையோடு இலங்கை புக்கான்.

முதல் நாள் போரில் எல்லாம் இழந்து, இராமனின் கருணையால் வீடு திரும்பிய இராவணன் தன்னிலை எண்ணி மனங்குன்றினான்.

திக்கஜங்களை எதிர்த்து வெற்றிக் கண்ட தனக்கா இந்த அவல நிலை?

கைலாய மலையை பெயர்த்தெடுத்த தனக்கா இந்த இழிநிலை என மருகினான்.

இசை வல்லுனன் ஆகிய நாரதனே மகிழும்படி சாம வேதம் பாடிய எனக்கா (இலங்காதிபதியான எனக்கா) இந்நிலை?

*　　　*　　　*

வாரணம் பொருத மார்பும் - திசை யானைகளுடன் (நேர் நின்று) போரி புரிந்த மார்பும்; வரையினை எடுத்த தோளும் - கயிலாய மலையினை அகழ்ந்து எடுத்த புயமும்; ஆரண முனிவர்க்கு ஏற்ப - வேதங்களில் வல்ல முனிவர்களும் உவந்து ஏற்றுக்கொள்ளுமாறு; அருமறை பயின்ற நாவும் - அருமையான சாம கானம் பயின்ற நாவும்; தாரணி மவுலி பத்தும் - மாலை புனைந்து நின்ற பத்து மகுடங்களும்; சங்கரன் கொடுத்த வாளும் - சிவபெருமான் அளித்த சந்திரகாசம் என்ற வாளும்; வீரமும் - தன்னுடைய வீரப்பான்மையும் (என்ற அனைத்தையும்); களத்தே விட்டு - போர்க் களத்திலேயே போட்டு விட்டு; வெறுங்கையே

மீண்டு போனான் - வெறுங்கையனாக ஊர் திரும்பிச் சென்றான்.

* * *

இராமனின் விற்திறனால் தனியனாகிய இராவணன். நகரி நோக்கி மீண்டான். எங்கும் உள்ள அரக்கச் சேனைகளையும் திரட்டிக் கொண்டு வருமாறு தூதர்களுக்குக் கட்டளையிட்டான். மாலியவான் இராவணனின் இருப்பிடம் சென்றடைந்தான். இராவணன் அவனிடம் இராமனால் தனக்கேற்பட்ட சிறுமையைப் பற்றி கூறினான். மாலியவான் இராவணனுக்குச் சில அறிவுரைகளைக் கூறி, 'சீதையை விடச்' சொன்னான்.

அங்கு இருந்த மகோதரனோ கண்ணில் தீப் பொறி பறக்க, மாலியவானை நோக்கினான். 'இப்படி சிறுமையாக சொல்லியது என்னே!' என்று அவனை அதட்டினான். இராவணனுக்கு மென்மேலும் துர்போதனை செய்தான், இராவணனும் தன் தம்பி கும்பகன்னனை துயில் எழுப்பி அழைத்து வருமாறு ஆணையிட்டான்.

அதன்படி கிங்கரர் உறங்குகின்ற கும்பகன்னனிடம் சென்றனர்.

* * *

உறங்குகின்ற கும்ப கன்ன
உங்கள் மாய வாழ்வு எலாம்
இறங்குகின்ற தின்று காண்
எழுந்திராய்; எழுந்திராய்;
கறங்கு போல விற்பிடித்த
கால தூதர் கையிலே
உறங்குவாய், உறங்குவாய்;
இனிக்கிடந்து உறங்குவாய்.

'உறங்குகின்ற கும்பகன்னனே! உங்களுடைய பொய்யான செழிப்பான வாழ்வு எல்லாம் (செல்வாக்கு) இன்று இறங்குவதற்கு (சீரழிய) தொடங்கிவிட்டது; இதனைக் காண்பாய்; எழுந்திருப்பாய், எழுந்திருப்பாய்: காற்றாடி போலத் திரிகின்ற வில்லைப் பிடித்த யமதூதரின் கையிலே இனி படுத்துறங்குவாய்!' எனக் கூறினர்.

(கும்பகன்னன் சீக்கிரமே இறந்து போவான்! என்று அறிவுறுத்தினர்.)

உறங்குகின்ற கும்பகன்ன - தூங்கிக் கொண்டிருக்கின்ற கும்பகர்ணனே! உங்கள் மாயவாழ்வு எல்லாம் - உங்களது பொய்யான வாழ்வு எல்லாம்; இன்று இறங்குகின்றது காண் - இன்று இறங்கத் தொடங்கி விட்டது; காண் - காண்பாய்; எழுந்திராய் - எழுந்திராய்; கறங்கு போல - காற்றாடி போல; விற்பிடித்த - வில் ஏந்திய; கால தூதர் கையிலே-இயம தூதர் கைகளிலே; உறங்குவாய் - உறங்குவாய்; இனிக்கிடந்து உறங்குவாய்.

* * *

கும்பகன்னன் தன் அண்ணனை வணங்கினான்; அரக்கர்கோன் அவனை உபசரித்தான்; நெற்றியில் வீரப் பட்டமும் கட்டினான். கவசத்தையும் அணிவித்து போர்க் கோலஞ் செய்வித்தான். கும்பகன்னன் 'இக் கோலம் எதற்கு' என்று கேட்டான்.

இலங்கேசனும் நிகழ்ந்தவற்றைச் சொல்லி, கும்பகன்னனை போருக்குச் செல்ல சொன்னான். கேட்டான் தம்பி இப்படி ஆகிவிட்டதே என்று வேதனைப் பட்டான்.

* * *

ஆனதோ வெஞ்சமர்
அலகில் கற்புடைச்
சானகி துயர்இனந்
தவிர்ந்த தில்லையோ

வானமும் வையமும்
வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ
பொன்றுங் காலமே

விவரமறிந்தான் கும்பகன்னன் 'கொடிய போர், தோன்றி விட்டதோ? கற்புக்கரசி சானகியின் துயர் இன்னும் நீங்க வில்லையோ? வானத்திலும் வையத்திலும் வளர்ந்த உன் புகழ் போய்விட்டதோ? அரக்கர் குலத்திற்கு அழிவு காலம் வந்துவிட்டதோ?' என்று வேதனையோடு கூறினான்.

* * *

வெம்சமர் ஆனதோ - கொடிய போர் மூண்டு விட்டதோ; அலகில் - எல்லையில்லாத; கற்புடைச் சானகி - கற்புடைய சீதையின்; துயர் இனந் தவிர்ந்ததில்லையோ - துன்பம் இன்னும் நீங்கிய பாடில்லையோ; வானமும் வையமும் வளர்ந்த - விண்ணிலும் மண்ணிலும் பரவிய; வான்புகழ் - பெரும்புகழ்; போனதோ - போயிற்றோ; பொன்றுங் காலம் புகுந்ததோ - அரக்கர்க்கு அழிவு காலம் வந்து விட்டதோ.

* * *

புலத்தியன் வழிமுதல்
வந்த பொய்யறு
குலத்தியல்பு அழிந்தது
கொற்றம் முற்றுமோ?
வலத்தியல் அழிவதற்கு
ஏது மையறு
நிலத்தியல் நீரின் இயல்
என்னும் நீரதால்

அத்துடனா?

'சீதை நிமித்தமாக வானரப்படையுடன் மானுடர் நெருங்கிவிட்டார்கள் என்றால், முன்னம் நந்தி, வேதவதி முதலியோர்களாற் கொடுக்கப்பட்ட சாபத்தைக் கருதி, சீதையை விட்டிடவேண்டியதுதானே! அங்ஙனமிருக்க, அவ்வாறு நீ செய்யாதது, கொடுவிதி உன்னை தூண்டுவதால் அன்றோ?

மறத்தின் வழி நடக்கின்ற உனக்கு வெற்றி கிடைக்குமோ? உனது செயல் வெற்றித் தன்மை அழிவதற்கே ஏதுவாகும் புலஸ்திய முனிவரின் வழியில் வந்த, வஞ்சக மில்லாத குலத்தின் மேன்மை உனது முறையற்ற செய்கையால் அழிந்தது!' என இடித்துக் கூறினான்.

* * *

(அதர்ம வழி நடக்கும் உனக்கு) குற்றம் முற்றுமோ - வெற்றி கிட்டுமோ; வலத்தியல் அழிவதற்கு ஏது - வலிமை அழிவதற்கே ஏதுவாக; புலத்தியன் வழி முதல் வந்த - புலஸ்திய முனிவர் வம்சத்தில் வந்த; பொய்யறு - பொய்யில்லாத; குலத்து இயல்பு - நம் குல இயல்பு; அழிந்தது - அழிந்து போயிற்று; மையது நிலத்தின் இயல் - குற்றமற்ற நிலத்தின் தன்மை; நீரின் இயல் - நீரின் தன்மை; என்னும் நீரதால் - என்னும் நியதிப்படி ஆயிற்று.

* * *

அத்துடனா?

கொடுத்தனை இந்திரற் கரசும்
கொற்றமும்
கெடுத்தனை நின்பெருங் கிளையும்
நின்னையும்
படுத்தனை பலவகை அமரர்
தங்களை
விடுத்தனை வேறினி வீடும்
இல்லையால்.

'இந்திரற்கு அவனுடைய வாழ்வினையும், உன் கிளைஞர்க்கு அழிவினையும் கூட்டியதோடு உன் தீச் செயலால் உனக்கும் அழிவு தேடிக் கொண்டாயே' என்றான் அண்ணனைப் பார்த்து.

* * *

(உனது செயலால்) இந்திரற்கு-இந்திரனுக்கு; உலகும் - அவனுடைய உலகமும்; கொற்றமும் - வெற்றியும்; கொடுத்தனை - கொடுத்துவிட்டாய்; நின்னையும் நின் பெரும் கிளையும் கெடுத்தனை - உன்னையும் உன் பெரிய சுற்றத்தையும் கெடுத்தாய்; பலவகை - பல வகைச் செயல்களை படுத்தனை - நீ அழியுமாறு செய்துவிட்டாய்; அமரர் தங்களை விடுத்தனை - தேவர்களை விடுவித்தவன் ஆனாய்; இவ்வேறு - இனியேல் (இந்தத் தீவினைப் பயன் களினின்று) வேறு வீடும் - விட்டு நீங்கும் வழியும்; இல்லையால்.

* * *

கும்பகன்னன் மேலும் இராவணன் மனத்தை மாற்ற மன்றாடுகிறான்.

"உனக்கு மேன்மை அளித்தது. தருமம்; இப்போது அதற்கு எதிராக நீ செயல்படுகிறாய். நீ அதனைக் கைவிட்டதால் நீ அழிவதோடு அன்றி நம் குலமே அழிய வழி கோலுகிறாய். சீதையை விட்டுவிடாவரையில் அநுமன் போன்றவரை துணைக்கொண்டு, இராமன், நம்மை அழிப்பான். இஃது உறுதி. விபீடணனைப் போல் இராகவனிடம் சரண் அடைந்தால் உய்ய வழியுண்டு. அதை நீ ஏற்க மறுத்தாலும், சீதையை விட்டு சமாதானஞ் செய்துகொள்ள மனமில்லாவிட்டாலும், போரைத் தவிர வேறு வழியே கிடையாது. கூட்டங் கூட்டமாக நம் சேனை போருக்குப் போய் அழிவதைக் கண்டு பின்னால் வருந்தாதே;" என்று நல்லுரை கூறினான்.

இராவணனோ அவனை 'வீரம் இழந்த கோழை' என்று குறைக் கூறினான். தானே போருக்குச் செல்வதாகக் கூறியபோது, கும்பகன்னன் தானே செல்வதாகக் கூறி அண்ணனிடம் விடைபெற்றுக்கொண்டான்.

"வென்று இவண் வருவன் என்று உரைக்கிலேன் விதி
நின்றது பிடர் பிடித்து உந்து நின்றது."

"நான் மீண்டும் உயிருடன் திரும்புவேன் என்று நினைக்கவில்லை! விதி என்னைப் பிடர் பிடித்துத் தள்ளுகிறது. நான் அனேகமாய் இறந்துவிடுவேன். நான் இறந்துவிட்டால் சானகியைவிட்டு விடலே உனக்கு நன்மை பயக்கும். ஒரு வேளை சீதையை விடாமல் இந்திரசித்தை போருக்கு அனுப்புவாயாகில், இலட்சுமணனின் அம்பு அவன் உயிரைக் குடிக்கும். நீயும் வெற்றி அடையமாட்டாய்! எனவே சீதையை விட்டுவிடு!" என்று மீண்டும் மீண்டும் கூறினான் கும்பகன்னன்.

"இது நாள்வரை நான் ஏதேனும் குற்றம் செய்திருப்பின், அவற்றையெல்லாம் பொருத்தருள்வாய், கொற்றவா! இனி உன் முகத்தில் நான் விழிப்பது அரிது. விடைபெற்றுக் கொண்டேன்" என அவன் விடைபெறும் காட்சி, கல் மனத்தையும் கரைக்காதோ?

போர்க்களத்தில் இராமனிடம் விபீடணன் கும்பகன்னனின் வீர ஆற்றல்களைப்பற்றி விரிவாகக் கூறுகிறான். சுக்ரீவன் கும்பகன்னனை தம்முடன் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னதைக் கேட்டு, விபீடணன் கும்பகன்னனை அழைத்துவர தன் அண்ணனிடம் செல்கிறான். இராகவனிடம் தஞ்சமடைந்து வாழவேண்டும் என்று விபீட்ணன் கும்பகன்னனை பணிவுடன் கேட்டுக்கொள்கிறான். ஆனால் கும்பகன்னனோ, "நான் தூங்கியெழுந்திருக்கும்போதெலாம் எனக்கு வேண்டிய மது மாமிசம் ஆகியவற்றை சித்தமாக வைத்துக்கொண்டு ஊட்டி வளர்த்தவன் இராவணன்.

அவன் என்னால் ஆனவரை பொருவேனென்ற நம்பிக்கையோடு இருக்கிறான்.

இராமனை சேர்தல் செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்தது ஆகாது. எனவே போர்க்கோலங் கொண்டேன். என் உயிரைக் கொடாது அங்கு போகேன்!'' என்றும் திடமாகக் கூறிவிட்டான். அதே சமயம் விபீடணனை எப்போதும் இராமனிடமே இருந்து, இலங்கை அழியாமல் பாதுகாக்க வேண்டுமென்றும் உறுதியாகக் கூறுகிறான் இளைய அரக்கன்.

இராமன் இதை அறிகிறான். 'விதி வலிது' என்கிறான். வானரங்களை படாதபாடு படுத்துகிறான் கும்பகன்னன். அங்கதனுக்கும் கும்பகன்னனுக்கும் பெரும்போர் நடக்கிறது. அங்கதன் மார்பில் சூலத்தை எறிகிறான் கும்பகன்னன். அநுமனுடன் போரிடுகிறான். அநுமனும் சளைக்கவே இலட்சுமணன் கும்பகன்னனுடன் நீண்டநேரம் பொருகிறான். சுக்ரீவனும் பொருகிறான். இளையவன் அரக்கனை பாதாரியாக்கி, அவனுக்குத் துணையாக வந்த சேனையையும் அழிக்கிறான். கும்பகன்னன் சூலத்தை எறிகிறான்; அநுமன் அதை முறித்தெறிகிறான். மூர்ச்சையான சுக்ரீவனை இலங்கைக்குத் தூக்கிக்கொண்டு செல்ல அவன் முயலும்போது, இராமனின் கணை கும்பகன்னனின் நெற்றியில் பாய்கிறது. அவன் மூர்ச்சிக்கிறான் சுக்ரீவன் கும்பகன்னனின் காதையும் மூக்கையும் அறுத்துக்கொண்டு செல்கிறான். இராவணன் தன் தம்பிக்கு மீண்டும் துணை செய்ய சேனை அனுப்புகிறான். அது இராமனின் அம்புக்கிரையாகி அழிகிறது. கும்பகன்னனின் இரு தோள்களையும் தாள்களையும் இராமனின் வில் துணித்துவிட்டாலும் வெறும் உடலுடனே வீரமாக பொரும் கும்பகன்னனின் வீரம்தான் என்னே!

இறுதியில் • கும்பகன்னன் இராமனிடம் விபீடணனை பாதுகாக்கவேண்டும் என வேண்டுகிறான்.

தன் ஊனமுற்ற தலையைக் கடலில் தள்ளவேண்டும் என்ற அவன் கோரிக்கையை நிறைவேற்றுகிறான் இராகவன்.

---

பிராட்டியாரை வசப்படுத்த மாயத்தால் ஒருவனை சனகன் உருக்கொள்ளச் செய்து, அன்னையின் மனத்தைக் கலைக்கப் பார்க்கும் இராவணனை சீதையின் கற்பு தகர்த் தெரிகிறது.

இராவணனின் மகன் அதிகாயனை லட்சுமணன் பிரமாத்திரத்தால் மாய்க்கிறான். இதையறிந்த இராவணன் இந்திரசித்தை நாக பாசத்தால் இளையபெருமாளை பிணிக்குமாறு சொல்கிறான். இந்திரசித்தும் ஆயிரம் ஆண் சிங்கங்கள் பூட்டிய தேரில் செல்கிறான். மாருதி, சாம்பவான் சுக்ரீவன், அங்கதன், நீலன் ஆகியோர் லட்சுமணனுடன் போகின்றனர். இந்திரசித்துக்கும் அநுமனுக்கு கடும்போர் ஏற்படுகிறது. ஆனால் அங்கதன் இந்திரசித்தின் அம்புகளால் தளர்கிறான். இலக்குவன் அநுமன் தோளில் ஏறி பெருகிறான். இந்திரசித்தின் தேரை அழிக்கிறான். மாற்று தேர் மாயமாக வருகிறது இந்திரசித்துக்கு. அதுவும் அழிக்கப்படுகிறது. இந்திரசித்தின் கவசத்தைப் பிளக்கவே, அவன் ஓடி மறைகிறான். போகும் முன் இலக்குமணனின் தேரை அழிக்கிறான்.

நாகபாசத்தால் பிணிப்புண்ட லட்சுமணனைப் பார்த்து விபீடணன் வருந்துகிறான். இராமன் துன்பம் தாங்காது தவிக்கிறான். அண்ணல் வெகுண்டெழுந்து உலகத்தினையே அழிக்க நினைக்கிறான். ஆனால் நீதி, ஒருவருக்காக உலகை அழிப்பது நியாயமாகாது என்று நினைவூட்டவே, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறான். தம்பி இறப்பான் ஆகில் தானும் இறக்கப் போவதாக கூறும்போது, விபீடணன், ''எவரும் பாசத்தல் உயிர் துறக்கவில்லை என்றும், பாசம் நீங்கினால் உயிர் பெற்றெழுவர்'' என்றும் கூறுகிறான்.

அவ்வமயம் கருடன் அங்கு வந்து இராமனை வணங்கு கிறான். கருடன் வருகையால் பிணி நீங்கி அனைவரும் உயிர் பெற்று எழுந்தவுடன் வானரர்கள் ஆரவாரம் செய் கின்றனர். போருக்குச் செல்ல அரக்கர் துடிக்க, இராவணன் பாரிசுவ, தூமிராட்சனை முதன்மை படைத்தலைவனாக்கு கிறான். அதே நேரம் இந்திரசித்தை தனியே விட்டுவிட்டு அவர்கள் ஓடி வந்து விட்டதை ஒற்றர்கள் கூறுகின்றனர். இராவணன் கடுங்கோபமுற்று அவர்களது மூக்கை அறுக்கும்படி ஆணையிடுகிறான். ஆனால், மாலியன் இதைத் தடுக்கவே இராவணன் மனம் மாறினான். பத்து வெள்ளஞ் சேனையுடனே யக்ஞசத்துரு, சூரிய சத்துரு ஆகியவர்களை யும் இராவணன் ஏவுகிறான்.

விபீடணன் இராமபிரானுக்குப் படைத்தலைவர்கள் ஒவ்வொருவரையும் காட்டி விவரங்கள் கூறுகிறான். வானர சேனைக்கும் அரக்கர் படைக்கும் கடும்போர் நடக்கிறது. இப்போரில் துமிராட்சன் அநுமனுடன் பொருகிறான். மகா பாரிசுவன் அங்கதனை எதிர்க்கிறான்; மாலி நீலனுடனும், யக்ஞசத்துரு இளையவனுடனும், வச்சிரதந்தன் விருசபனுட னும் கடும்போர் செய்கின்றனர்.

வானரச் சேனையர் ஆறு வெள்ளம் அரக்கர்ச் சேனையை மாய்த்தனர். லட்சுமணன் மீதி நாலு வெள்ளம் அரக்கர் சேனையை அழித்தான். இரவு கழிந்து மறுநாள் போர் இன்னும் மும்மரமாக நடந்தது. அநுமன் துமிராட்சனைத் தரையில் தள்ளினான்; உதைத்தான்; அவன் தலைகளைக் கிள்ளினான்; அவைகளைக் கடலில் எறிந்த பின்னரே கோபந் தணிந்தான்.

அரக்கன் மகா பாரிசுவன் அங்கதன் மீது ஏராளமான அம்புகளை எய்தான்; உடன் அங்கதன் என்ன செய்தான்? அரக்கனது வில்லை முறித்தான்; தேருடனே வானத்தின்மீது எறிந்தான். அரக்கனோ தேரினின்று இறங்கி, சூலத்தை அங்கதன் மீது எறிந்தான். இதைக் கண்ட இராமன் தன்

அம்பால் சூலத்தை அறுத்துத் தள்ளினான். அங்கதன் அவ் வரக்கனைப் பிடித்தான்; இரு கூறாகப் பிளந்தான் அலைகளை எறிந்தான்.

மாலியன் வில்லை வானரன் நீலன் ஒரு மலையினால் இரு துண்டாக்கினான். மாலி வாட்படையுடன் நெருங்கிய போது, குமுதன் அவன் தேரைச் சிதைத்தான். நீலன் எறிந்த மரத்தைப் பிளந்த மாலியின் தோளை வெட்டி வீழ்த்தி, அப்பால் சென்றான் லட்சுமணன். லட்சுமணன் யக்ஞ சத்துருவையும் கொன்றான். வச்சிரதம்ஷ்டரனை அநுமன் குத்திக் கொன்றான். பிசாசன் என்ற அரக்கன் குதிரை மீது ஏறினான். வானைரரை சுற்றிச் சுற்றி வந்து வருத்தினான்; இலட்சுமணன் வியாசாஸ்திரத்தினால் அவன் தலையை அறுத்தான்.

படைத் தலைவர்கள் மாண்ட செய்தியைச் சொல்ல, இலங்கேசனிடம் விரைந்தனர் ஒற்றர்.

படைத் தலைவர்கள் அழிந்ததைக் கேட்ட இராவணன் பெரிதும் வருந்தினான். அப்போதங்கே வந்தான் கரனின் புதல்வன் மகரக் கண்ணன்.

"என்னை அனுப்பினால் என் தந்தையைக் கொன்ற பகைவனை கொன்று தீர்ப்பேன்!" என்று உறுதிக் கூறினான். இராவணனும் இசைந்தான். அவனுடன இருபது வெள்ளம் அரக்கர்ச் சேனை சென்றது. இரக்தாட்சசன் சிங்கன் என்ற தேர்ச்சக்கரக் காவலரும் சென்றனர். போர், போர்; மும்முரமான போர்! இராமனிருக்குமிடத்தை நோக்கி தேர் சென்றது. "என் தந்தையைக் கொன்ற உன் உயிரை வாங்குவேன்!" என்று சபதம் செய்தான். பொருதான். மாயையினால் இருளை கவியச் செய்தான். தன் உருவந் தெரியாவண்ணம் நின்று பொருதான். இராமன் தனது அம்புகளை எய்தான். அவை மறைந்திருந்த மகரக கண்ண னைத் தாக்கின. அவன் உடலிலிருந்த குருதி வழிந்த திசையை வைத்து, தன் கணையினால் அவனை வீழ்த்தி னான். நீலன் மற்றவரை அழித்தான்.

மகரக்கண்ணன் தன் சேனையோடு அழிந்த செய்தியைக் கேட்டான் இராவணன். இந்திரசித்தை அழைத்தான். மகன் தந்தைக்கு ஆறுதல் கூறினான்.

"வருந்தாதீர்கள். நான் நரரையும் வானரரையும் கொன்று வருவேன்!" என்று கூறி அறுபது வெள்ளம் சேனையோடு சென்றான். வானர சேனை நிலை கெட்டு ஓடிற்று. அநுமன், சுக்ரீவன், அங்கதன், இராம லட்சுமணன், விபீடணன் ஆகிய சிலரே நின்றனர். அநுமன் தோளின்மீது இராமன் எழுந்து நின்றான். அங்கதனோ, தன் தோளின் மேல் இலட்சுமணனை சுமந்தான். நீலன் முதலாயினோர் மரங்களையும் குன்றுகளையும் ஏந்தி, அரக்கரை முன்னேற விடாமல் தடுக்கத் தொடங்கினர். இராமன் அவர்களை பின்னால் செல்லும்படி கூறினான். ஏன்? இந்திரசித்து தெய்வப் படைகளை ஏவுவான். அவைகள் அவர்களைத் தாக்கி அழிக்கும் என்பதை உணர்ந்ததால் அவ்வாறு செய்தான். முன் நின்ற இராம லட்சுமணன் அறுபது வெள்ளச் சேனையை அழித்ததும், அவர்கள் பேராற்றலைக் கண்டு பிரமித்துப் போனான் இந்திரசித்து. அநுமன் இது கண்டு தோள் கொட்டி ஆரவாரித்தான். இந்த ஆரவாரச் சத்தம் கேட்டு அரக்கர் பின்னோக்கி ஓட, இந்திரசித்து தான் ஒருவனே இராம லட்சுமணரை எதிர்க்க வந்தான். அவன் தனித்து வந்து 'நீவிர் எவ்வண்ணம் பொரப் போகின்றீர்' என்று கேட்டான்.

அப்போது லட்சுமணன்.

* * *

வாளிற் றிண்சிலைத் தொழிலினின்
மல்லினின் மற்றை
ஆளுற்று எண்ணிய
படைக்கல மெவற்றினும் அமரில்

கோளுற்று உன்னோடு குறித்தமர்
செய்து உயிர் கொள்வான்
சூளுற்றேன் இது சரதமென்று
இலக்குவன் சொன்னான்.

"வாள், வில், உடல் வலி, படை ஆகிய இவற்றினும் அதிக வலிமை பெற்ற உன்னோடு நேருக்கு நேர் நின்று பொருது, உன்னுயிரைக் கொள்வதாக நான் செய்த சபதம் இப்போது நிறைவேறுவதற்காகவே நான் பொருத வந்தேன்" எனக் கூறினான் இளையவன்.

* * *

வாளில் - வாள் கொண்டும்; திண்சிலை தொழிலினில் - உறுதியான வில் ஆற்றலினாலும்; மல்லினில் - மற்போர் புரிந்தும்; மற்றை - வேறான; ஆள் உற்று - ஆளுதல் பொருந்தி; எண்ணிய - எண்ணப்பட்ட; படைக்கலம் எவற்றினும் - போர்க் கருவிகள் எல்லாவற்றாலும்; அமரில் - போரில்; கோள் உற்று - வன்மை பொருந்த; உன்னொடு குறித்து - உன் நேர் நின்று; அமர் செய்து - போர் புரிந்து; உயிர் கொள்வான் - உங்கள் உயிரைக் கொள்ளும் பொருட்டு; சூளுற்றேன் - வஞ்சினம் கூறினன்; இது சரதம் - இது உறுதி; என்று - என்று; இலக்குவன் சொன்னான் - லட்சுமணன் சொன்னான்.

* * *

இந்திரசித்தும் எதிர் சபதம் செய்தான். அது என்ன? லட்சுமணனை நோக்கி "உன்னைக் கொன்று பின் இராமனைக் கொல்வேன்!" என்றான். அத்துடனா? உங்களால் கொல்லப்பட்ட என் சிற்றப்பனுக்கும், இறந்த தம்பிமார்க்கும் உங்கள் இரத்தத்தைக் கொண்டு நீர்க் கடன் செய்வேன்!" என்றான் ஆணவத்துடன்.

லட்சுமணன், "உனக்கு, உன் தந்தையும், உன் தந்தை முதலியோர்க்கு விபீடணனும் அந்திமக் கடன் செய்வார்கள்!" என்று நிகழப்போகும் சங்கதிகளை முன்பே கூறினான்.

கொதித்தெழுந்தான் இந்திரசித்து. லட்சுமணனுடன் கடும்போர் செய்தான். இந்திரசித்தின் தேரை அழித்தான் இளையவன். இராவணனின் மகன், லட்சுமணன் மீதும், அங்கதன் மீதும் கணைகளைத் தூர்த்து, சங்கால் முழங்கினான். பத்து கணைகளை விட்டான் லட்சுமணன். இந்திரசித்தின் கவசத்தைப் பெயர்த்தான். இந்திரசித்தோ வானில் மறைந்தான். பிரம்மாத்திரத்தைத் தொடுக்க லட்சுமணன் முனைந்தபோது, இராமன் அதைத் தடுத்தான்.

இதை அறிந்த அரக்கன் மைந்தன் என்ன செய்தான்? போர்க் கோலம் களைந்த தசரத புதல்வர்கள் மீது பிரம்மாத்திரம் விடுத்தற்கு முயற்சி கொண்டு அதற்குரிய வேள்வியைத் தொடங்க ஆரம்பித்தான். சூரியன் அத்த மிக்கவே, வானர சேனைக்கு உணவு கொண்டு வருமாறு விபீடணனைக் கட்டளையிட்டான் அண்ணல். சேனையைக் காக்குமாறு இளையவனைப் பணித்தான். அத்திர பூசை செய்யச் சென்றான்.

இந்திரசித்து தன் தந்தையிடம் சென்றான். நடந்ததைச் சொன்னான். "மாறு செய்யாதபடி மாற்றான் என்னை மறந்திருக்கையில் வஞ்சனையாக பிரம்மாத்திரம் விடுத்து பகையை முடிப்பேன்" என்றான். இந்த வஞ்சனைக்கு உதவியாக மகோதரனை மாயைப் போர் புரியுமாறு இராவணன் ஆணையிட்டான். அரக்கர் வானரரைத் தாக்கினர். அநுமன் அரக்கரை நீராக்கினான். நீலன் முதலியோர் அரக்கர் படையுடன் கலந்தனர்.

அநுமனுக்கும் அகம்பனுக்கும் தண்டு போர் நடந்தது. அநுமனின் தண்டு, அகம்பனின் தண்டையும் வலக்கரத்

தையும் இற்றது குத்துச்சண்டையில் அநுமன் அவனை வென்றான்.

தங்கள் மாயையால் அரக்கர் அங்கதனையும் சுக்ரீவனையும், லட்சுமணனையும் வெவ்வேறு திசையில் ஈர்த்தனர். அநுமன் இளையவனைக் காணாது வேதனையுற்றான். என்றாலும் தன் அறிவாற்றலால் லட்சுமணன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தான்.

“இவ்வரக்கப் போர் மாயத்தால் விளைந்திருத்தலால் மந்திரப்படை கொண்டுத்தான் போக்கவேண்டும்” என்ற தீர்வைக் கூறினான்.

லட்சுமணன் பாசுபத அத்திரத்தை விட்ட அக்கணமே மாயை மறைந்தது. மாயை விளைவித்த மகோதரன் என்ற அரக்கனும் மறைந்திட்டான். வானரர் இலட்சுமணனைக் கண்டனர்.

செய்தி அறிந்த இராவணன் அதை இந்திரசித்தினிடம் கூறுமாறு அனுப்பினான். மாயையினால் அரக்கர் தேவர் உருக்கொண்டு வந்தனர். லட்சுமணன் அதுகண்டு வியப்புற்றான். இந்திரசித்து பிரம்மாத்திரத்தை விட்டான். இந்திரன் உருக்கொண்டே இதைச் செய்தான். இளையவன் மூர்ச்சித்து விழுந்தான். இந்திரனாகத் தோன்றியவனைத் தண்டிக்க எழுந்த அநுமனையும் செயலிழக்கச் செய்தது அந்த அத்திரம். மற்றவரும் உயிரோடு சாய்ந்தனர்.

இது கண்ட இந்திரசித்து, “வானர சேனையுடனே இளையவன் இறந்தான் : இராமன் அகன்றிட்டான்” என்று வெற்றிச் சங்கு ஊதினான் குதூகலத்துடன்.

பூசை முடித்துவிட்டு வந்த அண்ணல் ஆக்கினேயாத்திரத்தினால் இருளைப் போக்கினான். சுக்கிரீவன் ஆகியோரைக் கண்டான். மயக்கமாகக் கிடந்த தம்பியைக் கண்டு புலம்பினான். அவனும் மூர்ச்சித்தான்.

'இராமன் மாண்டான்' என அரக்கர் கெக்கலித்தனர். செய்தி அறிந்தான் இராவணன். இறந்துபட்ட அரக்கர் உடல்கள் அனைத்தையும் கடலில் வீழ்த்தும்படி கூறினான். இதனால் ஏற்பட்ட விளைவு? பின்னர் வானரர் தெளிந்து எழுந்தனர். அரக்கரோ, இராவணனின் செயலால் ஒழிந்தனர்.

மீண்டும் மாயையால் பிராட்டியை வசப்படுத்த திட்டம் இட்டான். அன்னையை விமானத்திலேற்றி களத்தின் அவல நிலையைக் காட்டுமாறு செய்தான். அன்னை இராமன் லட்சுமணன் நிலைக் கண்டாள். அரற்றினாள்; அழுதாள்; சீதையின் நிலைக் கண்டாள் திரிசடை; "இராமன் புண்டரீகன்; அவனுக்கு இறுதி என்பது கிடையாது. இளையவனின் வதனம் ஊழ் நாளிரவி என்ன ஒளிர்வதால் உயிருக்கு இன்னல் இல்லை, அது மட்டுமா? இராமபிரான் இறந்தபின் ஈரேழு உலகங்களும் அல்லவா இறந்திருக்கும். மாருதிக்குப் பிராட்டி கொடுத்த 'சாகாவரம்' எப்படிப் பொய்யாகும்?" எனக் கூறி தேறுதல் கூறினாள். அரக்கியர் மன ஆறுதலடைந்த சீதையை மீண்டும் வனத்திற்கே அழைத்துச்சென்றனர்.

* * *

உணவு கொண்டுவந்தான் விபீடணன். போர்க்களத்தி லுள்ள நிலைக் கண்டான். இராமனின் கலங்கிய நிலைக் கண்டு கலங்கினான். மெல்ல சென்று அநுமனின் களைப்பை நீக்கினான். இருவரும் சாம்பவானை நாடிச் சென்றனர். விவரம் கூறினவுடன் சாம்பவான் என்ன சொன்னான்?

* * *

'எழுபது வெள்ளத் தோரும்
இராமனும் இளையகோவும்
முழுவதும் இவ்வுலக மூன்று நல்லற
மூர்த்தி தானும்

வழுவலின் மறையு முன்னால்
வாழ்ந்தன வாகு மைந்த
பொழுதிறை தாழா தென் சொன்னெறி
தரக் கடிது போதி.

"வாயு மைந்தனே! சிறிதும் தாமதியாமல் எல்லோரையும் உய்விக்கும் அருமருந்தைக் கொண்டு வந்தால், இராம இலட்சுமணன் மற்றும் எழுபது வெள்ளச் சேனையும் பிழைத்தெழும். எனவே நான் சொல்லும் வழியிலே சென்று அம் மருந்தினைக் கொண்டு வா!" என்றான் அநுமனிடம்.

* * *

மைந்த - மைந்தனே! (நீ மருந்து கொணர்வாயானால்); எழுபது வெள்ளத் தோரும் - எழுபது வெள்ளம் வானரச் சேனைகளும்; இராமனும் - இராமபிரானும்; இளைய கோவும் - லட்சுமணப் பெருமாளும்; முழுவதும் இ உலகம் மூன்றும் - முழுதாகிய இந்த மூன்றுலகங்களும்; நல் அறம் மூர்த்தி தானும் - சிறந்த தரும தேவதையும்; வழுவல் இல் மறையும் - பழுதற்ற வேதங்களும்; உன்னால் வாழ்ந்தன ஆகும் - உன் உதவியால் அழியாது நிலைபெறுவன ஆகும்; ஆதலின், இறை பொழுது தாழாது - சிறிது காலமும் தாமதம் செய்யாமல்; என் சொல் நெறி தர - நான் சொல் வழிகாட்ட; கடிது போதி - விரைந்து எழுவாயாக.

* * *

"மருத்து மலையை விரைவிற் கொணர வேண்டும்" என்று சாம்பவான் சொன்னதைக் கேட்டவுடன், அநுமன் சாம்பவான் சொல்லிய வழியிலே பேருருக் கொண்டுச் சென்றான். விபீடணனும் சாம்பவானும் சென்று இரகு வீரனின் காலை வருடினர். இராமபிரான் கண்விழித்தான். தன்னைச் சார்ந்தோருக்கு ஏற்பட்ட நிலைக் குறித்து அண்ணல் வருந்தினான். அச்சமயம் சாம்பவான் அநுமன் உயிரளிக்கும் அரிய மருந்தைக் கொண்டுவரச் சென்றிருப்பதைக் கூறினான்; ஐயனைத் தேற்றினான். அப்போது,

"தோன்றினன் என்னும் அச்சொல்லின்
முன்னம் வந்து
ஊன்றினன் நிலத்தடி கடவுள்
ஓங்கறான்
வான் தனில் நின்றது வஞ்சர்
ஊர் வர
ஏன்றில, தாதலின் அநுமன்
எய்தினான்.



கடல் முதலியன நிலைக்குலைந்தன; காற்று பேரிரைச்சலோடு வீசிற்று. இதைக் கண்ட சாம்பவான் அநுமன் வந்திட்டானென்று சொல்லுமுன்னரே, மாருதி மருத்து மலையை வேருடன் பறித்துக்கொண்டு வான வழியாய் வந்தான். அம் மலையோ வஞ்சகருடைய ஊரிலே இறங்க உடன்படவில்லை. எனவே வானிலே நின்றது. அதன்மீது வீசிய காற்று லட்சுமணனையும், மற்றவரையும் உயிர்த்து எழச் செய்தது.

* * *

தோன்றினன் - வந்துவிட்டான்; (அநுமன்) என்னும் - என்ற; அ சொல்லின் - அந்தச் சாம்பன் சொல்லிய சொல் லுக்கு; முன்னம் வந்து, நிலத்து அடி ஊன்றினன் - தரையில் காலை அழுந்த வைத்தவனாய்; அநுமன் எய்தினன் - மாருதி வந்தடைந்தான்; வஞ்சர் ஊர் வர என்றிலது ஆதலின் - வஞ்சக அரக்கரின் ஊரிக்கண் வருவதற்கு மனம் கொள்ளாமையின்; கடவுள் ஓங்கல் வான் தனில் நின்றது - தெய்வத் தன்மை வாய்ந்த அந்த மருத்து மலை விண்ணிலேயே நின்றது.

* * *

அநுமனை வாழ்த்தினான் அண்ணல். சாம்பவானின் வேண்டுகோளின்படியே அம் மலையை முன்னிருந்த இடத்திற்கே எடுத்துச்சென்றான் அநுமன்.

லட்சுமணன் ஆகியோரி உயிர்ப் பெற்று எழுந்ததை அறியாத அரக்கர் களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். உயிர்தெழுந்தவுடன் வானரர் செய்த ஆரவாரம் அவர்கள் களியாட்டத்தை ஒடுக்கியது. இராவணன் வெறுப்புற்று, மந்திராலோசனை செய்ய கிளம்பினான். இராவணன் நடந்த வற்றை கூறியபோது, மாலியன் அவனை 'சீதையை விட்டு விடுதல்' நலம் என்று அறிவுரைக் கூறினாலும் இராவணன் செவிசாய்க்க மறுத்தான். இந்திரசித்து தான் நிரும்பிலைக்குப் போய் யாகஞ்செய்தால், நிச்சயம் பகைவரை வெல்ல

முடியும் என்ற தன் நம்பிக்கையைத் தெரிவித்தான். அந்த யாகத்தை தடுப்பான் அநுமன். எனவே அநுமனைத் திருப்ப எண்ணி மாயம் செய்தான். சீதையை போல் மாயையால் ஒரு உருவத்தை செய்தான், அநுமன் எதிரில் அவ்வுருவத்தை வெட்டினான். அயோத்திமீது படையெடுக்கப் போவதாகச் சொல்லி, அநுமனை நம்பவைத்தான். விமானத்திலேறி நிரும்பிலைச் சென்றான்.

மாருதியின் மூலம் இந்திரசித்து சீதையை மாய்த்ததை யும் பிறவற்றையும் அறிந்த அண்ணலும் இளையவனும் வேதனையால் துடித்தனர். அயோத்தியைக் காக்க துடித்தனர். இச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த விபீடணன், 'இது இந்திரசித்தின் மாயை எனக் கருதுகிறேன். நான் உண்மை அறிந்து வந்தபின் செய்ய வேண்டியதைச் செய்வோம்' என்று கூறி, வண்டு உரு கொண்டு அசோக வனம் சென்றான். அன்னை இனிது இருப்பதைத் திரும்ப வந்து இராமனிடம் கூறினான். நிரும்பிலையில் இந்திரசித்து செய்யும் வேள்வி பற்றியும் விரிவாகக் கூறினான். லட்சுமணன் விபீடணனுடன் நிரும்பிலைச் சென்றான். வானர சேனையும் உடன் சென்றது.

* * *

கடல் வற்றின மலை உக்கன
பருதிக் கனல் கதுவுற்று
உடல் பற்றின மரமுற்றன
கடல் பற்றின வுதிரம்
சுடர் பற்றின சுறு மிக்கது
துணி பட்டுதிர் கணையின்
திடர்பட்டது பரவைக் குழி
திரியுற்றது புவனம்.

லட்சுமணனும் இந்திரசித்தும் ஒருவர் மீது ஒருவர் வீசிய பாணங்களால் கடல்கள் வற்றின; மலைகள் பிளந்தன. சூரியனே பற்றி எரிந்தான்; இரத்த நாற்றம் எங்கும் பரவியது; வற்றிய கடல்களால் ஏற்பட்ட பள்ளங்களை அம்புச்சரங்கள் மேடாக்கின. பூமியே அலையலாயிற்று.

* * *

கடல்வற்றின - (அவ்விருவரும் எய்த அம்புகளால்) கடல்கள் எல்லாம் நீர்வற்றின; மலை உக்கன - மலைகள் பிளவு பட்டன; பருதி கனல் கதுவுற்று உடல் பற்றின - சூரியனுடைய உடல் முழுதும் கனலால் கதுவப்பட்டு பற்றி எரிந்தன; மரம் உற்றன கனல் பட்டன - தீயினால் தகிக்கப் பட்ட மரங்கள் அழிந்தன; உதிரம் சுடர்பற்றின சுறு - இரத்த நாற்றம்; மிக்கது - மிகுந்தது; துணிபட்டு உதிர் - துண்டிக்கப் பட்டு உதிர்கின்ற; கணையின் - அம்புகளாலே; பரவைக் குழி- கடலாகிய குழிந்த இடம்; திடர் பட்டது - மேடாகிவிட்டது. புவனம் - பூமி; திரியுற்றது - சுழலத் தொடங்கியது.

* * *

புரிந்தோடின; புகைந்தோடின
பொரிந்தோடின புகை போய்
எரிந்தோடின கரிந்தோடின
விடமோடின வலமே
திரிந்தோடின செறிந்தோடின
விரிந்தோடின திசை மேல்
சரிந்தோடின கருங்கோளரிக்கு
இளையான் விடுசரமே.

நிரும்பிலையில் இந்திரசித்துக்கும் லட்சுமணனுக்கும் கடும்போர் நிகழும்போது, லட்சுமணன் விடும் அம்பு சரங்களுள் சில வளைந்தோடின; இன்னும் சில புகை கக்கிக் கொண்டே ஓடின; வேறு சிலவோ தீப்பொறி சிதற ஓடின.

மற்றவை கரிந்தோடின; எல்லா திசைகளிலும் ஓடி ஓடி அழித்தன.

* * *

கரும் கோளரிக்கு இளையான் - கரு நிறமுடைய வலிய சிங்கமாகிய இராமனுக்கு இளையவனாகிய லட்சுமணன்; விடுசரம் - விடுத்த அம்புகளில் சில; புரிந்து ஓடின - வளைந்து ஓடின; புகைந்து ஓடின; பொரிந்து ஓடின; புகை நீங்கி எரிந்த வண்ணம் ஓடின; கரிந்து ஓடின; இடம் ஓடின; வலம் திரிந்து ஓடின; நெருங்கி ஓடின; ஒன்று நூறாகி விரிந்து ஓடின; திக்குகளில் சரிந்து ஓடின.

* * *

கடும்போர் நடந்தது. பற்பல அத்திரங்களை உபயோகித் தனர் இருவரும். கடைசியில் என்ன? யாகம் தடைப்பட்டது. இந்திரசித்து இராவணனை அடைந்தான்.

தந்தையிடம் இராம லட்சுமணனின் ஆற்றலைப் பற்றிப் புகழ்ந்து பேசிய இந்திரசித்து, விபீடணன் அவர்களுக்குத் தங்கள் இரகசியங்களைச் சொல்லி பக்கபலமாக இருப்பதை யும் விவரிக்கிறான். எனவே, "சீதையை விட்டிடுவதே செய்யத் தக்கது" என்றும் சொன்னவுடனே, இராவணன் கடுங்கோபம் கொள்கிறான். தானே போருக்கு எழ உத்தேசிக்கும்போது, அவன் மகன் தடுத்து, தானே செல்ல இரதமேறுகிறான். போகுமுன் தானம் முதலியன செய்து, தன் தந்தை இராவணனை நோக்கிக் கண்ணீர் பெருக்கிச் செல்கிறான்.

இலட்சுமணனோடு கடும்போர் நடக்கிறது. சிவபெருமான் தந்த சிலையும் தேரும் இருக்கும்வரை இந்திர சித்தை அழிக்கமுடியாதென்ற பேருண்மையை விபீடணனிட மிருந்து அறிகிறான் லட்சுமணன்.

* * *

பச்சை வெம் புரவி வியா பல்லியச்
சில்லி பாரின்
நிச்சய மற்று நீங்கா வென்பது
நினைந்து வில்லின்
விச்சையின் கணவனானான்
வின்மையால் வயிரமிட்ட
அச்சினோடு ஆழி வெவ்வேறு
ஆக்கினான் அணி நீக்கி.

வில் வித்தைக்குத் தலைவனான லட்சுமணன், அந்தத் தேரில் பூட்டிய குதிரைகளைக் கூர்ந்து கவனித்தான். அந்த தேர்ச் சக்கரங்கள் உடையாதவை என்பதையும் உணர்ந்து, அவைகள் வீழும் வண்ணம் வில்லின் வன்மையால் தேர்ச் சக்கரத்தின் கடையாணியைக் கழற்றி, அச்சக்கரங்களை சுக்கு நூறாக்கிறான். (தேர் வீழவே, குதிரைகளும் சிதறின.)

*　　　*　　　*

வில்லின் விச்சையின் கணவனானான் - வில் வித்தைக்குத் தலைவனான லட்சுமணன்; பச்சை வெம் புரவி வியா - (இந்திரசித்து ஏறியிருக்கும் தேரிற் கட்டிய) பசிய நிறம் அமைந்த கொடிய குதிரைகளும் சாக மாட்டா; பல்லியச் சில்லி - (அத்தேரின்) பல ஒலிகளையுடைய உருளைகளும்; பாரின் - பூமியில்; அற்று - அழிந்துபோய்; நிச்சயம் நீங்கா - திண்ணமாய் ஒழியமாட்டா; என்பது நினைந்து - என்பதை எண்ணி; வின்மையால் - தன் வில்லின் திறமையால்; ஆணி நீக்கி - ஆணிகளை பிரித்து அப்புறப்படுத்தி; வயிரம் இட்ட அச்சினோடு ஆழி - வயிரம் பிடித்த (மரத்தாலான) அச்சையும், சக்கரங்களையும்; வெவ்வேறு ஆக்கினான் - தனித் தனியே பிரித்து எறிந்தான்.

*　　　*　　　*

குதிரை வலிமையற்று சிதறவே, இந்திரசித்து வானத்தில் மாயமாய் மறைந்தான். கல் மாறி பொழிந்து வானர வீரரை மடியச் செய்தான். வானில் மறைந்திருந்த அரக்கர்கோன் மகனை இளையவனின் வாளிகள் தாக்கின. இரத்தம் பெருக நின்றான் இந்திரசித்து. லட்சுமணன் இந்திரசித்தின் விற்பிடித்த கையை அம்பெய்தி, கொய்தான். இந்திரசித்து மாயப்போர் புரிந்து, லட்சுமணனை 'நின்னை முடித்தன்றி முடியேன், என்று சபதம் செய்தான்.

லட்சுமணன் இராமனை மனத்தில் நினைத்தான். 'நீ பரம்பொருளானால் இந்திரசித்தைக் கொல்க' என்று அம்பு ஏவினான். அம்பு இந்திரசித்தின் தலையை அறுத்தது. அவன் உயிரற்ற உடல் முதலில் மண்ணில் விழுந்து துடித்தது. பின்னர் அங்கதன் இந்திரசித்தின் தலையை கையிலேந்தி, இராமனிடம் செல்கிறான்.

இந்திரசித்து இறந்ததைக் கேட்ட இராவணன், அவனது இழப்பால் பெரிதும் துயருற்றான். புத்திர சோகம் அவனை வாட்டியது. அவனது இருபது கண்களும் இரத்தம் சிந்தின. துயர் தங்காது தன்னையே திட்டிக்கொண்டான்.

இந்திரச்சித்தின் மார்பைக் கண்டான். எத்தகைய மார்பு? அம்புகள் அழுந்திய மார்பு. பின்? அவன் சோகம் கரை புரண்டு ஓடுகின்றது.

* * *

அப்பு மாரி யழுந்திய
மார்பைத் தன்
அப்பு மாரி யழுதிழி
யாக்கையின்
அப்பு மாரின் அணைக்கும்
அரற்றுமால்
அப்பு மானுற்ற
தியாவருற் றாரரோ.

அந்த அம்பு அழுந்திய மாரியைக் கண்ணீராற்றுவான்; மார்பில் அணைத்துக்கொள்வான், அர்க்கர்கோன். வாய் விட்டுக் கதறும் இந்த இராவணனின் துயருக்கு உவமைக்கூற இயலுமோ? இயலாது.

* * *

அம்பு - அம்புகளின்; மாரி - மழை போன்ற மிகுதி; அழுந்திய மார்பை - ஊன்றிய (இந்திரசித்தின்) மார்பை; அழுது - (மகன் இறந்ததால்) அழுது; தன் - (இராவணன்) தன்னுடைய; அப்பு மாரி இழ் யாக்கையின் - (கண்) நீர் மழை சொரிந்து வழிகின்ற உடலில்; அப்பும் - அப்புக் கொள்வான்; மாரின் - தன் மார்பிலே; அணைக்கும் - அணைத்துக் கொள்வான்; அரற்றும் - புலம்புவான்; அபு மான் - (இராவணனாகிய) அப்பெரியோன்; உற்றது - அப்பொழுது பட்டதை; யாவர் உற்றார் - வேறு எவர் அடைந்தார்! (எவரும் இல்லை என்றபடி)

அப்பு - (முதலடியில்) மாரி,

அப்பு மாரி - (இரண்டாவது அடி) (கண்) நீர் மழை

அப்பும் (மூன்றாம் அடி) மாரபின்

அப் புமான் - புருடன்.

* * *

இலங்கையே சோகத்தில் ஆழ்கிறது. இலங்கேசன் தன் மகனுடைய உடலை எண்ணெய்த் தோணியிலிட செய்தாலும், அது அவன் சோகத்திற்கு மாற்றாகுமா?

"இத்தனை அவலத்திற்கும் காரணம் யார்? சீதை தானே! அவளை வெட்டுங்கள்!" என்ற இராவணனின் கட்டளை எதை காட்டுகிறது? அறிவையும் மனத்தையும் இழிவுபடுத்திய காமத்தை, மைந்தன் மேல் அரக்கன் கொண்ட பாசம் வென்றதை! ஆனால், சீதையை வெட்டி விட்டால், இந்திரசித்து உயிர் பெற மாட்டானே! என்ற உண்மை இராவணனின் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தை

இன்னும் வலுப்படுத்துகிறது. 'பழிக்குப் பழி; தனயனின் குருதிக்கு அயோத்தி மைந்தர்கள் குருதி'' என்று போருக்கு எழுகிறான் இலங்காதிபன். படைகளைத் திரட்டுகிறான். மானிடர் இருவரையும் வானரரையும் அழிக்க. இதை கம்பன் எவ்வாறு வர்ணிக்கிறார் தெரியுமா?

''அறத்தைத் தின்று அருங்கருணையைப்
பருகி வேறமைந்த,
மறத்தைப் பூண்டு வெம்பாவத்தை
மணம் புணர் மணாளா!''

இம் மாபெருஞ் சேனையைக் கண்டு வானரங்கள் அஞ்சி ஓடின. இப்படைகள் வந்ததெவ்வாறு என்று விபீடணன் இராமனிடம் விளக்குகிறான். அங்கதன் ஓடிய வானரங்களை அழைத்து வருகிறான். சாம்பன் அஞ்சியோடிய குரங்குகட்கு பரிந்து பேசுகிறான். சாம்பனை அங்கதன் தேற்ற, லட்சுமணனை ஓடும் சேனையைக் காக்கச் சொல்கிறான் இராமன்.

''மாருதியோடு நீயும் சுக்கிரீவனும்
சேனை காக்கப் பொருதி''

என்ற அண்ணனின் சொல்லுக்குக் கட்டுபடுகிறான் லட்சுமணன்.

இராமன் தனியனாய் மூல பல படையுடன்* பொருகிறான். இருதிறத்தார்க்கும் பெரும்போர் நடக்கிறது. இராமபிரானின் அம்புகள் அவர்களை அழிக்கின்றன. எவ்வளவோ வெள்ளச் சேனைகள், எங்கிருந்து வந்தாலும், அவர்கள் அனைவரையும் அழிக்கிறது இராமனின் வில். அரக்கர் தேவ படைகள் விடுகின்றனர். இராமன் தேவர்

---

* மூல - என்பது தொன்றுதொட்டு வருஞ்சேனை. பல - என்பது படை பலம்; மூல படை தவிர ஏனைய படைகள்: நாட்டுப் படை, காட்டுப் படை, துணைப்படை, பகைப் படை, கூலிப்படை. ஆக ஆறு வகைப் படைகள்.

படைகளைக் கொண்டே துணித்து வீழ்த்திவிட்டு, போர் முடிந்தவுடன் இளையவனிடம் செல்கிறான்.

* * *

தோல்வியே அறியாத இராவணன் தோல்வி மேல் தோல்வி அடைந்து துவள்கிறான். எனினும் தேர் ஏறி போர் களம் செல்கிறான். பெரும் போர். அரக்கர் சேனை நிலை குலைகிறது. இராவணன் சீறி, வானர சேனையின் நிலையைக் கெடுக்கின்றான். லட்சுமணன் அநுமன் தோளின் மீது ஏறி இராவணனை எதிர்க்கிறான். இராவணனின் மோகனா அத்திரத்தை இலக்குவன் அனுப்பிய திருமால் படை ஒழிக்கிறது. இராவணன் தன் தம்பியைக் காண்கிறான். உடன் விபீடணன் மீது வெகுண்டு, அவன் மீது மயன் கொடுத்த வேலால் அவன் தன் உயிர் கொள்ள எண்ணி,

* * *

விட்ட போதினில் ஒருவனை
வீட்டியே மீளும்
பட்ட போதவன் நான் முகன்
ஆயினும் படுக்கும்
வட்ட வேலது வலங்கொடு
வாங்கினன் வணங்கி
எட்ட நிற்கலாத் தம்பி மேல்
வல் விசைத் தெறிந்தான்.

இந்த வேல் ஒருவனை அழித்தே திரும்பக் கூடியது. தாக்கப்பட்டவன் நான்முகன் ஆயினும் சரி, அவனையும் ஒழித்துக்கட்டக் கூடிய அவ் வேலை வணங்கி, விபீடணன்மீது வீசினான் வேகமாக. ஏன்? அவனைக் கொல்ல வேண்டும் என்ற ஆத்திரத்தால்.

* * *

விட்ட போதினில் - தொடுத்த அளவில்; ஒருவனை வீட்டியே மீளும் - ஒருவனை அழித்தே திரும்புவதும்; பட்ட போது - அது மேலே தாக்கிய அளவில்; அவன் - தாக்கப் பெற்றவன்; நான்முகன் ஆயினும் - பிரம தேவனே யானாலும்; படுக்கும் - (அவனையும்) ஒழிக்க வல்லதும் ஆன; அது வேல் - அந்த வேலை; வட்டம் வலம் கொடு வணங்கி வாங்கினன் - வட்டமாக வலங்கொண்டு வணங்கி ஏற்று; எட்ட நிற்கலா - சேய்மையினில்லாது அண்மையில் நின்ற; தம்பி மேல் - தம்பியான விபீடணன்மீது; வல் விசைத்து எறிந்தான் - வேகமாக வீசினான்.

* * *

வேல் தன்மீது ஏவப்பட்டதைக் கண்ட வீபிடணன், 'இப்படை என்னுயிரை மாய்க்கும்' என்றான் இளைய வனிடம்.

'அஞ்சாதே!' என்று லட்சுமணன் அம்பு மாரி பெய்தான். ஆனால் வேலை அம்பு மாரி தடுத்து நிறுத்த இயலவில்லை. அவ் வேலை ஏற்குமாறு லட்சுமணன் விபீடணன் முன் செல்கிறான். லட்சுமணனை தடுத்து முன் செல்கிறான் விபீடணன். இருவரையும் விலக்கி அங்கதன் முன்னேறுகிறான் சுக்ரீவனோ அவனை விலக்கு கிறான். அவனையும் விலக்கி அநுமன் முன் சென்றாலும், லட்சுமணன் அவர்கள் அனைவரையும் விலக்கிவிட்டு தானே அந்த வேலைத் தன் மார்பில் ஏற்கிறான். இத் தருணத்தில் விபீடணன் கதையினால் இராவணனுடைய தேர்ப் பரிகளையும் பாகனையும் அழிக்கின்றான்.

வேலேற்ற லட்சுமணன் நிச்சயம் இறப்பான் என்று நினைத்து இராவணன் போர்க்களத்தை விடுத்துச் செல் கின்றான். லட்சுமணனுக்கு நேர்ந்த அவகேடு நோக்கி, சாகத் துணிகிறான் இராவணனின் தம்பி.

அப்போது சாம்பன் வருகிறான். அவனைத் தடுக்கிறான். எப்படி?

'அனுமனிற்க நாம் ஆருயிற்
கிரங்குவது அறிவோ?'

என்று கேட்கிறான்.

அநுமன் என்ன செய்கிறான்?
பறந்துச் செல்கிறான்.

மருந்து கொணர்கிறான்; லட்சுமணனை உயிர்ப்பிக்கிறான். லட்சுமணனையும் அனுமனையும் பாராட்டுகிறான் இராமன்.

போர்க்களத்தை விபீடணனும் அவனைச் சார்ந்தோரும் பார்வையிடுகின்றனர். அரக்கர் சேனை அழிந்து கிடந்ததைப் பார்க்கின்றனர்.

இராவணனோ லட்சுமணன் மாண்டு போனான் என்ற பொய்யான நம்பிக்கையில் இன்பந் திளைக்கிறான். உண்மை அறிந்தவுடன் கோபுரமேறி பார்க்கின்றான், போர்க்கள அவலக் காட்சிகளை. பின்னர் ஆலோசனை மண்டபத்தை அடைந்தான்.

சினத்துடன் தேரேறி போர்க்கோலத்துடன் செல்கிறான் எஞ்சிய சேனையோடு. அதே சமயம் இராமனும் தேவர்கள் அனுப்பிய தேரிற் ஏறுகிறான்.

இராவணன் ஏறிய தேர் எத்தகைத்து? கருதிய விடமெல்லாம் நொடியிற் செல்லக் கூடியது. சூரியன் தேர்க் குதிரைகளின் மரபின் வந்த குதிரைகள் உடையது.

போர்க்கோலம் பூண்டான் இராவணன். இக்கோலத்திற்கு என அவன் அணிந்த கவசங்கள் இரண்டு.

* * *

அருவி அஞ்சனக் குன்றிடை ஆயிரம்
அருக்கர்
உருவினோடும் வந்து உதித்தனர்
ஆம் என ஒளிர,
கருவி நான்முகன் கேள்வியில்
படைத்ததும், கட்டிச்
செருவில் இந்திரன் தந்த பொன்
கவசமும், சேர்ந்தான்.

நீரருவிகளைக் கொண்ட கருநிற மலையிலே ஆயிரஞ் சூரியர் வேற்று உருவத்தோடும் வந்து உதித்தனரோ என்னும்படி ஒளிவிட்ட பொற்கவசத்தை தன் உடம்பிற் கட்டி அணிந்தான் இராவணன். இது பிரம்ம தேவனால் வேள்வியிலேயே தோற்றுவிக்கப்பட்டது. மற்றொரு கவசம் தேவேந்திரன் இந்திரசித்தினிடம் தோற்றபோது வெற்றி கொண்டவனுக்குத் தந்தான். (இராவணன்) ஒன்றின்மேல் ஒன்றாக இவ்விரு கவசங்களை அணிந்தான்.

* * *

அருவி அஞ்சனம் குன்றிடை - அருவிகள் யாவும் கரிய மலையினிடையிலே; ஆயிரம் அருக்கர் - ஆயிரம் சூரியர்; உருவினோடும் - தம் உண்மைத் திருவுருவங்களுடன்; வந்து உதித்தனர் ஆம் என - வந்து உதயமானார்கள் என்று சொல்லும்படி; ஒளிர - ஒளி வீச; நான்முகன் வேள்வியில் படைத்தது கருவி உம் - பிரமன் தான் இயற்றிய ஒரு வேள்வியில் உண்டாக்கியதான கவசத்தையும்; கட்டி - கட்டி; (அதன்மீது) செருவில் - போரில்; இந்திரன் தந்த பொன் கவசமும் சேர்த்தான் - (தோற்றோடிய) இந்திரன் அளித்த பொன்னாலான கவசத்தையும சேர்த்துக் கட்டினான்.

* * *

தேருக்குப் பூசை செய்தான். தானங்கள் கொடுத்தான். போருக்குக் கிளம்பும்முன் இராவணன் கூறினான் : "இன்றைய போரில் ஒன்று இராமனை மாள்வித்தல்; அன்றித் தான் அவனால் மாள்தல்; இவ்விரண்டுமின்றி தோல்வியோடு திரும்புதல் இன்று.''

*　　　*　　　*

ஏறினான் தொழுது; இந்திரன் முதலிய
　　இமையோர்
தேறினார்களும் தியங்கினார்;
　　மயங்கினார், திகைத்தார்;
வேறு நாம் செயும் வினை இலை,
　　மெய்யின் ஐம் புலனும்
ஆறினார்களும் அஞ்சினர், உலகு
　　எலாம் அனுங்க.

இராவணன் அத் தேரை தொழுதான். அதன்மீது ஏறினான். அது போது; முதலில் தேவர்கள் அச்சமுற்றாலும, பின்னர் அரக்கரை அழிக்கவே இராமன் பிறந்து உள்ளான் என்ற உண்மை நினைவுக்கு வந்தவுடன் தெளிந்தனர். ஐம்புலன்களை அடக்கிய முனிவரும் தேரேறிய இராவணனைக் கண்டு அஞ்சினர்; தம்மால் செய்யக்கூடிய காரியம் எதுவுமில்லையே என்று ஏங்கி அஞ்சினர்.

*　　　*　　　*

(இவ்வாறு சபதம் கூறி) பொழுது - தேரினை வணங்கி; ஏறினான - அதனமீது ஏறினான்; தேறினார்களும் - (முன்பு அச்சத்தினின்று) மனம் தேறினவர்களாக இருந்தும்; இந்திரன் முதலய இமையோர் - இந்திரன் முதலிய தேவர்கள்; தியங்கினார்-சோர்ந்தனராயினர்; மயங்கினார்- (அச்சத்தால்) மனமயக்கம் அடைந்தார்கள்; திகைத்தார் -

பிரமித்தார்கள்; உலகெலாம் - எல்லா உலகங்களிலுமுள்ள உயிர் வர்க்கங்கள் யாவும்; அனுங்க - வருந்த; மெய்யின் ஐம்புலனும் - உடலிலுள்ள ஐந்து அறிவுகளையும்; அறிஞர்களும் - அடக்கிய முனிவர்களும்; அஞ்சினார்கள் - அச்சமுற்றார்; (அவர்களுக்கு) தாம் செய்யும் வினை வேறு இலை - தாம் (இராவணனுக்கு எதிராகச்) செய்யும் தொழில் (அஞ்சுவதையன்றி) வேறு இல்லாமற் போயிற்று.

* * *

இராவணன் வருகையைக் கண்டன வானர சேனைகள். நடுங்கின; தரையில் வீழ்ந்து வாய் குழறின. பெரியதான ஒலி அதனைக் கேட்டான் இராமன்.

* * *

தொழும் கையொடு, வாய் குழறி,
மெய்ம் முறை துளங்கி,
விழுந்து கவி சேனை இடுபூசல்
மிக, விண்ணோர்
அழுந்து படு பால் அமளி,
'அஞ்சல்' என, அந்நாள்,
எழுந்த படியே கடிது எழுந்தனன்,
இராமன்.

கூப்பிய கையுடனே வாய் குழறி, வலி குன்றி வீழ்ந்தது வானரச் சேனை. அவ்வாறு வீழ்ந்தபோது அலறின. அந்த பேராரவாரம் மிகவே, இராமன் அவர்தம் துயர் தீர்க்க வேகமாக எழுந்தான். அது எப்படியிருந்தது? முன்னர், திருப்பாற்கடலில் திருமால், தேவர்கள் துன்புற்று கதறியபோது, 'அஞ்சேல்!' என்று அபயம் அளித்து தசரத மன்னனின் மகனாகத் தோன்றுவதற்காக எழுந்ததுபோல் இருந்ததாம்.

* * *

(இராவணன் வருகையைக் கண்ட) கவிசேனை - வானரப் படைகள்; தொழும் கையொடு - (தம்) கூப்பித் தொழுது வணங்கும் கைகளொடு; வாய் குழறி - வாய் பேசமுடியாமல் குழறி; மெய் - உடல்கள்; முறை துளங்க - முறையாக நடுங்க; விழுந்து - தரையில் விழுந்து; இடு பூசல் மிக - இடுகின்ற பேரொலி அளவு மிக; இராமன் - (அவ்வொலி கேட்ட) இராமபிரான்; அந்நாள் - முன்னொரு காலத்தில்; விண்ணோர் அழுந்த - தேவர்கள் (தங்கள் துயர் தாங்கமாட்டாமல்) மனந்தாழ; 'அஞ்சல்' என - 'அஞ்சாதீர்கள்' என்று; அரவத்து அமளி எழுந்தபடியே - (திருப்பாற் கடலில்) ஆதிசேஷனாகிய படுக்கையினின்று எழுந்த அவ்வண்ணமே; கடிது எழுந்தனன் - (வானரர்களைக் காக்க) விரைவாக எழுந்தான்.

* * *

இந்திரன் கட்டளைப்படி, மாதலி தேர்கொண்டு வருகிறான். இத் தேர் தெய்வீகமானது. இராமனிடம் மாதலி இத்தேரின் பெருமைகளைக் கூறுகிறான். ஒருவேளை இது அரக்கரால் மாயமாக அனுப்பப் பெற்றதோ என சிறிது ஐயுறும்போது, அத் தேரின் குதிரைகள் வேதம் ஓதுவதைக் கேட்கிறான். என்றாலும் சிறிது ஐயமே. மாருதி இலட்சுமணன் ஆகியோருடன் ஆலோசித்து, பின் தெளிகிறான் இரகுவீரன்.

* * *

விழுந்து புரள் தீவினை நிலத்தொடு
வெதும்ப,
தொழும் தகைய நல்வினை
களிப்பினொடு துள்ள,
அழுந்து துயரத்து அமரர்
அந்தணர் கை முந்துற்று
எழுந்து தலை ஏற, இனிது
ஏறினான் - இராமன்.

வந்தத் தேரில் ஏறினான் இராமன். அக்கணமே தீவினை மண்ணோடு மண்ணாகி அழிந்ததை உணர்ந்த அமரர், முனிவர், அந்தணர், முதலானோர் தம் துயர் தீர்ந்தது என்று பெரு மகிழ்ச்சியுடன் தலைமேல் கைகளை வைத்துத் தொழுதனர்.

*  *  *

விழுந்து புரள் - (இராமன் தேரேறினதால்) விழுந்து புரள்கிற; தீவினை - (உலகிலுள்ள) பாபங்கள்; நிலத்தொடு - (தாம் விழுந்த) பூமியோடு; வெதும்ப - வெந்து போக; தொழும் தகைய - யாவராலும் தொழப்படும் தகுதியுடைய; நல்வினை - புண்ணியங்கள்; களிப்பினொடு துள்ள - மிகுந்த மகிழ்ச்சியோடு துள்ள; அழுந்து துயரத்து - தாம் ஆழ்ந்து போதற்குக் காரணமான துயரத்தை உடைய; அமரர் - தேவர்களும்; அந்தணர் - முனிவர்களும்; கை - தம் கைகள்; முந்து உற்று எழுந்து தலை ஏற - முன்னே நீட்டி மேலே எழுந்து தம் தம் தலைகளில் ஏறி; இராமன் இனிது ஏறினான் - இராமபிரான் (இந்திரன் அனுப்பிய தேரில்) இனிமையாக ஏறினான்.

*  *  *

இராமபிரான் தேரேறினமை இராவண சம்மாரத்தை உறுதி ஆக்கியதால் தீவினைகள் வெதும்பின; நல்வினைகள் துள்ளின; அமரரும் அந்தணரும் தம் கைகளைத் தம் உச்சியிற் கூப்பினர்.

இராமவதாரத்தின் நோக்கம் இங்குச் சுட்டிக்காட்டப் படுகிறது.

*  *  *

ஆழி அம் தடந் தேர், வீரன்
ஏறலும், அலங்கல் சில்லி
பூழியில் சுரித் தன்மை
நோக்கிய புலவர்போத,

ஊழி வெங் காற்றின்
வெய்ய கலுழனை ஒன்றும் சொல்லார்.
வாழிய அனுமன் தோளை
ஏத்தினார், மலர்கள் தூவி

அமரர் அனுப்பிய அந்தப் பெரிய தேரில் ஏறினான் இராகவன் இராகவனுடைய தேர் புழுதியைக் கிளப்பிக் கொண்டு, எழுந்தது. இராமபிரானுக்கு உறுதுணையாய் நின்ற அநுமனின் தோள்களுக்கு மலர் தூவி வாழ்த்தினர், தேவர்கள்.

* * *

வீரன் - வீரனாகிய இராமபிரான்; ஆழி அம் தடம் தேர் ஏறலும் - சக்கரமமைந்த அழகிய அகன்ற (அந்தத்) தேரின் மீது ஏறலும்; அலங்கல் சில்லி - பிரகாசிக்கும் தேருருளை; பூழியில் - (மண்) புழுதியில்; சுரித்த - புதைந்த; தன்மை - தன்மையை; நோக்கிய - பார்க்க; புலவர் எல்லாம் - தேவர்கள் யாவரும் (இராமபிரானின் உடற்பாரத்தை உன்னி); ஊழிவெம் காற்றின் - யுகாந்தத்தில் வீசும் வெப்பம் நிறைந்த காற்றைக் காட்டிலும்; வெய்ய கலுழனை - கொடிய கருடாழ்வானின் (ஆற்றலை); ஒன்றும் சொல்லார் - (புகழ்ச்சியாக) ஒன்றையும கூறாமல்; அநுமன் தோளை - அநுமனின் (ஆற்றல் மிக்க) தோள் களின் மீது; மலர்கள் தூவி - மலர்களைச் சொரிந்து; ஏத்தினார் - அவற்றைப் பாராட்டினார்கள்.

* * *

இராமனின் வலக்கைப் போன்றவன் மாருதி. இராமனாகிய பரந்தாமனையே சுமந்த பெருமை அநுமன் ஒருவனுக்கே உண்டு; அவ்வளவு வலிமை பொருந்திய மாருதிக்கு இங்கு ஏற்றம் தரப்படுகிறது.

('பெருந் திண் தேரை இராமன் மேல் விடுதி' என்று இராவணன் தன் தேரோட்டிக்குக் கூறினான். அவ்வாறே அத் தேர் இராமனை நெருங்குகையில், தன் தேர்ப்பாகனான மாதலி இராவணனை எதிர்க்கத் துடிப்பதைக் கண்டான் இராமபிரான்.)

மாதலி வதனம் நோக்கி, மன்னர்
தம் மன்னன் மைந்தன்,
'காதலால் கருமம் ஒன்று
கேட்டியால்; களித்த சிந்தை
ஏதலன் மிகுதி எல்லாம் இயற்றிய
பின்றை, என் தன்
சோதனை நோக்கிச் செய்தி;
துடிப்பு இலை' என்னச் சொன்னான்.

தேரோட்டி மாதலியைப் பார்த்து சக்கரவர்த்தி திருமகன் இராமன் சொல்கிறான்: "நான் சொல்வதை அன்புடன் கேள்; இராவணனுடைய ஆர்ப்பாட்டமெல்லாம் அடங்கட்டும். இப்போது அவசரப்படாதே! பின் நான் சொல்கிறப்படி வேகமாக தேரை ஓட்டு!" என்றான்.

* * *

மாமறை அமலன் - பெரிய வேதங்களாற் கூறப்படும் அமலனான இராமன் (இராவணன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு); மாதலி வதனம் நோக்கி - மாதலியின் முகத்தைப் பார்த்து; மாரு காதலோய் - மாறுபாடற்ற அன்புடையோனே!; கருமம் ஒன்றும் - காரியம் ஒன்றினை; கேட்டி - (நான் சொல்லக்) கேட்பாயாக; களித்த சிந்தை ஏதலன் - (போர் வெறியினால்) களிப்பு மிக்க உள்ளத்தை யுடைய பகைவனான இராவணன்; மிகுதி எல்லாம் இயற்றிய பின்றை - தீமைகள் யாவற்றையும் செய்து முடித்த பிறகு; என் தன் சோதனை நோக்கி - என்

குறிப்பினை நோக்கி; செய்தி - உன் செயல்களைச் செய்வாயாக; துடிப்பு இலை - விரைய வேண்டா; என்ன சொன்னான் - என்று கூறினான்.

* * *

இங்கே, எவ்வளவு துன்பம் வந்தாலும் பொறுமையே உருவாக உள்ள இராமனை படம் பிடித்துக் காட்டுகிறான் கவி சக்கரவர்த்தி.

மாதலி உடன்படுகிறான். போர் வீரனான மகோதரன், தன் தலைவன் இராவணன் இராமனுடன் போராடும்போது வாளா நிற்றலை விரும்பாது, அரக்கன் உத்தரவிட்டபடி லட்சுமணனுடன் பொருவதாகச் சொல்கிறான். ஆனால் இராமன்மீதே தேரை விடுமாறு சாரதியைக் கட்டளையிடுகிறான்.

* * *

அசனி ஏறு இருந்த கொற்றக்
கொடியின் மேல், அரவத்தேர் மேல்
குசை உறு பாகன் தன் மேல்
கொற்றவன் குவவுத்தோள் மேல்,
விசை உறு பகழி மாரி வித்தினான்;
விண்ணினோடும்
திசைகளும் கிழிய ஆர்த்தான்;
தீர்த்தனும், முறுவல் செய்தான்,

மகோதரன் இந்திரனிடமிருந்து வந்த தேரின்மீது அம்பு மாரி பொழிந்தான். ஏன், அது வெற்றிப் பொருந்தியது; தெய்வீகமானது; எனவே அதை அழிக்கவேண்டும் என்ற உறுதிக்கொண்டு தாக்கினான். தேரின்மீது இருந்த தேர்ப் பாகன் மாதலிமீதும் அம்புக் கணைகளை விடுத்தான். அத்துடனா? வெற்றி வீரனான இராமனின் தோளின்மீதும்

வேகம் பொருந்திய அம்பு மழையை விதைத்தபடி, மகோதரன் ஆகாயமும் திக்குகளெல்லாம் கிழியும்படி ஆரவாரஞ் செய்ததைக் கண்ட தூயவனான இராமன் புன்னகை பூத்தான்.

* * *

(மகோதரன்), அசனி ஏறு இருந்த கொற்ற கொடியின் மேல் - (இந்திரன் இடமிருந்து வந்த தெய்வத் தேரின்) பேரிடி எழுதப் பெற்றிருந்த வெற்றிக் கொடியின்மீதும்; அரவம் தேர்மேல் - ஒலி மிக்க அந்தத் தேரின்மீதும்; குசை உறு பாகன் தன்மேல் - கடிவாளத்தைக் (கையில்) கொண்ட பாகனான மாதலியின்மீதும்; கொற்றவன் - வெற்றியோனான இராமபிரானின்; குலவு - விளங்குகின்ற; தோள் மேல் - தோள்களின்மீதும்; விசை உறு பகழி மாரி - வேகம் நிறைந்த அம்பு மழையை; வித்தினான் - விதை தெளிப்பது போல் தூவினான்; (மேலும்) விண்ணினொடு திசைகளும் கிழிய - வானமும் திசைகளும் கிழிந்து போகுமாறு; ஆர்த்தான் - முழக்கம் செய்தான்; தீர்த்தனும் - தூயவனான இராமபிரானும்; முறுவல் செய்தான் - புன்சிரிப்புச் செய்தான்.

* * *

ஏன்? பின் நிகழ்ச்சியை அறியாது ஆர்ப்பரிக்கின்றானே என்று அவன் தன் ஆணவம் கண்டோ?

* * *

வில் ஒன்றால், கவசம் ஒன்றால்,
விறலுடைக் கரம் ஓர் ஒன்றால்,
கல் ஒன்று தோளும் ஒன்றால்,
கழுத்து ஒன்றால், கடிதின் வாங்கி,

செல் ஒன்று கணைகள், ஐயன்
சிந்தினான்; செப்பி வந்த
சொல் ஒன்றாய்ச் செய்கை
ஒன்றாய்த், துணிந்தனன், அரக்கன் துஞ்சி.

இராமன் என்ன செய்தான்? அவ்வரக்கன் (மகோதரன்) உடைய வில்லை ஒரு பாணத்தினால் சிதைத்தான். கவசத்தை மற்றொரு பாணத்தினால் உடைத்தான். அவனுடைய வலிமை பொருந்திய கைகளை ஒவ்வோர் பாணமும் துணித்தன; மலையை ஒத்த தோளையும் ஒரு பாணத்தைக் கொண்டும், கழுத்தை ஒரே ஒரு பாணத்தினாலும் இடியையொத்த (தன்) கணைகளால் விரைவிற் போக்கிச் சிதறச் செய்தான். மகோதரன் தான் இராமனுடன் எதிர்த்து பொருது கொல்வதாகக் கூறியது பொய்யாகி, அவனே கொல்லபட்டதால், 'சொல்லொன்றாய்ச் செய்கை ஒருவகையாகவும், துண்டு பட்டான் என்றான் கவி.

* * *

ஐயன் - இராமபிரான்; ஒன்றால் வில் - தன் ஒரு கணையால் மகோதரனின் வில்லையும்; ஒன்றால் கவசம் - ஒரு கணையால் அவனுடைய கவசம்; ஓர் ஒன்றால் - ஒவ்வொன்றால்; விறல் உடை கரம் - வெற்றி பொருந்திய கை; ஒன்றால் - ஒரு கணையால்; கல் ஒன்று தோளும் - மலையை ஒத்த தோளும்; ஒன்றால் கழுத்து - மற்றொரு கணையால் கழுத்து (இவ்வாறு ஒவ்வொரு அம்பால் ஒவ்வோர் உறுப்பு வீழும் அறும்படி); செல் ஒன்று கணைகள் கடிதின் வாங்கி - செல்லுதல் பொருந்திய அம்புகளை விரைவில் எடுத்து; சிந்தினான் - வீசினான்; அரக்கன் - மகோதரனான அரக்கன்; செப்பி வந்த சொல் ஒன்றாய் செய்கை ஒன்றாய் - இராவணனிடம் சொல்லி வந்த மொழி ஒன்றாகவும் செயல் மற்றொன்றாகவும் ஆகுமாறு; துஞ்சி துணிந்தனன் - இறந்து உடல் பிளவுபட்டான்.

மகோதரன் வீழ்ந்ததைக் கண்டான் இராவணன். கோபாவேசமாக இராமனைத் தாக்கி பொருதான்.

*　*　*

'பனிப் படா, நின்றது என்னப்
　பரக்கின்ற சேனை பாறித்
தனிப்படான் ஆகின் இன்னம்
　தாழ்கிலன்' என்னும் தன்மை
நுனிப் படா நின்ற வீரன்,
　அவன் ஒன்றும் நோக்காவண்ணம்
குனிப் படா நின்ற வில்லால்,
　ஒல்லையின் நூறிக் கொன்றான்.

பனியானது ஒழிகின்றதுபோலப் பரந்துள்ள இந்த அரக்கச் சேனை சிதறிப் போனால் அன்றி அரக்கர்கோன் தாழ்ந்து வரமாட்டான். எனவே அவன் வணங்கி வர வேண்டுமென்றால் அரக்கர் சேனை முற்றிலும் ஒழிய வேண்டும்; என்று ஆராய்ந்துணர்ந்த வீரனான இராமன், விரைவிலே அரக்கச் சேனையைத் தவிடு பொடியாக்கினான்.

*　*　*

(அப்பொழுது இராமபிரான் தன் உள்ளத்தில்), பனி படா நின்றது என்ன - (மூடு) பனி உண்டாகி நின்றது என்று சொல்லுமாறு; பரக்கின்ற - விரிந்திருக்கிற; சேனை - (தன்) சேனைகள்; பாறி - சிதறி; (தான்) தனிப்படான் ஆகின் - தான் மட்டும் தனியாக ஆகாத வகையில்; இன்னம் தாழ்கிலன் - (இவ்விராவணன்) இன்னும் தாழ மாட்டான்; என்னும் தன்மை - என்னும் நிலையை; நுனிப்படா நின்ற வீரன் - நன்றாக எண்ணியறிந்த வீரனான இராமபிரான்; அவன் ஒன்றும் நோக்காவண்ணம் - (தன் செயல்) ஒன்றையும் அவன் கண்டு அறியாதபடி; குனிப்படா நின்ற வில்லால் -

(தன்) வளைந்த வில்லால்; ஒல்லையில் - விரைவில்; (அச் சேனைகளை) நூறிக் கொன்றான் - பொடியாக்கிக் கொன்றான்.

* * *

இதே தருணத்தில் இராவணனுக்கு என்ன நேர்ந்தது?

* * *

அடல் வலி அரக்கற்கு அப்போழ்து,
அண்டங்கள் அழுந்த, மண்டும்
கடல்களும் வற்ற, வெற்றிக் கால்
கிளர்ந்து உடற்றும் காலை,
வடவரை முதல ஆனமலைக்
குலம் சலிப்ப மானச்,
சுடர் மணி வலயம் சித்தத் துடித்தன,
இடத்த பொன் - தோள்.

இராமனின் கணைகள் வரும்போது, இராவணனுக்குத் தீயநிமித்தங்கள் தோன்றலாயின. பெரு வலிமை படைத்த இராவணனுடைய இடது பக்கத்தின் பத்து தோள்களும், மணிகளழுத்திய தோள்வளை சிந்தும்படி துடித்தன; இதைத் தவிர, வானின்று இரத்த மழை பெய்தது. பெருமலைகள் இடியால் பொடிப் பொடியாகின. குதிரைகள் பின்வாங்கின; விற்கள் நாண் இடையே அறுந்துவிட்டன. இராவணனுக்கு நாவும் வாயும் உலர்ந்திட்டன; அவன் அணிந்த நறுமலர் மாலையோ புலால் நாற்றம் வீசியது.

* * *

அப்போழ்து - அச் சமயத்தில்; அடல் வலி அரக்கற்கு - மிக்க வலிமையுடைய இராவணனுக்கு; அண்டங்கள் அழுந்த - அண்டங்கள் யாவும் தாழவும்; மண்டும் கடல் களும் - பொங்கும் கடல்களும்; வற்ற - நீரில்லாமற்

போகவும்; வெற்றி கால் - வெற்றியையுடைய (ஊழிக்) காற்று; கிளர்ந்து - மேலெழுந்து; உடற்றும் காலை - வருந்தும்போது; வடவரை முதல ஆன - வடக்கேயுள்ள மலையான மேரு முதலிய; மலைக்குலம் - மலைக் கூட்டங்கள்; சலிப்பமான - அசைவனபோல; சுடர்மணி வலயம் சிந்த - ஒளிவிடும் மணிகளழுத்திய வாகு வலயங்கள் சிதறுமாறு; இடத்த பொன் தோள் துடித்தன - இடப் பக்கத்திலுள்ள அழகிய தோள்கள் துடித்தன.

* * *

துர் நிமித்தங்களைப் பொருட்படுத்தவில்லை இலங்காதிபன். மாறாக இன்னும் மும்முரமாக பொருகிறான். இப் போர் எத்தன்மையது? கருமத்திற்கும் ஞானத்திற்கும் போர்; தீமைக்கும் நன்மைக்கும் நடக்கும் போர்; அதருமத்திற்கும் தருமத்திற்கும் நடக்கும் போர். இப் போருக்குக் கம்பன் எத்துணை அருமையான உவமைகளைத் தருகிறான்! ஆதிசேடனும் கருடனும் பொருதது போலவும், நரசிம்மமும் இரணியனும் பொருதது போலவும் இராமனும் அரக்கர்கோனும் பொருதனர் என்று வருணிக்கிறான். இராவணன் சங்கு ஊதுகிறான். ஆனால் திருமால் சொரூபமான இராமனின் வலம்புரி சங்கோ தானே ஒலிக்கின்றது. தேர்க்கொடிகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன? வெல்பவர் யார்? தோற்பவர் யார் என்று தெளிவாக இல்லாத நிலை.

சினங்கொண்ட இராவணன் ஆணவத்துடன் மொழிகிறான்.

* * *

குற்றம் விற்கொடு கொல்லுதல்
 கோள் இலாச்
சிற்றை யாளனைத் தேவர் தம்
 தேரொடும்

பற்றி வானிற் சுழற்றிப்
    படியின் மேல்
எற்று வேனென்று உரைக்கும்
    இரைக்கும்.

ஆத்திரம் மேலிட்ட இராவணன் கூச்சலிட்டான். என்ன என்று கர்ச்சித்தான்? "வெற்றியே தரும் என் வில்லைக் கொண்டு இவனைக் கொல்ல எண்ணமாட்டேன். கேவலம், அற்ப மனிதனான இந்த இராமனைத் தேவர் தந்த தேருடனே பற்றி வானிற் சுழற்றி, பூமியின் மேல் மோதுவேன்!" என கத்தினான்.

*  *

கோள் இலா - வலிமை இல்லாத; சிற்றையாளனை - சிறுவனை; விற்கொடு - (நம் கை) வில்லைக் கொண்டு; கொல்லுதல் - கொல்லுதலானது; குற்றம் - (நம் பெருமைக்குச்) குறைவாவதாகும்; (ஆதலால்) தேவர் தம் தேரோடும் - தேவர்களுக்குரிய தேரோடும்; பற்றி-இவனைப் பிடித்து; வானில் சுழற்றி - வானத்தில் சுழலச் செய்து; படியின் மேல் - பூமி மீது; எற்றுவேன் - மோதுவேன்; என்று உரைக்கும் இசைக்கும் - என்று சொல்லிக் கூச்சலிடுவான்.

*  *  *

பயமும் சினமும் இராவணனை உந்தித் தள்ள அம்புமழை பெய்கிறான். அவை கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் தன்மையன என்றாலும், அவைகள் நடு வழியிலேயே அற்றுப் போய்விடுகின்றன. வலிமை யிழந்தன. இருள் கவியவும் செய்தன.

*  *  *

அல்லா நெடும் பெருந் தேவரும்
மறைவாணரும் அஞ்சி,
எல்லார்களும் கரம் கொண்டு இரு
விழி பொத்தினர், இரிந்தனர்;
செல் ஆயிரம் விழுங்கால் உகும்
விலங்கு ஒத்தது சேனை;
வில்லாளனும் அது கண்டு, அவை
விலக்கும் தொழில் வேட்டான்.

இராவணன் பாணத்தால் வானர சேனைச் சிதறியது. இராமன் என்ன செய்தான்? தேவரும் வேத விற்பன்னரும் அஞ்சித் தம் கையைக் கொண்டு இரு கண்களையும் பொத்தினர்; வானர சேனை முழுவதுமே சிதறிய காலை, இராமன் தன் அம்பினால், இராவணனின் அம்புகளை விலக்கினான்.

* * *

அல்லா - (சிவபெருமான்) அல்லாத; நெடு பெருதேவரும் - நீண்டு சிறந்த தேவர்களும்; மறைவாணரும் - அந்தணர்களும்; எல்லார்களும் - (ஆகிய) யாவரும்; (இராவணன் எய்த அம்புகளின் பெருமைகளைக் கண்டு), அஞ்சி - பயந்து; கரம் கொண்டு - தம் கைகளைக் கொண்டு; இரு விழி - (தம்) இரண்டு விழிகளையும்; பொத்தினர்; இரிந்தனர் - மூடிக்கொண்டு இடம் விட்டுப் பெயர்ந்தார்கள்; சேனை - (வானர) சேனை; ஆயிரம் செல் விழுங்கால் - ஆயிரம் இடிகள் ஒரே நேரத்தில் விழும்போது; உகும் - (பொடியாகிச்) சிந்தும்; விலங்கு - மலையை; ஒத்தது - ஒத்துச் சிதறிற்று. அது கண்டு - அந்த நிலைமையைப் பார்த்து; வில்லாளனும் - வில்லை ஆள்வதில் வல்லவனான இராமபிரானும்; அவை - (இராவணன் எய்யும்) பாணங்களை; விலக்கும்படி - தடுக்குமாறு; விரைந்தான் - விரைவு கொண்டான்.

* * *

இராவணன் தேருடன் வானத்து எழுந்தான். இராமனும் தன் தேரை மேலெழச் செய்தான்.

இருவருக்கும் விற்போர் நடந்தது. இராமன் சரங்கள் விட, அவற்றிற்கெதிராக தன் இருபது கைகளாலும் பலவகை படைகளை வாரி அவன் மீது வீசினான்.

* * *

உடைக்கடல் ஏழினும்,
உலகம் ஏழினும்,
இடைப் படு தீவினும், மலை
ஓர் ஏழினும்,
அடைக்கலப் பொருள் என
அரக்கன் வீசிய
படைக்கலம், மழை படு
துளியின் பான்மைய.

இராமன் அரக்கன் படைக்கலங்களைத் தடுத்தான். எப்படி? தன்னவர் மீது அரக்கர் வீசிய படைக்கலங்களின் மழை, சேதம் விளைவிக்காமல், சிறு மழைத்துளிகள் போல மாறும்படியாக தன் வில்லால் அழிவுப் போக்கையே மாற்றினான்.

* * *

(இவ்வாறு இரு தேர்களும் சூழ்ந்து வரும்), உடை கடல் ஏழினும் உலகம் ஏழினும் - ஏழு கடல்களிலும்; (அவற்றை) உடையாகக் கொண்டு ஏழு பூமிகளிலும்; இடைப்படு தீவினும் - அவற்றிற்கு இடையே உள்ள தீவுகளிலும்; மலை ஓர் ஏழினும் - ஏழு மலைகளிலும்; அடைக்கலம் பொருள் என - (இராவணன் தன்) பாதுகாவலுக்காக வைத்திருந்த பொருள்கள் என்னும்படி; அரக்கன் வீசிய - அவ்வரக்கன் (இராமபிரான் மீது) வீசியனவுமான; படைக்கலம் - படைக்

கருவிகள்; மழைபடு துளியின் பான்மைய - மேகத்தினின்றும் விழும் துளிகளின் தன்மையவாயின.

* * *

தேர்கள் இலங்கையை அணுகின. இராமனின் இரதத்து இடிக்கொடியை அறுத்து சிதைத்து, கடலில் விழச் செய்தான் இராவணன். தொடர்ந்து நடந்த கடும் போரில், மாதலியின் மார்பினில் அம்பு செலுத்தினான் அரக்கன். வருந்தினான் இராமன். அவனை அம்புகளைக் கொண்டு மறைத்தான் இலங்கை வேந்தன். ஆனால் இராமனோ இராவணன்மீது அம்புகளை எய்தான். அவை அவனை வருத்தியதோடு அல்லாமல், அவன் தேர்க் கொடியையும் அழித்தன.

* * *

தூணுடை நிரை புரை கரம்
அவை தொறும் அக்
கோணுடை மலை நிகர் சிலை
இடை குறைய,
சேணுடை நிகர் கணை
சிதறினன்-உணர்வொடு
ஊணுடை உயிர்தொறும்
உறைவுறும் ஒருவன்.

இராமபிரான் இராவணன் எய்த சரங்களைக் கொய்தான். அந்த இலங்கை வேந்தன்மீது பல அம்புகளை எய்து நோவச் செய்தான். அது மட்டுமா? இலங்காதிபதி, தன் பத்து கைகளில் பிடித்திருந்த மலைகளை ஒத்த வில்களையும் தன் சிறந்த அம்பினால் துண்டுபடும்படி செய்தான். இதைச் செய்தவன் யார்? ஞானிகளின் ஆன்மாக்களில் மிக்க மகிழ்ச்சியுடன் உறைந்துள்ள இராமன் என்ற பரம்பொருள்.

* * *

உணர்வொடு - நல்லறிவுடன்; ஊண் உடை - (தன்னை) ஊணாகவுடையவன்; உயிர் தொறும் - ஞானிகளிடத்தில் எல்லாம்; உறை வுறும் ஒருவன் - (விருப்போடு) வசிப்ப வரான திருமாலின் அம்சமான இராமபிரான்; தூண் உடை நிரை புரை - தூண்களினுடைய வரிசையை ஒத்தனவான; கரம் அவை தொறும் - (பத்துக்) கைகளிலும் கொண்டுள்ள; அ - அந்த; கோண் உடை - வளைதலை உடைய; மலை நிகர் சிலை - மலை ஒத்த விற்கள்; இடை குறைய - நடுவிலே துண்டு படும்படி; சேண் உடை - வெகு தூரம் செல்லுதலை உடையனவாய்; நிகர் கணை - ஒளி கொண்ட அம்புகளை; சிதறினன் - வாரியிறைத்தான்.

இராமனின் தேரின் கொடியாக வந்தமர்ந்தான் கருடன். இராமன் இராவணன்மீது தாமதாத்திரம் விட்டான். இவ் அத்திரம் ஒன்றுக்கு ஒன்று எதிரிடையான பல விளைவுகளை விளைவித்தன. சில வாளியை விட்ட இராமன் திருமேனி மீது பல பாணங்களைச் செலுத்தினான் அரக்கன். இராமன் அக்கினிப் படையால் அரக்கன் செலுத்திய ஆசுர படையை அழித்தான்.

* * *

கூற்றுக் கோடினும் கோடல,
கடல் எலாம் குடிப்ப,
நீற்றுக் குப்பையின் மேருவை
நூறுவ, நெடிய
காற்றுப் பின் செலச் செல்வன,
உலகு எலாம் கடப்ப,
நூற்றுக் கோடி அம்பு எய்தனன்,
இராவணன் நொடியில்.

கண்டான் இராவணன். கொண்டான் சினம். தொடானு கோடி உயிர்களைக் குடிக்கும் யமன் போன்ற நூற்றுக் கோடி

அம்புகளை இராவணன் எய்தான்; மிக மிக வேகமாக ஒரே நொடியில் எய்தான். அவை எத்தகையன? கடல் நீரை குடித்து, வற்றிட்ச் செய்யும் திறன் உடையன; மிகவும் வேகமாக காற்றையே ஈர்த்துக் கொண்டுச் செல்லும் வலிமை யுடையன. உலகையே கடந்துச் செல்லக்கூடிய அந்த அம்புகள் இடைவெளியின்றி பறந்தன.

* * *

கூற்றுக் கோடினும் - யமன் தன்னுடைய கொல்லுதல் தொழிலினின்று வழுவினும்; கோடல - பிறழாதனவும்; கடல் எலாம் குடிப்ப - கடல் நீர் அடங்கலும் பருகுவனவும்; மேருவை - மேரு மலையை; நீறு குப்பையின் நூறுவ - புழுதித் தொகுதி போல ஆகுமாறு பொடி செய்வனவும்; நெடிய - நீண்டனவும்; காற்று பின் செல - விரைவில் காற்றும் தமக்குப் பின்னிட; செல்வன - செல்வனவும்; உலகெலாம் கடப்ப - உலகெல்லாம் தாண்டுவனவும் ஆன; நூறு கோடி அம்பு - நூறு கோடி அம்புகளை; இராவணன் நொடியில் எய்தனன் - இராவணன் ஓர் கைந் நொடிப் போதில் விடுத்தான்.

* * *

இருப்புக் கம்மியற்கு இழை
நுழை ஊசி என்று இயற்றி
விருப்பின், "கோடியால் விலைக்கு"
எனும் பதடியின்-விட்டான்,
கருப்புக் கார் மழை வண்ண!—
அக் கடுந் திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய தோளவன்
மீள அரு மாயம்.

மாயா அத்திரம் விட்டான் இராவணன். இறந்த படைக் கலன்கள் எல்லாம் உயிரோடு எதிரிப்பது போன்ற ஒரு

மயக்கத்தை உண்டாக்கியது அது. இந்த மாய அத்திரத்தைக் கண்ட மாதலி இராமனிடம், "கரிய நீர் கொண்ட மேகம் போன்ற வண்ணனே! நீயே மாயவன். அங்ஙனம் இருக்க உன் மீதே மாயா அத்திரத்தை இராவணன் ஏவியது, இரும்பு, வேலை செய்யும் கம்மியனிடம், ஊசி செய்து விலைக் கூறும் மூடச் செயலைப் போன்றது!'' என்றான்.

* * *

கருப்பு - வற்கடக் காலத்து பெய்ய வெழுந்த; கார் மழை வண்ண - கரிய (நீர் கொண்ட) மேகத்தைப் போன்ற நிறத்தவனே! இரும்பு கம்மியற்கு - இரும்புப் பணி செய்கின்ற கருங் கொல்லனுக்கு; இழை நுழை - நூலிழை புகுகின்ற; ஊசி ஒன்று இயற்றி - ஊசியொன்றைச் செய்து; விருப்பின் - விழைவோடு; விலைக்கு கொடியால் - (இந்த ஊசியை) விலைக்குப் பெற்றுக்கொள்வாயாக; எனும் -என்று கூறுகின்ற; பதடியின் - அறிவிலி போன்று; அ - அந்த; கடு திசை களிற்றின் - கடுமை வாய்ந்த திசை யானையின்; மருப்பு - தந்தத்தினால்; கல்லி - அகழப்பட்ட; தோளவன் - தோள்களை உடையவனான இராவணன்; மீள் அரும் - திரும்புவதற்கு அருமையான; மாயம் - மாயாத்திரத்தை; விட்டான் - விடுத்தான்.

இராமன் அதுகண்டு அஞ்சவில்லை. மறத்தை அழிக்க அறமே சிறந்தது என, ஞானக் கணையை விடுத்தான்.

* * *

மாயா அத்திரம் அழிந்தது கண்ட இராவணன், சூலம் கொண்டு இராமன் மீது வீசினான். இராமனின் அம்புகளால் சூலப்படையை அழிக்க முடியவில்லை. தன்னை நோக்கி வேகமாக வந்த சூலத்தைப் பார்த்தான் தசரதன் மகன். பெரிதாக ஊங்காரம் செய்தான். அடுத்த நொடி சூலம் பொடிப் பொடியாக விழுந்தது.

* * *

சங்காரத்தான் கண்டை ஒலிப்ப,
　　தழல் சிந்த,
பொங்கு ஆரத்தான் மார்பு
　　எதிர் ஓடி புகலோடும்,
வெங் காரத்தான் முற்றும்
　　முனிந்தான்; வெகுளிப்பேர்
உங்காரத்தால் உக்கது, பல்
　　நூறு உதிர் ஆகி.

எதிர்படும் பொருளை எல்லாம் ஒழிக்கக் கருதி சூலப் படையை இராமன்மீது ஏவினான் இலங்கை வேந்தன். இது கண்டு தேவர்கள் நடுங்கினர். இச் சூலத்தை வெல்வாய் என்று இராமனை வேண்ட, இராமன் அதை தன் உங்காரத்தினால் அழித்தான்.

* * *

(அந்த சூலம்), சங்காரத்தால் - அழிக்கும் தொழிலுடன் கண்டை ஒலிப்ப - மணிகள் சத்திக்கவும்; தழல் சிந்த - நெருப்புச் சிதறவும்; பொங்கு காரத்தான் - பொங்குகின்ற சினத்தினையுடைய (இராமபிரானுடைய) மார்பு எதிர் ஓடி - மார்புக்கு நேராக விரைந்து சென்று; புகலோடும் - நுழைந்த அளவில்; வெம் கார் ஒத்தான் முற்றும் முனிந்தான் - கொடிய மேகத்தை யொத்தான் மிகவும் சினந்தான்; வெகுளி - (அவனுடைய) சினத்தினால் எழுந்த; பேர் உங்காரத்தால் - பெரிய உங்கார ஒலியால்; (அந்தச் சூலம்) பல் நூறு உதிர் ஆகி - பல நூறு தூள்களாகி; உக்கது - சிதறியது.

* * *

சூலம் அழிந்ததை கண்கூடாகப் பார்த்தவுடன் அரக்கன் இராமனை வியப்புடன் பார்த்தான். இவன்

ஒருவேளை "வேத முதல்வனோ?" என இராவணன் கருதினான்.

*　　　*　　　*

"வென்றான்," என்றே உள்ளம்
　　வியந்தான், 'விடுசூலம்
பொன்றான் என்னின் போகலது'
　　என்னும் பொருள் கொண்டான்
ஒன்று ஆம் உங்காரத்திடை
　　உக்கு, ஓடுதல் காணா
நின்றான், அந் நாள் வீடணனார்
　　சொல் நினைவுற்றான்.

இராவணன் விட்ட சூலம் எத்தகையது? அவன் பகைவனான இராமன் இறந்தாலன்றி போகக் கூடியது அன்று. அவ்வாறிருக்க, ஓர் உங்காரத்தினால் அச் சூலத்தை பொடிப் பொடியாக உதிர்த்த இந்த இராமன், விபீடணன் சொன்னது போல் மும்மூர்த்திகளைவிடச் சிறந்த பரம்பொருளோ? என்று வியந்தான்.

*　　　*　　　*

விடு சூலம் - நாம் எறிந்த சூலப்படை; பொன்றான் என்னில் போகலது - (இராமன்) இறந்தாலன்றி (அவனை விட்டு) அப்புறம் செல்லாது; என்னும் பொருள் - என்கின்ற கோட்பாட்டை; கொண்டான் - மனத்திற் கொண்டவன் ஆன இராவணன்; ஒன்று ஆம் - ஒப்பற்றதான; உங்காரத்திடை - (இராமனது) உங்காரத்தினால்; உக்கு ஓடுதல் - (அந்தப் படை) சிதறி ஓடுதலை; காணா நின்றான் - கண்டு நின்றவனாகி; 'வென்றான் - இவன் நம்மை வெல்பவனே ஆவன; என்றே - என்று கருதி; உள்ளம் - மனதில் எழுந்த (அச்சத்தால்); வெயர்த்தான் - வெயர்த்தான்; அந்நாள் -

முன்னாளிலே; வீபீட்ணனார் சொல் - விபீடணன் சொன்ன நல்லுரையை; நினைவுற்றான் - மனத்திற்கருதி நின்றான்.

* * *

"யாராயிருந்தால் என்ன? என் தனிப்பட்ட வீரத்தால் அவனை வெல்வேன்; எடுத்தக் காரியத்தை முடித்தே தீருவேன்; பின்வாங்க மாட்டேன்," என்று உறுதி பூண்டு நிருருதி என்ற திக் பாலகருடைய படையை இராமன்மீது எய்தினான்.

* * *

'ஆயிடை அரக்கனும், அழன்ற
　　நெஞ்சினன்,
தீயிடைப் பொடித்து எழும்
　　உயிர்ப்பன், சீற்றத்தன்,
மா இரு ஞாலமும்
　　விசும்பும் வைப்பு அறத்
தூயினன், சுடு சரம் உருமின்
　　தோற்றத்த.

நிருருதி படைகளை எரித்தது இரகுவீரன் ஏவிய கருடக் கணை. இந்தத் தோல்வி இராவணனின் ஆணவத்தை இன்னும் தூண்டியது. கோபக்கனல் சிந்தும் பெருமூச்சு விட்டான். இந்த உலகம், வானம், வெற்றிடம் எதுவுமே இல்லாது அழிந்துபோகட்டும் என இடியோசையுடன் கூடிய சரங்களைத் தூவினான்.

* * *

ஆயிடை - அப்போது; அரக்கனும் - இராவணனும்; அழன்ற நெஞ்சினன் - வேகின்ற நெஞ்சினனாய்; தீ - நெருப்பானது; இடை-இடையே; பொடித்து எழும் - பொடியாகச்

சிதறுகின்ற; உயிர்ப்பன - நெட்டுயிர்ப்புடன் கூடியவனும்; சீற்றத்தன் - சினம் உடையவனுமாகி; மா இரு ஞாலமும் விசும்பும் - விரிந்த இந்த உலகமும் ஆகாயமும்; வைப்பு அற - இடமின்றி ஒழிய; உருமின் தோற்றத்த - இடியொத்த காட்சியை அடைய; சுடுசரம் - எரிக்கின்ற அம்புகளை; தூயினன் - வாரிஇறைத்தான்.

* * *

ஒக்க நின்று எதிர் அமர்
உடற்றும் காலையில்,
முக்கணான் தடவரை எடுத்த
மொய்ம்பற்கு
நெக்கன, விஞ்சைகள்,
நிலையின் தீர்ந்தன;
மிக்கன, இராமறகு வலியும்
வீரமும்

இராவணனின் சரம், இராமசரத்தின் முன் வீழ்ந்தன. இராம சரம், அரக்கர்கோன் மார்பிற் பாய்ந்தது. அப்போது என்னவாயிற்று? கைலாய மலையை எடுத்த வலிமை உடைய இராவணனுக்கு நினைவாற்றல் குறைந்தது. அவனும் தளர்ந்தான். அவன் தளர்ச்சி, இராமனுக்கு மிகுந்த வலிமையும் வீரத்தையும் கொடுத்தது.

* * *

ஒக்க நின்று - சரிசமமாக நின்று; எதிர் - எதிர்த்து; அமர் உடற்றும் காலையின் - போரி புரியுங்கால்; முக்கணான் தடவரை எடுத்த மொய்ம்பற்கு - மூன்று கண்களை உடையவனான சிவபெருமானுடைய பெரிய கயிலை மலையைத் தூக்கிய தோளையுடைய இராவணனுக்கு; விஞ்சைகள் - (கற்ற) மாய வித்தைகள்; நெக்கன - நினைவினின்றும் நெகிழ்ந்தனவாய்; நிலையில் தீர்ந்தன - (தம்) நினைவில்

இருந்தும் அகன்றன; இராமற்கு -இராமபிரானுக்கு; வலியும் வீரமும் - வன்மையும் ஆண்மையும்; மிக்கன் - அதிகரித்தன.

* * *

சரிசமமான பலமுடைய இருவர் போரிடுகையில், எதிரி சிறிது சளைக்கக் கண்ட அளவில் மாற்றானுக்கு உற்சாகம் நிகழ்வது இயல்பு. இராவணன் தளர்ச்சியால் இராமற்கு வலியும் வீரமும் மிக்கன.

* * *

வேதியர் வேதத்து மெய்யன்
வெய்யவர்க்கு
ஆதியன் அணுகிய அற்றம்
நோக்கினான்
சாதியில் நிமிர்ந்தது ஓர்
தலையைத் தள்ளினான்
பாதியின் மதிமுகப் பகழி
யொன்றினால்

ஆணவத்துடன் நிமிர்ந்து நின்ற இராவணனது தலையை இராமன் அறுத்தான். அது கடலில் போய் விழுந்தது. என்றாலும் அந்தத் தலை மீண்டும் முளைத்தது. இராமனை திட்டி அதட்டியது.

* * *

வேதியர் வேதத்து மெய்யன் - அந்தணர்கள் ஓதுகின்ற நான்மறையின் உண்மைப் பொருளான இராமபிரான்; வெய்யவர்க்கு - தீயவர்களான அரக்கர்க்கு; ஆதியன் - முதல்வனான இராவணன்; அணுகிய அற்றம் நோக்கினான் - கிட்டிய சமயம் பார்த்து; (இதுவே அரக்கன் தலையைத்

துணிக்கத்தக்க சமயம் என்று கருதி); சாதியில் - இனத்தில்; நிமிர்ந்தது ஓர் தலையை - நிமிர்ந்து விளங்கும் தோற்றம் உள்ளதொரு தலையை; பாதியின் மதிமுகம் பகழி ஒன்றினால் - அர்த்த சந்திரபாணம் ஒன்றினால்; தள்ளினான் - அறுத்து வீழ்த்தினான்.

* * *

கடலில் விழுந்த இராவணனின் தலை ஆரவாரம் செய்தது, இராமனின் தோளில் இராவணன் பதினான்கு அம்புகளை விட்டான்.

இராவணன் கையை இரகுவீரன் அறுத்தான். என்றாலும் அதுவும் முன்போல் முளைத்தது. அற்ற தன் கையை மற்றொரு கையால் எடுத்து அரக்கன் மாதலிமீது எறிகின்றான். மாதலி நிலை குலைகிறான். இராவணன் மாதலிமீது எறிந்த தோமரம் இராகவனால் துகளாக்கப் படுகின்றன.

இராகவன் இப்போது முழுமூச்சாக அரக்கனை அழிக்க முற்படுகிறான்.

* * *

ஒய்வு அகன்றது, ஒரு தலை
    நூறு உற,
போய் அகன்று புரள,
    பொரு கணை
ஆயிரம் தொடுத்தான்—
    அறிவின் தனி
நாயகன் கைக் கடுமை
    நடத்தியே.

ஞான நாயகனான இராமன் ஒய்வின்றி கைவிசையைச் செலுத்தி, இராவணனின் தலைகளை அறுத்தான்.

என்றாலும் அவை மீண்டும் மீண்டும் முளைத்தன. எனவே வெகு தொலைவுக்கு அப்பால் அவை பலவிடங்களில் போய் புரளும்படி ஆயிரம் ஆயிரம் அம்புகளைத் தொடுத்தான்.

* * *

அறிவின் தனி நாயகன் - ஞானத்தின் ஒப்பற்ற தலைவனான இராமபிரான்; கைக்கடுமை நடத்துவான் - (தனது) கைவேகத்தைச் செலுத்துபவனாய்; ஒய்வு அகன்றது - ஒய்வு நீங்கப் பெற்றதாகி; (ஒழிவின்றி) ஒருதலை நூறு உற - ஒரு தலை நூறாக முளைக்கவும்; (அவை அனைத்தும்) அகன்றுபோய் - (வெகு தூரம்) நீங்கிச் சென்று; புரள - புரளுமாறு; பொருகணை - பொருதற்கு உரிய வாளிகள்; ஆயிரம் தொடுத்தான் - ஆயிரம் விடுத்தான்.

* * *

(இராவணனுடைய சிரங்களைக் கண்டன பேய்கள். முன்னர் இராவணனைக் கண்டு அஞ்சி அவனைச் சுற்றி பணிந்துவந்த பேய்கள், அவனுக்கு நேராக நின்று கண்களைத் தோண்டின. இதன் உட்பொருள் என்ன? ஒருவனுடைய புண்ணியம் அகன்றபின் அவனுடைய புகழ் முதலிய அனைத்தும் பழுதுபடும்.)

மூர்ச்சித்தான் இராவணன். அவனைக் கொல்லச் சொன்னான் மாதலி. 'நீதியன்று!' என்றான் இராமன்.

இராவணனோ தன் தோளின் வரிசைகளில் சுமந்திருந்த ஆயுதங்களை இராமபிரான் மீது வீசி எறிந்தான். "இவனை வெல்வது எங்ஙனம்?" என்று ஆலோசித்தான் இராமன்.

* * *

காலும் வெங் கனலும் கடை
காண்கிலா,
மாலும் கொண்ட வடிக் கணை,
மா முகம்
நாலும் கொண்டு நடந்தது,
நான் முகன்
மூல மந்திரம் தன்னொடு
மூட்டலால்.

பின்னர், அயன் படையை விடுத்தான். இது கொடுங்கனலும் வேகமுடைய கூரிய கணை. இந்த அத்திரத்தை நான்முகனுக்கு உரிய முக்கிய மந்திரத்தை உச்சரித்து விட்டதால், பெரிய நான்கு முகங்களையும் கொண்டு சென்றது.

* * *

மாலும் - திருமாலின் அவதாரமான இராமபிரான்; கொண்ட - கைக் கொண்டதாகி; காலும் - காற்றும்; வெம் கனலும் - கொடிய தீயும்; கடை காண்கிலா - முடிவு காணமுடியாத; (விரைவும் கொடுமையும் கொண்ட); வடிகணை - கூரிய அந்த அத்திரமானது; நான்முகன்மூலம் மந்திரம் தன்னொடு மூட்டலால் - பிரமதேவனுக்குரிய பீஜாச்சரத்தைக் கொண்ட மந்திரத்துடன் செபித்து விட்டளவில்; மா முகம் நாலும் கொண்டு நடந்தது - பெரிய முகங்கள் நான்கினையும் கொண்டு சென்றது.

* * *

முக்கோடி வாழ் நாளும் முயன்று உடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும், வெலப்படாய்
எனக் கொடுத்த வரமும் ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர் பருகிப் புறம் போயிற்று
இராகவன் தன் புனித வாளி

தூயவனான இராமனின் அந்த அம்பு, இராவணனது முக்கோடி ஆயுளையும், முன் செய்த பெருந்தவத்தையும் பிரமன் கொடுத்த வரத்தையும், அவன் போர் வலி, புயவலி இரண்டையும் ஒழித்து அவன் மார்பிலே புகுந்து உடலெங்கும் குடைந்து உயிரைப் பருகிவிட்டு, புறத்தே போயிற்று.

இராகவன் தன் புனித வாளி - இராமன் விடுத்த தூய அத்திரமானது; (இராவணனுடைய), முக்கோடி வாழ் நாளும் - மூன்று கோடி ஆயுளையும்; முயன்று உடைய பெரு தவமும் - முயன்று செய்த பெரிய தவத்தையும்; முதல்வன் - முதற்கடவுளான பிரமதேவன்; முன் நாள் - முன் காலத்தில், எக்கோடி எவராலும் - முப்பத்து முக்கோடி தேவர்களில் எந்த வரிசையிற் சேர்ந்தவராலும்; வெலப்படாய் - நீ வெல்லப்படமாட்டாய்; என கொடுத்த வரமும் - என்று தந்த வரமும்; ஏனை - மற்றும்; திக்கு ஓடும் - திசைகளோடும்; அனைத்து உலகும் - எல்லா உலகத்திலும்; செரு கடந்த - போரினால் வென்ற; புயம் வலியும் - புய வலிமையும்; தின்று - அழித்துவிட்டு; மார்பில் புக்கு - (அவனுடைய) மார்பில் நுழைந்து; ஓடி - உடலெங்கும் சுற்றி; உயிர் பருகி - உயிரைக் குடித்துவிட்டு; புறம் போயிற்று - வெளிச் சென்றது.

* * *

கார் நின்ற மழை நின்றும் உரும் உதிர்வ
என, திணி தோட் காட்டின் நின்றும்,
தார் நின்ற மலை நின்றும், பணிக் குலமும்
மணிக்குலமும் தகர்ந்து சிந்த,
போர் நின்ற விழி நின்றும்பொறி நின்று
புகையோடும் குருதி பொங்கத்
தேர் நின்று நெடு நிலத்துச் சிரமுகம் கீழ்ப்
பட விழுந்தான், சிகரம் போல்வான்.

போரில் நிலைத்து நின்ற அரக்கருக்குச் சிகரமாக விளங்கிய இராவணன், கருநிற மேகத்தினின்று இடி உதிர்வது போல உதிர்ந்தான். தோள் பகுதியிலிருந்த ஆபரணங்களும் இரத்தினங்களும், மாலை அணிந்த மார்பிலே இருந்த ஆபரணங்களும் உடைந்து சிந்தின. குருதி புகையுடனே பொங்கியது. அத்தகைய பெரியவனான இராவணன் தேரினின்று தலைகீழாக விழுந்தான்.

* * *

சிகரம் போல்வான் - அரக்கரிக்குச் சிகரம் போன்றவன் ஆன இராவணன்; கார் நின்ற - கருமை அமைந்த; மழை நின்றும் - மேகத்திலிருந்து; உரும் உதிர்வ என - இடி உகுவது போன்று; திணி - வலிய; தோள் காட்டின் நின்றும் - தோள் தொகுதியினின்றும்; தார் நின்ற - மாலை அணியப்பட்ட; மலை நின்றும் - மலை போன்ற மார்பினின்றும்; பணி குலமும் மணி குலமும் - நூதனத் தொகுதிகளும் ஆபரணத் தொகுதிகளும்; தகர்ந்து சிந்த - உடைந்து சிதறவும்; போர் நின்ற - போரில் நின்ற; விழி நின்றும் - விழியிலிருந்து; பொறி நின்று; தீப்பொறி வெளிப்பட்டு நின்று; புகையோடும் குருதி பொங்க - புகையுடனே உதிரம் பொங்கவும்; தேர் நின்று - தேரிலிருந்து; நெடு நிலத்து - அகன்ற பூமியிடத்து; சிரம் முகம் கீழ்பட விழுந்தான் - தலையுடன் கூடிய முகம் கீழ்ப்பட (குப்புற) விழுந்தான்.

இராவணன் வீழ்ந்தாலும் அவன் முகம் பொலிவுற்றது. ஏன்? போர் சினம், சூழ்ச்சிகள், காமம், தோள் வலி ஆகியன அடங்கின. மனத்திலே நீண்ட காலத்திற்குப் பின் பிறந்தது அமைதி. அந்த அமைதி, முகத்தை மும்மடங்கு பொலிவுறச் செய்தது.

* * *

பூதலத்தின் ஆக்குவாய் நீ விடுமிப்
பொலந்தேரை என்ற போதின்
மாதலிப் பேர் அவன் கடவ மண்டலத்தின்
அப்பொழுதே வருதலோடும்
மீதலைத்த பெருந்தாரை விசும்பளப்பக்
கிடந்தான் தன் மேனி முற்றுங்
காதலித்த உருவாகி அறம் வளர்க்கும்
கண்ணாளன் தெரியக் கண்டான்

தேரினின்று கீழே இறங்கினான் கோசலையின் மகன். உதிர வெள்ளத்தில் கிடந்தான் இராவணன்.

தேரை இந்திரனிடம் கொண்டுபோகுமாறு மாதலியை அனுப்பிய இராமன். இராவணனைச் சென்று கண்டான். புறங்கொடா வீரன் இராவணனின் பராகிரமத்தை பாராட்டினான். அரக்கனின் மார்பில் பாய்ந்த திக்கயத்தின் தந்தம் முதுகில் அணிபோல் விளங்கக் கண்டான். மனம் உளைந்தான். விபீடணனை இராவணனின் வீழ்ச்சி மிகவும் பாதித்தது. சோகத்தால் துடித்தான்; துவண்டான்; அரற்றினான். இராமன் அவனுக்கு ஆறுதல் கூறினான். 'உலகுள்ள அளவும் இராவணன் வாழ்வான்' என்று கூறி, பகைமையைவிட்டு இராவணனுக்கு இறுதி கடன்களைச் செய்யப் பணித்தான்.

* * *

இராவணன் மாய்ந்ததை அறிந்தாள் அவன் மனைவி மண்டோதரி. ஓடி வந்தாள். அவன் உடலைத் தழுவினாள்.

*　　*　　*

என்று அழைத்தனள் ஏங்கி
　　எழுந்து அவன்
பொன் தழைத்த பொரு அரு
　　மார்பினைத்
தன் தழை கைகளால் தழுவித்
　　தனி
நின்று அழைத்து உயிர்த்தாள்
　　உயிர் நீங்கினாள்.

கணவனின் உடலைத் தழுவினாள் அவன் இன்னுயிர்த் துணைவி. அப்போதே அவ்வுடல் மீது அவளும் உயிர் துறந்து வீழ்ந்தாள். அதுகண்டு யாவரும் அம் மாதரசியைப் புகழ்ந்தனர்.

*　　*　　*

என்று அழைத்தனள் - கூக்குரலிட்டு அழுதவளாய்; (அந்த மண்டோதரி) ஏங்கி - ஏக்கமுற்று, (பின்னர்) எழுந்து - எழுந்து; அவன் - அந்த இராவணனுடைய; பொன் தழைத்த - பொன் அணிகள் மிகுதியாக அணியப்பெற்றிருந்த; பொரு அரு மார்பினை - ஒப்பற்ற மார்பினை; தன் தழை கைகளால் தழுவி - தனது தளிர் போன்ற கரங்களால் அணைத்து; தனி நின்று - தனித்து நின்று; அழைத்து - கூவி; உயிர்த்தாள் - நெட்டுயிர்ப்புக் கொண்டு; உயிர் நீங்கினாள் - உயிர் நீங்கப் பெற்றாள்.

*　　*　　*

'ஞானிகள், இறந்தவரைக்குறித்து, இறந்ததற்குத் துன்பப் படமாட்டார்' என்ற உண்மையைக் கூறி விபீடணனை

தேற்றுகிறான் இராகவன். இலட்சுமணனை வானர வீரர்களுடன்சென்று விபீடணனுக்கு முடி சூட்டுமாறு ஏவுகிறான். இளையவனும் அவ்வாறே செய்தான். முடிசூட்டப்பட்டபின் விபீடணன் இராமனிடம் செல்கிறான். தொழுகிறான்.

அப்போது இராமன் விபீடணனுக்கு என்ன கூறினான்?

* * *

உரிமை மூவுலகும்
தொழ உம்பர்தம்
பெருமை நீதி
அறன் வழிப் பேர்கிலாது
இருமையே அரசாளுதி
ஈறிலாத்
தருமசீல என்றான்
மறை தந்துளான்

எப்படி அரசு செலுத்த வேண்டுமென்ற அரச நீதியைப் போதித்தான். மூவுலகும் வணங்கும்படி, தேவர்கள் பெருந்தன்மை கொண்டும், நீதி, தருமம் ஆகிய நெறியுடன் அரசு செலுத்துமாறு கூறினான். "உனக்கு உரிய இலங்கை நாட்டின் புகழும் பெருமையும் நிலைப் பெற்றிருக்கும்படி ஆளுக." என்றான்.

* * *

மறை தந்துளான் - ஆதியிலே வேதங்களை வெளியிட்டு அருளிய திருமாலின் அவதாரமாகிய இராமன்; (விபீஷணனை நோக்கி) ஈறுஇலா - அழிவு இல்லாத; தருமசீல - அற ஒழுக்கம் உடையவனே; மூவுலகும் தொழ - மூவுலகத்தினரும் உன்னை வணங்கிப் போற்ற; உம்பர்தம் பெருமை - தேவர்களின் பெருமைக்கும்; நீதி - அரச நீதிக்கும்; அறன் வழி - தரும மார்க்கத்துக்கும்; உரிமை - உரிய வழி நின்று;

இருமையே - இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரும் புகழும் புண்ணியமும்; பேர்கிலாது - பிறழாமல்; அரசாளுதி - இலங்கா இராச்சியத்தை அரசாள்வாய்; என்றான்.

இப்பு றத்தின வெய்துறு காலையில்
அப்பு றத்ததை யுன்னி அனுமனைத்
துப்பு உறச் செய்ய வாய் மணித் தோகைபால்
செப்பு உறு இப்படிப் போயெனச்
செப்பினான்

அநுமனை நோக்கினான் அண்ணல். "அழகிய மயில் போன்ற சாயலுடையவளான பிராட்டியினிடம் இங்கு நடந்த செய்திகளைச் சொல்வாயாக!" என்று சொல்லி அநுமனை அன்னையிடம் அனுப்பினான்.

* * *

இ புறத்து - இந்தப் பக்கத்தில்; இன - இப்படிப்பட்ட செயல்கள்; எய்துறு காலையில் - நிகழா நின்ற போதில்; அ புறத்தை - அப்பால் நடைபெற வேண்டியதை; உன்னி - ஆராய்ந்து; அநுமனை - மாருதியை (நோக்கி); துப்பு உறு அ செய்ய வாய் மணி தோகை பால் - பவளம் போன்ற அந்த சிவந்த வாயையுடைய அழகிய மயில் போன்ற சாயலளான பிராட்டியினிடம்; இ படி போய் - இங்கு நடந்த செய்திகளை; செப்பு உறு - சொல்வாயாக; என - என்று; செப்பினான் - சொல்லினான்.

* * *

அநுமன் பிராட்டியை அடைந்தான். தொழுதான் அன்னையை. செய்தியையும் சொன்னான். பிராட்டியும் மகிழ்ந்தாள். ஆனால், அப்பெரு மகிழ்ச்சியில் பேச முடியாது தவித்தாள். அன்னையை அண்ணலைக் காணவேண்டி அழைத்துச் செல்ல வருகிறான் விபீடணன்.

துறவுகோலம் விடுத்து, எல்லா அணிகலன்களை அணிந்து அலங்கரித்து வரவேண்டும் என்ற இராமனின் கட்டளையை ஏற்கிறாள் அன்னை. பிராட்டியை விமானத்திலேற்றி, இராமனிடம் அழைத்துச் செல்கின்றாள். பி ர ா ட் டி அண்ணலைக் கண்டு தொழுகிறாள்.

* * *

பிறப்பினுந் துணைவனைப் பிறவிப்
பேரிடர்
துறப்பினுந் துணைவனைத் தொழுது
நான் இனி
மறப்பினும் நன்றிது மாறு
வேறு வீழ்ந்து
இறப்பினும் நன்று என்
வேக்க நீங்கினாள்.

அண்ணலைக் கண்ட அன்னை தொழுதாள்; சேவித்தாள். "நான் இனி இப் பெருமானை மறக்க நேர்ந்தாலும் நல்லதே. இதற்கு மாறாக, இப்போது உயிர் நீங்கப் பெற்றாலும் நன்றே!" என நினைத்தாள். ஏன்? அவனே பிறப்பிலும் இறப்பிலும் துணைவன் என்பதால்.

* * *

பிறப்பினும் - (இப் பிறப்பில் மட்டுமன்றி) எந்தப் பிறவி எடுத்தாலும்; துணைவனை - (வாழ்க்கைத்) துணைவன் ஆகின்றவனும்; பேர் பிறவி இடர் துறப்பினும் - பெரிய பிறவித் துன்பம் ஒழிந்தாலும்; துணைவனை - என்றும் உயிர்த் துணைவனாகின்றவனுமான மூர்த்தியை; நான் தொழுது - (கண்ணுற்றுச்) சேவிப்பதனால்; இனி, மறப்பினும்-(அப் பெருமானை)மறக்க நேர்ந்தாலும்; நன்று - நல்லது; இது மாறு - இதற்கு எதிரிடையாக; வேறு வீழ்ந்து இறப்பினும் - வேறு வகையாக (நான்) விழுந்து உயிர்

நீங்கப் பெற்றாலும்; நன்று - (அதுவும்) நல்லதே; என - என்று நினைந்து; ஏக்கம் நீங்கினாள் - துயரம் ஒழியப் பெற்றாள்.

* * *

(ஆளுடை நம்பி, 'ஆரூரானை மறக்கலுமாமே' என்று கூறினார். அன்னை பத்து மாதங்கள் பிறன் மனைகளில் இருந்து பேராரவாரத்துடன் வெற்றி வீரன் இராமனைக் கண்ட பின்னர் அவனை மறக்கமுடியாது என்பது திண்ணம். அத்துடன் அன்றி உலகத்தில் சிருட்டிக்கப்பட்ட அனைத் திற்கும், வாழ்வளிப்பன் பரமனே. இறுதியில் இரட்டைகள் ஆனபிறப்பு இறப்பினின்று விடுவிப்பவனும், அவனே. எனவே பெத்த நிலையும் முத்தி நிலையிலும் உற்ற துணைவனான அவன் பிறப்பினும், துறப்பினும் துணைவன் என்றார் கவியரசர்.

தொழுத அன்னையை நோக்கினான் அண்ணல்.

* * *

கற்பினுக் கரசியைப் பெண்மைக்
காப்பினைப்
பொற்பினுக்கு அழகினைப் புகழின்
வாழ்க்கையைத்
தன் பிரிந்து அருள் புரி தருமம்
போலியை
அன்பின் அத்தலைவனும் அமைய
நோக்கினான்

முன்பு இதே அண்ணல் அவளை நோக்கினான். அதைக் கம்பன், "அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்" என்றான். ஆனால் இப்போது தொழுது நின்ற இனிய துணைவி சீதையைக் காண்கிறான் இராமன். எத்தகைய

சீதை? பெண்மைக்கு இலக்கணமான அழகிய சீதை; தன்னை துன்புறுத்திய அரக்கியருக்கு அபயம் அளித்த மாதரசி சீதை; தருமமும் கற்பும் உருக்கொண்ட பதிவிரதை சீதை. அன்றைய பார்வைக்கும் இன்றைய பார்வைக்கும் எத்துணை வித்தியாசம்? மனத்தில்தான் எத்தனை முதிர்ச்சி!

அன்னை அவனைக் கண்டு கண்ணீர் உகுத்தாள். பத்து மாத பிரிவிற்குப் பின் கூடியபோது பெருகிய இன்பக் கண்ணீர் ஒருபுறம்; பிரிந்ததற்காக வருந்தி ஓடிய துன்பக் கண்ணீர் மற்றொருபுறம். இதைக் கண்ணுற்ற இராமன் அவளை சினந்து, கடிந்துரைத்தான். காரணம்? அந்தப் பெண் மயிலின் கற்புறுதியை வெளிப்படுத்த "உன்னை ஏற்பேன் என்ற நம்பிக்கையில் வந்தாயா?" என்பது முதல் சுடுசொல். தொடர்ந்து, "நான் கடல் தாண்டி அரக்கரைப் பொருது வென்று இலங்கேசனையும் கொன்றது, உன்னை சிறையினின்றும் மீட்க அன்று; மனையாளை பிறன் கவர யாதொன்றும் எதிராகப் புரியாதுவாளா இருந்தனன் இராமன் என்ற வசைக்கு அஞ்சியே அங்ஙனம் செய்தேன். மாற்றானிடத்தில் பத்து மாதமிருந்த நீ மாசற்றவள் என கொள்வதெங்ஙனம்?"

* * *

கலத்தினிற் பிறந்த மாமணியிற்
காந்துறு
நலத்தினிற் பிறந்தன நடந்த
நன்மைசால்
குலத்தினிற் பிறந்திலை கோவில்
கீடம் போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரம்பினாய்
அரோ.

மேலும் தொடர்ந்தான் இராமன். "நீ எங்கே பிறந்தாய்? உயர் குடியிலா? இல்லையே! சனகராசன் யாக பூமியை உழுதபோது உழுபடைசாலில் தோன்றியவள் தானே! எனவே சிறந்த அணிகளில் உரிய உம்பிச்சங்களில் பதிக்கப் பெறும் மதிப்பிற்குரிய நவமணிகள் ஒளி செய்வதுபோல், புகழுடன் ஒளிரும் நற்பண்புகள் உன்னிடம் இல்லாமல் ஒழிந்தன! அத்துடனா? நீ ஒருத்தி பிறந்ததால், அரசனுடைய புகழும் அழிந்தது!" என்றான் கடுமையாக.

* * *

கலத்தினில் - ஆபரணங்களில்; பிறந்த - அமைக்கப் படுகிற; மாமணியில் - சிறந்த இரத்தினங்கள் போன்று; காந்துறு - விளங்குகிற; நலத்தினில் - நன்மையுடன்; பிறந்தன - பொருந்தியனவான, குணப் பண்புகள்; நடந்த - (உன்னை விட்டு) விலகின; (ஆகவே) நன்மை சால் - மேன்மை மிக்க; குலத்தினில் பிறந்திலை - உயர்ந்த குலத்திற் பிறவாமல்; கோள இல் - வலிமை இல்லாத; கீடம் போல் - புழுப் போன்று; நிலத்தினில் பிறந்தமை நிரப்பினாய் - நிலத்தினின்று நீ தோன்றியதற்குப் பொருந்திய தன்மையை நன்றாக விளக்கிக் காட்டிவிட்டாய்.

* * *

கண்ணினை யுதிரமும் புனலும்
கான்றுக
மண்ணினை நோக்கி மலரின்
வைகுவாள்.
புண்ணினைக் கோலுறுத் தனைய
பொம்மலாள்
உண்ணினைப் போவி நின்று
உயிர்ப்பு வீங்கினாள்.

கேட்டாள் அன்னை; தலை குனிந்தாள்; அவள் கண்கள் இரத்தம் சிந்தின. தன்னை மறந்தாள்; அறிவிழந்தாள்; பெருமூச்செறிந்தாள்.

* * *

மண்ணினை நோக்கிய - (நாணத்தால்) பூமியை நோக்கித் (தலை கவிழ்ந்து) நின்ற; மலரின் வைகுவாள் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் அவதாரமாகிய பிராட்டி; (இச் சொற்களைக் கேட்டு) புண்ணினை கோல் உறுத்து அனைய - புண்ணினைக் கோல் கொண்டு குத்தினாற் போன்ற; பொம்மலாள் - வருத்தத்துடன் கூடியவளாய்; கண்ணினை - (தனது) இரண்டு விழிகளினின்றும்; உதிரமும் புனலும் - இரத்தமும் கண்ணீரும்; கான்று உக - மிகுதியாகச் சிந்த; உள் நினைப்பு ஒவி நின்று உயிர்ப்பு வீங்கினாள் - உள்ளத்தில் அறிவிழந்தவளாய், பெருமூச்செறிந்தாள்.

* * *

தன்னை நொந்துக் கொண்டாள். இவ்வளவு வேதனைக்குப் பின்னும் மீண்டும் துயரமா? என மலைத்தாள். மாருதியை நோக்கினாள். இராமனையும் பார்த்தாள். அநுமனைக் கேட்டால் நானிருந்த தவ நிலையைச் சொல்வான். ஒருவேளை அவன் இராமனிடம் தன்னுடைய அவச நிலையைக் கூறவில்லையோ? ஆனால் அநுமன் யார்? மெய்மையான் அன்றோ. தவறு செய்வானோ? அபாண்டமாகத் தன்னை - தவம் மேற்கொண்டு இருந்த தன்னை தூற்றி, பழிகளை சுமத்தியது ராஜோ குணமல்லவா? இராமனோ சத்துவ குணமுள்ளவன் ஆயிற்றே! இத்தகைய தவற்றை செய்யலாமோ?

* * *

பார்க்கெலாம் பத்தினி
பதுமத் தானுக்கும்
பேர்க்கலாஞ் சிந்தையன்
அல்லள் பேதையேன்
ஆர்க்கலாங் கண்ணவன்
அன்று என்றால் அது
தீர்க்கலாம் தகையது தெய்வந்
தேறுமோ.

இராமனே தன் கற்பு நிலையைச் சந்தேகிக்கிறான். தானே நிரூபித்துக் காட்ட இயலாத நிலையில் பரந்தாமன் உடைய இந்த ஐயத்துடன் கூடிய உள்ளப் பாங்கினை எந்தத் தெய்வந்தான் மாற்றமுடியும் என்று சீதை இரங்குகிறாள். இதைவிட, இறந்து போயிருந்தால் இத்தகைய பழிச்சொற்களை கேட்காமலாகவாவது இருந்திருக்கலாமே என நினைக்கிறாள் பேதை.

* * *

பேதையேன் - பேதைப் பெண்ணாகிய யான்; பாரிக்கு எலாம் - நில உலகம் அடங்கலும்; பத்தினி - (உத்தமமான) கற்பரசி; பதுமத்தானுக்கும் - (ஆக்கும் கடவுளான) பிரமதேவனுக்கும்; பேரிக்கலாம் சிந்தையன் அல்லள் - பேதிக்கக் கூடிய மனநிலை யுடையேன் அல்லேன்; (இங்ஙனம் எனினும்); பாரிக்கெலாம் ஆர்க்கலாம் கண்ணவன் - புலத்தோரெல்லாம்; மகிழ்ந்து ஆரவாரிக்கும்படியான; அருட்கண்ணோக்குடையவன் ஆன இராமபிரான் - (தனது கற்பு); அன்று என்றால் - அத்தன்மையது அன்று என்று பகரிவதால்; அது - அந்த எண்ணத்தைத் தீர்க்கலாம்; தகையது - போக்கும் படியான வகையை; தெய்வம் தேறுமோ - பிறிதொரு தெய்வம் அறிந்து கொள்ளக் கூடுமோ?

* * *

திருமாலேதான் இராமன் என்றாலும் மங்கையர் மனநிலையை உணர்வரோ?

எனவே இனி இந்த அவப்பெயரை நீக்குவது எப்படி?

*　　　*　　　*

ஆதலிற் புறந்தினி யாருக்காக
என்
கோது அறு தவத்தினைக் கூறிக்
காட்டுகேன்
சாதலிற் சிறந்த தொன்று இல்லை
தக்கதே
வேதநின் பணியது விதியும்
என்றனள்

பிராட்டி இராமனிடம் "என் கற்பு நிலையை நிரூபித்துக் காட்டுகிறேன்?" எனக் கூறி தீக் குளிக்கப் போவதாகச் சொல்கிறாள். தீ ஒருவேளை அவளை உயிரைக் கொண்டு விட்டால், "அதுவும் நல்லதே!" என்கிறாள் விரக்தியோடு.

*　　　*　　　*

வேத - வேத வடிவினனே! ஆதலால்-இவ்வாறு ஆதலின்-இனி - இனிமேல்; என் - என்னுடைய; கோது அறு தவத்தினை – குற்றம் தீர்ந்த கற்பு நெறியை; புறத்து - வெளியே; யாருக்கு ஆக கூறி காட்டுகேன் - (வேறு) யாருக்குத்தான் சொல்லி அறிவிக்கக் கடவேன்; சாதலில் சிறந்தது ஒன்று இல்லை - இறந்துபடுதலைக் காட்டிலும் மேலானது யாதும் இன்று; நின் பணி - (சாதி) என்று நீ கட்டளை விட்டருளியது; தக்கதே - தகுதியானதே; விதியும் அது - என் தலைவிதியும் அவ்வாறு உள்ளது போலும்; என்றனள் - என்று மொழிந்தாள் பிராட்டி.

*　　　●

சீதை லட்சுமணனை நோக்கினாள். தீ யமைக்கச் சொன்னாள். இராமனும் இதற்கு அனுமதி தந்தான். பிராட்டியின் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்த வருத்தந் தோய்ந்த வார்த்தைகள் உலகையே ஆட்டி வைத்தன. இலட்சுமணனும் தீ மூட்ட, பிராட்டி அதன் அருகில் சென்றாள். தீயில் புகும் பொருட்டு அக்கினியை வலம் வந்த போது உலக சிருட்டிகளெல்லாம் ஓலமிட்டன. அது எப்படி இருந்தது? இந்தக் கோபம், தகுதியல்லாதது என்று சொல்லியது, போலிருந்தது. தேவர் நடுங்கினர். உயிர்கள் துடித்தன; கடல்கள் பொங்கி எழுந்தன; இயற்கை தன்னிலை மாறி தவித்தது.

* * *

கனத்தினாற் கடைந்த பூண்
முலைய கைவளை
மனத்தினால் வாக்கினான் மறு
உற்றேன் எனின்
சினத்தினால் சுடுதியாற்றிச்
செல் வாவென்றான்
புனத்துழாய்க் கணவற்கும்
வணக்கம் போக்கினாள்.

சீதை அங்கியக் கடவுளை வணங்கினாள்.

'நான் கற்பு குறையுடையேன் ஆயின் என்னைச் சுடுக' என்று தொழுதாள். "மனத்தாலோ, மொழியாலோ நான் களங்க முற்றவள் எனின் என்னை கோபத்தினால் சுட்டெரிப் பாயாக!" என்று சொல்லி, இராமனையும் வணங்கினாள்.

* * *

(அப்பொழுது), கனத்தினால் கடைந்த பூண் - பொன்னால் அராவிச் செய்யப்பட்ட அணிகலம் புனைந்த; முலைய-

தனங்களையுடையவளும்; கை வளை - கையில் வளை தரித்தவளுமான சீதை; (அங்கியைப் பார்த்து); தீ செல்வா - அக்கினி தேவனே! (நான்) மனத்தினால் வாக்கினால் மறு உற்றேன் எனின் - மன, மொழிகளால் களங்கம் உற்றவள் எனின்; (என்னை நீ), சினத்தினால் சுடுதி - கோபத்தினால் சுட்டெரிப்பாயாக; என்றாள் - என்று சொல்லி; புனம் துழாய் கணவற்கும் - புனத்திற் செழிக்கும் திருத்துளவம் அணிந்த கணவனான இராமபிரானையும்; வணக்கம் போக்கினாள் - வணக்கம் செய்தாள்.

* * *

அக்கினியில் இறங்கினாள் சனகனின் மகள். பஞ்சு தீயில் எரிந்தது போன்று, அக்கினியானது அன்னையின் கற்புத் தீயால் வெந்தது. அன்னையோ தாமரை மலரில் செல்வது போல் எவ்வித பாதிப்புமின்றி சென்றாள். அக்கினி தேவன் அன்னையின் கற்பில் வெம்பினான்; தவித்தான்; பிராட்டியை ஏந்திக்கொண்டு, எழுந்தான்! இராமனிடம் ஓலமிட்டான்.

தீக்குளித்த அன்னை எவ்வாறு தோன்றினாள்? அவள் மேனியில் எவ்வித வாட்டமுமின்றி, பொலிவுடன் வெளிப்பட்டாள். இராமனிடம் அக்கினி முறையிடும் போது என்ன கூறினான்? 'நான் சாதாரண தீ, எல்லாவற்றையும் எரிக்கக் கூடியவன்தான். ஆனால் சீதையின் கற்பு, தெய்வீக 'தீ'. அந்தத் தீயிக்கு முன் இப்புறத் தீ திறனற்றதாகிவிடும். அதுவுமன்றி, அத் தீ, இத் தீயை பொசுக்கும்.'

(இராமன், ஏன் சீதை தீக்குளிக்க அனுமதித்தான்? பண்டை காலத்தில் எந்நாட்டிலும் இந்த வழக்கு பிரபலமாக இருந்தது. தாம் நெறி தவறாதவர் என்பதை நிரூபிக்க மேற்கொள்ளப்பட்ட இவ் வழக்கத்தின்படியே இராமன் சீதை தீக்குளிக்க ஒப்பினான்.)

மேலும் அக்கினி தேவன் கூறினான்; "சீதை கற்புக்கரசி, இவள் வெகுண்டு சாபமிட்டால் உலகமே அழிந்துவிடும்." என்று கூறி பிராட்டியை இராமனருகிற் கொணர்ந்தான். அப்போது மூவுலகும் அன்னையை வாழ்த்தியது.

இராமன் என்ன செய்தான்?

*  *  *

அழிப்பில சான்று நீ யுலகுக்கு
ஆதலால்
இழிப்பில சொல்லி நீ இவளை
யாதுமோர்
பழிப்பிலள் என்றனை பழியும்
இன்றி இனிக்
கழிப்பிலள் என்றனன் கருணை
உள்ளத்தான்.

அருகில் வந்த அன்னையை கருணையுடன் நோக்கினான் கொடிய பகைவனுக்கும் கருணைக் காட்டிய அண்ணல். "நீ உலக சீவராசிகட்கு எல்லாம் நெறி பிறழாத சாட்சி ஆவாய். ஆதலால், சீதையின் கற்பின் திறத்தை உலகுக்கே உணர்த்தினாய்; இவள் ஒழுக்கம் குற்றமற்றது; பழி ஏதும் இல்லாததை உணர்த்தினாய். எனவே சீதை இனி நீக்கத் தக்கவள் அல்லள்!" என்று அக்கினியிடம் கூறி அன்னையை ஏற்றான்.

*  *  *

கருணை உள்ளத்தான் - அருளொடு கூடிய நெஞ்சினன் ஆன இராமபிரான்; நீ உலகுக்கு அழிப்பில சான்று - நீ உலகத்துச் சீவராசிகட்கெல்லாம்; (நெறி பிறழாத) சாட்சி யாவாய் ஆதலால் - ஆதலின்; இழிப்பு இல - இகழ்வதற்கு இடமில்லாத; சொல்லி - உயர்ந்த மொழிகளைக் கூறி; நீ

இவளை - நீ இந்தச் சீதாதேவியை; யாதும் ஓர் பழிப்பிலள் - எந்தவிதமான குற்றம் இல்லாதவள்; என்றனை - என்று பகர்ந்தாய்; பழியும் இன்று - எனவே (இவளிடம் எவ்வகைப்) பழியும் இல்லை; இனி கழிப்பிலள் - இனி (இவள்) நீக்கத் தக்கவள் அல்லள்; என்றனன் - என்று கூறினன்.

• • •

இராமபிரான் பரதனைச் சந்திக்கும் காலம் வந்ததை அறிந்தான். அயோத்திக்குச் செல்ல வீபிடணன் கொண்டு வந்த புட்பக விமானத்தில் பிராட்டியுடனும் இளையவன் உடனும் ஏறுகிறான். வீபீடணனையும், சுக்ரீவனையும், அநுமனையும், அங்கதனையும் மற்றைய எல்லோரையும் தத்தம் ஊருக்குச் செல்ல கூறியபோது, அவர்கள் இராம பிரானின் முடிசூட்டு விழாவைக் காண விரும்புவதாகக் கூறுகின்றனர். இராமன் மகிழ்கிறான். வானரர் அனைவரும் மனித வடிவங் கொள்கின்றனர். அவர்களும் விமானம் ஏறி வருகின்றனர். வடக்கு நோக்கிச் செல்கையில் ஒவ்வோர் இடத்திலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறிக் கொண்டே செல்கின்றனர். அநுமனை சுக்ரீவன் வானர மகளிரை அழைத்து வருமாறு பணிக்கிறான். அவர்களையும் அழைத்து வருகிறான் அநுமன். தண்டகவனம், சித்திரக் கூடம், பாரத்துவாச ஆசிரமம் ஆகியவைகளைக் கடக்கும்போது, பாரத்துவாச முனிவர் இராமனை எதிர்கொண்டு தன் ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்கிறார். அப்போது அம் முனிவர் பரதனைப் பற்றி கூறுகிறார்.

இராமன் மாருதிக்கு ஒரு அரிய பணியைச் செய்யும்படி கூறுகிறான்.

இன்று நாம்பதி வருது முன்
மாருதி யீண்டச்
சென்று நீதின்மை செப்பியத்
தீயவித் திளையோன்

நின்ற நீர்மையு நினைவு நீ
தேர்ந்தெம்மின் நேர்தல்
நின்றெ னாவான் மோதிரங்
கையொடு நடந்தான்.

அப் பணி யாது? "நான் ஊர் வந்து சேரும் முன்பே, நீ இப்போதே நந்தி கிராமத்திற்கு விரைந்துச் செல். பரதனைச் சந்தித்து நான் நலமாகயிருப்பதை தெரிவி. அவன் செய்ய நினைத்திருக்கும் செயலைத் தடுத்து நிறுத்து. இந்த மோதிரத்தை அவனிடம் கொடு!" என்று மோதிரத்தை அநுமனிடம் கொடுத்தான். வாயு மைந்தன் பறந்தான்

* * *

மாருதி - அநுமான்! நீ - நீ; நாம் பதி வருதும் முன் - நாம் அயோத்தி நகர்க்கு வருவதன் முன்னரே; இன்று - இப்பொழுதே; ஈண்ட் சென்று - விரைந்து போய்; (நந்திக் கிராமத்தின் கண் உள்ள பரதனுக்கு); தீ தின்மை செப்பி - எனது நலத்தைப் பகர்ந்து; அ தீ அவித்து - (அவன் புகுவதற் காக மூட்டப்பட்ட) தீயை அணைத்து; இளையோன் - (எனது தம்பியாகிய) அப் பரதன்; நின்ற நீர்மையும் - மேற் கொண்டு நின்ற தன்மையும்; நினைவும் - அவன் மனத்து எண்ணத்தையும்; தேர்ந்து - ஆராய்ந்தறிந்து; எம்மின் நேர்தல் - எம்பால் வந்து அடைதல்; நன்று - நல்லது; எனா - என்று கூறி; (தன் கை மோதிரத்தைத் தர) அவன் - அந்த மாருதி; மோதிரம் கை கொடு நடந்தான் - மோதிரத் தைக் கையில் ஏற்றுக்கொண்டு சென்றான்.

* * *

பரதன் ஏன் தீ வளர்த்தான்? எதற்கு தீயில் விழத் துணியவேண்டும்? இது, ஏன், ஏன்?

* * *

என்ன தாகுங் கொலவ்வர
மென்றியேல்
சொன்ன நாளில் இராகவன்
தோன்றிலன்
மின்னு தீயிடை யானினி
வீடுவேன்
மன்னன் ஆதியென் சொல்லை
மறாது என்றான்.

இராமபிரானைச் சித்திரக் கூடத்தில் சந்தித்து, அயோத்தி அரசை ஏற்கவேண்டுமென்று பதினான்கு ஆண்டுகளுக்கு முன் வேண்டிக்கொண்டான் அல்லவா? அப்போது இராமன் இன்று — பதினான்கு ஆண்டுகள் நிறைவடைந்த நாளன்று வருவதாக வாக்களித்தான். "அவன் சொன்ன நாளில் வரவில்லை. எனவே, முன்பு சூளுரைத்தபடி நான் தீயில் விழுந்து உயிர் துறப்பேன். நீ அயோத்திக்கு மன்னன் ஆவாய்!" என்று பரதன் சத்துருக்கனனிடம் கூறினான்.

* * *

(பின்னும் பரதன் இளவலைப்பார்த்து), அ வரம் என்னது ஆகும் கொல் என்றியேல் - அந்த வரம் யாதாகுமோ என்று வினவுவாயாகில் (கூறுவேன்); சொன்ன நாளில் - நான் வருவதாகச் சொல்லிய நாளில்; இராகவன் தோன்றிலன் - இராகவன் வரவில்லை; (ஆதலின் நான் முன்னரே சூளுரைத்தபடி) *

---

* ஆமெனில் ஏழிரண்டாண்டில் ஐய நீ
நாம நீர் நெடு நகரி நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை என்னில் கூர் எரி
சாம்; இது சரதம்; நின் ஆணை; சாற்றினேன்.

(சித்திரக் கூடத்தில் பரதன் செய்த சபதம்)

இனி - இப்பொழுது; மின்னு தீ இடை - ஒளி விட்டெரிகின்ற தீயினில்; யான் வீடுவென் - விழுந்து உயிர் துறப்பேன்; என் சொல்லை மறாது - (நீ) என் சொல்லை மறுக்காமல்; மன்னன் ஆதி - (அயோத்திக்கு) அரசன் ஆவாய்; என்றான் - என்று மொழிந்தான்.

*    *    *

பரதனுக்குச் சத்துருக்கனன் எவ்வளவோ சமாதானம் கூறினான். பரதன் அதனை ஏற்க மறுத்தான். தீ மூட்டக் கட்டளையிட்டான்.

கோசலை விவரம் அறிந்தாள். ஓடோடி வந்தாள். பரதனுக்கு நீதி பல உரைத்தாள். பரதனை தடுத்து நிறுத்த பார்த்தாள். பரதன் கோசலையின் சொல்லை ஏற்க மறுத்தான். இராமன் வராதது அவனை நிஷ்டூரமாகப் பேச வைத்தது. தீயிக்குப் பூசை செய்தான் பரதன். திடீரென்று எதிரே பெரு வடிவுகொண்டு மாருதி நின்றான்,

*    *    *

ஐயன் வந்தனன்;
ஆரியன் வந்தனன்
மெய்யின் மெய்யன்ன
நின்னுயிர் வீடினால்
உய்யுமோ அவன்
என்று உரைத்து உட்புகா
கையினால் எரியைக்
கரியாக்கினான்.

"தலைவன் இராமன் வந்தனன்; வாய்மையின் உருவான அவன் வரும்போது, நீ உயிர்விட்டால், அவன் மட்டும் வாழ்வனோ?" என்று உரக்கக் கூறிக்கொண்டே அப் பெருங் கூட்டத்தில் நுழைந்தான் வாயு மைந்தன். கையால் அத் தீயைப் பிசைந்து கரியாக்கினான்.

*　　　*　　　*

ஐயன் வந்தனன் - தலைவனாகிய இராமன் வந்தான்; ஆரியன் வந்தனன் - பெரியோன் வந்தான்; மெய்யின் மெய் அன்ன - வாய்மையின் உடல் போன்ற (வாய்மை வழுவாத) நின் உயிர் வீடினால் - உனது உயிர் போனால்; அவன் உய்யுமோ - அந்த இராமன் உயிர் வாழ்வானோ; என்று உரைத்து - என்று கூறி; உட்புகா - அந்தக் கூட்டத்தின் உள்ளே புகுந்து; கையினால் - தன் கைகளால்; எரியை - அத் தீயை; கரியாக்கினான் - அவித்துக் கரியாக்கினான்.

*　　　*　　　*

அத்துடன் இராமபிரான் பாரத்துவாச முனிவர் ஆசிரமத்தில் இருப்பதையும், கடிது வருவான் என்றும் கூறினான். அண்ணல் கொடுத்த மோதிரத்தைப் பரதனுக்குக் காட்டினான். பெரு மகிழ்ச்சி அடைந்தான் பரதன். அங்குள்ள யாவரும் மகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர் விட்டனர்.

பரதன் அநுமனைப் பாராட்டி, 'நீ யார்?' என்று கேட்டான். அநுமன் தன் வரலாற்றைக் கூறினான். 'நான் இராமனின் அடிமை'. பின் தன் பேருருவத்தையும் காட்டினான். பார்த்தவர் அச்சமுற்றனர். பரதனின் வேண்டு கோளுக்கிணங்க தன் சுய உருவு கொண்டான். பரதன் அவனுக்குப் பரிசளித்தான்.

பரதன் அயோத்தி நகரை அலங்கரிக்குமாறு கட்டளை இடுகிறான். நகரம் விழாக் கோலம் பூணுகிறது. பலரும் இராமபிரானை எதிர்கொண்டழைக்கச் செல்கின்றனர். மாருதியுடன், தாய்மார் மூவரும், பரதனும் செல்கின்றனர்,

வழியில் மாருதி பரதனுக்கு இதுவரை நடந்தவற்றைக் கூறிக்கொண்டே போகின்றான். கங்கை கரையும் அடைந்தாயிற்று. இன்னமும் இராமன் வரவில்லையே என்று ஏங்குகிறான் பரதன். குகன் தன் சேனையோடு வருகின்றான். சுக்ரீவனும் விபீடணனும் வருகின்றனர். இராமனும் விமானத்தில் வருவதைக்கண்டு பேருவகைக் கொள்கிறான் பரதன். விமானத்திலிருந்து இறங்கிய இராமன் வசிட்ட முனிவனை வணங்குகிறான். முதன்முதலில் கைகேயியை வணங்குகிறான். பின்னரே ஏனைய தாய்மாரையும் வணங்குகிறான்! பிராட்டியும் இளையவனும் வணங்கி, ஆசி பெறுகின்றனர்.

பரதன் லட்சுமணனை தழுவுகிறான்.

'தனிமை நீக்கி, காடுறைந்தது
உலைந்த மெய்யோ கையறு கவலை
உராநாடுறைந்து உலைந்த மெய்யோ நைந்தது.'

என உலகம் நைந்தது.

வந்தவர்களை தம்பியர்க்கு அறிமுகம் செய்விக்கிறான் இராகவன். சுமந்திரனும் அமைச்சர்களும் வருகின்றனர். விமானம் நந்திக் கிராமத்தை அடைகிறது.

* * *

நம்பிய பரதனோடு நந்தியம் பதியை
நண்ணி
வம்பலர் சடையும் மாற்றி
மயிர் வினை முற்றி மற்றைத்
தம்பியரோடு தானும் சரயுவின்
புனலிற் தோய்ந்தே
உம்பரு மூவகை கூர ஒப்பனை
ஒப்பச் செய்தார்.

நந்திக் கிராமத்தை அடைந்த இராமன் தன் சடா முடியை கழிக்கின்றான். சரயூ நதியில் நீராடி அலங்காரம் செய்துக்கொள்கிறான். தம்பியர் செய்யும் ஒப்பனையை புன்சிரிப்புடன் ஏற்கிறான்.

* * *

நம்பிய - தன்னிடம் விசேடப் பற்றுள்ள; பரதனோடு - பரதனுடனே; மற்றைத் தம்பியரோடு - மற்றைத் தம்பியரும்; தானும் - தானுமாக; நந்தி அம்பதியை நண்ணி - நந்திக் கிராமமாகிய அழகிய நகரத்தை அடைந்து; வம்பு அலர் சடையும் மாற்றி - நறுமணம் கமழ்கின்ற சடையைக் கழித்து; மயிர் வினை முற்றி - மயிர் கழிக்கும் செயலையும் முடித்து; சரயுவின் புனலிற் தோய்ந்து - (சரயூ நதியின்) நீரில் முழுகி நீராடிய பின்; உம்பரும் உவகை கூர - தேவர்களும் மகிழ்ச்சி மிகுமாறு; ஒப்பனை ஒப்பச் செய்தார் - அலங்காரங்கள் தக்க வகையில் செய்தார்கள்.

* * *

இராமன் வரவு கேட்ட பரதன் பெரிதும் மகிழ்ந்தான். துள்ளினான்; குதித்தான். நகரை அலங்கரிக்கச் சொன்னான். நால்வகைச் சேனையும், மந்திரியும் மற்றையோர் புடைசூழச் சென்று இராமனை அழைத்துக்கொண்டு அயோத்தி அடைந்தான்.

அயோத்தி மாநகர் மக்கள், மகிழ்ச்சியால் துள்ளினர்.

இராமனின் திருமுடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

திருமுடிசூட்டுவதற்கான முன்னேற்பாடுகள் விரைவாக நடக்கின்றன. அபிடேகத்திற்காகப் பல புண்ணிய நதிகளி லின்றும் தீர்த்தம் கொண்டுவரப்படுகிறது, அநுமனால்,

மறுநாளே, முடிசூட்டு விழா நாளும் ஓரையும் ஆராய்ந்து ஓலை தீட்டி அனைவருக்கும் அனுப்புகின்றனர்.

பளிங்கு மாடத்தில் அண்ணலும் அன்னையும் பீடத்தில் அமர்ந்திருக்கும் கண்கொளாக் காட்சியைக் காண திரள்கிறது மூவுலகும். விழா ஆரம்பிக்கிறது. அபிஷேகம் முடிகிறது. பின்?

* * *

அரியணை அநுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி வீச
விரை செறி கமலத்தாள் சேர்
வெண்ணெயூர் சடையன் தன்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி

* * *

இந்த விழாவிலே அரியணையை அநுமன் தாங்குகிறான்; அங்கதன் உடைவாளைப் பற்றுகிறான். பரதன் வெண்குடை பிடிக்கிறான். மற்ற இரு சகோதரர்களும் சாமரம் வீச, அப்போது சடையப்ப வள்ளலின் முன்னோர் எடுத்து கொடுக்க வசிட்டன், இராமனுக்குப் புனைந்தான் மௌலி.

* * *

அரியணை - சிங்காதனத்தை; அநுமன் தாங்க - அநுமன் தாங்கவும்; அங்கதன் உடைவாள் ஏந்த - அங்கதன் உடைவாள் ஏந்தி நிற்கவும்; பரதன் வெண்குடை கவிக்க - பரதன் பூச்சக்கரக் குடை பிடிக்கவும்; இருவரும் - மற்ற சகோதரர் இருவரும்; கவரி வீச - சாமரை வீசவும்;

விரைசெறி கமலத்தாள் சேர் வெண்ணெயூர் சடையன் தன் மரபுளோர் - நறுமணம் வீசப்பெற்ற தாமரையில் வசிக்கும் திருமகள் சேர்ந்திருக்கப் பெற்ற திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலின் முன்னோர்; கொடுக்க, வாங்கி வசிட்டனே - எடுத்துக் கொடுக்கவும் வசிட்ட முனிவனே; புனைந்தான் மௌலி - முடிசூட்டினான்.

பரதனுக்கு இளவரசு பட்டம் சூட்டப்படுகிறது.

முடிசூட்டு விழாவுக்கு வந்திருந்த அனைவர்க்கும் விடை கொடுக்க, ஸ்ரீராமன் சீதாதேவியுடன் ஓலக்க மண்டபம் வருகிறார். சிங்காதனத்தில் வீற்று, அந்தணர்களுக்கு தானமளிக்கிறார். வந்த அரசர்களுக்கும் வெகுமதி அளித்து விடை தருகிறார். குகன், அநுமன், விபீடணன், சுக்ரீவன் ஆகியோருக்கு விடை கொடுத்தனுப்ப, அவர்கள் தத்தம் இடத்திற்குச் செல்கின்றனர்.

* * *

வாழிய சீர் இராமன்
வாழிய சீதை கோமான்
வாழிய கௌசலேசை
மணி வயிறு உதித்த வள்ளல்
வாழிய வாலி மார்பு
மராமரம் ஏழும் சாய
வாழிய கணை ஒன்று ஏவும்
தசரதன் மதலை வாழி

* * *

# இராமாயண ஸார ஸங்க்ரகம்

பங்குனி மாதம் கிருஷ்ண பட்சத்து அஷ்டமீ திதியில் மாலைக் காலத்தில் இலங்கை நகரத்தில் இருந்த சுவேலை மலைமீது வானர சேனைகளுடனே ஏறி, அன்றிரவே அந்த நகரை முற்றுகையிட்டான் இராமன். மறுநாள் நவமி. அன்று பகற் பொழுதுக்குமேல் அரக்கரோடு போர் தொடங்கினான். யுத்தம் ஏழு நாள் நடைபெற்றது.

ஏழாம் நாள், அமாவாசை அன்று பிற்பகல் இராவணன் வதையுண்டான். பிறகு பிரதமை. இராவணனுக்கு ஈமக்கடன் நிறைவேறியது. துவிதியையன்று விபீடணப் பட்டாபிஷேகம். திருதியையன்று சீதை நெருப்பில் புகுந்துவந்து இராமனையடைந்தாள்.

மறுநாள் சதுர்த்தி. விபீடணன் அளித்த புட்ப விமானத்தில் ஏறி வானரமகளிரை அழைத்துக்கொண்டு மறுநாள் பஞ்சமியன்று பாரத்துவாசர் ஆசிரமம் சேர்ந்தான். அன்றைய தினமே பதினான்கு ஆண்டுகள் முடிகிறபடியால் தன் வருகையை அறிவிக்கும்படி அநுமனைப் பரதனிடம் போக்கினான் இராமன்.

அயோத்தியை அடைந்தான். திருமுடிசூட்டு விழாவும் நடந்தது.

இவ்வாறு இராமாயண ஸார ஸங்க்ரகம் கூறுகிறது.

வேண்டியதை வேண்டியவாறே அருளும்



கோதண்டராமன்

**இராமாயணத்தைப் படித்தால், என்ன பலன்?**

இராவணன் தன்னை வீட்டி
  இராமனாய் வந்து தோன்றி
தராதல முழுவதுங் காத்துத்
  தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற
  பண்பினைப் பகருவார்கள்
தராபதி யாகிப் பின்னு
  நமனையும் வெல்லுவாரே



அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன் அவர்தம் துணைவியார் திருமதி ஜலஜா சக்திதாசன் இருவரும் 50 ஆண்டுகளாக தமிழ் இலக்கியத் தொண்டு ஆற்றியவர்கள், 1990-ம் ஆண்டிலே வெளியான அவர்களது திரு வி.க. உள்ளமும் உயர் நூல்களும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதல் பரிசு பெற்ற பெருமையுடையது.

இலக்கியமன்றி, அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன் 1933 முதல் 1983 வரை சிறந்த பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர். திரு வி.க.வின் சீடரான இவர் தனியே எழுதிய நூல்கள் இருபத்தி ஆறு. திருமதி ஜலஜா சக்திதாசனுடன் சேர்ந்து எழுதிய நூல்கள் இருபது. திருமதி ஜலஜா சக்திதாசன் தனியாக எழுதிய நூல்கள் பதினாறு. இந்தத் தேசிய எழுத்தாளர்கள் எழுதிய 'கம்பன் கவித்திரட்டில்' முதல் காண்டம் - பாலகாண்டம் 1986-ல் வெளியிட்டோம்.

1990-ல் அயோத்தியா காண்டத்தையும் ஆரண்ய காண்டத்தையும் வெளியிட்டோம்.

1991-ல் மீதியுள்ள கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் ஆகியவற்றை வெளியிடுகிறோம்.

தமிழகம் எங்கள் வெளியீடுகளுக்குப் பேராதரவு அளிக்க வேண்டுகிறோம்.